# ஆகாஷ் IAS அகாடமி

வழங்கும்

ஆசிரியர் தகுதித் தேர்வு மற்றும் TNPSC தேர்விற்கான

## இலவச பயிற்சித் தொகுப்பு

# இந்திய வரலாறு

**பயிற்சித் தொகுப்புகள் இலவச பதிவிறக்கம் செய்ய**

**Website:** **www.akashiasacademy.com**

**Whatsapp:** **99420 16300**

**TNPSC, TET,TRB போன்ற தேர்வுகளுக்கான**

**பயிற்சித் தொகுப்புகள் பெற**

**தொடர்பு கொள்ள: 04142 284703, 95669 74703**

# அரசுப்போட்டித் தேர்வில் வெற்றி பெறுவதற்கு கட்டாயம் இருக்க வேண்டிய புத்தகங்களில் சில..




AKT 101- Rs.560




AKT 102 - Rs 399




AKT 103 - Rs 100




AKT 104 - Rs 150




AKS 106 - Rs 320




AKS 107 - Rs 200




AKS 108 - Rs 200





AKS 109 - Rs 150





AKH 110 - Rs 220




AKH 111 - Rs 120




AKH 112 - Rs 120




AKM 105 - Rs 399




AKP 113 - Rs 280




AKE 114 - Rs 250




AKG 115 - Rs230




AKG 116

## புத்தகங்கள் கிடைக்குமிடம்

# AKASH BOOK CENTRE

219 ஸ்டேட் பேங்க் எதிரில், மஞ்சக்குப்பம், கடலூர் - 95669 74703

பூந்தோட்ட மேட்டுத்தெரு, VKS காம்ப்ளக்ஸ், விழுப்புரம் - 99433 86300

# வரலாறு

**வரலாற்றின் தொடக்கம்**

நமக்கு முன்னர் வாழ்ந்த மக்களின் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை காலவரிசைப்படி ஆதாரங்களுடன் தொகுத்து கூறுவது வரலாறு எனப்படும். ஆதாரங்களின் அடிப்படையில் வரலாற்று காலத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை 1. வரலாற்றுக்கு முந்தைய காலம் 2. வரலாற்றுக்காலம்.



**இவற்றின் பிரிவுகளை கீழ்கண்ட வரைபடத்தின் மூலம் அறியலாம்.**


**வரலாறு**

- **வரலாற்றுக்கு முந்தைய காலம்**
  - பழைய கற்காலம்
  - இடைக்கற்காலம்
  - புதிய கற்காலம்
- **வரலாற்றுக் காலம்**
  - வெண்கலக்காலம்
  - செம்புக்காலம்
  - இரும்பு க்காலம்

**பூமியின் தோற்றம் 460 கோடி ஆண்டுகள் முன்**
**மனிதனின் தோற்றம் 40,000 ஆண்டுகள் முன்**
**வேளாண்மையின் தோற்றம் 8000 ஆண்டுகள் முன்**
**நகரங்களின் தோற்றம் 4700 ஆண்டுகள் முன்**

## பழைய கற்காலம் (Paleolithic Age)

- பழைய கற்காலம் பேலியோலித்திக் கற்காலம் எனப்படும். இது கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.
- பழைய கற்கால மக்கள் உணவை சேகரிப்போர் என அழைக்கப்படுகிறார்கள்
- நாடோடி வாழ்க்கை மேற்கொண்டனர், இலை, மரப்பட்டைகளால் ஆன ஆடைகளை உடுத்தினர்.
- சிக்கி முக்கி கற்களை உரசி நெருப்பைக் கண்டறிந்தான். (குவார்ட்சைட்)
- இடி, மின்னல் போன்றவற்றைக் கண்டு அஞ்சினர். எனவே அவற்றை தெய்வமாக வழிபட்டனர்.
- பழைய கற்கால கருவிகள் கிடைத்த இடங்கள் :
  1) மத்திய பிரதேசம் - பிம்பேட்கா, சோன் ஆற்றுப் படுகை
  2) ராஜஸ்தான் - லூனி ஆற்றுச் சமவெளி
  3) கர்நாடகம் - பாகல்கோட்
  4) ஆந்திரா - கர்னூல் குகைகள், ரேணிகுண்டா
  5) தமிழ்நாடு - அத்திரம்பாக்கம், வடமதுரை, பல்லாவரம், காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர்



பிம்பேட்கா குகை ஓவியங்கள்

## இடைக் கற்காலம் (Microlithic Age)

- காலம் : கி.மு. 10,000 - கி.மு. 6000
- 5 செ.மீ. அளவுடைய நுண்கற்கருவி (அ) மைக்ரோலிதிக் கருவிகளைப் பயன்படுத்தினர். எனவே நுண்கருவி கற்காலம் எனவும் அழைக்கப்படுகிறது.
- சிறிய விலங்குகளை வேட்டையாடினர். வேட்டையாடுவதற்கு வில், அம்பு போன்றவற்றைப் பயன்படுத்தினர்.
- மீன்பிடிக்கக்கவும் கற்றுக் கொண்டனர்.
- நாய், மான், பன்றி, தீக்கோழி போன்ற விலங்குகளைப் பழக்கியுள்ளனர்.
- இடைக்கற்கால கருவிகள் கிடைத்த இடங்கள் :

1) மத்திய பிரதேசம் - ஆதம்கார்
2) குஜராத் - லாங்கன்ச்
3) ராஜஸ்தான்
4) உத்திர பிரதேசம்
5) பீகார்

## புதிய கற்காலம் (Neolithic Age)

- இதன் காலம் கி.மு. 6000 - கி.மு. 4000. புதிய கற்காலம் நியோலித்திக் காலம் எனப்படும்.
- இக்கால மக்கள் மென்மையான படிக்கற் பாறைகளாலான கருவிகளைப் பயன்படுத்தினர்.
- இவர்களது வாழ்க்கை முறை நிலையான வாழ்க்கை. இவர்கள் வேளாண்மையில் ஈடுபட்டனர்.
- மனித வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்த சக்கரம் புதிய கற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- முதன்முதலில் வளர்த்த பிராணி ஆடு. முதலில் பழக்கிய விலங்கு நாய்.
- பாலிமென்ஸ் எனப்படும் கல்லறையில் தூண்களை உருவாக்கினர்.
- களிமண்ணால் ஆன குடிசைகள் வட்ட வடிவில் அமைக்கப்பட்டன.
- புதிய கற்கால மனிதன் இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கம் கொண்டிருந்தான்.
- புதிய கற்கால கருவிகள் கிடைத்த இடங்கள் :

1) ஆந்திரா - கடப்பா, பெல்லாரி, நெல்லூர், அனந்தபூர், தெலுங்கானா
2) கர்நாடகம் - மைசூர், மாஸ்கி, பிரம்மகிரி, ஹல்லூர்
3) குஜராத், கத்தியவார் மற்றும் காஷ்மீர் பள்ளதாக்கு
4) பீகார் - சிராண்ட்
5) உத்திரபிரதேசம் - பீலான் சமவெளி
6) தக்காணப் பகுதிகள்
7) காஷ்மீர் பள்ளத்தாக்குகள்
8) தமிழ்நாடு - திருநெல்வேலி, தான்றிக்குடி, சேலம், திருச்சி, புதுக்கோட்டை

ஆகாஷ்
வ
ர
லா
று

## உலோகக்காலம்

செம்புக்காலம், வெண்கலக்காலம் மற்றும் இரும்புக்காலம் என 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## செம்புக் கற்காலம் (Chalcolithic Age)

ஆகாஷ் வரலாறு

- இதன் காலம் கி.மு.3000 முதல் கி.மு.1500 வரை.
- இக்காலத்தில் செம்பு மற்றும் வெண்கல உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன.
- மனிதன் அறிந்த முதல் உலோகம் செம்பு.
- வட இந்தியாவில் புதிய கற்காலத்தை அடுத்து வந்த காலம் செம்புக் கற்காலம் ஆகும்.
- மண்பாண்டங்களில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்ட காலம்.
- செம்புக் கற்காலத்தின் நிறைவு காலமான செம்பு காலத்தில் ஹரப்பா நாகரிகம் தோன்றியது.
- பையம்பள்ளியில் வெண்கலம் மற்றும் செம்பு ஆகியவற்றிலான பொருட்கள் காணப்படுகின்றன.

## இரும்புக்காலம் (Iron Age)

- இதன் காலம் கி.மு.1500 முதல் கி.மு.600 வரை.
- செம்பு கற்காலத்தை தொடர்ந்து வந்த காலம் இரும்புக்காலம்.
- இக்காலத்தில் வீட்டு சாமான்களும், பயிர்த்தொழில் செய்யும் கருவிகளும் இரும்பினால் செய்யப்பட்டன.
- வேதகால நாகரிகம் இரும்புக் காலத்தை சார்ந்தது ஆகும்.
- தென் இந்தியாவில் இரும்புக்காலமும் பெருங்கல் காலமும் (மெகாலிதிக்) சமகாலம் எனக் கருதப்படுகிறது.
- மண்பாண்டங்களில் ஓவியங்கள் வரையப்பட்டன.
- உலோகக் கலவைகள் பயன்படுத்தப்பட்டன.

### உலோகக் கலவைகள்

| | |
|---|---|
| இரும்பு + குரோமியம் - சில்வர் | இரும்பு + மாங்கனீசு - எஃகு |
| செம்பு + துத்தநாகம் - பித்தளை | செம்பு + வெள்ளீயம் - வெண்கலம் |

## பெருங்கற் காலம் (Megalithic Age)

- இதன் காலம் கி.மு.1000 ல் இந்தியாவின் வடபகுதியில் இரும்புக் காலம் நிலவிய பொழுது தமிழகத்தில் நிலவிய காலம் பெருங்கற்காலம் எனப்படும்.
- இக்கால கட்டத்தில் தமிழகத்தில் இறந்தவர்களைப் புதைக்கும் போது அந்த இடத்தில் பெரிய கற்களை நட்டு வைத்தனர். இதற்கு நடுகல் (அ) நீத்தார் நினைவுச் சின்னம் என்று பெயர்.
- கி.பி.1961ல் புலவர் இராசு மற்றும் செல்வி முத்தையா ஆகியோர் 300க்கும் மேற்பட்ட பெருங்கற் புதைவுகளைக் கண்டறிந்துள்ளனர்.
- பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ள கொடுமணம் என்ற சொற்றொடரின் மூலம் இது கொடுமணல் நாகரிகம் (அ) நொய்யல் நாகரிகம் என அழைக்கப்படுகிறது.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் சானூர், அமிர்தமங்கலம் போன்ற இடங்களில் குகைவட்டம், குழிவட்டம் எனும் இருவகைகளில் அமையும் சுமார் 200 பெருங்கற் புதைவுகள் கண்டறியப்பட்டுள்ளன.



முதுமக்கள் தாழிகள்

# சிந்து சமவெளி நாகரிகம்


**அகழ்வாராய்ச்சிகள் :**

1) கி.பி. 1826 - சார்லஸ் மேசன்
2) கி.பி. 1856 - ஆங்கிலேயர் (டல்ஹவுஸிபிரபு)
3) கி.பி. 1863 - ராபர்ட் புரூஸ்ட் (கைக்கோடாரி)
4) கி.பி. 1872 - அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம்
5) கி.பி. 1921 - சர்ஜான் மார்ஷல் (ஹரப்பா)
- R.D. பானர்ஜி (மொகஞ்சதாரோ)

ஆகாஷ் வரலாறு

- சிந்து சமவெளி நாகரிக காலங்கள் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துகள்:
  1. சர்ஜான் மார்ஷல் (1921) - கி.மு.3250 முதல் கி.மு.2750 வரை
  2. ஃபோர்சர்வ்ஸ் (1956) - கி.மு.2000 முதல் கி.மு.1500 வரை
  3. டி.பி.அகர்வால் (1964) - கி.மு.2300 முதல் கி.மு.1750 வரை
- சிந்து சமவெளி நாகரீகம் ஒரு நகர நாகரிகம்
- சிந்து சமவெளி நாகரீகம் கி.மு. 3250 முதல் கி.மு. 2750 வரை என கருதப்படுகிறது.
- ஆராய்ச்சி முடிவுகள் வெளியிடப்பட்ட ஆண்டு - 1922.
- சிந்து சமவெளி நாகரீகத்தின் முக்கிய நகரங்கள் :
  - **ஹரப்பா** - பாகிஸ்தான் - மேற்கு பஞ்சாப் - மாண்ட் கேமாரி - ராவி நதிக்கரை
  - **மொகஞ்சதாரோ** - பாகிஸ்தான் - சிந்து மாகாணம் - லர்கானா - சிந்து நதிக்கரை
  - **கோட்டிஜி** - சிந்து மாகாணம்
  - **காலிபங்கன்** - ராஜஸ்தான்
  - **லோத்தல்** - குஜராத்
  - **தோலவிரா** - குஜராத்
  - **சூர்கோட்டா** - குஜராத்
  - **ஆலம்கிர்பூர்** - உத்திர பிரதேசம்
  - **ரூபார்** - பஞ்சாப்
  - **பனவாலி** - ஹரியானா
- ஹரப்பா என்பதன் பொருள் - புதையுண்ட நகரம் என்பதாகும்.
- ஹரப்பாவில் 6 தானியக்களஞ்சியங்கள் உள்ளது. இதன் நீளம் - 50அடி, அகலம் - 20 அடி.
- மொகஞ்சதாரோ என்பதன் பொருள் - இறந்தவர்களின் மேடு (அ) இறந்தவர்களின் நகரம்
- மொகஞ்சதாரோவில் - பெரிய குளியல் குளம் உள்ளது.
- இதன் நீளம் - 12மீ (அ) 30அடி, அகலம் - 7மீ (அ) 23அடி , ஆழம் - 2.4மீ (அ) 8 அடி.
- மொகஞ்சதாரோவில் 2 பெரிய தானியக்களஞ்சியங்கள் காணப்படுகின்றன.
- இதன் நீளம் - 150அடி, அகலம் - 50அடி.
- லோத்தல் நகரம் ஒரு துறைமுக நகரமாகும். இது குஜராத்தின் போக்வா நதிக்கரையில் அமைந்துள்ளது.
- காலிபங்கன் ராஜஸ்தானின் காஹர் நதிக்கரையில் அமைந்துள்ளது.
- தோலவிரா நகரத்தைக் கண்டறிந்தவர்கள் - ஜோஷி மற்றும் பிஷ்ட்.
- சிந்து சமவெளி மக்கள் பேய், ஆவி போன்ற நம்பிக்கைகள் கொண்டிருந்தனர்.
- சிந்து சமவெளி மக்கள் வியாபார தொடர்பு கொண்டிருந்த நாடு சுமேரியா, எகிப்து, சீனா.
- சிந்து சமவெளி மக்கள் வியாபாரத்தில் முத்திரைகளை பயன்படுத்தினர்.
- சிந்து சமவெளி மக்கள் அறியாத மிருகம் - குதிரை. அறியாத உலோகம் - இரும்பு
- இம்மக்களின் எழுத்து முறை - சித்திர வடிவ எழுத்து முறை

- இந்த சித்திர எழுத்து முறை Boustrophedon Script வகையைச் சார்ந்தது.
- Boustrophedon Script என்பது முதல் வரி வலமிருந்து இடமாகவும், இரண்டாவது வரி இடமிருந்து வலமாகவும் எழுதும் முறை ஆகும்.
- 400 முதல் 600 வரையிலான எழுத்துகள் காணப்பட்டாலும் 40 முதல் 60 வரையான எழுத்துகளே அடிப்படையாக உள்ளது.
- சிந்து சமவெளி மக்களின் மொழி தமிழ் என்று கூறியவர் **ஈராசுப்பாதிரியார்.**
- சிந்து சமவெளி மக்களின் எழுத்து முறை திராவிட எழுத்து முறை என்ற கருத்தை முழுவதுமாக ஆராய்ந்தவர் - அஸ்கோ பார்ப்போலோ.





**மொகஞ்சதாரோவின் பெரிய குளம்** **சிந்து சமவெளி சிலைகள்**


- இதற்காக இவருக்கு 2010ல் கோவையில் நடந்த செம்மொழி மாநாட்டில் செம்மொழி விருது வழங்கப்பட்டது.
- விளைபொருட்கள் - கோதுமை, பார்லி, எள், கடுகு, பருத்தி.
- உலகிலேயே முதன்முதலாக பருத்தி பயிரிட்டவர்கள் சிந்து சமவெளி மக்கள் ஆகும்.
- வளர்ப்பு பிராணிகள் - வெள்ளாடு, செம்மறியாடு, எருது.
- கைத்தொழில்கள் - பொற்கொல்லர், செங்கல் செய்வோர், முத்திரைகள் தயாரிப்போர்.
- சிந்து சமவெளி மக்கள் பசுபதி என்ற சிவனையும், சக்தி என்ற பெண் தெய்வ வழபாட்டையும் மேற்கொண்டனர்.
- பசுபதி என்ற தெய்வத்திற்கு மூன்று முகங்களும், இரண்டு கொம்புகளும், நான்கு திசைகளில் நான்கு மிருகங்களும் உள்ளன. (யானை, புலி, நீர்யானை, எருது)
- சந்து சமவெளி மக்களின் சமயச் சின்னம் அரசமரம்.
- இவர்கள் சுடுமண்சுதை (டெரகோட்டா) களை கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்தினர்.
- **பொழுதுபோக்கு** - தேர்ப்பந்தயம், சதுரங்கம், மீன்பிடித்தல், வேட்டையாடுதல்
- **அணிகலன்** - செம்பினால் ஆன அணிகலன்களைப் பயன்படுத்தினர்.
- கண்டுபிடிக்கப்பட்ட சிற்பங்கள்:
  1. மொகஞ்சதாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட நாட்டிய மங்கையின் வெண்கல சிலை
  2. ஹரப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட தாடியுடன் கூடிய சுண்ணாம்பு கல் சிலை
- சிந்து சமவெளி நாகரீகம் இயற்கை சீற்றங்களினால் (அ) ஆரியர்களின் வருகையினால் அழிந்தது

ஆகாஷ்
வ
ர
லா
று

# ஆரிய நாகரிகம்

- ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து கைபர் - போலன் கணவாய் வழியாக வந்தனர்.
- ஆரிய நாகரிகம் ஒரு கிராம நாகரிகமாகும்.
- இந்தியாவில் ஆரியர்கள் குடியேறிய பகுதி **ஆரிய வர்த்தம்**. இவர்கள் குடியேறிய காலகட்டம் வேதகாலம்.
- வித் என்ற வேர்ச் சொல்லிலிருந்து வேதம் என்ற சொல் பிறந்தது. வேதம் என்றால் உயர்வான அறிவு.
- வேதங்கள் நான்கு வகைப்படும். அவை ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள்.
  1. ரிக் வேதம் - கடவுளின் துதிப்பாடல்களின் தொகுப்பு
  2. யஜுர் வேதம் - வேள்விகளுக்கான ஸ்லோகங்களின் தொகுப்பு
  3. சாம வேதம் - இசை வடிவிலான தொகுப்பு
  4. அதர்வண வேதம் - இயற்கையைக் கட்டுபடுத்தும் பாடல்களின் தொகுப்பு.
- வேதகாலம் **முன்வேதகாலம், பின்வேதகாலம்** என இருவகைப்படும்.
- ரிக் வேதம் தொகுக்கப்பட்ட காலம் முன்வேத காலம். கி.மு. 1500 முதல் கி.மு. 1000 வரை.
- யஜுர், சாம, அதர்வண வேதம் தொகுக்கப்பட்ட காலம் பின்வேத காலம். கி.மு. 1000 முதல் கி.மு. 600 வரை.


**சமூக கட்டமைப்பு :**




- ரிக் வேதகாலத்தில் இருந்த அரச குலங்கள் - பரதர்கள், மத்ச்யர்கள், யதுக்கள், புருக்கள்.
- ரிக் வேதகாலத்தில் ராஜாவிற்கு உதவி செய்ய இருந்த அதிகாரிகள் **புரோகிதர், சேனானி**
- ரிக் வேதகாலத்தில் ராஜாவிற்கு உதவிசெய்ய இருந்த அமைப்புகள் **சபா, சமிதி**
- சபா - முதியோர் அவை. சமிதி - ஊர்மக்கள் பிரிதிநிதிகளைக் கொண்ட அவை
- ரிக்வேதகாலத்தில் ஆரியர்கள் பாகிஸ்தானிலுள்ள **சிந்துப்பகுதியில்** வாழ்ந்தனர்.
- ஆரியர்கள் பஞ்சாபில் குடியேறிய பகுதி **சப்த சிந்து (ஏழு நதிகள் இணையும் பகுதி)**
- ஏழு நதிகள் : சிந்து, ராவி, சட்லஜ், பியாஸ், ஜீலம், சீனாப், சரஸ்வதி
- ரிக் வேத காலத்தில் இருந்த பெண் கவிஞர்கள் : **விஸ்வவாரா, அபலா, கோசா, லோபமுத்ரா**
- ரிக் வேதகாலத்தில் ஒரு தாரமணம் நடைமுறையில் இருந்தன.
- ரிக் வேதகாலத்தில் வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட அலகுகள் **நிஷ்கா** என்ற தங்க அலகுகள்.
- ரிக் வேதகால மக்கள் **இயற்கையையும்** அதன் **சக்திகளையும்** வணங்கினர்.
- ரிக் வேதகால மக்கள் வணங்கிய கடவுள்கள் **இந்திரன், வருணன், அக்னி, பிருத்வி, வாயு**
- ரிக் வேதகால மக்கள் வணங்கிய பெண் கடவுள்கள் - ஆதித்தி, உஷஸ்
- பின் வேதகாலம் இதிகாச காலம் எனவும் அழைக்கப்பட்டது.
- பின் வேதகால மக்கள் நடத்திய யாகங்கள் **அஸ்வமேதம், இராஜசூயம், வாஜ்பேயம்**
- பின் வேதகால மக்கள் அருந்திய பானங்கள் சோம மற்றும் சுரா ஆகும்.
- பின் வேத காலத்தில் கார்கி மற்றும் மைத்ரேயி போன்ற கல்வி பெண்மணிகள் இருந்தனர்.
- பின் வேதகால மக்கள் வாழ்ந்த பகுதியான கங்கைச்சமவெளி ஆரிய வர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.
- பின் வேதகால அரசர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் -ராஜ விஸ்வஜனன், அகில புவனபதி, ஏகரதன், சாம்ராட்
- அரச குமாரர்களுக்கு தனுர்வேதம் எனப்படும் போர்க்கலை கற்பிக்கப்பட்டது.
- பின் வேதகாலத்தில் பலதார மணம் நடைமுறையில் இருந்தது.
- கர்மா கொள்கையும் அவதாரக் கொள்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- மகாபாரதம் வேதவியாசராலும் இராமாயணம் வால்மீகியாலும் எழுதப்பட்டது.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

# சமண சமயம் – மகாவீரர்



வர்த்தமானர் - மகாவீரர்

- மகாவீரர் என்றால் சிறந்த வீரர் என்று பொருள். இயற்பெயர் - வர்த்தமானர்
- வர்த்தமானர் கி.மு. 539 ல் பீகார் - வைசாலி - குந்தக் கிராமம் என்னும் ஊரில் பிறந்தார்.
- முதல் தீர்ந்தக்கரர் - ஆதிநாதர் (அ) ரிஷபதேவர்.
  23 வது தீர்ந்தக்கரர் - பார்சுவநாதர். 24வது தீர்ந்தக்கரர் - மகாவீரர்
- மகாவீரர் கி.மு. 467 ல் தன்னுடைய 72 வது வயதில் பவபுரி என்னுமிடத்தில் இறந்தார்.
- பெற்றோர் - சித்தார்த்தர், திரிசலை. மனைவி - யசோதா.
- இவரது மகள் - அன்னோஜா பிரியதர்ஷினி
- சமணர்களின் புனித நூல்கள் அங்கங்கள் மற்றும் பூர்வங்கள் ஆகும்.
- வர்த்தமானரின் போதனைகள் **மும்மணிகள் (அல்லது) திரிரத்தினங்கள்** மற்றும் 5 ஒழுக்கங்கள்

**சமண சமயத்தை பின்பற்றிய அரசர்கள்**

- **சந்திர குப்த மௌரியர்**
- **கலிங்கமன்னன் காரவேலன்**
- **கூன்பாண்டியன்முதலாம்**
- **மகேந்திரவர்மன்**

**சமணர்களின் தமிழ் இலக்கிய காப்பியங்கள்**

- **சீவகசிந்தாமணி**
- **வளையாபதி**
- **சூளாமணி**

- **சமணர்களின் தமிழ் இலக்கண நூல்கள் :** யாப்பெருங்கலக்காரிகை, யாப்பெருங்கல விருத்தி, நேமிநாதம், நன்னூல், அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம்
- சமணர்களின் தமிழ் அற நூல்கள் : நிகண்டுகள், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, திணைமாலை 150
- சமணர்களின் கட்டிடக்கலை : **இராஜஸ்தான் - மவுண்ட் அபு (தில்வாரா கோயில்)**
- **கஜுராஹோ சித்தூர், ரணக்பூர்** போன்ற சமணர் கோயில்கள்.
- சமணர்களின் புகழ் பெற்ற சிற்பங்கள் : **உதயகிரி, ஹதிகும்பா, கிர்னார், சிரவணபெலகோலா, கழுகுமலை**
- கர்நாடக மாநிலம் சிரவணபெலகொலாவில் உள்ள கோமதீஸ்வரர் சிலை சமணர்களின் நினைவுச்சின்னமாக விளங்குகிறது.
- சமயப் பிரிவுகள் : ஸ்வேதம்பரர் - பத்திரபாகு, திகம்பரர் - ஸ்தூலபாகு
- சமய மாநாடுகள் :
  1. முதல் மாநாடு - பாடலிபுத்திரம்
  2. இரண்டாவது மாநாடு - வாதாபி

ஆகாஷ் வரலாறு

# புத்த சமயம் – புத்தர்

- புத்தரின் இயற்பெயர் சித்தார்த்தர். இவர் கி.மு. 567 ல் பிறந்தார்.
- பிறந்த இடம் : நேபாளம் - கபிலவஸ்து - லும்பினி வனம்
- இறந்த இடம் : பீகார் - குசி நகரம்
- பெற்றோர் - சுத்தோதனார், மாயாதேவி, பிரஜாபதி கௌதமி (சிற்றன்னை)
- மனைவி - யசோதரை மகன் - இராகுலன்
- சித்தார்த்தர் அரகதமலா மற்றும் ருத்ரகா ஆகியோரிடம் சிறிது காலம் சீடராக இருந்தார்.
- புத்தரின் சீடர்கள் - சரிபுட்டர், மொக்கலண்ணர், அனந்தர், கசபர், உபாலி.
- முதல் போதனை - உத்திர பிரதேசம் - வாரணாசி - சாரநாத் - மான் பூங்கா
- புத்த சமயத்தின் அடிப்படைக் கொள்கை:
  4 உண்மைகள் மற்றும் 8 வகை மார்க்கங்கள்
- சமயப்பிரிவுகள் - ஹீனாயானம், மஹாயானம்.
- புத்தருக்குப்பின் வந்தவர்கள் போதி சத்துவர்கள் எனப்பட்டனர்.
- புத்த மதத்தின் புனித நூல் - திரி பீடகம். அவை
  1) சுத்த பீடகம்
  2) வினய பீடகம்
  3) அபிதம்ம பீடகம்



**சித்தார்த்தர் - கௌதம புத்தர்**

**சமய மாநாடுகள் :**

| மாநாடு | அரசன் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| முதல் மாநாடு | அஜாத சத்ரு | இராஜகிருகம் | மகாகசபர் |
| 2 வது மாநாடு | காகவர்மன் | வைசாலி | சபகாமி |
| 3 வது மாநாடு | அசோகர் | பாடலிபுத்திரம் | மொக்காலி புத்த திசா |
| 4 வது மாநாடு | கனிஷ்கர் | குந்தல்வனம் (காஷ்மீர்) | வசுமித்திரர் |



- மஹாயானத்தைத் தோற்றுவித்தவர் - நாகர்ஜுனர். தோன்றிய இடம் - 4வது புத்த சமய மாநாடு.
- புத்த மடாலயங்கள் விகாரம் அல்லது சைத்தியங்கள் என அழைக்கப்படுகிறது
- புத்த சமயத்தின் தொட்டில் - பீகார் புத்தரின் பிறந்த தினம் - புத்த பூர்ணிமா
- பௌத்த மதம் பின்பற்றப்படும் நாடுகள் : இலங்கை, பர்மா, திபெத், சீனா, ஜப்பான், தாய்லாந்து
- புத்த சமயத்தைப் பின்பற்றிய அரசர்கள் : அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர்
- நமது தேசியக்கொடியில் காணப்படும் **24 ஆரங்களைக்** கொண்ட சக்கரம் அசோகரின் தர்மச்சக்கரம்
- புத்தர்கால படைப்புகள் காணப்படும் இடங்கள் : கயா, சாஞ்சி, பர்கட்
- புத்த மத ஓவியங்கள் : அஜந்தா குகை ஓவியங்கள், எல்லோரா சிற்பங்கள், காந்தாரக்கலை சிற்பங்கள்
- புகழ் பெற்ற பௌத்த சமய நூல்கள் : **மணி மேகலை, குண்டலகேசி.**
- சமண முனிவர்கள் இயற்றிய நூல்கள் : **சிலப்பதிகாரம், நன்னூல், சீவக சிந்தாமணி, வளையாபதி.**
- சமணர்களின் புனித நூல்கள் : **அங்கங்கள், பூர்வங்கள்.**
- திரிபீடகம் முதன்முதலில் **வட்டக்காமினி அபயன** காலத்தில் நூல்வடிவில் பாலி மொழியில் எழுதப்பட்டது.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

# பேரரசுகளின் தோற்றம்


கி.மு. 6ம் நூற்றாண்டில் ஜனபதங்கள் மகாஜனபதங்களாக மாறின். முதலில் 16 மகாஜனபதங்கள் இருந்தன.

| | | | |
|---|---|---|---|
| 1. அங்கம் | 5. வஜ்ஜி | 9. குரு | 13. அஸ்மகம் |
| 2. மகதம் | 6. மல்லம் | 10. பாஞ்சாலம் | 14. அவந்தி |
| 3. கோசலம் | 7. சேதி | 11. மத்ஸ்யம் | 15. காந்தாரம் |
| 4. காசி | 8. வத்சம் | 12. சூரசேனம் | 16. காம்போஜம் |

இவற்றில் நான்கு மட்டுமே பேரரசுகளாக மாறின.

| மகாஜனபதம் | தலைநகரம் | அரசன் |
|---|---|---|
| அவந்தி | உஜ்ஜயினி | பிரயோதித்யவன் |
| வத்சம் | கோசாம்பி | உதயணன் |
| கோசலம் | அயோத்தி | பிரசேனஜித் |
| மகதம் | ராஜகிருகம் | பிம்பிசாரர் |

## 16 மகாஜனபதங்கள்



# மகதப் பேரரசு

**மகதப் பேரரசை மூன்று வம்சங்கள் ஆண்டு வந்தன.**

1) அரியங்க வம்சம்
2) சிசுநாகர் வம்சம்
3) நந்த வம்சம்



**அரியங்க வம்சம் :**

- முதல் மன்னன் - பிம்பிசாரர் காலம் - கி.மு.525 முதல் கி.மு.500 வரை
- சிறப்பு பெயர் - ஸ்ரேனிகா தலைநகரம் - சிரவஸ்தி
- கோசலா தேவியை மணந்து காசியைக் கைப்பற்றினார்.
- லிச்சாவி இளவரசி செல்லண்ணாவை மணந்தார்.
- மத்திய பஞ்சாபை சேர்ந்த இளவரசி ஹேமா என்பவரையும் மணந்தார்.
- அக்மேனியப் பேரரசன் முதலாம் டேரியஸிடம் சிந்து சமவெளியை இழந்தார்
- இவரது மகன் - அஜாத சத்ரு காலம் - கி.மு.500 - கி.மு.475 வரை
- சிறப்பு பெயர் - குனிகா தலைநகரம் - ராஜகிருகம்
- லிச்சாவிப் படையெடுப்பைத் தோற்கடித்தார்
- மகாசீலகண்டகா, ரதமசூலா ஆகிய கருவிகளைப் பயன்படுத்தினார்
- இவரது மகன் - உதயின். பாடலிபுத்திர நகரை நிர்மாணித்தவர்



**மகாபத்ம நந்தன்**

**சிசுநாகர் வம்சம் :**

- வம்சத்தைத் தோற்றுவித்தவர் - சிசுநாகர் காலம் - கி.மு.450 முதல் கி.மு.425 வரை
- தலைநகரம் - சிரவஸ்தி. குலம் - சூத்திர குலம்
- அவந்தி நாட்டை மகதத்துடன் இணைத்தார்
- இவரது மகன் - காகவர்மன் அல்லது காலசோகன்

**நந்த வம்சம் :**


- வம்சத்தைத் தோற்றுவித்தவர் - மகாபத்ம நந்தன் காலம் - கி.மு.425 முதல் கி.மு.325 வரை
- நந்தர்கள் என்றால் அதர்மிகா - சமயமற்றவர்கள் என்று பொருள்
- சிறப்பு பெயர் - இரண்டாம் பரசுராமன் மற்றும் ஏகரதன். இவருக்கு 8 புதல்வர்கள் உள்ளனர்.
- கடைசி மன்னன் - தன நந்தர் வீழ்த்தியவர் - சந்திரகுப்த மௌரியர்

**ஆகாஷ் பொன்மொழி**


முயற்சி இல்லாமல் மகிழ்ச்சி இல்லை, முயன்ற மனிதன் தோற்றதில்லை.
– ஆகாஷ் IAS அகாடமி

# அலெக்சாண்டர் படையெடுப்பு

- தந்தை - மாசிடோனிய மன்னன் இரண்டாம் பிலிப். இவரது ஆசிரியர் புகழ் பெற்ற கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாடில் ஆவார்.
- இவரது ரோல் மாடல் ரோமானியப் பேரரசர் ஹெர்குலஸ்.
- ஹோமர் எழுதிய இலியட் என்ற வீரகாவியம் அலெக்சாண்டரை பெரிய மாவீரனாக மாற்றியது.
- இந்தியாவில் அலெக்சாண்டர் கைப்பற்றிய முதல் பகுதி - தட்சசீலம். மன்னன் - அம்பி
- அடுத்ததாக கி.மு.326ல் ஜீலம் நதிப் போர் (அலெக்சாண்டர் - போரஸ்) இருவருக்கும் இடையே நடைபெற்றது.
- போரஸ் என்பவர் ஜீலம், சீனாப் இடைப்பட்ட பகுதியை ஆண்டு வந்த மன்னன்.
- ஜீலம் நதிப்போருக்கு மற்றொரு பெயர் - ஹைடாஸ்பஸ்
- கி.மு.330 - அர்பேலா போர் (3ம் டேரியஸ் மற்றும் அலெக்சாண்டர்)
- அலெக்சாண்டர் இந்தியாவில் 19 மாதங்கள் வரை தங்கி இருந்தார்
- வடமேற்கு இந்தியாவை தன் படைத்தளபதி செல்லுகஸ் நிகேடரிடம் ஒப்படைத்தார்.
- கி.மு.323ல் பாக்தாத் அருகில் பாபிலோன் என்னும் இடத்தில் 33வது வயதில் அலெக்சாண்டர் இறந்தார்
- அலெக்சாண்டர் நண்பன் - நியர்சஸ். அலெக்சாண்டர் குதிரை - பூசிபேலஸ்
- பாரசீகத்தின் மகா மன்னன் என்ற பட்டத்தைப் பெற்றார்.




**ஜீலம் நதிப் போர் (கி.மு. 326)**



அரிஸ்டாடில்

அலெக்சாண்டர்




# மௌரியப் பேரரசு

ஆகாஷ்
வ
ர
லா
று

- மௌரிய பேரரசு தோன்றுவதற்கு வித்திட்டவர் - சாணக்கியர்
- முதல் மன்னன் - சந்திரகுப்த மௌரியர் காலம் கி.மு.324 - கி.மு.299
- செல்லுகஸ் நிகேடரைத் தோற்கடித்து அவரது மகள் ஹெலனை மணந்தார்
- கிரேக்க நாட்டு அறிஞர் மெஸ்தனிஸ் எழுதிய நூல் - இண்டிகா
- சமயம் - சமணம். நண்பன் - பத்திரபாகு. இறந்த இடம் - சந்திரபஸ்தி
- இவரது மகன் பிந்து சாரன். காலம் - கி.மு.298 முதல் கி.மு.273 வரை
- இவருக்கு அமித்ரகாதன் என்ற சிறப்பு பெயரும் உண்டு.
- பிந்துசாரனின் மூத்த மகன் - சுமணா, இளைய மகன் - அசோகர்

## அசோகர் (கி.மு. 273 – கி.மு.236) :



மகா அசோகர்

- கி.மு.273ல் முடிசூட்டிக் கொண்டவர் 4 ஆண்டுகள் வாரிசுரிமைப் போருக்கு பின்தான் கி.மு. 269 ல் அரியணையில் அமர்ந்தார்.
- கி.மு. 261 - கலிங்க போர் (அசோகர் - கலிங்க மன்னன் தற்போது ஒடிசா மாநிலம்)
- கலிங்கப் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கை - 1.5 லட்சம் பேர்.
- அசோகர் பின்பற்றிய கொள்கை தம்மா - தர்மம்
- இந்தியாவில் முதல் மக்கள் நல அரசை உருவாக்கியவர் **அசோகர்.**
- பாடலிபுத்திரத்தில் மூன்றாவது புத்த சமய மாநாட்டைக் கூட்டியவர் **அசோகர்.**
- அசோகர் காலத்து புத்த ஸ்தூபிகள் : **சாஞ்சி, சாரநாத், லும்பினி**
- அசோகரின் கல்வெட்டுகள் **பிராகிருத மொழியில்** எழுதப்பட்டன.
- மக்களுக்கு உதவுவதற்காக அசோகரால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு **தர்மமகா மாத்திரங்கள்.**
- இலங்கையில் புத்த மதத்தைப் பரப்ப தன் மகன் **மகேந்திரன்**, மகள் **சங்கமித்திரையையும்** அனுப்பினார்.
- அசோகர் ஆட்சி செய்த மையப்பகுதி **மகதம்**, வடக்கு - தட்சசீலம் பாடலிபுத்திரத்தில் இருந்து ஆட்சி செய்தார்.
- கி.மு.232 ல் அசோகர் உயிர் நீத்தார். இவரது மறைவுக்கு பின் பேரரசு 2 பகுதிகளாக பிரிந்தது.
- மேற்கு - குணாளன் (மகன்) கிழக்கு - தசரதன் (பேரன்)
- மௌரிய அரசின் கடைசி மன்னன் - பிரகத்ரதன். மந்திரி புஷ்யமித்திரனால் கொல்லப்பட்டார்.

## மௌரியப் பேரரசின் ஆட்சி முறை :

- **நிர்வாகம்**

| | | |
|---|---|---|
| வடக்கு | - | தட்சசீலம் |
| தெற்கு | - | சுவர்ணகிரி |
| மேற்கு | - | உஜ்ஜயினி |
| கிழக்கு | - | தோசாலி |
| மத்தி | - | பாடலிபுத்திரம் |

- **பதவிகள்**

| | | |
|---|---|---|
| மகாமாத்திரர் | - | ஆளுநர் |
| அமாத்தியர் | - | சிவில் பணியாளர் |
| சம்ஹர்த்தர் | - | வருவாய்த்துறை |
| அத்யட்சர் | - | வணிகம், தொழில் |
| பிரதேசிகர் | - | மாவட்ட அதிகாரி |
| ராஜுக்கர் | - | நிர்வாகம், நீதி |
| தர்ம மகாமாத்திரர் | - | தொண்டு அமைச்சர்கள் |
| அந்த மகாமாத்திரர் | - | பாதுகாவலர் |
| யுக்தர் | - | அதிகாரிகள் |
| பரிஷத் | - | அமைச்சரவை |

- **நீதிமன்றம்**

| | |
|---|---|
| நகர நீதிமன்றம் | - தர்மஸ்தானியம் |
| மாவட்ட நீதிமன்றம் | - கண்டக சோதனம் |
| நீதிபதிகள் | - பிரேதிஷ்டிரியர்கள் |
| தலைமை நீதிபதி | - தர்மாதிகாரி |


- **படைப்பிரிவு**

| | |
|---|---|
| காலாட்படை | - 6 லட்சம் |
| குதிரைப்படை | - 3 லட்சம் |
| யானைப்படை | - 9 ஆயிரம் |
| தேர்ப்படை | - 8 ஆயரம் |
| கப்பற்படை | |

# குஷாணப்பேரரசு

- குஷாணர்கள் என்போர் யூச்சி என்ற இனக்குழுவின் உட்பிரிவினர்.
- முதல் மன்னன் - **முதலாம் காட்பீசஸ் (அ) குஜலா காட்பீசஸ்** (காலம் - கி.பி.1 முதல் கி.பி.15 வரை)
- தன் சுய உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டார்
- அடுத்த மன்னன் - இரண்டாம் காட்பீசஸ் (அ) வீமா காட்பீசஸ் (காலம் - கி.பி.15 முதல் கி.பி.65 வரை)
- தங்க நாணயங்களை வெளியிட்டார். அதில் இடம் பெற்ற வாசகம் - முழு உலகையும் வென்றவன்

**கனிஷ்கர் (கி.மு.78 – கி.மு.101) :**



**கனிஷ்கர்**

- 2ம் காட்பீசசுக்கு பின் வந்தவர்-**கனிஷ்கர்** (கி.பி.78-கி.பி.101).
- குஷாண வம்சத்தின் தலைசிறந்த மன்னர் **கனிஷ்கர்.**
- சீனா மீது இருமுறை படையெடுத்தார்.
- கனிஷ்கர் தோல்வியுற்ற சீனத்தளபதி **பாஞ்ஞோ**
- கனிஷ்கர் வெற்றி பெற்ற சீனத்தளபதி பாஞ்சோ **மகன் பான்யாங்**
- கனிஷ்கர் இணைத்த மத்திய ஆசியப் பகுதிகள் : காஷ்கர், யார்க்கண்ட், கோடான்
- கனிஷ்கரின் தலைநகர் **பெஷாவர் (எ) புருஷபுரம்.**
- கனிஷ்கர் உருவாக்கிய நகரம் - கனிஷ்கபுரம்
- 4வது புத்த சமய மாநாட்டைக் கூட்டியவர் **கனிஷ்கர் (காஷ்மீர் )** (குந்தல்வனம் )**.**
- மஹாயான புத்த சமயம் நான்காவது புத்த சமய மாநாட்டில் தோன்றியது.
- 4வது புத்த சமய மாநாட்டில் கலந்து கொண்ட புத்த சமய அறிஞர்கள் : வசுபந்து, அசுவகோஷர், நாகர்ஜீனர்
- மகாயான புத்த சமயப்பிரிவை பரப்ப அனுப்பப்பட்ட துறவியர் குழுக்கள் சென்ற இடம் - **திபெத், சீனா**
- அசுவகோஷரால் இயற்றப்பட்ட நூல்கள் : **புத்த சரிதம், சூத்திரலங்காரம்**
- கனிஷ்கர் காலத்து மருத்துவ அறிஞர் **சரகர்.** கிரேக்க கட்டிடக்கலை வல்லுநர் **எஜிலாஸ்.**
- கனிஷ்கர் காலத்தில் உருவாக்கப்பட்ட கலை **காந்தாரக்கலை** மற்றும் **மதுரா கலைபாணி.**
- கனிஷ்கர் **இரண்டாம் அசோகர்** என அழைக்கப்பட்டார்.
- (கி.பி. 78) கனிஷ்கர் காலத்தில் கொண்டு வந்த காலக்கணக்கீட்டு முறை **சக சகாப்தம்.**
- கனிஷ்கரின் மகன் ஹிவிஷ்கர் (2ம் கனிஷ்கர்). கடைசி மன்னன் - வாசுதேவன்.


தேடி வாருங்கள்! தேர்வாகிச் செல்லுங்கள்!!

தமிழகத்தின் தலைசிறந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம்

ஆகாஷ் IAS அகாடமி

# குப்த பேரரசு

- குப்தப்பேரரசை தோற்றுவித்தவர் ஸ்ரீகுப்தர். காலம் - (கி.பி.275 - கி.பி.300)
- இவரது மகன் - கடோத்கஜ குப்தர். காலம் - (கி.பி.300 - 320)
- குப்தப் பேரரசின் முதல் சுதந்திர மன்னன் - முதலாம் சந்திர குப்தர் (கி.பி.320 - கி.பி.335)
- இவர் குப்த சகாப்தத்தைத் தோற்றுவித்தார். சிறப்பு பட்டம் - மகாராஜாதி ராஜா.
- முதலாம் சந்திரகுப்தர் குமார தேவி என்ற லிச்சாவி இளவரசியை மணந்தார்.
- நாணயத்தில் உருவம் பொறிக்கப்பட்ட முதல் இந்திய அரசி குமார தேவி. (லிச்சாவி இளவரசி)
- மெஹ்ருளி இரும்புத் தூண் கல்வெட்டு இவரது போர் வெற்றிகளைக் குறிப்பிடுகின்றது.
- முதலாம் சந்திர குப்தர் மகாராசாதிராசா என்ற பட்டப் பெயரினை சூட்டிக் கொண்டார்.
- இவரது மகன் - சமுத்திர குப்தர். காலம் கி.பி.335 முதல் கி.பி.380 வரை.
- இவரது அமைச்சர் - அரிசேனர். இவர் பொறித்த கல்வெட்டு - அலகாபாத் கல்வெட்டு (33 வரிகள் உடையது).
- முதல் படையெடுப்பு - வட இந்திய அரசுகள் (11 குறுநில மன்னர்கள், அச்சுதன், நாகபாணன்)
- 2வது படையெடுப்பு - தென்னிந்திய அரசுகள் 12 பேர் (தட்சிணபாதா படையெடுப்பு)
- 3வது படையெடுப்பு - வட இந்திய அரசுகள் 9 பேர்
- சமுத்திர குப்தரின் சிறப்புப் பெயர் - கவிராஜன். சமயம் - வைணவம்.
- சமுத்திர குப்தரால் சிறை செய்யப்பட்ட பல்லவ அரசர் விஷ்ணு கோபன் ஆவார்.
- சமுத்திர குப்தரின் மகன் - 2ம் சந்திர குப்தர் (விக்ரமாதித்யன்). காலம் கி.பி.380 முதல் கி.பி.415 வரை.
- விக்கிரமாதித்யர் என்றால் வலிமையிலும் வீரத்திலும் சூரியனுக்கு ஒப்பானவர் என்று பொருள்.
- இவர் திருமண உறவுகள் மூலம் தனது எல்லையை பலப்படுத்திக் கொண்டார்.
- இந்தியாவின் நாக வம்சத்தின் இளவரசி குபேரநாகா என்பவரை மணந்து கொண்டார்.
- தன் புதல்வி பிரபாவதியை வாகாடக மன்னன் 2ம் ருத்ரசேனருக்கு மணமுடித்து கொடுத்தார்.
- சாகரிகளைத் தோற்கடித்ததால் சாகரி என்ற பட்டத்தைப் பெற்றவர் இரண்டாம் சந்திர குப்தர்.
- 2ம் சந்திர குப்தரின் சபையிலிருந்த மிகச் சிறந்த அறிஞர்கள் காளிதாசர் மற்றும் அமர சிம்மன் ஆவர்.
- இரண்டாம் சந்திர குப்தரின் அவைக்கு வந்த சீனப்பயணி பாஹியான் ஆவார்.
- பாஹியான் கங்கைச் சமவெளியை பிராமணர்களின் பூமி என்று குறிப்பிடுகிறார்.
- இரண்டாம் சந்திர குப்தரின் அவையை அலங்கரித்த ஒன்பது அறிஞர்கள் நவரத்தினங்கள் எனப்பட்டனர்.
- குப்தர் காலத்தில் புகழ்பெற்ற மருத்துவ வல்லுனர் தன்வந்திரி ஆவார்.
- குப்தர் காலத்தில் முதன் முறையாக சிவில் சட்டங்களும், குற்றவியல் சட்டங்களும் வேறுபடுத்தப்பட்டன.
- டாக்டர் ஸ்மித் சமுத்திரகுப்தரை இந்திய நெப்போலியன் என்று வர்ணித்தார்.
- நாலந்தா பல்கலைக்கழகத்தை தோற்றுவித்தவர் குமார குப்தர் ஆவார்.
- விசாகதத்தர் என்பவர் முத்ரா இராட்சசத்தை இயற்றினார்.
- குப்தர் காலத்தில் கணித அறிஞர் வராக பட்டர்.

- ஸகந்த குப்தருக்குப்பின் குப்தப் பேரரசு சிதைவுற்று சிறு நாடுகளாகப் பிரிந்தன.
- ஸ்கந்த குப்தரின் பிடாரி ஒற்றைக் கல் தூண் சிறப்பு வாய்ந்தது.
- அகராதியைத் தொகுத்தவர் அமரசிம்மர். சூத்ரகர் மிருச்சடிகம் என்னும் நூலை இயற்றினார்.
- குப்தர் காலத்தல் பெரிய அம்மைக்கு தடுப்பூசி போடும் முறை தெரிந்திருந்தது.
- சாரநாத்தில் புத்தருக்கு அழகிய சிலை வடிக்கப்பட்டன.
- குப்தர் காலத்தில் நிலவரி , வணிகவரி போன்றவை வசூலிக்கப்பட்டது.
- காளிதாசர் - ருதுசம்ஹாரம், மேகதூதம் (கவிதை நூல்)
  இரகுவம்சம், குமார சம்பவம் (காப்பியங்கள்)
  சாகுந்தலம், மாளவிகாக்னிமித்திரம், விக்கிரம ஊர்வசியம் (நாடக நூல்)
- விசாகதத்தர் - முத்ரா ராட்சசம், தேவி சந்திர குப்தம் (நாடக நூல்)
- வராகபட்டர் - வானியலாளர் மற்றும் கணிதவியல் அறிஞர்
  புவி வட்டவடிவம் உடையது. கிரகணங்கள் தோற்றத்தை ஆராய்ந்தார்.
- ஆரியப்பட்டர் - பூஜ்யத்திற்கு மதிப்பு இருப்பதாக கூறியவர். நூல் - ஆரியப்பட்டீயம்.
- வராகமிகிரர் - வானியல் அறிஞர். நூல் - பிருஹத் சம்ஹிதம், பஞ்சசித்தாந்திகம்,
  பிருஹத் ஜாதகம், லகு ஜாதகம்.
- வாக்பதர் - மருத்துவ அறிஞர். நூல் - அஷ்டாங்கிக சம்கிரஹம் (8 மருத்துவ குறிப்புகள்)
- பிரம்மகுப்தர் - பிரம்ம சித்தாந்தம் (முற்கால நியூட்டன்)
- தன்வந்திரி - ஆயுரவேத மருத்துவம்.
- மெஹ்ராலி தூண் - கி.பி.4ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இரும்புத்தூண் (சந்திரர் தூண் - டெல்லி)
- அனுலோமா - உயர்ஜாதி ஆண் மற்றும் கீழ்ஜாதி பெண் திருமணம்.
- பிரதிலோமா - உயர்ஜாதி பெண் மற்றும் கீழ்ஜாதி ஆண் திருமணம்
- ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள தியோகார் தசாவதாரக் கோயில், அலகாபாத்தில் உள்ள கார்வாஸ் ஆலய சிற்பங்களும் குப்தர்கள் கட்டிடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகள்.

# வர்த்தன வம்சம்



**ஹர்ஷர்**

புஷ்யபூதி
↓
பிரபாகர வர்த்தனர்
↓
இராஜ்ய வர்த்தனர் | ஹர்ஷ வர்த்தனர் | இராஜ்ய ஶ்ரீ

இராஜ்ய ஶ்ரீ
↓
கிரகவர்மன் (கன்னோச்சி)
↓
தேவகுப்தன் (மாளவம்)
↓
சசாங்கன் (வங்காளம்)

**<u>ஹர்ஷ வர்த்தனர்</u> :**

- காலம் கி.பி. 606 முதல் கி.பி. 647 வரை. தலைநகரம் - தானேஸ்வரம்
- ஹர்ஷரின் அண்ணனைக் கொன்றவர் **சசாங்கன்.**
- ஹர்ஷர் சசாங்கனுடன் போர் புரிவதற்கு உதவி புரிந்தவர் காமரூபத்தை ஆண்ட மன்னன் **பாஸ்கரவர்மன்.**
- ஹர்ஷர் தோற்ற தென்னிந்திய ஆட்சியர் சாளுக்கிய மன்னன் **இரண்டாம் புலிக்கேசி.**
- பௌத்த துறவியாக மாறியவர் ஹர்ஷரின் சகோதரி **ராஜஶ்ரீ.**
- ஹர்ஷர் புத்த சமயத்திற்கு மாறக் காரணமானவர்கள் **ராஜஶ்ரீ** மற்றும் **யுவான்சுவாங்.**(பயணிகளின் இளவரசன்)
- பௌத்த சமய மாநாடுகளை ஹர்ஷர் கூட்டிய இடங்கள் : **கன்னோசி, பிரயாகை.**
- பிரயாகையில் 5 வருடத்திற்கு 1 முறை நடத்தும் மாநாட்டில் தன் சொத்தில் 1 பகுதியை தானமாக வழங்கினார்.
- **நாளந்தா** பல்கலைக்கழகம் ஹர்ஷர் காலத்தில் உலகப்புகழ் பெற்றது.
- இவரது காலத்தில் நாளந்தா பல்கலைகழகத்தின் துணைவேந்தராக இருந்தவர் - தரும பாலர்.
- ஹர்ஷரின் அமைச்சராக இருந்த சமஸ்கிருத **அறிஞர் பாணர்.**
- **ஹர்ஷசரிதம்** எனும் நூலை இயற்றியவர் பாணர்.
- ஹர்ஷர் இயற்றிய புகழ் பெற்ற நூல்கள் : நாகானந்தம், ரத்னாவளி, பிரியதர்சிகா.
- ஹர்ஷர் ஆட்சிக்காலத்தில் யுவான்சுவாங் இந்தியா வந்தார்.
- இவர் சென்ற இடங்கள் : கன்னோசி, பிரயாகை, நாளந்தா, காஞ்சிபுரம். எழுதிய நூல் **சி-யூ-கி.**
- ஹர்ஷர் அரியணைக்கு வந்த 22வது வயதில் மதுபென் பட்டயத்தை வெளியிட்டார்.
- ஹர்ஷரது ஆவணக் காப்பகம் நிலோபிது என அழைக்கப்பட்டது.
- சீனப் பயணி யுவான் சுவாங்கை சீன எல்லை வரை கொண்டு சென்ற மன்னன் - உடிதா.
- இஸ்லாமிய படையெடுப்புக்கு முன் வட இந்தியாவில் இருந்த கடைசிப்பேரரசு ஹர்ஷப்பேரரசு.

ஆகாஷ்
வ
ர
லா
று

# வட இந்தியப்பகுதிகள் – இராஜபுத்திரர்கள்

- கி.பி. 8 முதல் கி.பி. 18 வரை உள்ள காலம் **இடைக்காலம்**
- முன் இடைக்காலம் **கி.பி. 8 முதல் கி.பி. 13** பின் இடைக்காலம் **கி.பி. 13 முதல் கி.பி. 18 வரை**
- இடைக்காலத்தில் வட இந்தியப் பகுதிகளை ஆண்டு வந்தவர்கள் ராஜபுத்திரர்கள் எனப்பட்டனர்.
- வடஇந்தியாவை 36 வகையான இராஜபுத்திர மரபுகள் ஆண்டு வந்தன.



**இராஜபுத்திரர்கள் ஆண்ட முக்கியப் பகுதிகள் :**

| ஆண்ட பகுதி | மரபுகள் | ஆண்ட பகுதி | மரபுகள் |
|---|---|---|---|
| அவந்தி | பிரதிகாரர்கள் | கன்னோசி | ரத்தோர்கள் |
| வங்காளம் | பாலர்கள், சேனர்கள் | குஜராத் | சோலங்கிகள் |
| அஜ்மீர், டெல்லி | சௌகான்கள் | பந்தல்கண்ட் | சந்தேலர்கள் |
| மேவார் | சிசோதியர்கள் | மாளவம் | பரமாரர்கள் |

- பிரதிகாரர்களின் மரபு **கூர்ஜரமரபு.** காலம் **கி.பி. 8 - 1 1 ம் நூற்றாண்டு**
- பிரதிகாரர்களின் முதல் அரசன் **முதலாம் நாகப்பட்டர் (725 - 740)** கடைசி அரசர் **இராஜ்யபாலா**
- பிரதிகாரர்களில் சிறந்த மன்னர்கள் **மிகிர போசர், மகேந்திர பாலர்**
- முகமது கஜினி இராஜ்யபாலா மீது போர் தொடுத்த ஆண்டு **1018**
- ஜீனட் முஸ்லீம், முகமது கஜினியிடம் இருந்து இந்தியாவை பாதுகாத்தவர்கள் **பிரதிகாரர்கள்**
- பாலர் மரபைத் தோற்றுவித்தவர் **கோபாலர் (கி.பி. 765 - கி.பி. 769)** கடைசி அரசர் **கோவிந்த பாலர்**
- மிகச்சிறந்த அரசர்கள் - தருமபாலர்(கி.பி.769 - கி.பி.815), தேவபாலர் (கி.பி.815 - கி.பி.855)
- தருமபாலர் உருவாக்கிய பல்கலைக்கழகம் **விக்ரமசீலா.** புதுப்பித்த பல்கலைக்கழகம் **நாளந்தா**
- கனோஜ் பகுதிக்காக 200 ஆண்டுகளாக போர் புரிந்த மரபுகள் **பிரதிகாரர்கள், பாலர்கள், இராஷ்டிரகூடர்கள்**
- கனோஜ் பகுதியை ஆட்சி செய்த பிரதிகாரர்களிடம் திறைசெலுத்திய அரசர்களாக இருந்தவர்கள் **தோமர்கள்.**
- மகிபால தோமர் கைப்பற்றிய இடம - **தானேஸ்வரம் ஹான்சி, நாகர்கோட்.**
- சௌகான்கள் மரபில் சிறந்த மன்னன் **பிரிதிவிராஜ் சௌகான்**
- சௌகான்கள் டெல்லியைக் கைப்பற்றிய நூற்றாண்டு **கி.பி.12**
- ரத்தோர்களின் ஆட்சிக்காலம் **1090 - 1194.** இவர்களில் தலைசிறந்த மன்னர் **ஜெயச்சந்திரன்**
- கி.பி. 1194 ல் முகமது கோரி, ஜெயச்சந்திரன் இடையே நடந்த போர் **சந்தவார் போர்**
- மேவாரை ஆட்சி செய்த பாபாரவாடி வழிவந்த **இராணாரத்தன் சிங்** அலாவுதீன் கில்ஜி-யுடன் போரிட்டது - கி.பி.1307
- இராணாரத்தன் சிங்கின் மனைவி **இராணி பத்மினி**, **ஜவ்ஹர்** என்ற வழக்கத்தின் படி தீயில் குதித்து இறந்தார்.
- மகோபாவை தலைநகராக நிறுவிய சந்தேல மன்னன் **யசோத வர்மன்.**

- சந்தேல மன்னர்களில் கடைசி மன்னன் **பாரமால்**
- சந்தேல மன்னர்களின் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டு **கலிஞ்சார் கோட்டை**
  (கந்தர்ய மகாதேவர் ஆலயம் கஜுராஹோ - 1050)
- சிதோதியர்கள் மரபினைத் தோற்றுவித்தவர் **பாபாரவால்.** தலைநகர் **சித்தூர்**
- பரமாரர்களில் சிறந்த மன்னன் **இராஜாபோஜ்** தலைநகர் **தாரா.**
- இராஜபுத்திரர்கள் நாட்டினை **ஜாகிர்களாக** பிரித்தனர்

**இராஜபுத்திரர்கள் கால நூல்கள், ஆசிரியர்கள்**

- **இராஜதரங்கிணி - கல்ஹணர்**
- **கீதகோவிந்தம் - ஜெயதேவர்**
- **கதா சரித சாகரம் - சோமதேவன்**
- **பிருத்திவிராஜ்ரசோ - சந்த்பரிதை**
- **சித்தாந்த சிரோமணி (வானவியல் நூல்) - பாஸ்கரச்சாரியா**
- **கற்பூர மஞ்சரி, பால இராமாயணம் - இராஜசேகரன்**

- **இராஜபுத்திரர்களின் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டு :**
  - லிங்கராஜா ஆலயம் - புவனேஷ்வர்
  - அபுமலையில் உள்ள தில்வாரா
  - கொனார்க்கில் உள்ள சூரியனார் ஆலயம்
- இராஜாபோஜ் **போபால்** நகரில் அழகிய ஏரி ஒன்றை அமைத்தார் (250 சதுர மைல்)
- **தாராவில்** சமஸ்கிருத கல்லூரியை நிறுவியவர் **இராஜாபோஜ்**
- இராசபுத்திர - **இந்து மதத்தை** போற்றி வளர்த்தனர்
- சமணசமயம், புத்தசமயத்தை ஆதரித்தனர்
- இராசபுத்திரர்களின் காலத்தில் **பக்தி இயக்கம்** மலரத் தொடங்கியது.
- இராசபுத்திரர்களின் அரசு **நிலமானிய சிறை**யினை அடிப்படையாக் கொண்டிருந்தது.
- இராசபுத்திரர்கள் காலத்தில் வளர்ச்சியடைந்த வட்டார மொழிகள் -**மராத்தி, குஜராத்தி, வங்கமொழி**
- மகேந்திரபாலர், மகிபாலரின் அவைப்புலவர் **இராசசேகரன்**

**ஏந்த ஒரு வேலையையும் செய்ய ஒரு சுலபமான வழி இருக்கும். கஷ்டத்திற்காக வருத்தப்படுவதை விட வழி கண்டுபிடிக்க முயற்சி செய்வதே புத்திசாலித்தனம்!**

அரசுவேலை பெற்றுத்தர தேர்வுப்பயிற்சிக்கு....

**ஆகாஷ் IAS அகாடமி**

# தக்காண அரசுகள்

**சாளுக்கியர்கள்**

- இந்தியாவின் தெற்குப் பகுதி தக்காணம் அல்லது தட்சிணபதம் என அழைக்கப்படுகிறது.
- சாளுக்கியர்கள் கூர்ஜர மரபைச் சேர்ந்தவர்கள் என்று அறியப்படுகிறது.
- இவர்கள் காலத்தால் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

ஆகாஷ் வரலாறு

**சாளுக்கியர்கள்**
- **மேலை சாளுக்கியர்கள்**
  - **முற்கால மேலை சாளுக்கியர்கள்**
  - **பிற்கால மேலை சாளுக்கியர்கள்**
- **கீழை சாளுக்கியர்கள்**

**மேலை சாளுக்கியர்கள்**

**முற்கால மேலை சாளுக்கியர்கள் (கி.பி.6 முதல் கி.பி.8)**

- தலைநகரம் - வாதாபி. எனவே இவர்கள் வாதாபி சாளுக்கியர்கள் என அழைக்கப்படுகின்றன.
- வாதாபி சாளுக்கிய மரபிற்கு அடித்தளம் இட்டவர் - முதலாம் புலிகேசி (கி.பி.543 - கி.பி.566)
- இவருக்குப் பின் மிகச்சிறந்த அரசன் இரண்டாம் புலிகேசி (கி.பி.610 - கி.பி.642)
- இவரது ஆட்சியைப் பற்றி அய்ஹோலே கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.
- கி.பி.637ல் ஹர்ஷருடன் நர்மதை நதிக்கரையில் போரிட்டு அவரை வென்றார்.
- கி.பி.640ல் பல்லவர் மீது படையெடுத்து முதலாம் மகேந்திரவர்மனைப் போரில் தோற்கடித்தார்.
- கி.பி.642ல் முதலாம் மகேந்திரவர்மனின் மகனான முதலாம் நரசிம்மவர்மன் தன் தந்தையைத் தோற்கடித்த இரண்டாம் புலிகேசியை மணிமங்கலப் போரில் வெற்றி கொண்டார்.

## பிற்கால மேலை சாளுக்கியர்கள் (கி.பி.10 முதல் கி.பி.12)

- இராட்டிரகூடர்களின் கடைசி அரசனான 2ம் கங்கரை தோற்கடித்து பிற்கால மேலை சாளுக்கியம் வளர்ந்தது.
- பிற்கால சாளுக்கிய மரபினைத் தோற்றுவித்தவர் - இரண்டாம் தைலப்பா (கி.பி.973 முதல் கி.பி.997)
- தலைநகரம் - கல்யாணி. இதனால் கல்யாணி சாளுக்கியர்கள் என அழைக்கப்பட்டனர்.
- **பிற்கால மேலை சாளுக்கிய மரபின் குறிப்பிடத்தக்க அரசர்கள்**

1) சத்தியசிராயா - கி.பி.997 - கி.பி.1008
2) ஐந்தாம் விக்ரமாதித்தன் - கி.பி.1008 - கி.பி.1014
3) இரண்டாம் ஜெயசிம்மன் - கி.பி.1015 - கி.பி.1043
4) முதலாம் சோமேஸ்வரன் - கி.பி.1043 - கி.பி.1068
5) இரண்டாம் சோமேஸ்வரன் - கி.பி.1068 - கி.பி.1076
6) ஆறாம் விக்ரமாதித்யன் - கி.பி.1076 - கி.பி.1126
7) மூன்றாம் சோமேஸ்வரன் - கி.பி.1126 - கி.பி.1138
8) மூன்றாம் தைலப்பா - கி.பி.1151 - கி.பி.1163

ஆகாஷ்
வ
ர
லா
று

- கொப்பம் போர் கி.பி.1053 - (முதலாம் சோமேஸ்வரன் - சோழ அரசன்)
- ஆறாம் விக்ரமாதித்தன் காலத்தில் இருந்த அறிஞர்கள்

1) பில்ஹணர் - விக்கிரமாங்க சரிதம். 2) விக்னேஸ்வரன் - மிக்தாக்சரம்.

- கடைசி அரசன் நான்காம் சோமேஸ்வரன்.

## கீழை சாளுக்கியர்கள் (கி.பி.7 முதல் கி.பி.12)

- கீழை சாளுக்கிய மரபை தோற்றுவித்தவர் - விஷ்ணுவர்தன் (2ம் புலிகேசியின் தம்பி)
- தலைநகரம் - வெங்கி. இதனால் வெங்கி சாளுக்கியர்கள் என அழைக்கப்பட்டனர்.
- **கீழை சாளுக்கிய மரபின் அரசர்கள்**

1) முதலாம் விஷ்ணுவர்தன் கி.பி.615 - கி.பி.633
2) முதலாம் ஜெயசிம்மன் கி.பி.633 - கி.பி.663
3) இரண்டாம் விஷ்ணுவர்தன் கி.பி.663 - கி.பி.672
4) மங்கியுவராஜன் கி.பி.672 - கி.பி.696
5) இரண்டாம் ஜெயசிம்மன் கி.பி.696 - கி.பி.709
6) மூன்றாம் விஷ்ணுவர்தன் கி.பி.709 - கி.பி.746
7) முதலாம் விஜயாதித்தன் கி.பி.746 - கி.பி.766
8) நான்காம் விஷ்ணுவர்தன் கி.பி.766 - கி.பி.799
9) இரண்டாம் விஜயாதித்தன் கி.பி.799 - கி.பி.844
10) மூன்றாம் விஜயாதித்தன் கி.பி.844 - கி.பி.888
11) பீமன் கி.பி.888 - கி.பி.918
12) இரண்டாம் பீமன் கி.பி.934 - கி.பி.945
13) ஆறாம் விஜயாதித்தன் கி.பி.948 - கி.பி.970

- விஷ்ணுவர்தனர் காலத்தில் பிஸ்தாபுரத்தில் இருந்து தலைநகர் வெங்கிக்கு மாற்றப்பட்டது.
- விஷ்ணுவர்தன் அவையில் பாரவி என்ற அறிஞர் இருந்தார்
- கீழைச் சாளுக்கிய மரபில் வந்த இராஜேந்திரன் என்பவர் முதலாம் இராஜேந்திரனின் மகள் அம்மங்காதேவியை மணந்ததால் முதலாம் குலோத்துங்கச்சோழன் பிறந்தார். இதனால் சாளுக்கிய வம்சம் சோழ நாட்டுடன் இணைந்தது

# ராட்டிரக் கூடர்கள்

- ராட்டிரக்கூடர் என்ற சொல்லுக்கு ராட்டிரம் என்னும் சிறிய பகுதியை ஆளுகை செய்பவர்கள்.
- ராட்டிரக்கூடர்கள் மகாராஷ்டிரத்தையும், கர்நாடகத்தையும் ஆட்சி செய்தனர்.
- ராட்டிரக்கூடர் மரபைத் தோற்றுவித்தவர் தண்டி துர்கன் (கி.பி.745 - கி.பி.756)
- மேலை சாளுக்கிய அரசன் 2ம் கீர்த்திவர்மனை தோற்கடித்து, கி.பி.753ல் தக்காணத்தில் ஆட்சியை அமைத்தார்
- தலைநகரம் - மால்கேட். இவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் - முதலாம் கிருஷ்ணன் (கி.பி.756 - கி.பி.775)
- கங்கர்களின் தலைநகரமான மான்யதேகம் என்ற பகுதியைக் கைப்பற்றினார்.
- எல்லோராவில் புகழ்பெற்ற கைலாசநாதர் குடைவரைக் கோயிலைக் கட்டினார்.

**இவருக்குப் பின் வந்தவர்கள்**

| | |
|---|---|
| இரண்டாம் கோவிந்தன் | - கி.பி.775 - கி.பி.780 |
| துருவன் | - கி.பி.780 - கி.பி.793 |
| மூன்றாம் கோவிந்தன் | - கி.பி.793 - கி.பி.814 |
| முதலாம் அமோகவர்ஷன் | - கி.பி.814 - கி.பி.880 |
| இரண்டாம் கிருஷ்ணர் | - கி.பி.880 - கி.பி.912 |
| மூன்றாம் கிருஷ்ணர் | - கி.பி.936 - கி.பி.968 |

ஆகாஷ்
வ ர லா று

- முதலாம் அமோகவர்ஷனுக்கு நிருபதுங்கன் என்ற சிறப்பு பெயர் உண்டு.
- மூன்றாம் கிருஷ்ணர் தென்னிந்தியாவில் ராமேஸ்வரம் வரை படையெடுத்து சென்றார்.

**கலை மற்றும் கட்டிடக்கலை :**

- மும்பைக்கு அருகில் உள்ள புகழ்பெற்ற எலிபண்டா கோயில் மிகச்சிறந்த கட்டிடக்கலை
- பிரதான மதமாக சைவமும், வைணவமும் விளங்கியது.
- சமணரான முதலாம் அமோகவர்ஷன் பல சமண அறிஞர்களை ஆதரித்தார்.
- புகழ்பெற்ற சமணகுரு ஜீனசேனர் ஆதிபுராணம் என்ற நூலை இயற்றினார். மேலும் பார்சுவ நாதரின் வாழ்க்கை வரலாற்றை பார்சுவ உதயம் என்ற நூலாக இயற்றியுள்ளார்.
- கன்னட மொழியில் எழுதப்பட்ட முதல் கவிதை நூல் கவிராஜமார்க்கம். எழுதியவர் - முதலாம் அமோகவர்ஷன்.
- கன்னட இலக்கியத்தின் முப்பெரும் கவிஞர்கள் - பம்பர், பொன்னர், இரன்னர். முதல் இருவரும் மூன்றாம் கிருஷ்ணர் காலத்தைச் சேர்ந்தவர்கள்.

**தக்காணப் பகுதியின் குறுநில மன்னர்கள்**

- பிற்கால மேலை சாளுக்கிய வம்சம் வீழ்ச்சியடைந்தவுடன் தக்காணப் பகுதியில் மூன்று குறுநில மன்னர்கள் ஆட்சிக்கு வந்தனர். அவர்கள்
  1. ஹொய்சாளர்கள் - துவாரசமுத்திரம் பகுதி
  2. காகத்தீயர்கள் - வாரங்கல் பகுதி
  3. யாதவர்கள் - தேவகிரி பகுதி

ஆகாஷ்
வ
ர
லா
று

**ஹொய்சாளர்கள் :**

- இவர்களின் காலம் கி.பி.11 - கி.பி.14ம் நூற்றாண்டு.
- முதல் மன்னன் - முதலாம் வினையாதித்தன் (கி.பி.1006 - 1022). தலைநகரம் - சோசவீர்.
- தலைசிறந்த மன்னன் - விஷ்ணுவர்தன். இவர் தலைநகரை துவாரசமுத்திரத்திற்கு மாற்றினார்.
- இவருக்கு பின் வந்தவர்கள்.

  1. 2ம் வீரபல்லாளா (கி.பி.1173 - கி.பி.1220)
  2. 2ம் நரசிம்மன் (கி.பி.1220 - கி.பி.1235)
  3. 3ம் பல்லாளா (கி.பி. 1291 - கி.பி.1342)
  4. 4ம் பல்லாளா - கடைசி அரசன்.

- ஹொய்சாளர்கள் கன்னட இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டனர்.
- நியச்சந்திரா, கண்டி, ராகவங்கர், நேமிச்சந்திரன் ஆகியோர் சிறந்த இலக்கியங்களைப் படைத்தனர்.

**காகத்தியர்கள் :**

- இவர்கள் காலம் கி.பி.12 - கி.பி.14ம் நூற்றாண்டு.
- முதல் மன்னன் - 2ம் புரோலா (கி.பி.1110 முதல் கி.பி.1158 வரை). தலைநகரம் - அனுமகொண்டா.
- இவர் மகன் - முதலாம் பிரதாபருத்ரன் (கி.பி.1158 - கி.பி.1196). தலைநகரை வாரங்கலுக்கு மாற்றினார்.
- இவர்களுக்குப் பின் வந்தவர்கள்
  1. கணபதி (கி.பி.1199 - கி.பி.1261)
  2. ருத்ராம்பாள் (கி.பி.1261 - கி.பி.1291)
  3. பிரதாபருத்ரன் (கி.பி.1291 - கி.பி.1323)
  4. வினயகதேவன் (கி.பி.1323 - கி.பி. 1362)
- கியாசுதீன் மகன் உலுக்கான் கி.பி.1323ல் பிரதாபருத்ரனை சிறைபிடித்து டெல்லிக்கு அனுப்பினார்.
- காகத்தியர்களின் இறுதி அரசன் வினயகதேவன் கி.பி.1362ல் பாமின சுல்தான் முதலாம் முகமதுஷா என்பவரால் கொல்லப்பட்டார்.
- அனுமகொண்டாவில் இவர்கள் கட்டிய ஆயிரம்தூண் ஆலயம் இவர்களது மிகச் சிறந்த கட்டிடக்கலை.

**யாதவர்கள் :**

- இவர்கள் காலம் கி.பி.12 - கி.பி.14ம் நூற்றாண்டு.
- யாதவர்களின் மற்றொரு பெயர் - **செவுனர்கள்**
- முதல் மன்னன் - 5ம் பில்லாமா (கி.பி.1175 - கி.பி.1190). தலைநகரம் - தேவகிரி.
- இவர் கி.பி.1190ல் லக்கண்டி போர் களத்தில் 2ம் வீரப்பல்லாளாவால் கொல்லப்பட்டார்.
- இவரின் வழித்தோன்றல்கள் :
  1. ஜெய்திரபாலா (கி.பி.1191 - கி.பி.1210)
  2. சிங்கனா (கி.பி.1210 - கி.பி.1247)
  3. கிருஷ்ணா (கி.பி.1247 - கி.பி.1260)
  4. ராமச்சந்திர தேவா (கி.பி.1271 - கி.பி.1309).
- தேவகிரிக் கோட்டை இவர்களின் காலத்தில் தான் கட்டப்பட்டது. பிற்காலத்தில் டெல்லி சுல்தான்கள் அந்தக் கோட்டையில் சார்மினாரைக் கட்டியுள்ளனர்.

# அரேபியர்களின் சிந்து படையெடுப்பு

- அரேபியாவில் உள்ள மெக்காவில் பிறந்தது இஸ்லாம் சமயம். நிறுவியவர் முகமது நபி (கி.பி.570 - 632)
- முதலில் இஸ்லாம் சமயத்தை பின்பற்றியவர்கள் அரேபியர்கள்.
- முதல் அரேபிய படையெடுப்பு கி.பி.636 முதல் கி.பி.637.
- இறுதியாக கி.பி.712ல் முகமது பின் காசிம் என்ற படைத்தளபதியால் சிந்துப் பகுதி கைப்பற்றப்பட்டது.
- சிந்து பகுதியை ஆட்சி செய்து வந்த அரசன் தாஹிர்.
- சிந்து பகுதியில் மூல்தான் நகரைக் கைப்பற்றியதுடன் அதற்கு தங்க நகரம் எனப் பெயரிட்டனர்.
- அரேபிய படையெடுப்பின் விளைவாக இந்துக்கள் மீது ஜிசியா வரி திணிக்கப்பட்டது.
- புதிய கலீபாவாக பதவியேற்ற சுலைமான் கலீபா முகமது பின் காசிமை பதவியிலிருந்து நீக்கினார்.
- சிந்துவின் மூல்தான் பகுதி சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலாக கலீபா ஆட்சியின் கீழ் இருந்தது.
- அரேபியர்கள் பூஜ்ஜியம் பற்றி இந்தியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.
- அரேபியர்கள் சதுரங்க விளையாட்டினை இந்தியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.
- பாக்தாத் நகரின் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக தாணா என்ற இந்தியர் நியமிக்கப்பட்டார்.
- கலீபா ஹாருல் - அல் - ரஷீத் என்பவருக்கு இருந்த நோயை மானகா என்ற மருத்துவர் குணப்படுத்தினார்.
- அரேபியர்களின் ஆட்சி துருக்கியப் படையெடுப்பினால் வீழ்ச்சியடைந்தனர்.

# துருக்கியர்களின் படையெடுப்பு

- கி.பி.8 மற்றும் 9ம் நூற்றாண்டுகளில் பாக்தாத் கலீபாக்களிடம் துருக்கியர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.
- துருக்கியர்களின் முதல் மன்னன் - முகமது கஜினி. காலம் கி.பி.998 முதல் கி.பி.1025 வரை.
- கஜினி என்ற பகுதியின் அரசர் சபுக்டிஜினுக்கு பிறகு இஸ்மாயில் என்பவர் அரசரானார்.
- கி.பி.998ல் இஸ்மாயிலை அரசப்பதவியில் இருந்து நீக்கி முகமது கஜினி ஆட்சியில் அமர்ந்தார்.
- இந்தியாவின் மீது முதல் படையெடுப்பு - இந்து அரசர் ஜெயபாலர் (சாஹி மரபு) - கி.பி.1000
- இந்தியாவின் கடைசி படையெடுப்பு - சோமநாதபுரம் படையெடுப்பு (மன்னன் - ராஜா பீமதேவ் - கி.பி.1025)
- கஜனியின் அவையில் இடம் பெற்ற சிறந்த அறிஞர்கள் - பிர்தௌசி, அர்பருனி.
- கி.பி.1186ல் கோரி நாட்டை ஆண்ட அலாவுதீன் உசேன் என்பவரால் கஜினி கைப்பற்றப்பட்டது.
- கோரி - ஹூரட்டுக்கும், கஜினிக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு. ஆண்ட மன்னன் - முகமது.
- முகமது கோரியின் இந்திய படையெடுப்புகள்

    1. கி.பி.1176 - மூல்தான், உச் பகுதிகளைக் கைப்பற்றினார்.
    2. கி.பி.1182 - சிந்து பள்ளத்தாக்கைக் கைப்பற்றினார்.
    3. கி.பி.1185 - பஞ்சாபை வென்று சியால்கோட் என்ற கோட்டையைக் கைப்பற்றினார்.
    4. கிபி.1186 - லாகூரைக் கைப்பற்றினார்.
    5. கி.பி.1191 - முதல் தரைய்ன் போர் (முகமது கோரி - பிருத்விராஜ் சௌகான்)
    6. கி.பி.1192 - 2ம் தரைய்ன் போர் (முகமது கோரி - பிருத்விராஜ் சௌகான்)
    7. கி.பி.1194 - சந்தவார் போர் (முகமது கோரி - ஜெயச்சந்திரன்)

- கி.பி.1206ம் ஆண்டு மார்ச் 25ல் ஷியா பிரிவைச் சேர்ந்த புரட்சியாளர்களும், கோகர்களும் சேர்ந்து முகமது கோரியை கொலை செய்தனர்.

ஆகாஷ்
வ
ர
லா
று

# டெல்லி சுல்தான்கள்

- கி.பி.1206 முதல் கி.பி.1526 வரை வடஇந்தியாவில் டெல்லி சுல்தான்கள் ஆட்சி நடைபெற்றது.
- **வம்சங்கள்:**

 1) அடிமை வம்சம் (கி.பி.1206 - கி.பி.1290)

 2) கில்ஜி வம்சம் (கி.பி.1290 - கி.பி.1320)

 3) துக்ளக் வம்சம் (கி.பி.1320 - கி.பி.1414)

 4) சையது வம்சம் (கி.பி.1414 - கி.பி.1451)

 5) லோடி வம்சம் (கி.பி.1451 - கி.பி.1526)



# அடிமை வம்சம்

- மாம்லுக் வம்சம் என்ற வேறு பெயரும் உண்டு. மாம்லுக் என்றால் குர்ரான் படி அடிமை என்று பொருள்.
- அடிமை வம்சத்தில் மூன்று மரபுகள் இருந்தன.

 1) குத்பி மரபு (கி.பி.1206 - கி.பி.1211) - குத்புதீன் ஐபுக்

 2) இல்பாரி மரபு (கி.பி.1211 - கி.பி.1266) - இல்துமிஷ்

 3) 2வது இல்பாரி மரபு (கி.பி.1266 - கி.பி.1290) - பால்பன்

## குத்புதீன் ஐபுக் :

- அடிமை வம்சத்தைத் தோற்றுவித்தவர் - குத்புதீன் ஐபுக் (கி.பி.1206 - கி.பி.1210). தலைநகரம் - லாகூர்.
- தன் மகளை இல்துமிஷிற்கும், தன் சகோதரியை முகமது கோரியின் மற்றொரு தளபதியான நசிருதீன் குபாச்சாவிற்கும் திருமணம் செய்து வைத்தான்.
- சிறப்பு பெயர் - லக்பாக்ஷா. அரசவை அறிஞர்கள் - ஹாசன் நிசாமி, ஃபக்ரே முதிர்.
- கட்டிய மசூதி - குவாத் உல் இஸ்லாம் (அஜ்மீர்), அதாய்டின்கா ஜோன்பரா (டெல்லி).
- குதுப்மினார் என்ற கோபுரத்தை கட்டத் துவங்கினார். ( சூஃபித் துறவி குவாஜா குத்புதீன் பக்தியார் நினைவாக)
- கி.பி.1210ல் குதிரையில் போலோ விளையாடிக் கொண்டிருந்தவர் தவறி விழுந்து இறந்தார்.

## இல்துமிஷ் :

- இவரது காலம் கி.பி.1211 முதல் கி.பி.1236 வரை. இவர் குத்புதீன் ஐபுக் மறுமகன் ஆவார்.
- இவர் மத்திய ஆசியாவில் உள்ள இல்பாரி என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள்.
- நசிருதீன் குபாச்சாவை வீழ்த்தி வங்காளத்தைக் கைப்பற்றினார். தலைநகர் - டெல்லி
- கி.பி.1230ல் வங்காளத்தில் ஏற்பட்ட கில்ஜி மாலிக்குகளின் கலகத்தை அடக்கினார்.
- கி.பி.1232ல் குதுப்மினார் கோபுரத்தைக் கட்டி முடித்தார்.
- இவர் தன் ராஜ்யத்தை பல இக்தார்களாகப் பிரித்து இக்தாதார்களை நியமித்தார்.
- அரசவை அறிஞர்கள் - மினஜ் உஸ் சிராஜ், தாஜுதீன், நிசாம் உல் முல்க் முகமது ஜெய்னதி, மாலிக் குத்புதீன் ஹசன், பக்ருல் முல்க் இஸாமி.
- இல்துமிஷ் வெளியிட்ட வெள்ளி நாணயம் - டங்கா (175கி), செம்பு நாணயம் - ஜிடால்
- கி.பி.1236ல் உடல் நலக்குறைவால் இல்துமிஷ் இறந்தார்.

## இரசியா சுல்தானா :

- இவர் இல்துமிஷின் மகள் (கி.பி.1236 - கி.பி.1240). சுல்தான் வரிசையில் முதல் பெண் அரசி.
- சர்கிண்ட் பகுதியின் ஆளுநரான மாலிக் அல்தூனியா போரில் இரசியாவைத் தோற்கடித்தார்.
- பின்பு அவரே இரசியாவைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களை பிரபுக்களின் படைகள் தோற்கடித்து கி.பி.1240ல் சிறைபிடித்துக் கொன்றன.
- இரசியா அக்.23, 1240ல் கைத்தால் என்னும் இடத்தில் கொல்லப்பட்டார்.
- இரசியாவிற்குப் பிறகு அவரது சகோதரர் பஹ்ரம்ஷா (கி.பி.1240 - கி.பி.1242) நாற்பதின்மர் குழுவால் நியமிக்கப்பட்டார். பின்னர் அலாவுதீன் மசூத்ஷாவை (கி.பி.1242 - கி.பி.1246) அரியணை ஏற்றினர்.

## நசிருதீன் முகம்மது :

- இல்துமிஷின் மற்றொரு மகன் ஆவார். காலம் கி.பி.1246 - கி.பி.1266.
- இவர் மிக எளிமையாகவும், அமைதியாகவும் ஆட்சி செய்தார்.
- தன் மகளை அரசின் முக்கிய ஆலோசகரான பால்பன் என்பவருக்கு மணம் முடித்துக் கொடுத்தார்.

## கியாசுதீன் பால்பன் :

- அடிமை வம்சத்தின் தலைசிறந்த மன்னன். (காலம் கி.பி.1266 - கி.பி.1287). இயற்பெயர் - பகாஉதீன்.
- பால்பன் நாற்பதின்மர் குழுவை ஒழித்து சிறந்த ஒற்றர் படையை உருவாக்கினார்.
- பால்பன் தெய்வீக உரிமைக் கோட்பாட்டை உருவாக்கியதால் சில்லி இல்லா என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- திவானி அரிஸ் என்ற ராணுவ அமைப்பை ஏற்படுத்தினார். முகாம்கள் - போஜ்பூர், படியாலி, கம்பில், ஜலாலி.
- சிஜதா - நிலத்தில் வீழ்ந்து வணங்கும் முறை, பைபோஸ் - அரசின் பாதங்களை முத்தமிடும் முறை.
- இந்துஸ்தானத்தின் பறவை என்று அழைக்கப்பட்ட அமீர்குஸ்ரு இவரால் ஆதரிக்கப்பட்டார்.
- மங்கோலிய படையெடுப்பின் போது பால்பனின் மகன் முகமது கொல்லப்பட்டவுடன் மீளா துயரத்தில் இருந்தவர் கி.பி.1287ல் உயிர் நீத்தார்.
- பால்பனை அடுத்து அவரது பேரன் கைக்குபாத் என்பவர் ஆட்சிக்கு வந்தார்.
- கடைசி அரசனான கையுமார் கி.பி.1290ல் ஜலாலுதின் பிரோஸ் கில்ஜியால் தோற்கடிக்கப்பட்டார்.

ஆரம்பித்த 7 ஆண்டுகளில்
4000க்கும்
மேற்பட்டோருக்கு அரசு வேலை

ஆகாஷ் IAS அகாடமி
சிறப்பம்சங்கள்:
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிக்கவனம்
- அனுபவமிக்க ஆசிரியர்கள்
- நூலகம் மற்றும் தங்கி படிக்க இடவசதி
- அதிகமான மாதிரித்தேர்வுகள்
- தரமான பயிற்சித் தொகுப்புகள்
- குறைவான கட்டணம். நிறைவான பயிற்சி

# கில்ஜி வம்சம்



## ஜலாலுதின் பிரோஸ் கில்ஜி :

- ஆப்கானிஸ்தானில் உள்ள ஹெல்மண்டு பள்ளத்தாக்கு கில்ஜி என அழைக்கப்பட்டது.
- கில்ஜி வம்சத்தைத் தோற்றுவித்தவர் - ஜலாலுதின் பிரோஸ் கில்ஜி (கி.பி.1290 - கி.பி.1296)
- 70 வயதில் அரியணை ஏறியவர் தாராள மனப்பான்மையும், இரக்க உணர்வும் கொண்டதால் கருணை உள்ளம் கொண்ட ஜலாலுதின் எனப் புகழப்பட்டார்.
- இவரது ஆட்சியை எதிர்த்து சூழ்ச்சி செய்த சித்தி மௌலா என்பவர் கொல்லப்பட்டார்.
- ஜலாலுதின் கில்ஜி தன் மருமகன் அலாவுதின் கில்ஜியை காரா, மாணிக்பூர் ஆகிய பகுதிகளுக்கு ஆளுநராக்கினார்.
- கி.பி.1292ல் தேவகிரி பகுதியை ஆண்ட இராமசந்திர தேவரை அலாவுதின் கில்ஜி தோற்கடித்து பெரும் செல்வத்தை தன்னிடமே வைத்துக் கொண்டார்.
- பின்னர் கி.பி.1296ல் அலாவுதின் கில்ஜி நயவஞ்சகமாக ஜலாலுதின் கில்ஜியைக் கொன்றார்.

## அலாவுதின் கில்ஜி :

- கில்ஜி வம்சத்தின் தலைசிறந்த அரசன். காலம் கி.பி.1296 - கி.பி.1316.
- கில்ஜியின் வல்லாட்சிக் கொள்கையை உருவாக்கியவர்.
- கி.பி.1297ல் குஜராத்தை ஆண்ட மன்னனான கர்ணதேவர் என்பவரை வெல்ல தன் சகோதரன் உலுக்கான்
- தலைமையில் ஒரு படையை அனுப்பினார்.
- வென்ற பகுதிகள் - ரான்தாம்பூர், மாளவம், மாண்டு, உஜ்ஜைனி, தார், சந்தேரி, மர்வார், ஜலோர்.
- கி.பி.1302ல் மேவார் நாட்டின் சித்தூரை முற்றுகையிட்டு அதன் மன்னன் ரததன்சிங்கைத் தோற்கடித்தான்.
- அலாவுதின் கில்ஜியின் படைத்தளபதியான மாலிக்கபூர் வென்ற பகுதிகள்.....
- 1) கி.பி.1307 - இராமச்சந்திர தேவா (யாதவ அரசன்)
- 2) கி.பி.1310 - 2ம் பிரதாபருத்ரன் (காகத்தீய அரசன்)
- 3) கி.பி.1311 - 3ம் வீரப்பல்லாளன் (ஹொய்சாள அரசன்)
- 4) பாண்டிய மன்னர்களான வீர பாண்டியனுக்கும், சுந்தர பாண்டியனுக்கும் இடையே நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் தலையிட்டு சுந்தர பாண்டியனுக்கு அரியணையை மீட்டுக் கொடுத்தார்.
- அலாவுதின் மது அருந்துதல், மது விற்பனை, சூதாடுதல் போன்றவற்றை தடை செய்தார்.
- அங்காடி சீர்திருத்தங்களை நடைமுறை படுத்தினார். இதன் மூலம் வணிகர்கள் அனைவரும் டெல்லியில் உள்ள
- **சஹானா இ மண்டி** என்ற அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.
- எனவேதான் இவர் நியாய விலைக் கடைகளின் முன்னோடி என அழைக்கப்படுகிறார்.
- உலமாக்கள் எனப்படும் சமயத் தலைவர்களை அரசியலில் இருந்து விலக்கி வைத்தார்.
- இவர் அமைத்த அலைதர்வாசா என்ற நுழைவாயில் துருக்கி கட்டிடக்கலையின் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- கில்ஜி வம்சத்தின் கடைசி அரசன் - நசிருதீன் குஸ்ரு ஷா.
- இவரை அவரது படைத்தளபதியான காசி மாலிக் என்பவர் கொன்று ஆட்சியை பிடித்தார்.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

# துக்ளக் வம்சம்

## கியாசுதீன் துக்ளக் :

- துக்ளக் வம்சத்தின் ஆட்சயைத் தோற்றுவித்தவர். இவர் இயற்பெயர் - காசி மாலிக். (கி.பி.1320 - கி.பி.1325)
- துருக்கிய தந்தைக்கும், ஜாட் இனப் பெண்ணுக்கும் பிறந்தவர். பகுதிகள் - வாராங்கல், வங்காளம்.
- டெல்லிக்கு அருகில் துக்ளகாபாத் என்னும் புதிய நகரத்தை நிர்மாணித்தார்.
- கி.பி.1325ல் வங்காளப் பகுதி வெற்றியினைக் கொண்டாட அமைக்கப்பெற்ற மேடை சரிந்து விழுந்ததில் கியாசுதீன் துக்ளக் மரணம் அடைந்தார்.

## முகமது பின் துக்ளக் :

- கியாசுதீன் துக்ளக்கின் மகன். இயற்பெயர் - ஜுனாகான் (கி.பி.1325 - கி.பி.1351)
- வேளாண் உற்பத்தியை பெருக்க திவானி கோஹி என்ற புதிய துறையை உருவாக்கினார். எனினும் இத்திட்டம் தோல்வியடைந்தது.
- தன் தலைநகரை முதலில் டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்கும் (தேவகிரி), பின்னர் மீண்டும் டெல்லிக்கும் மாற்றி அமைத்தார்.
- நாணய முறையை சீர்திருத்த விரும்பி செம்பு நாணயங்களை வெளியிட்டார். ஆனால் நாணயம் அச்சிடும் முறை அரசின் கட்டுபாட்டில் இல்லாததால் இத்திட்டமும் தோல்வியடைந்தது.
- தன் படையில் 3,70,000 வீரர்களை நியமிக்க எண்ணி அதற்கான செயல்களில் ஈடுபட்டு தோல்வியடைந்தார்.
- எனவே தான் பாரனி என்ற அறிஞர் இவரை முரண்களின் மொத்த கலவை என்று குறிப்பிடுகிறார்.

## பிரோஸ் துக்ளக் :

- கியாசுதீன் துக்ளக்கின் இளைய சகோதரனின் மகன். காலம் கி.பி.1351 - கி.பி.1388.
- அலாவுதீன் கில்ஜியால் நீக்கப்பட்ட ஜாகீர் முறையை மீண்டும் புகுத்தினார்.
- வறுமையில் இருந்த மக்களுக்கு திவானி இஸ்திஹாக் என்ற துறையை ஏற்படுத்தினார்.
- முகமது பின் துக்ளக்கால் வழங்கப்பட்ட தக்காவி விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது.
- மக்களிடம் நான்கு வகையான வரிகள் வசூல் செய்யப்பட்டன.
  1) கரோஜ் - நிலவரி 10ல் ஒரு பங்கு
  2) கம்ஸ் - போர்களில் கைப்பற்றிய பொருட்களில் 5ல் ஒரு பங்கு
  3) ஜிசியா - முஸ்லீம் அல்லாதோர் மீது திணிக்கப்பட்ட வரி
  4) ஜகத் - இஸ்லாமிய சமய சடங்கு வரி
- திவானி பந்தகானி - அடிமைகளுக்கான துறை
- திவானி கைரத் - கைம் பெண்கள் நலனுக்காக, திவானி கிரமத் - திருமண உதவிக்காக.
- நீர் பாசனத்திற்காக வரி விதித்த முதல் மன்னன். இவர் 50 அணைகள், 150 கிணறுகள், 100 பாலங்கள் ஆகியவற்றைக் கட்டியுள்ளார். மிக நீளமான கால்வாய் சட்லஜ் முதல் ஹான்சி வரை (200 கி.மீ)
- இவர் நிர்மானித்த நகரங்கள் - பிரோசாபாத் (பிரோஸ் ஷா கோட்லா), ஜான்பூர், பிரோஸ்பூர், பதேகாபாத்.
- சுயசரிதை - பதூஹத் இ பிரோஷாஹி. இயற்பியல் நூல் - குதுப் பெரோஸ் ஷாஹி.
- கடைசி அரசன் - நசிருதீன் முகமது துக்ளக். கி.பி.1398ல் தைமூரின் இந்திய படையெடுப்பால் தோல்வியுற்றார்.

ஆகாஷ்
வ
ர
லா
று

தேடி வாருங்கள்! தேர்வாகிச் செல்லுங்கள்!!
தமிழகத்தின் தலைசிறந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம்
ஆகாஷ் IAS அகாடமி

# சையது வம்சம்

- கி.பி.1398ல் சாமர்கண்ட் பகுதியை ஆண்டு வந்த தைமூர் என்பவர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து துக்ளக் வம்சத்தை வீழ்த்தி டெல்லியைக் கைப்பற்றினார்.
- பின்னர் பஞ்சாப் ஆளுநரான கிசிர்கானை ஆட்சியில் அமர்த்தினார். காலம் கி.பி.1414 - கி.பி.1451.
- கிசிர்கானைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்கள்....

  1) முபாரக் ஷா (கி.பி.1421 - கி.பி.1435)

  2) முகமது ஷா (கி.பி.1435 - கி.பி.1445)

  3) அலாவுதீன் ஆலம் ஷா (கி.பி.1445 - கி.பி.1451)
- முபாரக் ஷா யமுனை நதிக்கரையில் முபாரகபாத் என்ற நகரை நிர்மானித்தார்.
- அலாவுதீன் ஆலம் ஷா ஆட்சிக் காலத்தில் அவரது முதலமைச்சர் ஹமீது கான் என்பவர் இந்தியாவின் மீது படையெடுத்து வருமாறு பஹ்லுல் லோடிக்கு ஒரு கடிதம் எழுதினார்.
- கி.பி. 1451ல் பஹ்லுல் லோடி டெல்லியைக் கைப்பற்றி ஆட்சி அமைத்தார்.

ஆகாஷ்
வ
ர
லா
று

# லோடி வம்சம்

**பஹ்லுல் லோடி :**

- இவர் பஞ்சாப் பகுதியை ஆட்சி செய்த ஒரு ஆப்கானியர். (கி.பி.1451 - கி.பி.1489)
- பஹ்லுல் லோடியின் முக்கிய சாதனை ஜான்பூருக்கு எதிராக படையெடுத்து வென்றது.

**சிக்கந்தர் லோடி :**

- பஹ்லுல் லோடியின் மகன். காலம் கி.பி.1489 - கி.பி.1517
- இவர் தன் தலைநகரை டெல்லியில் இருந்து ஆக்ராவிற்கு மாற்றினார்.
- சிக்கந்தர் லோடி ஷெனாய் இசையை மிகவும் விரும்பினார். இவர் காலத்தில் லஹ்ஜட் இ சிக்கந்தர் ஷாஹி என்ற இசைத் தொகுப்பு உருவாக்கப்பட்டது.

**இப்ராஹிம் லோடி :**

- சிக்கந்தருக்குப் பின் அவரது மகன் இப்ராஹிம் லோடி. (கி.பி.1517 - கி.பி.1526) பட்ட பெயர் - இப்ராஹிம் ஷா
- இப்ராஹிம் லோடியைத் தோற்கடிக்க தௌலத்கான் லோடி என்பவர் காபூல் மன்னன் பாபரை இந்தியாவின் மீது படையெடுத்து வருமாறு கடிதம் எழுதினார்.
- பாபர் இந்தியாவின் மீது கி.பி.1526ல் படையெடுத்து வந்து சிக்கந்தர் லோடியைத் தோற்கடித்தார்.

## ஆட்சி முறை :

மண்டலம் (அ) இக்தாக்கள் → ஷிக் (அ) ஷிக்தா → பர்கானா → கிராமம்

- இக்தாரின் ஆட்சியாளர் - இக்தாதார். ஷிக்தா - ஷிக்தார். கிராமம் - அமில்.
- தலைமை நீதிபதி - காசி உத் கவாத். சமயத் தலைவர்கள் - இனாம். வசீர் -பிரதம அமைச்சர்.
- வங்காளத்தில் சிக்கந்தர் ஷா கட்டிய அதினா மஸ்ஜித் மிகப் பெரிய கட்டிடம்.
- அலாவுதீன் கில்ஜியின் தென்னிந்திய படையெடுப்புக்குப் பின் தினார் என்ற தங்க நாணயம் புழக்கத்திலிருந்தது.
- அமீர் குஸ்ரு சபாக் இ இந்த் என்ற இந்திய பாணியிலான பாரசீக கவிதை வடிவத்தை உருவாக்கினார்.
- அல்பெருனி எழுதிய கிதாப் உல் இந்த் அரேபிய மொழியில் படைக்கப்பட்ட புகழ் பெற்ற நூலாகும்.
- சுல்தான் பேரரசின் தலைமை பொறுப்பை ஏற்றார். இவருக்கு உதவ 6 அமைச்சர்கள் கொண்ட குழு உள்ளது.

## சுல்தான்களின் அமைச்சர்கள் :

1. வசீர் - பிரதம அமைச்சர் மற்றும் நிதியமைச்சர்
2. திவானி ரிஸாலத் - வெளியுறவு அமைச்சர்
3. சுதர் - உஸ் - சாதர் - இஸ்லாமிய சட்ட அமைச்சர்
4. திவானி இன்ஷா - அஞ்சல் துறை அமைச்சர்
5. திவானி அர்ஸ் - பாதுகாப்பு அல்லது படைத்துறை அமைச்சர்
6. காஸி - உல் - கஸாத் - நீதித்துறை அமைச்சர்.



## கட்டிடக் கலைகள் :

- சுல்தான்களின் கட்டிடக் கலையை மூன்று விதமாக வகைப்படுத்தலாம். அவை
  1. டெல்லி அல்லது பேரரசு கலைபாணி
  2. நகரக் கலைபாணி
  3. இந்துக்கள் கலைபாணி
- மாம்லுக் கட்டிடங்கள் - குதுப்மினார், குவாத் உத் இஸ்லாம் மசூதி, நாசிர் உத் தீன் முகமதுவின் கல்லறை.
- கில்ஜிக் கட்டிடங்கள் - டெல்லியில் உள்ள சீரி நகரம், ஹரத்நிஜாமுதின் அலுயாவின் தர்கா, அலாய்தார்வாசா.
- துக்ளக் கட்டிடங்கள் - கியாசுதீன் கல்லறை, அதலாபாத் கோட்டை, துக்ளக்காபாத், ஜஹான்பனா
- லோடிக் கட்டிடங்கள் - டெல்லியில் உள்ள லோடி பூங்கா, மோதி மசூதி, சிக்கந்தர் லோடியின் கல்லறை.

# விஜயநகர அரசுகள்

- விஜய நகர பேரரசுகளை ஆரம்பித்தவர் **ஹரிகரர், புக்கர் (1336 - 1672),** தலைநகர் **ஹம்பி.**
- விஜய நகர பேரரசுகளின் மரபுகள்
    1) சங்கம வம்சம் - கி.பி.1336 முதல் கி.பி.1485 வரை.
        - தோற்றுவித்தவர் - முதலாம் ஹரிஹரன் (கி.பி.1336 - கி.பி.1356)
    2) சாளுவ வம்சம் - கி.பி.1485 முதல் கி.பி.1505 வரை
        - தேதாற்றுவித்தவர் - நரசிம்மர் (கி.பி.1485 - கி.பி.1505)
    3) துளுவ வம்சம் - கி.பி.1505 முதல் கி.பி.1570 வரை
        - தோற்றுவித்தவர் - வீர நரசிம்மர் (கி.பி.1505 - கி.பி.1509)
    4) அரவீடு வம்சம் - கி.பி.1570 முதல் கி.பி.1646 வரை.
        - தோற்றுவித்தவர் - திருமலா.



- விஜய நகரப் பேரரசுகளில் தலைசிறந்த மன்னன் கிருஷ்ணதேவராயர். இவர் வீரநரசிம்மரின் சகோதரர்.
- பிஜப்பூர் சுல்தானைத் தோற்கடித்து ரெய்ச்சூர், தோவாப் பகுதிகளைக் கைப்பற்றினார்.
- கிருஷ்ணதேவராயர் படையெடுப்புகள் :
    1. கி.பி.1510 - சிவசமுத்திரம்
    2. கி.பி.1512 - ரெய்சூர்
    3. கி.பி.1523 - வாராங்கல், ஒடிசா
- இவருக்கு தட்சிண சமுத்தீஸ்வரர் என்ற சிறப்பு பெயர் உண்டு.
- கிருஷ்ணதேவராயர் அவையில் அஷ்டதிகஜங்கள் என்னும் எட்டு அறிஞர்கள் இருந்தனர்.
    1) **அல்சாணி பெத்தண்ணா**
    2) **நந்தி திம்மண்ணா**
    3) **தெனாலி இராமன்**
    4) **பட்டுமூர்த்தி**
    5) **புனவீரபத்திரன்**
    6) **மல்லன்னா**
    7) **பானாஜி சூரானா**
    8) **துர்ஜதி**
- தலைக்கோட்டை போர் **(1565) இராமராயர், பாமினி அரசுகள்** இடையே ஏற்பட்டது.
- தலைக்கோட்டை போரின் மற்றொரு பெயர் - ராக்சே தாங்கடி
- விஜய நகர பேரரசின் கட்டிட கலைக்கு எ.கா. **ஹசரா இராமசாமி கோயில் விட்டல்சாமி கோயில்.**
- கிருஷ்ணதேவராயர் கலை, இலக்கியப் புரவலராக திகழ்ந்ததால் ஆந்திர போஜர் என்று அழைக்கப்பட்டார்.
- கிருஷ்ணதேவராயர் எழுதிய நூல்கள் தெலுங்கு - **ஆமுக்தமால்யதா**
- விஜய நகரத்தை கடைசியாக ஆண்ட **மரபு அரவீடு (1614 முழுவதும் வீழ்ச்சி அடைந்தது)**
- **கிருஷ்ணதேவராயர் முழு நிறைவான அரசர்** என்று கூறிய வரலாற்று அறிஞர் **டோமினிக்பயஸ்**

- விஜய நகர பேரரசு ஆறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.




- இந்திய பெருங்கடலில் உள்ள தீவுகள், மலேயத்தீவுக் கூட்டங்கள், பர்மா, சீனா, அரேபியா, பாரசீகம், தென்னாப்பிரிக்கா, அபீசினியா மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர்.
- கோவா, டையூ, கொல்லம், கொச்சின் முதலியன முக்கிய துறைமுகங்களாக விளங்கின.
- இவர்களின் கட்டிடக்கலைக்கு ஹசரா ராமசாமி கோயிலும், விட்டலசாமி ஆலயமும் சிறந்த எடுத்துகாட்டுகளாகும்.
- கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் அமுக்த மால்யதா என்னும் நூலை எழுதினார். மேலும் அவர் உஷா பரிணயம், ஜாம்பவதி கல்யாணம் ஆகிய சமஸ்கிருத நூலையும் எழுதியுள்ளார்.

## பாமினி அரசுகள்

- பாமினி அரசைத் தோற்றுவித்தவர் - அலாவுதீன் ஹாசன் பாமன் (அ) ஹாசன் கங்கு
- காலம் கி.பி.1347 - கி.பி.1526. தலைநகர் **குல்பர்க்கா**
- பாமினி அரசை இரு கட்டங்களாகப் பிரிக்கலாம்.
- 1) குல்பர்காவைத் தலைநகராகக் கொண்ட காலம் (கி.பி.1347 முதல் கி.பி.1422 வரை)
- 2) பீடாரைத் தலைநகரமாகக் கொண்ட காலம் (கி.பி.1422 முதல் கி.பி.1526 வரை)
- பாமினி அரசை மொத்தம் 14 சுல்தான்கள் ஆட்சி புரிந்தனர்.
- அவர்களில் சிறந்தவர்கள் - அலாவுதீன் பாமன் ஷா, முதலாம் முகமது ஷா, பிரோஸ் ஷா
- பாமினி அரசு 5 சிறு நாடுகளாக பிரிந்தது (1482க்கு பின்)

    1. **பிஜப்பூர்**
    2. **அகமதுநகர்**
    3. **பீராடர்**
    4. **பீடார்**
    5. **கோல்கொண்டா**

- பாமினி அரசின் கட்டிட கலைக்கு எ.கா. **குல்பர்கா மசூதி, ஜிம்மா மசூதி, கோல்கொண்டா கோட்டை, கோல்கும்பாஸ் கட்டிடம்.**
- முணுமுணுக்கும் அரங்கம் என்று அழைக்கப்படுவது **கோல்கும்பாஸ் (பீஜப்பூர்)**
- கடைசி அரசன் - மூன்றாம் முகமது ஷா. இவரின் பாதுகாவலன் **முகமது கவான்.**

# பக்தி சூஃபி இயக்கங்கள்

- பக்தி இயக்கம் முதலில் தொடங்கப்பட்ட இடம் - தென்னிந்தியா
- வட இந்தியாவில் ஆரம்பித்தவர் - **ராமானந்தர்**
- மக்களுக்கு இடையே பிரபலமடையச் செய்தவர் **கபீர்.**
- நாயன்மார்களில் முதன்மையானவர்கள் **திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்**
- திருநாவுக்கரசரின் தமக்கை - **திலகவதி,** திருநாவுக்கரசரின் வேறுபெயர் **அப்பர்.**
- பிறந்த ஊர் - **தென்மறைக்காடு மாவட்டம் கி.பி. 600.** இவர் எழுதிய பதிகங்கள் **49,000** கிடைத்துள்ளவை **311.**
- ஒரே கடவுள் என்ற கோட்பாடு உடையவர் - **மாணிக்கவாசகர்** நூல் **திருவாசகம்.**
- பெரிய புராணம் என்னும் நூலை எழுதியவர் - **சேக்கிழார்**
- நாயன்மார்கள் மொத்தம் **63** ஆழ்வார்கள் மொத்தம் **12.**
- நாயன்மார்களின் தொகுப்பு - பன்னிரு திருமறைகள் - தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி.
- ஆழ்வார்களின தொகுப்பு - நாலாயிர திவ்ய பிரபந்தம் - தொகுத்தவர் - நாதமுனி.
- ஆழ்வார்களில் முதன்மையானவர்கள் - **நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள்.**
- பழங்கால தென் இந்தியாவில் பக்தி இயக்கத்தை ஆரம்பித்தவர் **சங்கராச்சாரியார்** பிறந்த இடம் **காலடி (கேரளா).**
- பக்தி இயக்கம் பரப்பியதில் முக்கியமானவர் **இராமானுஜர்** பிறந்த இடம் **ஸ்ரீபெரும்புதூர்** (12ம் நூற்றாண்டு)
- பக்தியின் மூலம் இறைவனை அடையலாம் என்று கூறியவர் **வல்லபாச்சாரியார் (1479 - 1531).**
- கிருஷ்ண வழிபாட்டை பிரபலப்படுத்தியவர் **சைதன்யர், வங்காளத்தில்** 1485 -ல் பிறந்தார்.
- இந்து, முஸ்லீம் ஒற்றுமையினை முதன் முதலில் கூறியவர் கபீர் (1425 - 1581) ஆசிரியர் **இராமானந்தர்.** கபீரை பின்பற்றியவர்கள் **கபீர்பந்த்.** போதனைதொகுப்பு **பிஜகா,** இவரது பாடல்கள் **தோகா.**
- சீக்கிய சமயத்தை தோற்றுவித்தவர் **குருநானக் (1469 - 1538)** 1469 -ல் தால்வண்டி லாகூர் அருகில் பிறந்தார்.
- மீராபாய் **1498ல்** பிறந்தார். தந்தை **மேவார் நாட்டு மன்னன் ரத்தோர்.** கணவர் **உதய்பூர்** மன்னன். இவரது பாடல்கள் **பஜன்.** இராஜஸ்தான் பகுதியில் புகழ்பெற்றது.
- மகராஷ்டிரா பகுதியில் வாழ்ந்த துறவிகள், நூல்கள்
  - ஞானதேவர் - பகவத்கீதைக்கு உரை எழுதினார். (ஞானேஸ்வரி)
  - குருராமதாசர் - தசபோதா
  - துளசிதாசர் - இராமசரிதமானஸ்
- சூஃப் என்றால் - முரட்டு கம்பளி ஆடை அணிந்து எளிய வாழ்க்கை நடத்தும் துறவி என்று பொருள்.
- பாரசீகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய சீர்திருத்த இயக்கம் சூஃபி. இந்தியாவில் கி.பி.12ல் பரவியது.
- சூஃபி என்றால் தூய்மை. நாகூர் ஆண்டவர் காலம் **16ம் நூற்றாண்டு.** சிறப்பு பெயர் மீரான் சாகிப்.
- **குவாதிர் வாலி** கல்லறை தமிழ் நாட்டில் உள்ளது.
- பாண்டியன் மாறவர்மன் அரிகேசரியின் சமகால நாயன்மார் **திருஞான சம்பந்தர்.**
- கடவுளை அடைய ஒரே வழி **அன்பு** மட்டுமே தவிர சடங்குகள் இல்லை என கூறியவர் **மாணிக்கவாசகர்.**
- **சம்மந்தர்** 16000 பதிகங்களை பாடினார். கிடைத்தது **384. சுந்தரமூர்த்தி** 38000 பதிகங்கள். கிடைத்தவை 100.
- **பசவர், வீரசைவம்** என்ற பிரிவைத் தொடங்கியவர் **வல்லபாச்சாரியார்.**

ஆகாஷ்
வ ர லா று

# முகலாயப் பேரரசு

## முகலாயர்களின் வருகை :

- முகலாயர்களில் முதன் முதலில் இந்தியாவிற்குள் வந்தவர் - ஜகாருதீன் முகமது பாபர்.
- பாபரை இந்தியாவின் மீது படையெடுத்து வரும்படி ஆலம்கான் லோடியிடமிருந்து ஒரு கடிதமும், பஞ்சாபின்
- ஆளுநர் தௌலத்கான் லோடியிடமிருந்து ஒரு கடிதமும் சென்றன.

## பாபர் :

- காலம் கி.பி.1526 முதல் கி.பி.1530 வரை. பாபர் என்றால் புலி என்று பெயர்.
- கி.பி.1483ல் மத்திய ஆசியாவில் பர்கானாவை ஆட்சி செய்த உமர்ஷேக் மிர்ஷா என்பவருக்கு பிறந்தார்.
- தந்தை வழி - துருக்கியின் தைமூர் இனம். தாய் வழி - மங்கோலியின் செங்கிஸ்கான் இனம்.
- தாயின் பெயர் - கும்லு நிகார்கான். இவர் தாய் மொழி - துருக்கி.
- பாபர் தன்னை இந்துஸ்தானத்தின் பேரரசர் என அறிவித்துக் கொண்டார்.



பாபர்

## படையெடுப்புகள் :

- கி.பி.1526 - முதல் பானிபட் போர் (பாபர் - இப்ராஹிம் லோடி)
- கி.பி.1527 - கன்வா போர் (பாபர் - ரானா சங்கர்)
- கி.பி.1528 - சந்தேரி போர் (பாபர் - மெதினிராய்)
- கிபி1529 - கோக்ரா போர் (பாபர் - முகமது லோடி)

- முதல் பானிபட் போரில் முதன்முதலாக பீரங்கியைப் பயன்படுத்தினார்.
- பாபர் சுயசரிதையை துசுக் - கி - பாபரி (அ) பாபரின் நினைவுகள் என்று துருக்கி மொழியில் எழுதினார்.
- பாபர் தனது 11ம் வயதில் பர்கானாவின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தார்.
- கி.பி.1530ம் ஆண்டு தனது 47வது வயதில் மரணமடைந்தார்.

ஆகாஷ் வரலாறு

## ஹுமாயுன் :

- காலம் கி.பி. 1530 - 1540. பின்னர் கி.பி. 1555 - கி.பி. 1556. ஹுமாயுன் என்றால் அதிர்ஷ்டசாலி.
- கி.பி. 1508ம் ஆண்டில் காபூலில் பிறந்தார். தனது 20வது வயதில் பதக்ஷாவின் ஆளுநரானார்.
- காம்ரான், அஸ்காரி, ஹிண்டால் ஆகியோர் சகோதரர்கள்.
- கி.பி. 1539ம் ஆண்டு சௌஷா போர் (ஹுமாயுன் - ஷெர்கான்)
- கி.பி.1540ல் ஷெர்கானுக்கும் ஹுமாயுனுக்கும் இடையே நடைபெற்ற போர் - பில்கிராம் போர் (கனோஜ் போர்)
- அரியணையை இழந்து 1540 -1555 வரை 15 ஆண்டுகள் நாடோடியாக வாழந்தார்.
- கி.பி. 1542ல் பாரசீக மன்னனின் உதவியோடு காம்ரானிடமிருந்து காந்தகாரைக் கைப்பற்றினார்.
- கி.பி. 1555ல் டெல்லி மற்றும் ஆக்ராவைக் கைப்பற்றி மீண்டும் அரசனார்.
- கி.பி.1556ல் நூலக படிக்கட்டில் தவறி விழுந்து மரணமடைந்தார்.

## அக்பர் :

- இயற்பெயர் - ஜலாலுதின் முகமது அக்பர். கி.பி.1542 நவ.23ல் அமரக்கோட்டையில் பிறந்தார்.
- இவர் தன் 14வது வயதில் கி.பி.1556ல் பேரரசாக முடி சூடப்பட்டது.
- தந்தை - ஹுமாயுன். தாய் - அமிதாபானு பேகம். அக்பரின் பாதுகாவலர் - பைராம்கான்.



அக்பர்

## படையெடுப்புகள்

- கி.பி. 1556 - இரண்டாம் பானிபட்போர் அக்பர் - ஹெமு( டெல்லி மன்னர்)
- வங்காள மன்னன் முகமது ஷாவின் பிரதம மந்திரி - ஹெமு.
- இந்த வெற்றியின் மூலம் டெல்லி மற்றும் ஆக்ராவைக் கைப்பற்றினார்.
- அக்பரின் வளர்ப்புத் தாய் "மாக அனகா" 2ஆண்டுகள் நிர்வாகத்தை கட்டுபடுத்தியதால் அந்த காலம் "அந்தப்புர அரசாங்க காலம்" எனஅழைக்கப்பட்டது.
- ஜெய்ப்பூரின் மன்னன் பிகாரிமால் தனது (இளவரசி ஜோத்பால்) அக்பருக்கு மணம் முடித்து வைத்ததால் மாளவம் மற்றும் சூனாரை தன்னுடன் இணைத்துக் கொண்டார்.
- கோண்டுவானா பேரரசி ராணி துர்க்காவதியைத் தோற்கடித்தார்.
- பிக்கனீர், ஜெய்சல்மார், ஜோத்பூர் போன்ற பகுதிகளை வென்றார்.
- கைப்பற்றிய பகுதிகள் : ஆப்கானிஸ்தான் முதல் வங்காளம் ,இமயமலை முதல் கோல்கொண்டா
- கி.பி.1576ல் முகலாயர்களுக்கும் ராணாரதாபுக்கும் இடையே நடைபெற்ற போர் - ஹால்திகாட் போர்.

## கொள்கைகள் :

- **ராஜபுத்திரக் கொள்கை**
  - ராஜபுத்திரர்களோடு நட்பு ரீதியாக பழகினார்.
  - ராஜபுத்திர அறிஞர்களை அரசின் உயர் பதவிகளில் அமர்த்தினர்.
  - ராஜமான்சிங், ராஜபகவான்தாஸ், ராஜதோடர்மால் மற்றும் பீர்பால் போன்றவர்கள் அரசவையில் இடம் பெற்றனர்.
  - ஜிசியா மற்றும் புனித பயண வரியை ரத்து செய்தார்.

ஆகாஷ்
வ
ர
லா
று

- **தக்காணக் கொள்கை**
  - தக்காணத்தில் தன் பேரரசை விரிவுபடுத்த அகமது நகரை ஆண்ட சாந்த்பீபியைத் தோற்கடித்தார்.
  - மேலும் பீரார், காந்தேஷ் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார்.

- **சமயக் கொள்கை**
  - கி.பி. 1575ம் ஆண்டு தலைநகர் பதேபூர் சிக்ரியில் இபாதத் கானா தொழுகை இல்லத்தினைக் கட்டினார்.
  - இதன் அடிப்படையில்கி.பி.1579ம் ஆண்டு "தவறுபடா ஆணையினை" பிரகடனப் படுத்தினார்.
  - கி.பி. 1582ல் "தீன் - இலாஹி" (அ) "தெய்வீக மதத்தினை" உருவாக்கினார்.

ஆகாஷ் வ ர லா று

## நிலவரி சீர்திருத்தம் :

- ஷெர்ஷாவின் சீர்திருத்த முறையினை பின்பற்றினார்.
- அக்பரின் வருவாய்த் துறையின் அமைச்சர் - ராஜா தோடர்மால்.
- விளைச்சலில் 3ல் 1பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது.
- விவசாயத்தைப் பெருக்க கடனுதவி வழங்கப்பட்டது.
- விவசாயிகளும், அரசாங்கமும் குபிலியாத் என்ற நிலவரி ஒப்பந்தம் செய்து கொண்டனர்.
- அக்பர் காலகட்டத்தில் மன்சப்தாரி முறை பின்பற்றப்பட்டது

## இலக்கியப் பணி :

- ராஜா தோடர்மால் - பாகவத புராணத்தை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.
- அபுல் பாசல் - அயனி அகபரி மற்றும் அக்பர் நாமா என்ற நூல்களை எழுதினார்.
- அபுல் பைசி - இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.
- இசைஞானி - தான் சென்.

## கலை, கட்டிடக் கலை :

- குஜராத் வெற்றியின் நினைவாக கட்டியது - பதேப்பூர், சிக்ரி (வெள்ளி நகரம்).
- மேலும் அக்பரி மஹால், ஜஹாங்கி மஹால், பஞ்ச் மஹால் மற்றும் ஜோத்பாய் அரண்மனை.
- இவர் புலந்தர் வாசா என்ற நுழைவு வாயிலைக் கட்டினார்.
- கி.பி. 1605ம் ஆண்டு தனது 50வது வயதில் மரணமடைந்தார்.

## ஜஹாங்கீர் :

- இயற்பெயர் - சலீம். ஜஹாங்கீர் என்றால் உலகினை வெல்பவர் என்று பொருள். (கி.பி.1605 - கி.பி.1627)
- இவரது மகன் இளவரசர் குஸ்ரு, 5வது சீக்கிய மதகுரு அர்சுன் தேவுடன் இணைந்து தந்தைக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டதால் இருவரும் கொல்லப்பட்டனர். இதனால் சீக்கியர்களிடம் விரோதம் வளர்ந்தது.
- இவர் ஆட்சியின் போது இங்கிலாந்து நாட்டில் இருந்து ஆங்கிலேயே வணிகக் குழு இந்தியாவிற்கு வந்தது.
- இவர் எழுதிய சுயசரிதை "துசுக் - கி - ஜஹாங்கிரி". இவர் நீதி சங்கிலி மணி என்ற புதிய நீதி வழங்கும் முறையினைப் பின்பற்றினார்.
- கி.பி. 1611ம் ஆண்டு ஜஹாங்கீர், மிர்சா கியாஸ் பெக் என்பவரின் மகள் மெகருன்னிஷாவை மணந்தார்.
- இவர் இளம் பருவத்தில் ஷெர் ஆப்கன் என்பவரை மணந்து பெண் குழந்தை பெற்றார்.
- இவர் மெருன்னிஷாவின் பெயரை நூர்ஜஹான் என மாற்றினார்.

## கட்டிடக்கலை

- ஸ்ரீநகர் - ஷாலிமர் மற்றும் நிஷாத் பூந்தோட்டங்கள்
- சிக்கந்த்ரா - அக்பரின் கல்லறை
- ஆக்ரா - நூற்ஜஹயான் தந்தை இதிமத் - தௌலா கல்லறை.
- லாகூர் - பெரிய மசூதி.

**ஆகாஷ் பொன்மொழி**

**நீ செய்யும் தவறு கூட புனிதமாகும், அதை நீ ஒப்புக் கொள்ளும் போது...!!!**

**– ஆகாஷ் IAS அகாடமி**

## ஷாஜஹான் :

- இயற்பெயர் - குர்ரம். ஷாஜஹான் என்றால் உலகின் அரசன் என்று பொருள்.
- கி.பி. 1592ல் லாகூரில் பிறந்தார். தாய் இந்து மதத்தை சார்ந்தவர்.



ஷாஜஹான்

## படையெடுப்புகள் :

- கி.பி. 1636ல் தளபதி மகபத்கான் தலைமையில் அகமது நகரைக் கைப்பற்றினார்.
- காந்தஹார் மீது மூன்று முறை படையெடுத்து தோல்வியடைந்தனர்.
- தெற்கே பிஜப்பூர், கோல் கொண்டாவைக் கைப்பற்றினார்.
- தக்காணத்தின் ஆளுநராக 3வது மகன் ஔரங்கசீப்பினை நியமித்தார்.
- இவரது ஆட்சிக்காலம் முகலாயர்களின் பொற்காலம் என அழைக்கப்படுகிறது.

## கட்டிடக்கலை :

- ஷாஜஹான் ''கட்டிடக்கலையின் இளவரசர்'' என்றும் ''பொறியாளர் பேரரசர்'' என்றும் அழைக்கப்பட்டனர்.
- ஷாஜஹானாபாத் என்ற அழகிய தலைநகர் ஒன்றை நிறுவினார்.
- டில்லி செங்கோட்டை மற்றும் அதில் உள்ள ரங் மஹால், மோதி மஹால், முத்து மஹால், திவான் - இ- ஆம், திவான் - இ -காஸ் போன்றவை மிக அழகாகக் கட்டப்பட்டுள்ளது.
- உலகிலேயே மிகப் பெரிய பள்ளிவாசலான ஜும்மா மசூதியைக் கட்டினார்.
- வரலாற்று சிறப்பு மிக்க தாஜ்மஹாலைக் கட்டினார்.
    - அமைவிடம் - ஆக்ரா நகர், யமுனை ஆற்றங்கரை.
    - தலைமை சிற்பி - உஸ்தாத் இஷா.
    - மதிப்பீடு - 20 லட்சம், 22 ஆண்டுகள்.
- முத்து மசூதி (அ) மோதி பள்ளிவாசல் - ஆக்ரா நகர்.
- கோகினூர் வைரம் பதிக்கப்பட்ட மயிலாசனத்தைப் பயன்படுத்தினார்.
- கி.பி. 1739ல் பாரசீக மன்னன் நாதிர்ஷா இதனை எடுத்துச் சென்றார்.

ஆகாஷ்
வ
ர
லா
று

## முடிவு :

- கி.பி. 1658ல் நோயுற்ற ஷாஜஹானை கி.பி. 1666-ம் ஆண்டு வரை 3-வது மகன் ஔரங்கசிப் வீட்டுக் காவலில் வைத்தான்.
- இவரது காலத்தில் வந்து இங்கிலாந்து பயணிகள் பெர்னியர், டிராவர்னியர் மற்றும் மனுசி என்ற இத்தாலியர் ஷாஜஹானை போற்றியுள்ளனர்.

தேடி வாருங்கள்! தேர்வாகிச் செல்லுங்கள்!!
தமிழகத்தின் தலைசிறந்த அகாடமி
ஆகாஷ் IAS அகாடமி

## ஔரங்கசிப்



ஔரங்கசீப்

- இவரது காலம் கி.பி. 1658 முதல் கி.பி. 1707 வரை
- இவர் ஷாஜஹானின் மூன்றாவது மகன்
- ஷாஜஹானின் மகன்கள்: தாராசுகோ, வாஷீஜா, ஔரங்கசீப், முரத்
- ஔரங்கசீப் பெற்ற சிறப்பு பட்டம் **ஆல்ம்கீர்**
- சன்னி முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவர்
- முஸ்லீம் அல்லாதவர்கள் மீது ஜெசியா மற்றும் புனித பயண வரியை விதித்தார்
- கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள்: இராசபுத்திரர்கள், ஜாட்டு இனத்தவர்கள், சட்னாமியர்கள், சீக்கியர்கள், மராத்தியர்கள்

## ஔரங்கசீப்பும், சீக்கியர்களும்

- சீக்கியர்களின் ஒன்பதாவது குருவான தேஜ்பதுரை ஔரங்கசீப் மதமாற்றம் செய்ய முற்பட்டார்.
- அவர் உடன்படாததால் கொல்லப்பட்டார்.
- பத்தாவது குருவான **குருகோவிந்த் சிங்** முகமதியர்களை எதிர்க்க **கால்சா** என்ற இராணுவ அமைப்பை உருவாக்கினார்

## ஔரங்கசீப்பும் மராத்தியர்களும்

- தக்காணத்தின் ஆளுநர் செயிஷ்டகானுக்கும், சிவாஜிக்கும் இடையே பூனாவில் நடைபெற்ற போரில் செயிஷ்டகான் தோற்கடிக்கப்பட்டார்.
- பின்னர் ஔரங்கசீப்பின் அரசவைக்கு சென்ற சிவாஜியை கைது செய்து சிறையில் அடைத்தார்.

## மொகலாயர்களின் ஆட்சிமுறை

### மைய நிர்வாகம்

- மொகலாயர்களின் ஆட்சிமுறை ராணுவ ஆட்சி ஆகும்
- இறைவனின் நிழலாக பேரரசைக் கருதினார்கள்
- பேரரசுக்கு உதவிட அமைச்சரவையில் இருந்து தலைமை அமைச்சர் ''வசீர்'' என அழைக்கப்பட்டார்

### மாகாண நிர்வாகம்

- பேரரசு → மகாணம் சுபா →சர்கார்கள் மாவட்டங்கள் → பர்கானாக்கள் → கிராமம்

  மன்னன் சுபேதார் பஷஜ்தார் கிராமனி

- பேரரசு 15 சுபாக்களாக பிரிக்கப்பட்டு இருந்தது
- சுபேதார் சிவில் மற்றும் இராணுவ அதிகாரங்களைப் பெற்றிருந்தனர்

ஆகாஷ்
வ
ர
லா
று

### வருவாய் நிர்வாகம்

- பேரரசின் முக்கிய வருவாய் நிலவரி
- ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் வருவாய்துறை அமைச்சராக இராஜா தோடர்மால் என்பவர் பணியாற்றினார்
- அக்பர் **ஜப்தி** முறையினை அறிமுகம் செய்தார்
- மொத்த வருவாயில் 1/3 பங்கு வரியாக பிரிக்கப்பட்டது.

ஆகாஷ்
வ
ர
லா
று

## இராணுவ நிர்வாகம்

- தரைப்படை, குதிரைப்படை, யானைப்படை மற்றும் பீரங்கிப்படை ஆகியவை இருந்தன
- இராணுவத்தில் அக்பர் **மன்சப்தாரி** முறையினை அறிமுகம் செய்தார்
- மன்சப்தார்கள் குதிரைப்படையையும், தரைப்படையையும் நிர்வாகம் செய்தனர்
- குதிரைப்படையில் குதிரைக்கு சூடுபோடும் தாக் முறையை அறிமுகப்படுத்தினர்.

## நீதி நிர்வாகம்

- தலைமைக் காசி பேரரசருக்கு நீதி பரிபாலனம் செய்தார்
- குரானின் உதவி கொண்டு நீதி வழங்கப்பட்டது
- இவர்களது ஆட்சி காலத்தில் தண்டனைகள் கடுமையாக இருந்தன

## வீழ்ச்சி

- மொகலாயப் பேரரசில் முறையான வாரிசுரிமைக் கொள்கை கிடையாது
- ஔரங்கசீப் இறந்த பிறகு வலிமையான புதல்வர்கள் இல்லை
- மராத்தியர்கள் மற்றும் சீக்கியர்களின் எதிர்ப்புகள்
- இந்தியாவில் ஐரோப்பியர்கள் ஆட்சியை நிலைப்படுத்தியது
- நாதிர்ஷா மற்றும் அகமது ஷா அப்தாலி ஆகியோர்களின் படையெடுப்பு



ஷெர்ஷா

## ஷெர்ஷா சூர் :

- இவரது இயற்பெயர் - ஃபரித்கான். காலம் கி.பி. 1540 முதல் கி.பி. 1555 வரை.
- பிறந்த ஆண்டு - கி.பி. 1472. வம்சம் - சூர் வம்சம்.
- இவரின் தந்தை பீகாரின் சசாரம் பகுதியை ஆண்ட ஹசன் கான் ஆவார்.
- ஜோன்பூரின் ஆப்கானிய கவர்னர் அளித்த பட்டம் ஷெர்கான்
- கி.பி.1540ம் ஆண்டு கன்னோச்சி போர் (ஹுமாயுன் - ஷெர்ஷா)
- இந்த வெற்றியின் மூலம் டெல்லி, ஆக்ரா, போன்ற பகுதிகளைக் கைப்பற்றினார்.
- சிந்து, மூல்தான், மாளவம், ரெய்சின்,மர்வார் ஆகிய பகுதிகளை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.
- கி.பி. 1545ல் பந்தல் கண்ட்டில் கலிஞ்சார் கோட்டைப் படையெடுப்பில் வெடி விபத்தில் மரணமடைந்தார்.

## ஷெர்ஷாவின் நிர்வாகங்கள் :

- **மத்திய நிர்வாகம்**
  - திவானி - இ - விசாரத் - வரவு மற்றும் செலவு பொறுப்பாளர்
  - திவானி - இ - ஆரிஷ் - இராணுவ பொறுப்பாளர்
  - திவானி - இ - இராசாலத் - வெளியுறவு மற்றும் தூதரக பொறுப்பாளர்
  - திவானி - இ - இன்ஷா - அரசு ஆணைகள் மற்றும் கடித போக்குவரத்து பொறுப்பாளர்

- **நிர்வாகப்பிரிவுகள்**
  - ஷெர்ஷாவின் பேரரசு 47 சர்கார்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
  - ஒவ்வொரு சர்காரிலும் முதன்மை ஷிக்தார் (சட்டம் ஒழுங்கு), முதன்மை முன்சீப் (நீதி வழங்குதல்) என்ற இரண்டு முக்கிய அதிகாரிகள் இருந்தனர்.
  - ஒவ்வொரு சர்காரும் பல பர்கானக்களாகப் பரிக்கப்பட்டிருந்தன.
  - பர்கானா நிர்வாகத்தை கவனித்த அதிகாரிகள் :

    1. ஷிக்தார் - ராணுவ அதிகாரி
    2.அமீன் - நிலவருவாய்
    3.பொடேதார் - கருவூல அதிகாரி
    4.கர்கூனங்கள் - கணக்கர்கள்

  - பேரரசில் இக்தா என்ற நிர்வாகப் பிரிவுகளும் இருந்தன.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

## சாலைகள்

நான்கு முக்கிய பெருவழிச் சாலைகளை அமைத்து போக்குவரத்து வசதிகளை ஷெர்ஷா மேம்படுத்தினார்

1. சோனார்கான் முதல் சிந்து வரை
2. ஆக்ரா முதல் புர்ஹாம்பூர் வரை
3. ஜோத்பூர் முதல் சித்தூர் வரை
4. லாகூர் முதல் மூல்தான் வரை

## வருவாய்

- புதியதாக இரயத்துவாரி என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- விளைச்சலில் 3ல் 1 பங்கு அரசிற்காக நிர்ணயம் செய்யப்பட்டது.
- பிற்காலத்தில் இந்த சீர்திருத்தத்தை அக்பர் பின்பற்றியதால் இவர் அக்பரின் முன்னோடி எனப்பட்டார்.

## இராணுவம்

- அலாவுதீன் கில்ஜி பின்பற்றிய இராணுவ முறையைப் பின்பற்றினார்.
- காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, பீரங்கிப்படை ஆகியவை இருந்தன.
- குதிரைக்கு சூடுபோடும் தாக் முறையினை அறிமுகம் செய்தார்.
- காலாட்படையில் வீரர்கள் பற்றிய பதிவேட்டினைப் பினபற்றினார்.

ஆகாஷ் வரலாறு

## நீதி

- சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதனை பின்பற்றினார்.
- மேல் முறையீட்டு வழக்குகளை விசாரித்தார்.
- நீதி நிர்வாகத்தில் தலைமை காசி உதவி புரிந்தார்.

## சீர்திருத்தங்கள்

- இவரது ஆட்சியில் ஒற்றர் படை திருத்தி அமைக்கப்பட்டது.
- இரகசிய ஒற்றர்கள் நியமிக்கப்பட்டு உடனுக்கு உடன் செய்திகள் அரசுக்கு அனுப்பப்பட்டது.
- சாலைகள் புதுப்பித்தார். 4 முக்கிய சாலைகள் எல்லையிலிருந்து பேரரசுடன் இணைக்கப்பட்டது.
- சாலைகளின் இரு புறங்களிலும் மரங்கள் நடப்பட்டன.
- பழைய உலோக நாணயங்களை ரத்து செய்தார்.
- வெள்ளி மற்றும் செம்பு நாணயங்களுக்கு விகிதாசாரம் நிர்ணயம் செய்தார்.
- தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களில் தனது பெயரை தேவநாகரி எழுத்தில் பொறித்தார்.
- ஷெர்ஷா நவீன நாணய முறையின் தந்தை என அழைக்கப்பட்டார்.
- பீகாரில் சசாரம் நகரில் தன் கல்லறையை இந்திய இஸ்லாமிய கட்டிடக் கலையில் உருவாக்கினார்.
- டெல்லியில் புராணாகிலா என்ற சிறந்த கட்டடத்தை உருவாக்கினார்.

ஆகாஷ் IAS அகாடமி
Coaching For:
TNPSC, VAO, TRB, TET, BANK, SSC, POLICE, ARMY
தலைமை அலுவலகம்: ரயில்வே பீடர் ரோடு, நடுபுல்க் சிக்னல் எதிரில், தென்காசி
கிளைகள்: கடலூர்,விழுப்புரம்,கள்ளக்குறிச்சி,திருவண்ணாமலை,சிதம்பரம்,சேலம்,
சங்கரன்கோவில், தேனி, வடலூர்,
போன்: 04633 - 226703, செல் : 99420 16300

# மராத்தியப் பேரரசு

- தக்காணம், மஹாராஷ்ட்ரா மலைப்பகுதி மக்கள் **மராத்தியர்கள்** என அழைக்கப்பட்டனர்.
- மலைவாழ் மக்கள் என்பதால் மலைகளுக்கிடையே ஒளிந்திருந்து தாக்கும் **'கொரில்லா போர் முறை'** யை அறிந்திருந்தனர்.



## சிவாஜி : (1627-1680)

- **1627ம்** ஆண்டு சிவாஜி பூனா அருகில் **சிவனேரிக் கோட்டை**யில் பிறந்தார்.
- தந்தை: **ஷாஜி போன்ஸ்லே**, தாய்: **ஜீஜாபாய்**
- **ஷாஜி போன்ஸ்லே**-ன் இரண்டாவது மனைவி **துக்காபாய்**
- சிவாஜி தன் தாய் மூலம் மகாபாரதம், ராமாயணங்களைக் கற்றார்.
- சிவாஜியின் குருமார்கள் - குருராம்தாஸ் மற்றும் துக்காராம்.
- சிவாஜியின் குரு **'தாதாஜி கொண்ட தேவ்'** இவருக்கு **போர்க் கலை மற்றும் நிர்வாகம்** கற்றுத் தந்தார்.
- சிவாஜி தலைமையில் **'மராத்தியர்கள்'** ஒன்று திரண்டனர்.
- **கி.பி. 1646ல்** சிவாஜி, **ரெய்கார், தோர்ணா, புரந்தர், கல்யாண் கோட்டை** போன்றவற்றை பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றினார்
- **1659ல்** சிவாஜியை அடக்க **பீஜப்பூர் சுல்தான் அப்சல்கான் என்பவரை** அனுப்பினார்.
- அப்சல்கானை சிவாஜி **பாக்நக் என்ற புலிநகம் மூ**லம் கிழித்துக் கொன்றார்.
- **1660ல்** ஔரங்கசீப் சிவாஜியை ஒடுக்க **செயிஸ்டகான் என்பவரை** அனுப்பினார்.
- இதனை அறிந்த சிவாஜி செயிஸ்டகானை தாக்கிய போது தப்பினார். கட்டைவிரல் துண்டிக்கப்பட்டது.
- **1665ல்** ஔரங்கசீப் **2வது முறையாக ஆம்பர் நாட்டு மன்னன் ராஜா ஜெய்சிங்** என்பவரை அனுப்பினார்.
- சிவாஜி அவரிடம் சரணடைந்து **புரந்தர்** உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்.
- **1666ல்** புரந்தர் உடன்படிக்கையின் படி சிவாஜி ஔரங்கசீப்பை சந்திக்க சென்ற போது கைது செய்யப்பட்டார்.
- தந்திரமாக **பழக்கூடை மூலமாக** சிவாஜி தப்பினார்.
- இதனால் ஔரங்கசீப் சிவாஜியை **'தக்காண புற்றுநோய்'** என்றும் **'மலை எலி'** என்றும் கூறினார்.
- 1672ல் முகலாயர்களை சால்கர் என்ற போர்களத்தில் தோற்கடித்தார்.
- **1674ல்** சிவாஜி ரெய்கார் கோட்டையில் **'சத்ரபதி'** என்ற பட்டத்தைச் சூட்டி மராத்திய பேரரசை தோற்றுவித்தார்.
- **1680ல்** தனது 53வது வயதில் ரெய்கார் என்னும் இடத்தில் சிவாஜி **உயிரிழந்தார்**.

## நிர்வாகம்

- சிவாஜி அமைச்சரவை **'அஷ்டபிரதான்'** என அழைக்கப்பட்டது.
- பேரரசு ⇒ மாநிலம் ⇒ பர்கானா ⇒ கிராமங்கள்
- கிவாஜியின் பேரரசு **'சுயராஜ்யம்'** என்று அழைக்கப்பட்டது.

## அஷ்டபிரேதான்

- ❖ பீஷ்வா - பிரதம அமைச்சர்
- ❖ சார் - இ - நோபத் - படைத்தளபதி
- ❖ அமாத்தியா - நிதியமைச்சர்
- ❖ வாக்நவின் - உளவுத்துறை
- ❖ அமந்தா - சடங்கு நிர்வாகம்
- ❖ சுமந்த் - வெளியுறவுத் துறை அமைச்சர்
- ❖ சச்சிவா - உள்துறை அமைச்சர்
- ❖ சேனாதிபதி - ராணுவ அமைச்சர்
- ❖ நியாய தீஷ் - நீதித்துறை அமைச்சர்
- ❖ பண்டிட் ராவ் - சமயத்துறை அமைச்சர்



**சிவாஜி**

- சிவாஜி ஜமீன்தாரி முறையை ஒழித்தார்.
- விளைச்சலில் 2/5 பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது.
- காதி என்ற அளவுகோலை பயன்படுத்தி நிலங்கள் அளக்கப்பட்டன.
- கர்கூன்கள் எனப்படும் வருவாய் துறை அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.
- முக்கிய வரிகள் : **சவுத், சர்தேஷ் முகி** (மராத்தியர்கள் அல்லாதவர்கள் மீது போடப்பட்ட வரி)
- **பட்டேல்** என்ற அதிகாரி குற்றவியல் வழக்குகளை விசாரித்தார்
- மேல் முறையீட்டு வழக்குகளை **நியாயதீஷ்** விசாரித்தார்
- மராட்டியர்கள் **கோட்டைகளைத் தாயாக**க் கருதினர். (இறுதியில் 240 கோட்டைகளை நிறுவினார்)
- மராத்தியர்கள் குதிரைப்படையில் இரண்டு பிரிவுகள் உள்ளன.
  1. பர்கிர்கள் - அரசின் நேரடி கட்டுப்பாடு
  2. சிலாதார்கள் - உயர்குடி மக்களின் பராமரிப்பில் இருப்பவை.



## சிவாஜியின் வழித் தோன்றல்கள்

- சிவாஜிக்கு பின் அவரது மகன் **சாம்பாஜி** பொறுப்பேற்றார்.
- **ஔரங்கசீப், பீஜப்பூர், கோல்கொண்டா**வைக் கைப்பற்றி சாம்பாஜி மற்றும் மகன் ஷாகுவைக் கைது செய்தார்.
- சாம்பாஜி சிறையிலேயே கொல்லப்பட்டார். அதன்பின் சிவாஜியின் மற்றொரு மகன் **'ராஜாராம்'** பொறுப்பேற்றார்.
- 1700ல் ராஜாராம் மரணம் அடைந்தார். பின் அவர் மனைவி தாராபாய், அவர் மகன் 2ம் சிவாஜி பொறுப்பேற்றனர்.
- ஔரங்கசீப்புக்கு பின் வந்த முகலாய மன்னர் பகதூர்ஷா **ஷாகுவை விடுதலை** செய்தார்.
- 1708 ல் சிறையில் இருந்து வந்து தாராபாயை ஷாகு தோற்கடித்து மராத்திய அரசரானார்.
- ஷாகு பொறுப்பேற்க **'பாலாஜி விஸ்வநாத்'** பெரிதும் உதவியதால் அவரை **'பீஷ்வா'** (பிரதம அமைச்சர்)ஆக்கினார்
- ஷாகு மறைவிற்கு பின் பாலாஜி விஸ்வநாத் **'பீஷ்வா'** ஆட்சியை மராத்திய மண்ணில் தோற்றுவித்தார்.

# பீஷ்வாக்கள் ஆட்சி



## பாலாஜி விஸ்வநாத் (கி.பி.1713 - 1720)

- பீஷ்வா ஆட்சியை தோற்றுவித்தவர் **பாலாஜி விஸ்வநாத்**

## பாஜிராவ் (கி.பி.1720 - 1740)

- இரண்டாம் பீஷ்வாவாக பாஜிராவ் ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- தலைசிறந்த பீஷ்வா **'பாஜிராவ்'** ஆவார். பாலாஜி விஸ்வநாத்தின் மகன்
- போர்ச்சுகீசியர்களிடம் இருந்து பஸ்சின், தானா மற்றும் சால்செட் பகுதிகளைக் கைப்பற்றினார்.
- **கி.பி.1740** ல் இவர் இறந்தார்.

## பாலாஜி பாஜிராவ் (1740-1761)

- **மூ**ன்றாவது பீஷ்வாவாக பொறுப்பேற்றார்.
- பாலாஜி பாஜிராவ் உறவினரான சதாசிவராவ் **மூ**லம் கி.பி. 1758ம் ஆண்டு முதல் மராத்திய பேரரசை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றார்.
- பஞ்சாபைக் கைப்பற்றி மராத்திய கொடியைப் பறக்கவிட்டார்
- **1761 ல்** அகமது ஷா அப்தாலி (ஆப்கானிய மன்னர்) படையெடுப்பால் மராத்திய பேரரசு சீர்குலைந்தது.
- ரோகில்கண்டு அரசர் நாஜிப்-உத்-தௌலா உதவியுடன் **அகமது ஷா அப்தாலி,** மராத்தியர்கள் மீது படையெடுத்தார்.
- **க.பி. 1761 ல் மூன்றாம் பானிபட் போர்** பாலாஜி பாஜிராவ் அமைச்சர் சதாசிவராவ்-க்கும், அகமது ஷா அப்தாலிக்கும் இடையே நடந்தது.
- **மூ**ன்றாம் பானிபட் போரில் மராத்தியர்கள் தோற்றனர்.

## நாதிர்ஷா

- **1739ல்** பாரசீக மன்னர் நாதிர்ஷா டெல்லி மீது படையெடுத்து செல்வங்களை கொள்ளை அடித்தார்.
- பெஷாவரைக் கைப்பற்றி முகலாயர்களை **கர்னூல்** என்ற இடத்தில் தோற்கடித்தார் (முகமதுஷா)
- 20 கோடியை முகலாய மன்னர் நஷ்ட ஈடாக கொடுத்த போதிலும் டெல்லியில் 15 நாட்கள் தங்கி டெல்லியை சூரையாடினார்.
- கோஹினூர் வைரம், மயிலாசனத்தையும் தூக்கிச் சென்றதோடு முகலாய மன்னரையும் கொன்றார்.
- **1747 ல்** நாதிர்ஷா தன் படை வீரர்களாலேயே கொல்லப்பட்டார்.

## அகமது ஷா அப்தாலி

- **1761 ல்** இந்தியா மீது படையெடுத்தார்
- 1748 - 1767 வரை பல முறை படையெடுத்து இந்தியாவைக் கொள்ளை அடித்தார்.
- 1767 ல் சீக்கியர்கள் மீது படையெடுத்து தோற்று ஆப்கானிஸ்தான் திரும்பினார்.

## மராத்தியர் ஆட்சியில் முக்கிய ஆண்டுகள்

- 1627 - சிவாஜி பிறப்பு (சிவனேரிக் கோட்டை)
- 1646 - புரந்தர், ரெய்கார், தோர்னா, கல்யாண் கோட்டைகளை பீஜப்பூர் சுல்தானிடமிருந்து சிவாஜி கைப்பற்றினார்.
- 1665 - புரந்தர் உடன்படிக்கை (சிவாஜி - ராஜா ஜெய்சிங்)
- 1674 - சத்ரபதியாக முடி சூட்டுதல் (ரெய்கார் கோட்டை)
- 1680 - சிவாஜி மரணம்
- 1707 - ஔரங்கசீப் மரணம்
- 1713 - மராத்தியத்தில் பீஷ்வா ஆட்சி
- 1739 - நாதிர்ஷா படையெடுப்பு
- 1708 - ஷாகு (சிவாஜி பேரன்) முடி சூட்டுதல்
- 1761 - அகமது ஷா அப்தாலி படையெடுப்பு (3ம் பானிபட் போர்)


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

# பக்தி இயக்கங்கள்



## 1. இராமானுஜர் :

- பக்தி இயக்கங்களில் ஈடுபட்ட மகான்களின் முன்னோடி.
- தென்னாட்டில் பிறந்த இவர் வட நாட்டில் பல இடங்களுக்குச் சென்றார்.
- அன்புக்கடல், அழகின் இருப்பிடம் என்று கடவுளை கருதினார்.
- அவருடைய போதனைகள் கீதை & உபநிடதத்தை அடிப்படையாகக் கொண்டது.
- இவருடைய சீடரான இராமானந்தர் இராமானுஜரின் போதனைகளை வட இந்தியாவில் பரப்பினார்.

## 2. இராமானந்தர் :

- வட இந்தியாவின் மொழியான ஹிந்தியில் போதித்த முதல் சீர்திருத்தவாதி. காசியில் கல்வி கற்றார்.
- கடவுளின் பார்வையில் அனைவரும் சமம்.மனிதரிடையே உயர்வு, தாழ்வு கிடையாது என்பது அவரது கருத்து.
- வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பலரும் அவரை பின்பற்றினர்.
- அவருடைய சீடர்களில் 12 பேர்கள் சமூக பின்னணி குறிப்பிடத்தக்கது.
- அதில் முக்கியமானவர்கள் கபீர் மற்றும் பத்மாவதி.
- 14 ம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமானந்தர் கடவுளை பாசமிக்க தந்தையாக கருதினார்.

## 3. கபீர் :

- இராமானந்தரின் உண்மையான சீடர். நிரு முஸ்லீம் முதலாளி மற்றும் அவரது மனைவியால் வளர்க்கப்பட்டார்.
- சுவாமி இராமானந்தரின் போதனையால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்.
- இந்துக்களும் முஸ்லீம்களும் ஒரே கடவுளின் குழந்தைகள் எனப் போதித்தார்.
- அல்லாவும், ஈஸ்வரனும், ராமனும் ரஹீமும் ஒருவரே எனப் போதித்தார்.
- இவரை பின்பற்றியவர்கள் கபீர் பண்டிதர்கள். இவரது காலம் 15 ம் நூற்றாண்டு.

## 4. நாமதேவர் :

- இவர் மகாராஷ்டிரா மாநிலத்தில் சலவைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்தார்.
- மராத்திய மொழியில் மதுரமான பாடல்கள் இயற்றினார். விஷ்ணுவை வித்தோபா என அழைத்தனர்.
- இவருடைய பாடல்களில் சில குரு கிரந்த சாகிப் என்னும் புனித நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

## 5. குரு நானக் :

- சீக்கிய சமயத்தை உருவாக்கினார். 29 வயதில் வீட்டைத் துறந்தார்.
- மெக்கா, மதினா போன்ற புண்ணிய தலங்களுக்கு சென்றார். கடவுள் ஒருவரே எனப் போதித்தார்.
- இவர் உருவ வழிபாட்டை எதிர்த்தார். குரு நானக்கை பின்பற்றியவர்கள் சீக்கியர்கள்.
- எல்லா சமயத்தினரும் அனைத்து பிரிவினரும் ஒன்றாக அமர்ந்து உண்ணும் லாங்கர் எனப்படும் சமபந்தி உணவுக்கூடம் அவரால் தோற்றுவிக்கப்பட்டது.
- குருநானக்கின் போதனைகள் பாடல்கள் வடிவில் அமைந்திருந்தன.
- அவை தொகுக்கப்பட்டு ஆதிகிரந்த் என்னும் நூலாக குர்முகி எழுத்து முறையால் எழுதப்பட்டன.
- இந்த நூல் கபீர், நாமதேவர், மற்றும் பக்தி சூபி இயக்க அருட்செல்வர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பாகும்.
- இவர் தன் கடைசிக் காலத்தில் கார்த்பூரில் வசித்தார்.

## 6. சைதன்யர் : (1485 - 1533)

- வங்காளத்தை சேர்ந்த இவர் கிருஷ்ணரின் பக்தர். 24 வயதில் துறவு மேற்கொண்டார்.
- தக்காணம், பீகார், வங்காளம், ஒரிசா போன்ற பகுதிகளில் தன் போதனைகளை பரப்பினார்.
- சைதன்யரின் சீடர்கள் அவரை மகாவிஷ்ணுவின் அவதாரமாக கருதினர்.
- அவர் சங்கீர்த்தனம் அல்லது கடவுளின் புகழைப் பொது இடங்களில் பாடும் முறையை அறிமுகப்படுத்தினார்.
- அவரது சீடர்கள் அவரை மகாபிரபு என்றனர்.

## 7. துளசிதாசர் :

- கோசாமி துளசிதாசர் எனப்படும் இவர் ஒரு ராம பக்தர்.
- அவரின் இராமசரிதமானஸ் ராமரின் கதையை ஹிந்தியில் நமக்குத் தருகிறது.
- இராமரை வழிபடும் முறையைப் பரப்பியவர்களில் முதன்மையானவர் துளசிதாசர்.
- இந்தியில் ஜானகி மங்கள், பார்வதி மங்கள் போன்ற நூல்களையும் படைத்துள்ளார்.

# ஐரோப்பியர்கள் வருகை



**போர்சுகீசியர்கள்**

- ஐரோப்பியர்கள் பழங்காலம் முதலே இந்தியாவுடன் கடல் வணிகம் கொண்டிருந்தனர்.
- ஐரோப்பியர்களால் தங்கக் கிழக்கு நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகள் - இந்தியா, சீனா.
- பட்டு, மஸ்லின் கைத்தறி துணி, நறுமணப்பொருட்கள், இஞ்சி,
- மிளகாய், தேங்காய், மிளகு சர்க்கரை
- போன்றவற்றை ஏற்றுமதி செய்து கொண்டனர்.
- ஐரோப்பிய - இந்திய வணிகம் மூன்று முக்கிய வழிகளில் நடைபெற்றது.

**1) ஆப்கானிஸ்தான் → மத்திய ஆசியா மற்றும் காஸ்பியன் கடல் → கருங்கடல் தரைப்பகுதி.**
**2) பாரசீகம் - சிரியா → மத்திய தரைக்கடல் பகுதி → அலெக்சாண்டிரியா.**
**3) அரபிக்கடல் → பாரசீக வளைகுடா → செங்கடல் பகுதி.**




**கடல்வழி மார்க்கம்**

- முதல் இரண்டு வழிகள் அரேபிய, பாரசீக படையெடுப்பால் தடைபட்டது
- கி.பி. 1453 ல் துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபிள் நகரைக் கைப்பற்றி
- ஐரோப்பிய வணிக வழியை முழுவதுமாக தடை செய்தனர்.
- ஐரோப்பியர்களுக்கு இந்திய வணிகம் மிகவும தேவைப்பட்டது.
- எனவே கடல் வழி மார்கத்தைக் கண்டறிவதில் முனைப்புடன் செயல்பட்டனர்.
- போர்ச்சுக்கீசிய இளவரசர் **ஹென்றி** என்பவர் கடல் வழி பயணிக்கும் மாலுமிகளுக்கு பயிற்சி அளிக்கும் பள்ளி ஒன்றை நிறுவினார்.
- இதனால் இவர் **மாலுமி ஹென்றி** என்று அழைக்கப்பட்டார்.
- கி.பி. 1487ம் ஆண்டு பார்த்தலோமியா டயஸ் என்பவரை ஹென்றி ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரை ஓரமாக இந்தியாவிற்கு கடல் வழி மார்கத்தைக் கண்டறிய அனுப்பினார்.
- பார்த்தலோமியா டயஸ் ஆப்ரிக்கா கண்டத்தின் தென் முனையை அடைந்தபோது கடும் புயல் காரணமாக திரும்பிச் சென்றார்.
- எனவே அது **'புயல் முனை'** எனவும், இந்தியாவை அடையமுடியும் என நம்பிக்கை ஏற்படுத்தியதால் **'நன்னம்பிக்கை முனை'** எனவும் அழைக்கப்பட்டது.
- பின்னர் வாஸ்கோடகாமா என்னும் போர்ச்சுக்கீசியர் நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவை **கி.பி. 1498 மே மாதம் 17ம்** தேதி வந்தடைந்தார்.
- அவர் வந்து இறங்கிய இடம் கேரளாவில் **'கள்ளிக் கோட்டை'** பகுதி (தற்போது கோழிக் கோடு)
- அவரை சாமரின் என்ற மன்னர் வரவேற்று வணிகம் செய்ய அனுமதி வழங்கினார்.
- போர்ச்சுக்கீசிய வணிக தலங்களை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட முதல ஆளுநர் **பிரான்ஸிஸ்கோ டி அல்மேடா**
- இவர் அஞ்சதிவா, கண்ணூர், கொச்சி, சில்வா ஆகிய இடங்களில் கோட்டைகளைக் கட்டினார்.
- இவர் இந்திய பெருங்கடல் பகுதியில் கப்பல் படையை வலிமைப்படுத்தி ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். இவரின் இக்கொள்கையே **நீலநீர்க் கொள்கை** ஆகும். 1509 ல் இவர் எகிப்தியர்களால் கொல்லப்பட்டார்.
- அதன் பின் 2வது ஆளுநராக **அல்போன்ஸா - டி - அல்புகர்க்** (கி.பி.1510 - கி.பி. 1515) நியமிக்கப்பட்டார்.
- இந்தியாவின் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்தை ஆழமாக நிலைநாட்டியவர் - **அல்போன்ஸா - டி - அல்புகர்க்**
- கி.பி. 1510 ல் பிஜப்பூர் சுல்தானிடம் இருந்து கோவாவைக் கைப்பற்றி வணிக தலைநகராக்கினார்.
- இந்துக்களோடு சுமூக உறவு கொண்டு ஐரோப்பிய - இந்திய திருமண உறவை ஆதரித்தார்.
- பாரசீக வளைகுடா ஆர்மஸ் எனுமிடத்தில் துறைமுகம் கட்டினார். இஸ்லாமியர்களை வெறுத்தார்.

- இவர் சதி ஒழிக்க முற்பட்டதால், **வில்லியம் பெண்டிங் பிரபுவின் முன்னோடி** என்று அழைக்கப்படுகிறார்.
- விஜயநகரப் பேரரசுடன் சுமூக உறவு கொண்டிருந்தார். கி.பி. 1515 ல் கோவாவில் காலமானார்.
- கி.பி.1529 ல் **நைநோ - டா - சுன்கா** என்பவர் ஆளுநராக பதவி வகித்தார்.
- இவர் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு கி.பி.1530 ல் இடம் மாற்றினார்.
- கி.பி. 1534ல் சேட்கோவான் மற்றும் சிட்டா கியோன் ஆகிய பகுதிகளில் கோட்டைகளை அமைத்தார்.
- அடுத்ததாக கி.பி. 1538 ல் **கிரைகோ - டி - நெராங்கா** என்பவர் ஆளுநராக பதவி வகித்தார்.
- கி.பி.1548 ல் பீஜப்பூரைத் தோற்கடித்து கோவா வரை முன்னேறினார்.
- **போர்ச்சுகீசியர்கள் வணிகத்தலம் அமைத்த இடங்கள்:**
  - மேற்குக்கடற்கரை - பம்பாய், டாமன், சால்செட்
  - கிழக்குக்கடற்கரை - ஹுக்ளி (வங்காளம்), சாந்தோம் (சென்னை)



- கி.பி. 1565 ல் தலைக்கோட்டைப் போரில் விஜய நகர அரசு வீழ்ந்ததால் போர்ச்சுகீசியர் சரிந்தனர்.
- கி.பி. 1631ல் முகலாய மன்னன் காசிம்கானால் ஹுக்ளியில் இருந்து போர்த்துகீசியர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- புகையிலை, அன்னாசி, பப்பாளி, முந்திரி, மிளகாய் மற்றும் உருளை ஆகிய சாகுபடிகளை போர்த்துகீசியர்கள் இந்தியாவில் அறிமுகம் செய்தனர்.
- கி.பி. 1663 ல் டச்சுக்காரர்களால் மலபார் கடற்கரைப்பகுதி போர்த்துகீசியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது.
- எனவே டச்சுக்காரர்களின் வருகைக்குப்பின் போர்த்துக்கீசியர்களால் இந்தியாவில் நிலைக்க முடியவில்லை.

## டச்சுக்காரர்கள்

- டச்சுக்காரர்கள் ஹாலந்து (நெதர்லாந்து) நாட்டைச் சேர்ந்தவர்கள்.
- கி.பி. 1602 ல் டச்சு கிழக்கு இந்திய கம்பெனி (நெதர்லாந்து கிழக்கிந்திய கம்பெனி) ஆரம்பிக்கப்பட்டது.
- டச்சுக்காரர்களுக்கு இந்தியா மீது அதிகம் நாட்டம் இல்லை.
- எனவே நறுமணத் தீவுகளின் மீது கவனம் செலுத்தி இந்தோனேசியாவில் வணிகம் செய்தனர்.
- கி.பி.1605ல் இந்தியாவில் மசூலிப்பட்டினத்தில் முதல் வணிக தலத்தை அமைத்தனர்.
- கி.பி. 1610 ம் ஆண்டு சென்னைக்கு அருகே உள்ள புலிகாட் (தற்போது பழவேற்காடு) எனுமிடத்தில் வணிகத் தலத்தை நிறுவி தங்களின் முதல் கோட்டையைக் கட்டினர்.
- **டச்சுக்காரர்கள் வணிகத்தலம் அமைத்த இடங்கள் :**
  - மசூலிப்பட்டினம்
  - புலிக்காட்
  - ஆக்ரா
  - சூரத்
  - பரோச்
  - காம்பே
  - அகமதாபாத்
  - பாட்னா
  - காரைக்கால்
  - நாகப்பட்டினம்
  - சின்சுரா
  - காசிம்பஜார்
- கி.பி. 1623 ல் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியும் நறுமணத் தோட்டத்தின் மீது கவனம் செலுத்தி அங்கு வணிகர்களை அனுப்பியது. இதனை விரும்பாத டச்சுக்காரர்கள் **'அம்பாயினா'** எனுமிடத்தில் ஆங்கிலேயர்களை கொன்று குவித்தனர். இது **'அம்பாயினா படுகொலை'** எனப்படுகிறது.
- **பதவி வகித்த ஆளுநர்கள்:**
  - கி.பி.1612 - ஹென்ட்ரிக் புரூவர்
  - கி.பி.1619 - பட்டாவியா
  - கி.பி.1660 - வான்வீடர் (தலைநகரை புலிகாட்டில் இருந்து நாகப்பட்டினத்திற்கு மாற்றினார்)
  - கி.பி.1662 - வான்கோனஸ்
- இறுதியாக கி.பி.1759 ல் பெடராயுத்தத்தில் ஆங்கிலேயர்களிடம் டச்சுக்காரர்கள் தோல்வியுற்றனர்.

## ஆங்கிலேயர்கள்

- ஆங்கிலேயர்கள் (அ) பிரிட்டிஷ்காரர்கள் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள்.
- கி.பி. 1588 ம் ஆண்டு **'ஸ்பானிய ஆர்மடா'** எனும் உலகின் மிகப் பெரிய போர்க்கப்பலை வீழ்த்தியதன் **மூலம்** ஐரோப்பாவின் வலிமையான நாடாக இங்கிலாந்து உருவெடுத்தது.
- இவர்கள் கீழ்த்திசை (இந்தியா போன்ற) நாடுகளுடன் வணிகம் செய்ய விரும்பினர்.
- இங்கிலாந்தின் 100 வணிகர்கள் இணைந்து 'ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி' என்ற அமைப்பை ஏற்படுத்தினர்
- இங்கிலாந்து நாட்டின் இளவரசி முதலாம் எலிசபத் அவர்கள் இதற்கு அனுமதியும், ஆதரவும் வழங்கி டிச 31, 1600ல் கையொப்பமிட்டார்.
- கி.பி. 1608 ல் இங்கிலாந்து இளவரசர் முதலாம் ஜேம்ஸ் என்பவர் வில்லியம் ஹாக்கின்ஸ் என்பவரை வணிக அனுமதி பெற இந்தியாவிற்கு அனுப்பினார்.
- 1608 ல் வில்லியம் ஹாக்கின்ஸ் அப்போதைய முகலாய அரசர் ஜஹாங்கீர் அரசவைக்கு வந்தார். ஆனால் அப்போது ஜஹாங்கீர் வணிக அனுமதி வழங்கவில்லை.
- பின்னர் கி.பி. 1615ல் சர்தாமஸ் ரோ என்பவர் ஜஹாங்கீர் அவைக்கு வருகை புரிந்து அனுமதி பெற்றார்.
- ஆங்கிலேயர்கள் தனது முதல் வணிகத் தலத்தை சூரத் நகரில் அமைத்தனர்.
- கி.பி. 1639 ல் **'பிரான்ஸிஸ் டே'** எனும் ஆங்கில அதிகாரி சந்திரகிரி அரசரிடம் இருந்து சென்னையை வாங்கினார்
- கி.பி. 1640 ல் சென்னையில் **'பிரான்ஸிஸ் டே'** செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினார்.
- இங்கிலாந்து அரசர் 2ம் சார்லஸ், போர்ச்சுகல் நாட்டு இளவரசி காத்ரினை மணந்ததால் சீர்வரிசையாக பம்பாய் அளிக்கப்பட்டது. எனவே 2ம் சார்லஸ் கி.பி. 1661ம் ஆண்டு 10 பவுண்டு குத்தகைக்கு ஆங்கிலேயே கிழக்கிந்திய கம்பெனியிடம் பம்பாயை அளித்தார்.
- கி.பி. 1696 ல் ஔரங்கசீப்பின் அனுமதி பெற்று கொல்கத்தாவில் வணிக மையங்களை ஆங்கிலேயர்கள் அமைத்து அங்கு இங்கிலாந்து மன்னர் 3ம் வில்லியம் நினைவாக **'செயின்ட் வில்லியம்ஸ்'** என்ற கோட்டையைக் கட்டினர்.
- கி.பி. 1760 ல் வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய குடியிருப்புகள் வில்லியம் கோட்டைக்கு மாற்றப்பட்டது.
- **சர் சார்லஸ் அயர்** என்பவர் கோட்டையின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஆங்கிலேயே கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம் கி.பி.1858ம் ஆண்டு வரை நீடித்திருந்தது.



## பிரெஞ்சுக்காரர்கள்

- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்களே - பிரெஞ்சுக்காரர்கள்
- பிரான்ஸ் மன்னர் 14 ம் லூயி மன்னரின் பொருளாதார ஆலோசகர் கால்பர்ட் என்பவரின் முயற்சியால் கி.பி. 1664 ம் ஆண்டு **'பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி'** ஆரம்பிக்கப்பட்டது.
- கி.பி.1668 ல் சூரத்தில் முதல் வணிகத் தலத்தை பிரெஞ்சு கம்பெனியின் பொது இயக்குனர் **பிரான்சிஸ் கரோன்** என்பவர் அமைத்தார்.
- கி.பி.1669 ல் மசூலிப் பட்டினத்தில் மெர்க்காரா என்பவரின் மூலம் இரண்டாவது வணிகத் தலத்தை நிறுவினார்.
- கி.பி.1674 ல் சென்னைக்கு தெற்கில் உள்ள பாண்டிச்சேரி பகுதியை தஞ்சை மன்னர் 2ம் சரபோஜியிடம் இருந்து பிராங்காய் மார்ட்டின் என்பவர் வாங்கி அங்கு **'பிரெஞ்சு வணிகதலத்தின்'** தலைமையிடத்தையும் அமைத்தன.
- 1690 ல் சந்திர நாகூரிலும், 1725 ல் மாஹி பகுதியிலும், 1739 ல் காரைக்காலிலும் வாணிகத்தலம் அமைத்தனர்.
- கி.பி.1735 ல் பிரெஞ்சுக் கிழக்கிந்திய கம்பெனியில் முதல் ஆளுநராக டூமாஸ் என்பவர் பதவி வகித்தார்.
- அதன்பின் கி.பி. 1742 ல் டியூப்ளே பிரெஞ்சு கவர்னரானார் (வலிமையானவர்).
- இறுதியில் பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரி, மாஹி, சந்திரநாகூர், காரைக்கால், ஏனாம் ஆகிய பகுதிகளை மட்டுமே தக்கவைத்துக் கொள்ள முடிந்தது.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

**டேனியர்கள்**

- டென்மார்க் நாட்டைச் சார்ந்தவர்களே டேனியர்கள்.
- கி.பி. 1616 ல் டேனியக் கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பிக்கப்பட்டது.
- கி.பி. 1620 ல் நாகை மாவட்டத்தில் உள்ள தரங்கம்பாடியில் முதல் வணிகத்தலத்தை நிறுவினார்.
- கி.பி. 1676 ல் வங்காளத்தல் சீராம்பூர் எனுமிடத்தில் தலைமை வணிக தலத்தை அமைத்தனர்.
- பின்னர் வணிக தலங்களை நிர்வகிக்க இயலாமல் கி.பி. 1845ல் அனைத்துப் பகுதிகளையும் ஆங்கிலேயருக்கு விற்றுவிட்டு நாடு திரும்பினர்.



**நினைவில் கொள்ள**

- போர்ச்சுக்கீசியர் - போர்ச்சுக்கல்
- டச்சுக்காரர்கள் - ஹாலந்து (நெதர்லாந்து)
- ஆங்கிலேயர்கள் - இங்கிலாந்து
- டேனியர்கள் - டென்மார்க்
- பிரெஞ்சுக்காரர்கள் - பிரான்ஸ்
- டச்சு கிழக்கிந்திய கம்பெனி' - 1602
- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி' - 1600
- பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி' - 1664
- டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி' - 1616
- புனித ஜார்ஜ் கோட்டை - சென்னை (1640)
- புனித வில்லியம் கோட்டை - கொல்கத்தா (1699)
- புனித டேவிட் கோட்டை - கடலூர்

**ஐரோப்பியர்களின் வருகை**

| வரிசை எண் | ஐரோப்பியர்கள் | முதல் ஐரோப்பியர் | காலம் | இடம் | அனுமதி வழங்கிய அரசர் | முதல் கோட்டை |
|---|---|---|---|---|---|---|
| 1 | போர்த்துக்கீசரியர் | வாஸ்கோடகாமா | கி.பி. 1498 | கள்ளிக்கோட்டை | சாமரின் | கள்ளிக்கோட்டை |
| 2 | டச்சுக்காரர்கள் | கார்னீலியஸ் கௌடமன் | கி.பி.1605 | மசூலிப்பட்டினம் | வெங்கடபதி | புலிகாட் (பழவேற்காடு |
| 3 | ஆங்கிலேயர்கள் | வில்லியம் ஹாக்கின்ஸ் | கி.பி. 1609 | சூரத் | ஜஹாங்கீர் | சூரத் |
| 4 | டேனியர்கள் | | கி.பி. 1620 | தரங்கம்பாடி | செஞ்சிஅரசர் | பாண்டிச்சேரி |
| 5 | பிரெஞ்சுக்காரர்கள் | கால்பர்ட் | கி.பி.1664 | கொச்சி | ஔரங்கசீப் | சூரத் |

# கர்நாடகப் போர்கள் (ஆதிக்கப்போட்டி)

ஆகாஷ்

வ ர லா று

- இந்தியாவில் ஆங்கிலேயே, பிரெஞ்சு ஆதிக்கம் மட்டுமே மேலோங்கி இருந்தது.
- இந்தியாவில் யார் அதிகாரம் செய்வது என இருவருக்குமிடையே 18ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே போட்டிகள் ஏற்பட்டிருந்தன.
- கி.பி. 1740 முதல் கி.பி.1763 வரை இருவருக்கும் இடையே கர்நாடகாவில் **மூ**ன்று போர்கள் நடைபெற்றன. இதுவே **கர்நாடகப் போர்** எனப்பட்டது.


## முதல் கர்நாடகப் போர் (1746 – 1748)

- முதல் கர்நாடகப் போர் ஆஸ்திரிய வாரிசுரிமை போரின் பிரதிபலிப்பு ஆகும்.
- பிரெஞ்சு கவர்னர் டியூப்ளே மற்றும் மொரிசியஸ் கவர்னர் லா போர்டனாய்ஸ் என்பவருடன் இணைந்து சென்னையைக் கைப்பற்ற முயன்றனர். இதுவே முதல் கர்நாடகப் போர் ஏற்பட வழி வகுத்தது.
- கர்நாடக நவாப் அன்வருதீன் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக மாபூஸ்கான் தலைமையில் அனுப்பிய படையை பிரெஞ்சுக்காரர்கள் சென்னைக்கு அருகே அடையாறு (அடையாற்றுப் போர்) என்னுமிடத்தில் வீழ்த்தினர்.
- பின்னர் பிரெஞ்சுப்படைத் தளபதி டியூப்ளே தலைமையில் கடலூரில் உள்ள டேவிட் கோட்டையைக் கைப்பற்ற முயன்றனர்.
- இப்போர் கி.பி. 1748 ல் **'அய்லா ஷாப்பேல்'** உடன்படிக்கையின் படி முடிவுற்றது.
- அய்லா ஷாப்பேல் உடன்படிக்கை ஆஸ்திரிய வாரிசுரிமைப் போருக்கும் முற்றுப்புள்ளி வைத்தது.
- இந்த உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்களுக்கு சென்னை மீண்டும் கிடைத்தது.



**டியூப்ளே**

## இரண்டாம் கர்நாடகப் போர் (1748–1754)



- கர்நாடக நபாப் தோஸ்த் அலி இறந்த பின் பதவிக்கு அவரது மகன் அன்வாருதீன் மற்றும் மருமகன் சந்தாசாகிப் போட்டியிட்டனர்.
- அதே சமயம் ஹைதராபாத் நிஜாம் அசஃப்ஜா இறந்தார். பதவிக்கு மகன் நாசிர் ஜங்கும், பேரன் முஷபர் ஜங்கும்போட்டியிட்டனர்.
- பிரெஞ்சுகாரர்கள் சந்தா சாகிப்பையும், முஷபர் ஜங்கையும் ஆதரித்தனர்.
- ஆங்கிலேயர்கள் அன்வா**ரு**தீனையும், நாசிர் ஜங்கையும் ஆதரித்தனர்.
- முடிவில் அன்வா**ரு**தீன் கொல்லப்பட்டு சந்தா சாகிப் ஆட்சியைப் படித்தார். அன்வா**ரு**தீன் மகன் முகமது அலி திருச்சி மலைக்கோட்டைக்கு தப்பியோடினார்.
- இதன் காரணமாக சந்தா சாகிப் பிரெஞ்சுக்காரர்களுக்கு வழுதானூர், வில்லியனூர் மற்றும் பாகூர் ஆகிய இடங்களை வழங்கினார்.
- நாசிர் ஜங் - முஷபர் ஜங் இருவரும் கொல்லப்பட்டதால் பிரெஞ்சு படைத்தளபதி புஸ்ஸி, சலாஃபத் ஜங் என்பவரை ஹைதராபா நிஜமாக அறிவித்தார்.
- ஆங்கிலேயர் வலிமை இழந்து காணப்பட்ட சமயத்தில் ஆங்கில கவர்னராக **'ராபர்ட் கிளைவ்'** பொறுப்பேற்றார்.
- கி.பி. 1751 ல் இராபர்ட் கிளைவ் கர்நாடக நவாப் சந்தா சாகிப்பை ஆர்காடு என்னும் பகுதியில் தோற்கடித்து முகமது அலியை நவாப் ஆக்கினார். ஆற்காடு என்பது அப்போதைய கர்நாடக தலைநகர் ஆகும்.
- எனவே ராபர்ட் கிளைவ் '**ஆற்காட்டு வீரர்**' என அழைக்கப்பட்டார்.
- இந்தத் தோல்வியால் கி.பி.1754 ல் பிரெஞ்சுத் தளபதி டியூப்ளே பதவியிறக்கம் செய்யப்பட்டு, அவருக்கு பதிலாக கோத்யூ என்பவர் தளபதியாக பதவியேற்றார்.
- பின்னர் இப்போர் கி.பி.1755 ல் **பாண்டிச்சேரி** உடன்படிக்கை **மூ**லம் முடிவுற்றது.
- இந்த உடன்படிக்கையின் படி பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் இந்தியாவில் இந்திய அரசர்களின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என ஒப்பந்தம் செய்து கொண்டனர்.
- முகமது அலி என்பவரையே ஆற்காடு நவாபாக ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் அங்கீகரித்தனர்.

## மூன்றாம் கர்நாடகப் போர் (1756–63)

- ஐரோப்பாவில் வெடித்த ஏழு ஆண்டுப் போர் மூன்றாம் கர்நாடகப் போருக்கு காரணமாக விளங்கியது.
- இந்தியாவின் பிரெஞ்சுப் பகுதிகளை நிர்வகிக்க தளபதி கவுண்டி - டி - லாலி என்பவரை பிரான்ஸ் நாட்டு அரசு அனுப்பியது.
- பிரெஞ்சு கவர்னர் **கவுண்டி - டி - லாலி** முதலில் டேவிட் கோட்டையைக் கைப்பற்றினார்.
- பின்னர் தளபதி புஸ்ஸி என்பவருடன் இணைந்து சென்னையை தாக்க முயன்றார்.
- இருவரும் சென்னைக்கு வந்ததும் ஆங்கிலேயர்கள் ஹைதராபாத்தில் வடசர்கார் பகுதிகளைக் கைப்பற்றினர்.
- சென்னையில் ஆங்கிலேயர் - பிரெஞ்சுக்காரர்கள் இடையே கடும் போர் **மூ**ண்டது.
- 1760 ல் வந்தவாசிப் போரில் ஆங்கில தளபதி சர் அயர்கூட் என்பவர் கவுண்டிலாலியையும், தளபதி புஸ்ஸியையும் தோற்கடித்தார்.
- எனவே சர் அயர்கூட் '**வந்தவாசி வீரர்**' என அழைக்கப்பட்டார்.
- கி.பி. 1761 ல் பாண்டிச்சேரியை கவுண் - டி - லாலி ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தார்.
- இப்போர் கி.பி. 1763 ல் **பாரீஸ் உடன்படிக்கை மூ**லம் முடிவுக்கு வந்தது.
- இந்த உடன்படிக்கையின் படி பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திர நாகூர், மாஹி ஆகிய பகுதிகளை திரும்பப் பெற்றாலும், அங்கே கோட்டைகள் கட்ட அனுமதிக்கப்படவில்லை.
- இதனால் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் சரிவடைந்து ஆங்கிலேயர்கள் மட்டும் இந்தியாவில் நிலைப்பெற்றனர்.
- அதன் பின்னர் பிரெஞ்சு ஆதிக்கம் முற்றிலும் வலுவிழந்தது.



கர்நாடகப் போர்கள் (கி.பி. 1746 முதல் கி.பி. 1763 வரை)

**நினைவில் கொள்ள**

- முதல் கர்நாடகப் போர் ⟶ (1746 - 48) ⟶ எய்லா ஷபேல் உடன்படிக்கை
- 2 ம் கர்நாடகப் போர் ⟶ (1748 - 54) ⟶ பாண்டிச்சேரி உடன்படிக்கை
- 3 ம் கர்நாடகப் போர் ⟶ (1756 - 63) ⟶ பாரீஸ் உடன்படிக்கை
- வந்தவாசிப் போர் ⟶ (1760) ⟶ சர்அயர் கூட் - கவுண்டிலாலி, புஸ்ஸி

## இருட்டறை சம்பவம் (1756)

- வங்காள நவாப் அலிவர்திகான் மரணம் அடைந்தபின் அவர் பேரன் சிராஜ் - உத் - தௌலா மன்னரானார்.
- வங்கப்பகுதியில் ஆங்கிலேயர்கள் தாம் வாங்கிய பகுதிகளில் கோட்டைகளின் உயரத்தை உயர்த்த தொடங்கினர்.
- சிராஜ் - உத் - தௌலா வங்காளத்தில் கோட்டையை உயர்த்த தடை விதித்து ஆங்கிலேயர்களுக்கு கடிதம்எழுதினார். ஆனால் அதனை ஆங்கிலேயப் படைகள் தடைகளை மீறினர்.
- இதனால் கி.பி. 1756 ஜுன் 4ம் தேதி சிராஜ் - உத் - தௌலா ஆங்கிலேயர்களின் காசிம்பஜார் பண்டகச் சாலையைக் கைப்பற்றினர்.
- பின்னர் **கி.பி 1756 ஜீன் 20 ல்** சிராஜ் - உத் - தௌலா போர் தொடுத்து 146 ஆங்கிலேயரை பிடித்து ஒரு இருட்டறையில் அடைத்து வைத்தார். இதில் **மூச்சுத்** திணறி 123 பேர் **இறந்தனர்**.
- இதுவே **'கொல்கத்தா இருட்டறை துயரச் சம்பவம்'** (Black Hole Tragedy) எனப்படுகிறது.

# பிளாசிப் போர் (1757)



சிராஜ்-உத்-தெளலா

- இருட்டறை சம்பவத்தின் விளைவாக ஆங்கில தளபதி **வாட்சன்** மற்றும் **இராபர்ட் கிளைவ்** கொல்கத்தாவில் முகாமிட்டு சிராஜ் - உத் - தெளலாவின் படைத்தளபதி மீர்ஜாபருடன் ஒரு ரகசிய உடன்படிக்கை செய்துக் கொண்டனர்.
- பின்னர் கி.பி. 1757 ல் ஜூன் 23ம் நாள் கல்கத்தாவிற்கு அருகில் **பிளாசி** எனுமிடத்தில் பாகிரதி நதிக்கரையில் நடைபெற்றப் போரில் ஆங்கிலேயர்கள் சிராஜ்-உத்-தெளலாவை தோற்கடித்துக் கொன்றனர்.
- சிராஜ் - உத் - தெளலாவை கொலை செய்ய உதவிய தளபதி மீர் ஜாபரை வங்காளத்தின் நவாப் ஆக்கியதுடன் 24 பர்காணாக்களை (மாவட்டம்) பரிசாக வழங்கினர்
- பின்னர் கி.பி.1760 ல் மீர் ஜாபர் பதவி நீக்கம் செய்யப்பட்டு அவரது மருமகன் மீர் காசிம் நவாப் ஆக்கப்பட்டார்.
- மீர் காசிம் இந்திய வியாபாரிகளுக்கு சுங்கவரியை ரத்து செய்தார். இதனை விரும்பாத ஆங்கிலேயர்கள் மீர் காசிம்மை கி.பி. 1764 ல் போரிட்டு விரட்டியடித்தனர்.
- மீர் காசிம் அயோத்தி நவாப் ஷுஜா - உத் - தெளலா என்பவரிடம் அடைக்கலமானார்.

# பக்ஸார் போர்: (1764)



ஷுஜா-உத்-தெளலா

- முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலம், அயோத்தி நவாப் ஷுஜா உத் தெளலா, மீர் காசிம் மூவரும் இணைந்து ஒரு கூட்டுப்படையை உருவாக்கினர்.
- இந்த முக்கூட்டுப்படை கி.பி. 1764 ல் அக்டோபர் 22ம் நாள் பீகார் மாநிலத்தில் பாட்னாவிற்கு மேற்கே 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ள பக்ஸார் என்னுமிடத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிட்டனர்.
- இந்தப் படையை ஆங்கிலத் தளபதி மேஜர் ஹெக்டர் மன்ரோ என்பவர் தோற்கடித்தார்.
- கி.பி. 1765 ம் ஆண்டு **அலாகாபாத்** உடன்படிக்கையின் மூலம் பக்ஸார் முடிவுக்கு வந்தது

**போரின் முடிவில்: (உடன்படிக்கையின்படி)**

- அயோத்தி நவாப் ஷுஜா உத் தெளலா 50 இலட்சம் போர் இழப்பீடாக செலுத்த வேண்டும்.
- மேலும் காரா மற்றும் அலகாபாத் பகுதிகளை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
- முகலாய மன்னன் 2ம் ஷா ஆலமிற்கு ஆண்டுக்கு 26 லட்சம் ஓய்வூதியம் வழங்கப்படும்.
- வங்காளம், பீகார், ஒரிஸாவில் ஆங்கிலேயர் வரி வசூல் செய்யும் உரிமையைப் பெற்றனர்.
- பக்ஸார் போரே ஆங்கிலேயரை ஒரு உயர் அதிகாரம் படைத்த நிறுவனமாக உயர்த்தியது.
- போரின் முடிவில் வங்காள கவர்னராக 'ராபர்ட் கிளைவ்' நியமிக்கப்பட்டார். (1757 - 1760)

தேடி வாருங்கள்! தேர்வாகிச் செல்லுங்கள்!!
தமிழகத்தின் தலைசிறந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம்
ஆகாஷ் IAS அகாடமி

# மைசூர் போர்கள் (கி.பி. 1767 – 1799)

- மைசூர் போர்கள் ஆங்கிலேயர்களுக்கும், ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் ஆகியோருக்கும் இடையே ஏற்பட்ட போர்களாகும்.
- ஹைதர் அலி மைசூர் இராணுவத்தின் சாதாரண அலுவலராக பணியைத் தொடங்கினார்.
- கி.பி. 1761ல் நஞ்சராஜாவை பதவிநீக்கம் செய்து தனது அதிகாரத்தை மைசூர் அரசில் நிலைநாட்டினார்.
- பின்னர் படிப்படியாக முன்னேறி மைசூர் பகுதியின் அரசனாக முடிசூடிக் கொண்டார்.
- ஹைதர் அலியின் வேகமான வளர்ச்சி ஹைதரபாத் நிஜாம், மராத்தியர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் ஆகியோரின் பொறாமையைத் தூண்டியது.
- எனவே கி.பி. 1766 ல் ஹைதர் அலிக்கு எதிராக ஆங்கிலேயர்கள், மராத்தியர்கள், ஹைதராபாத் நிஜாம்கள் ஆகியோர் இணைந்து ஒரு உடன்படிக்கையைச் செய்துக் கொண்டனர்.

## திப்பு சுல்தான்

- திப்பு சுல்தான் ஐதர் அலியின் மகன்
- 1753-ல் மைசூரில் பிறந்தார்
- சிறந்த நிர்வாகத்தினால் **மைசூர் புலி** என அழைக்கப்பட்டார்
- இவரின் அரியணையிலும், வீரர்களின் சீருடையிலும் **புலி** சின்னம் பொறிக்கப்பட்டது
- இவர் இறந்த பின் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் அடக்கம் செய்யப்பட்டார்



**திப்புசுல்தான்**

## முதலாம் மைசூர் போர் (1767–69)

- கி.பி. 1767 ல் ஸ்மித் என்ற ஆங்கிலேயப் படைத்தளபதி சென்னைக்கு அருகே **செங்கம்** எனுமிடத்தில் ஹைதர் அலியைத் தோற்கடித்தார்.
- அதேசமயம் ஹைதர் அலியின் மகன் திப்புசுல்தான் தன் படைகளுடன் சென்னையை முற்றுகையிட்டார்
- எனவே முதல் மைசூர் போர் கி.பி. 1769 ல் சென்னை உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது.
- இந்த உடன்படிக்கையின் படி கைப்பற்றப்பட்ட இடங்கள் பரஸ்பரம் மாற்றிக் கொள்ளப்பட்டது. மேலும் தேவையான நேரத்தில் இருவரும் படை உதவி அளிப்பதாக ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஆகாஷ் வ ர லா று

## 2–ம் மைசூர் போர் (1780 – 84)

- கி.பி. 1771-ல் மராத்தியர்கள் மைசூர் மீது போர் தொடுத்த போது ஆங்கிலேயர் உடன்படிக்கையின் படி உதவவில்லை.
- கி.பி. 1780 ல் ஹைதர் அலியின் பகுதியில் இருந்த பிரெஞ்சுக்கு சொந்தமான மாஹியை ஆங்கிலேயர்கள் தாக்கியபோது ஹைதர் அலி இரண்டாம் மைசூர் போரை அறிவித்தார்.
- 1781-ல் ஆங்கில தளபதி **'சர் அயர் கூட்'** என்பவர் ஹைதர் அலியை போர்டோ நோவா எனுமிடத்தில் தோற்கடித்தார்.
- பின் ஹைதர் அலி புற்று நோயால் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து அவரது மகன் திப்பு சுல்தான் பொறுப்பேற்றார்.
- 1784-ல் திப்பு சுல்தான் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து 2-ம் மைசூர் போரை முடித்தார்.
- கி.பி. 1784-ல் மங்களூர் உடன்படிக்கையின் மூலம் முடிவுக்கு வந்தது.
- மங்களூர் உடன்படிக்கை திப்புவிற்கும், மெட்ராஸ் கவர்னர் மெக்கட் டெனிக்கும் இடையே கையெப்பம் ஆனது.
- இந்த உடன்படிக்கையின் படி திப்பு சுல்தான் எதிர்காலத்தில் கர்நாடகப் பகுதிகளை உரிமைக் கோரக் கூடாது.

**மூன்றாம் மைசூர் போர் (1790 – 92)**

- கி.பி. 1787 ல் திப்புசுல்தான் பிரான்ஸ் மற்றும் துருக்கி நாட்டிடம் உதவி கேட்டு தூதுவர்களை அனுப்பினார்.
- 2-ம் மைசூர் போர் மங்களூர் உடன்படிக்கையின் படி 1784-ல் முடிவுக்கு வந்தபின் தக்காணத்தில் ஆட்சியை
- பலப்படுத்த திப்பு சுல்தானும் ஆங்கிலேயரும் போட்டியிட்டனர்.
- கி.பி. 1789 ல் திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களின் நட்பு நாடான திருவிதாங்கூரை கைப்பற்ற முயன்றார்.
- இதனால் கி.பி. 1790-ல் ஆங்கிலேயத் தளபதி காரன் வாலிஸ் மூன்றாம் மைசூர் போரை அறிவித்தார்.
- கி.பி. 1792-ல் திப்பு சுல்தான் தோற்கடிக்கப்பட்டார்.
- கி.பி. 1792-ல் ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை மூலம் போர் முடிந்தது
- இந்த உடன்படிக்கையின் படி 3 கோடி ரூபாய் இழப்பீடு தொகையாக வழங்கவேண்டும். அதுவரை திப்புவின் இரு புதல்வர்களையும் பிணைக் கைதிகளாக ஆங்கிலேயரிடம் ஒப்படைக்க வேண்டும்.



ஆகாஷ் வரலாறு

**நான்காவது மைசூர் போர் (கி.பி. 1799)**

**நான்காம் மைசூர் போர் (1799)**

- திப்பு சுல்தான் தான் இழந்த பகுதிகளை திரும்பப்பெற முயற்சித்ததால் நான்காம் மைசூர் போர் ஏற்பட்டது.
- கி.பி. 1799 ல் வெல்லஸ்லி பிரவுவின் துணைப்படைத் திட்டத்தை திப்புசுல்தான் ஏற்க மறுத்ததால், வெல்லஸ்லி பிரவு திப்புவின் மீது படையெடுத்தார்.
- இப்போரில் திப்புசுல்தான் தோற்கடிக்கப்பட்டு, ஸ்ரீரங்கப்பட்டினத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர்.
- கி.பி. 1799 ல் மே மாதம் 4ம் தேதி வெல்லஸ்லி பிரபுவால் திப்புசுல்தான் கொல்லப்பட்டார்.
- பின்னர் மைசூரின் மத்தியப் பகுதியில் வாடியார் மரபைச் சேர்ந்த கிருஷ்ணராஜாவுக்கு அளிக்கப்பட்டது.
- திப்புவின் குடும்பம் வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டது.

# மராத்தியப்போர்கள் (கி.பி 1775 – 1818)

## முதல் மராத்திய போர் (கி.பி. 1775 – கி.பி.1782) :

- மராத்தியரின் உள்நாட்டு அலுவல்களில் ஆங்கிலேயர் குறுக்கிட்டதன் விளைவாக ஆங்கில - மராத்தியர் போர்கள் ஏற்பட்டன.
- புகழ்பெற்ற மராத்திய முதலமைச்சர் நானாபட்னாவிச், நராராயணராவ் இறந்த பின் அவர் மகன் மாதவராவ் என்பவரை பீஷ்வாவாக பதவியில் அமர்த்தினார்.
- இதனை ஏற்க மறுத்த நாராயணராவின் சித்தப்பா ரகுநாதராவ் பம்பாய் ஆங்கில அரசின் உதவியை நாடினார்
- கி.பி. 1775 ல் இரகுநாத ராவ் ஆங்கிலேயர்களுடன் சூரத் உடன்படிக்கையைத் செய்து கொண்டார். ஆனால்
- தலைமை ஆளுநர் வாரன்ஹேஸ்டிங்ஸ் இதனை ஏற்கவில்லை.
- இரகுநாத ராவுக்கு எதிராக மராத்தியருடன் கி.பி. 1776 ஆம் ஆண்டு வான்ஹேஸ்டிங்ஸ்
- புரந்தர் உடன்படிக்கையை செய்து கொண்டார்.
- ஆனால் புரந்தர் உடன்படிக்கையை மும்பை அரசு ஏற்க மறுத்தது. பாசினை கைப்பற்றும்படி இயக்குநர் குழு தலைமை ஆளுநருக்கு ஆணையிட்டது. எனவே மராத்தியப்போர் தொடங்கியது.
- அவர் அனுப்பிய கேப்டன் பாப்மேன் மராத்தியரை வென்று குவாலியர் கோட்டையைக் கைப்பற்றினார்.
- இப்போர் கி.பி. 1782ல் **சால்பாய் உடன்படிக்கையின்** மூலம் முடிவுக்கு வந்தது.
- இந்த உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்கள் 20 ஆண்டுகாலம் அமைதி காத்தனர்.

## இரண்டாம் மராத்தியப் போர் (கி.பி 1802 – 1806)

- கி.பி. 1800ல் மராத்திய முதல் அமைச்சரான நானாபட்னாவிச் இறந்தார்.
- கி.பி. 1802ல் - பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் ஆங்கிலேயருடன் **பாசின்** உடன்படிக்கை செய்து கொண்டார்.
- இந்த உடன்படிக்கைக்கு கெய்க்வாட், ஹோல்கர் ஆகியோர் துணையாக இருந்தனர்.
- இந்த உடன்படிக்கையை சிந்தியாவும் போன்ஸ்லேயும் ஏற்க மறுத்தனர்.
- ஆங்கிலேயர்கள் நர்மதா நதிக்கரைப் படைகளை விலக்கிக் கொள்ளுமாறு போன்ஸ்லே மற்றும் சிந்தியாவிற்குகட்டளையிட்டனர். இதனை எதிர்த்ததால் இரண்டாம் மைசூர் போர் ஏற்பட்டது.
- சிந்தியா மற்றும் போன்ஸ்லே படைகள் தோற்கடிக்கப்பட்டன.
- எனினும் ஹோல்கர் ஆங்கிலேயர்களின் மேலாண்மையைத் தவிர்க்க ஆங்கிலேயர்களுடன் போரிட்டார்.
- ஆங்கிலேயர்களால் ஹோல்கரைக் கட்டுபடுத்த முடியாதலால் போரை முடிவுக்குக் கொண்டு வர கி.பி.1806ல் **ராய்க்கார்க் உடன்படிக்கை** செய்து கொண்டனர்.

ஆகாஷ் பொன்மொழி

எண்ணத்தின் இடைவிடாது வளர்ச்சியும், தொடர்ச்சியும் தான் நம்பிக்கை

– ஆகாஷ் IAS அகாடமி



ஆகாஷ்
வ
ர
லா
று

மராத்தியப் போர்கள் (கி.பி. 1775 - 1818)

**நினைவில் கொள்ள**

- முதல் மராத்தியப் போர் ⟶ (1775 - 82) ⟶ சால்பாய் உடன்படிக்கை
- 2 ம் மராத்தியப் போர் ⟶ (1802 - 06) ⟶ ராய்க்கார்க் உடன்படிக்கை
- 3 ம் மராத்தியப் போர் ⟶ (1817 - 18) ⟶ மராத்தியர்கள் வீழ்ச்சி

**மூன்றாம் மராத்தியப் போர் (கி.பி 1817 – 1818):**

- மராத்தியரின் 2 வது போரில் தோற்றுப்போன மராத்தியத் தலைவர்கள் ஆங்கிலேயரின்
- அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற முயன்றனர்.
- 1817 ல் பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் ஆங்கிலேயருக்கு எதிராக மராத்தியர்களின் கூட்டமைப்பு ஒன்றை
- உருவாக்க முயற்சி செய்தார்.
- மூன்றாம் மராத்தியப் போருக்கு முன் ஆங்கிலேயர் தங்கள் நிலையை வலுப்படுத்திக் கொண்டனர்.
  - நாக்பூர் உடன்படிக்கையின் மூலம் கெய்க்வாட் படைக்குறைப்பு செய்தார்.
  - குவாலியர் உடன்படிக்கை மூலம் சிந்தியா பிண்டாரிகளுக்கு எதிராக ஆங்கிலேயர்களுக்கு உதவ ஒப்பு கொண்டார்.
- ஹேஸ்டிங் பிரபு பிண்டாரிகளுக்கு எதிராக துவக்கிய நடவடிக்கைகளிலிருந்து மூனறாம் மராத்திய போர் துவங்கியது.
- மராத்தியப் படை, திறமை வாய்ந்த கம்பெனி படையால் தோற்கடிக்கப்பட்டது.
- மராத்திய அரசு கலைக்கப்பட்டது, பீஷ்வா பதவி நீக்கப்பட்டது மற்றும் அனைத்துப் பகுதிகளையும் ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர்.
- இதன் மூலம் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவின் மிக உயர்ந்த சக்தியாக உருவெடுத்தது.

# சீக்கியப் போர்கள் (கி.பி. 1845 – 1849)

- கி.பி. 1767 - லிருந்து சீக்கியர்கள் முக்கிய இடம் பெறுகின்றனர்.
- **சீக்கிய குருக்கள்:-**

| வ.எண் | சீக்கிய குருக்கள் | ஆண்டு |
|---|---|---|
| 1 | குருநானக் | 1469 - 1538 |
| 2 | குரு அங்கத் | 1538 - 1552 |
| 3 | குரு அமர்தாஸ் | 1552 - 1574 |
| 4 | குரு ராம்தாஸ் | 1574 - 1581 |
| 5 | குரு அர்ஜீன் தேவ் | 1581 - 1606 |
| 6 | குரு ஹேர்கோவிந்த் | 1606 - 1645 |
| 7 | குரு ஹரிராய் | 1645 -1661 |
| 8 | குரு ஹர்கிஷன் | 1661 - 1664 |
| 9 | குரு தேக் பகதூர் | 1664 - 1675 |
| 10 | குரு கோவிந்தசிங் | 1675 - 1708 |



**ரஞ்சித்சிங் :**

- கி.பி. 1761ல் ஆப்கானிய அரசர்களிடமிருந்து பஞ்சாபைக் கைப்பற்றி 12 மிசில்களாக (பகுதிகளாக) பிரித்து சீக்கியர்கள் கூட்டாட்சியை ஏற்படுத்தினர்.
- ஒவ்வொரு மசில்களுக்கும் ஒரு மசில்தார் தலைவராக இருந்தார். நாளடைவில் மிசில்களை ஒன்றுபடுத்தி ஒரு தேசிய அரசை ஏற்படுத்தியவர் **ரஞ்சித் சிங்** ஆவார். இவர் **பஞ்சாபின் சிங்கம்** என்றழைக்கப்படுகிறார்.
- ரஞ்சித் சிங்கிற்கு **ராஜா** என்ற பட்டத்தை ஆப்கானிய அரசர் அமீர்சாமன் ஷா என்பவர் அளித்தார்.
- கி.பி. 1802ல் அமிர்தசரஸ் கோட்டையைக் கைப்பற்றினார்.
- கி.பி. 1809ல் ஆங்கிலேய தூதரான சார்லஸ் மெட்காஃப் என்பவருடன் அமிர்தசரஸ் உடன்படிக்கை செய்து கொண்டார்.




**ரஞ்சித் சிங்**

- இந்த உடன்படிக்கையின் படி சட்லஜ் நதி ஆங்கிலேயர்களுக்கும், சீக்கியர்களுக்கும் இடையேயான எல்லையாக வரையறுக்கப்பட்டது.
- கி.பி. 1831ல் ரஞ்சித் சிங், வில்லியம் பெண்டிங் பிரபுவின் தர்பாரில் கலந்து கொண்டவர்.
- கி.பி. 1839ல் ரஞ்சித் சிங் மரணமடைந்தார்.

| ரஞ்சித் சிங்கின் வெற்றிகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| கி.பி. 1799 | - | லாகூர் | கி.பி. 1819 | - | காஷ்மீர் |
| கி.பி. 1802 | - | அமிர்தசரஸ் | கி.பி. 1820 | - | தேரா காஜிகான், |
| கி.பி. 1806 | - | லூதியானா | | - | இஸ்மாயில்கான் |
| கி.பி. 1811 | - | காங்ரா | கி.பி. 1834 | - | பெஷாவர் |
| கி.பி. 1813 | - | அட்லாக் | கி.பி. 1836 | - | லடாக் |
| கி.பி. 1818 | - | முல்தான் | கி.பி. 1837 | - | ஜம்ருத் |

## சீக்கிய குருக்கள்



குரு நானக்



குரு ராம்தாஸ்




குரு கோபிந்த் சிங்

### முதல் ஆங்கில – சீக்கியப்போர் (1845 – 46) :

- ரஞ்சித் சிங் காலத்துக்குப் பின்னர் சீக்கியருடன் ஆங்கிலேயர் உறவு முறிந்தது.
- நான்கு போர்களில் சீக்கியர்கள் தொடர்ச்சியாகத் தோற்கடிக்கப்பட்டனர்.
- முட்கல், பெரோஸ்பூர், அலிவால் மற்றும் சோபரான் ஆகியவை அவ்விடங்களாகும்.
- கி.பி. 1845ல் முட்கல்லிலும், பெரோஸ்பூரிலும் சீக்கியர்கள் தோல்வியுற்றனர்.
- பின்னர் கி.பி. 1846ல் அலிவாலில் நடைபெற்ற போரில் வெற்றி பெற்றனர்.
- இப்போர் **துப்பாக்கிப் போர்** என்று அழைக்கப்பட்டது.
- கி.பி. 1846ல் **லாகூர் உடன்படிக்கையின்** படி இப்போர் முடிவுக்கு வந்தது.

ஆகாஷ்
வ
ர
லா
று

### இரண்டாம் ஆங்கிலேய – சீக்கியர் போர் (1848 – 49) :

- ராம் நகர். சில்லியன்வாலா (ம) குஜராத் ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்ற போர்களில் தொடர்ச்சியாக சீக்கியர்கள் தோற்றனர்.
- முல்தானின் முல்ராஜ் என்பவருக்கும் டல்ஹெளசிக்கம் இடையே போர் நடைபெற்றது.
- கி.பி. 1849 - பஞ்சாப் ஆங்கிலேயருடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

# பிரபுக்கள் (கி.பி. 1762 – கி.பி. 1857)


## இராபர்ட் கிளைவ் (1765 – 1772)



ராபர்ட் கிளைவ்

- கர்நாடகப் போரிலும், பிளாசிப் போரிலும் முக்கியத்துவம் பெற்றதால் ஆங்கிலேய ஆட்சிப் பகுதியின் தலைமை ஆளுநராக கி.பி. 1765ல் நியமிக்கப்பட்டார்.
- இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் **இரட்டை ஆட்சி நிர்வாக முறை**யை அறிமுகப்படுத்தினார்.
- இரட்டை ஆட்சிமுறை நிர்வாகத்தின் படி நாட்டின் அரசர் நவாப் ஆவார்.
- அவர் நிர்வாகத்திற்கு பொறுப்புடையவர். ஆனால் உண்மையான அதிகாரம் ஆங்கிலேயர்களிடம் இருந்தது.
- கி.பி.1772 ல் இரட்டை ஆட்சிமுறை தோல்வியடைந்ததால் ரத்து செய்யப்பட்டது.
- கிழக்கிந்திய கம்பெனி ஊழியர்கள் மற்றும் அவர்களின் விதவைகளுக்கு உதவ **கிளைவ் நிதி** ஒன்றை ஏற்படுத்தினார்.
- இராபர்ட் கிளைவின் அயல்நாட்டுக் கொள்கை **சுற்றரண் கொள்கை (Ring Fence Policy)** எனப்படும்.

## வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு (1772–85)



வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

- கி.பி. 1772 ல் வங்காள ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
- இவர் காலத்தில் வங்காளத்தில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தால் நிதி நெருக்கடி ஏற்பட்டது.
- வாரன் ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்து அரசின் உதவியை நாடினார்.
- 1773 ல் வங்காளத்திற்கு உதவ பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் **ஒழுங்குமுறைச் சட்டம்** இயற்றப்பட்டது.
- இதுவே இந்திய அரசியல் அமைப்பின் முதல் படியாகும்.

### ஒழுங்கு முறைச் சட்டம் : [1773]

- இதன்படி வங்காளத்தின் முதல் தலைமை ஆளுநராக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமிக்கப்பட்டார்.
- நிர்வாகத்தில் உதவ 4 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாக குழு அமைக்கப்பட்டது.
- பம்பாய், சென்னை ஆளுநர்கள் வங்காள ஆளுநர் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும்.
- கி.பி.1774 ல் முதன் முறையாக கல்கத்தாவில் உச்ச நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- இதன் முதல் தலைமை நீதிபதியாக **சர் எலிஜா இம்பே** நியமிக்கப்பட்டார்.
- ஒழுங்கு முறைச் சட்டத்தில் பல குறைபாடுகளும் இருந்தன. கவர்னர் ஜென்ரலுக்கும், நிர்வாக குழு உறுப்பினர்களுக்கும் இடையே அடிக்கடி பூசல் ஏற்பட்டது.

ஆகாஷ்

வ
ர
லா
று

### பிட் இந்தியச் சட்டம் : [1784]

- கி.பி. 1784ல் ஒழுங்கு முறைச் சட்டத்தின் குறைகளைப் போக்க பிட் இந்தியச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
- இதனை இங்கிலாந்து பிரதமர் இளைய பிட் கொண்டு வந்தார்.
- இதன்படி நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 3 ஆக குறைக்கப்பட்டது.
- ஆளுநர்கள் இங்கிலாந்து அரசின் அனுமதியுடன் நியமிக்கப்பட்டனர்.
- கவர்னர் ஜென்ரல் மற்றும மாகாண ஆளுநர்களை திரும்ப அழைக்கும் அதிகாரம் இங்கிலாந்து அரசிக்கு அளிக்கப்பட்டது.
- 6 பேர் கொண்ட கட்டுப்பாட்டுக் குழு அமைக்கப்பட்டது.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

ஆகாஷ்
வ ர லா று

**வாரன் ஹேஸ்டிங்ஸ் சீர்திருத்தங்கள்:**

- மாகாணங்களில் **இரட்டை ஆட்சி முறை ஒழிப்பு.**
- அரசின் கருவூலம் மூர்ஷிதாபாத்தில் இருந்து கல்கத்தாவிற்கு மாற்றம் செய்தார்.
- கல்கத்தாவில் மேலும் இரண்டு நீதிமன்றங்களை அமைத்தார்.
  1. சாதர் திவானி அதாலத் (சிவில் நீதிமன்றம்)
  2. சாதர் நிஸாமி அதாலத் (கிரிமினல் நீதிமன்றம்)
- சுங்க வரி 25% தள்ளுபடி செய்தார்.
- கல்கத்தாவில் வருவாய் துறை கழகம் அமைக்கப்பட்டது.
- மாவட்டந்தோறும் ஆங்கில கலெக்டர் நியமனம் செய்தார்.
- கி.பி. 1781ல் இஸ்லாமிய கல்வி வளர்ச்சிக்காக வங்காளத்தில் **'மதரஸா'** கல்வி நிறுவனத்தை ஏற்படுத்தினார்.

**ரோஹில்லா போர்: [1774]**

- ரோகில்லர்கள் என்பவர்கள் **ஆப்கானியர்கள்** ஆவர்.
- மராத்திய படையெடுப்பால் ரோகில்லர்கள் அயோத்தி நவாப் ஷீஜா-உத்-தௌலா உதவியை நாடினார்.
- ரோகில்லர்களை பாதுகாத்தல் அயோத்தி நவாப்புக்கு 40 லட்சம் ரூபாய் தருவதாக கூறி ரோகில்லர்கள் ஏமாற்றினர்
- வாரன் ஹேஸ்டிங்ஸ் உதவியுடன் அயோத்தி நவாப் ரோகில்லர்களை வென்று ரோகில்கண்டை கைப்பற்றினார்.

## காரன்வாலிஸ் பிரபு (1786–93)



காரன்வாலிஸ் பிரபு

- காரன்வாலிஸ் **தலையிடாக் கொள்கையை** பின்பற்றினார்.
- (இந்திய சுதேச அரசு விஷயங்களில் ஆங்கிலேயர் தலையிடாமை)
- கி.பி. 1790 ல் மூன்றாம் மைசூர் போர் நடைபெற்ற போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர்.
- கி.பி. 1791-ல் கொல்கத்தாவில் நிலையான காவல் துறை அமைப்பை ஏற்படுத்தினார்
- ஒவ்வொரு மாவட்டங்களும் தானா எனப்படும் காவல்துறை வட்டங்களாக பிரிக்கப்பட்டு **தரோகோ** என்னும் அதிகாரி மூலம் நிர்வகிக்கப்பட்டது.
- கி.பி. 1793 ல் நிரந்தர நிலவரித் திட்டத்தை அறிமுகம் செய்தார். இத்திட்டத்தின் படி ஜமீன்தார்கள் பத்து ஆண்டுகளுக்கு நிலத்தின் சொந்தக்காரர்கள் ஆகினர்.
- கி.பி. 1793-ல் **காரன் வாலிஸ் சட்டத் தொகுப்பு** சர் ஜார்ஜ் பார்லோ என்பவரால் வெளியிடப்பட்டது.
- இந்திய குடிமைப் பணிகளை இவரே வரையறை செய்தார்.
- மாகாண நீதிமன்றங்கள் (உச்சநீதிமன்றம்) 4 இடங்களில் அமைக்கப்பட்டன.
  1. டாக்கா 2. மூர் ஷித்பாத் 3. கொல்கத்தா 4. பாட்னா
- கி.பி. 1787-ல் வருவாய் துறை சீர்திருத்தங்களைச் செய்தார்.
- சிவில் சர்வீசில் சீர்திருத்தங்களைப் புகுத்தியதால் இந்திய **ஆட்சிப் பணித்துறையின் தந்தை** எனப்பட்டார்.

## சர் ஜான் ஷோர் பிரபு (1793–1798)

- கி.பி. 1793-98 ஆண்டுகளில் சர் ஜான் ஷோர் என்பவர் கவர்னராக இருந்தார்.
- சர்ஜான் ஷோர் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினார்.
- நிரந்தர நிலவரித் திட்டத்தை நிறுவுவதில் வருவாய் போர்டின் தலைவராக இருந்தவர்.

## வெல்லெஸ்லி பிரபு (1796–1805)



வெல்லெஸ்ஸி பிரபு

- கி.பி. 1796-ல் வெல்லெஸ்லி கவர்னராக பொறுப்பேற்றார்.
- வெல்லெஸ்லி பிரபு **துணைப்படைத் திட்டத்தை** அறிமுகம் செய்தார்.
- **இதன்படி:** சுதேச அரசுகள் தங்கள் பாதுகாப்பிற்கு ஆங்கில படையை துணையாக வைத்துக் கொள்ளலாம்.
- அதற்கு பதிலாக நிலமாகவோ / பணமாகவோ ஆங்கிலேயருக்கு தர வேண்டும்.
- ஆங்கிலேயர் அனுமதி பெற்றே போர் புரிய வேண்டும்.
- சுதேசி அரசுகள் ஆங்கில கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.
- துணைப்படைத்திட்டத்தை ஏற்ற முதல் சுதேச அரசு **ஹைதராபாத் நிஜாம்** ஆவார்.
- ஹைதராபாத் நிஜாம் பெல்லாரி, கர்னூல், கடப்பா, அனந்தபூர் போன்ற பகுதிகளை ஆங்கிலேயரிடம் கொடுத்தார்
- அயோத்தி நவாப் கட்டாயப்படுத்தி துணைப்படைத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள செய்யப்பட்டார்.
- இதன்படி அவர் ரோகில் கண்ட், கோரக்பூர், கங்கை - யமுனை இடைப்பட்ட நிலப்பகுதியை அளித்தார்.
- மராத்திய மன்னர் 2-ம் பாஜிராவ் துணைப்படைத் திட்டத்தை ஏற்றார்.
- **மைசூர் புலி** திப்பு சுல்தான் துணைப்படைத்திட்டத்தை ஏற்க மறுத்து 1799-ல் ஆங்கிலேயருடன் போரிட்டார்.
- மாளவள்ளி எனுமிடத்தில் நடைபெற்ற போரின் போது திப்பு சுல்தான் கொல்லப்பட்டார்.
- 1799 போரே நான்காம் மைசூர் போர் என அழைக்கப்படுகிறது.
- இந்து வம்சாவளி மன்னர் கிருஷ்ணாவிடம் மைசூர் ஒப்படைக்கப்பட்டது.
- கி.பி. 1800ல் கிழக்கிந்திய நிறுவனப் பணியாளர்களுக்கு பயிற்சியளிக்க கல்கத்தாவில் கல்லூரியை நிறுவினார்.
- கி.பி. 1803 ல் இரண்டாவது மராத்தியப் போரையும், பாசின் உடன்படிக்கையையும் மேற்கொண்டவர்.

ஆகாஷ் வ ர லா று

## சர் ஜார்ஜ் பார்லோ (1805 – 1807)

- கி.பி. 1805 ல் கவர்னர் ஜெனரலாக பதவியேற்றார்.
- ஜார்ஜ் பார்லோ தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினார்.
- இராணுவச் செலவுகளைக் குறைத்து கம்பெனிக்கு உபரி வருவாய் ஏற்பட வழிவகுத்தார்.
- இவரது ஆட்சிக் காலத்தில் தான் தமிழகத்தில் வேலூர் கலகம் ஏற்பட்டது.

## முதலாம் மிண்டோ பிரபு (1807 – 13)

- கி.பி. 1807 ல் பதவியேற்ற முதலாம் மிண்டோ பிரபு மெட்ராஸ் கலகத்தை வெற்றிகரமாக அடக்கினார்.
- தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினார்.
- கி.பி. 1809 ல் ரஞ்சித்சிங்குடன் அமிர்தசரஸ் உடன்படிக்கை ஏற்பட சார்லஸ் மெட்காஃப் என்பவரை தூதுவராக அனுப்பி வைத்தார்.




மிண்டோ பிரபு →

← ஜார்ஜ் பார்லோ



## மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் பிரபு (1813 – 23)



மார்குவிஸ் பிரபு

- கி.பி. 1813-ல் மார்குவிஸ் பட்டயச் சட்டத்தினை கொண்டுவந்தவர்.
- இதன்படி ஆங்கில வணிக ஒப்பந்தம் மேலும் 20 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டது
- இந்தியர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.
- ஆங்கிலேயர்கள் கிறிஸ்துவ மதத்தை பரப்ப தங்கள் மத போதகர்களுக்கு அனுமதி அளித்தார்.

### கூர்க்கர்கள் போர் (1814 - 16)

- கூர்க்கர்கள் நேபாள நாட்டினர் ஆவர்
- இவர்களின் தலைவர் அமர்சிங் தலைமையில் ஆங்கிலேயரை எதிர்த்தனர்
- கி.பி. 1816-ம் ஆண்டு சிகௌலி உடன்படிக்கையின் படி ஆங்கில - கூர்க்கர் போர் முடிவுற்

### பிண்டாரிகளுடன் போர்

- மத்திய இந்தியாவில் வாழ்ந்த கொள்ளைக் கூட்டத்தினரே பிண்டாரிகள் எனப்பட்டனர்
- இவர்களின் தலைவர்கள் அமிர்கான், கரிம்கான், சேட்டு மற்றும் வாசில் முகமது
- மார்குவிஸ் ஒரு பெரும் படையுடன் சென்று பிண்டாரிகளை ஒழித்தார்



### சீர்திருத்தங்கள்:

- கி.பி. 1817-ல் இந்தியர்களுக்காக கல்கத்தாவில் கல்லூரி நிறுவினார்
- கி.பி. 1822-ல் வங்காள குத்தகைச் சட்டத்தை கொண்டு வந்தார்
- தாய் மொழி பத்திரிக்கை தடைச் சட்டத்தை நீக்கி **சமாச்சார்** என்ற பத்திரிக்கை வெளிவர உதவினார்
- சென்னையில் **ரயத்துவாரி** முறையை அறிமுகம் செய்தார். ரயத்துவாரி முறையால் நிலவரியை விவசாயிகள் நேரடியாக அரசிடம் செலுத்த முடிந்தது.
- பால்மர் & கம்பெனி என்ற நிறுவனத்துடன் ஹேஸ்டிங்ஸ் தொடர்பு வைத்தார் என்று குற்றம் சாட்டப்பட்டதால் கி.பி. 1823ல் தனது பதவியை இராஜினாமா செய்தார்.
- இவருக்கு பின்னர் ஜான் ஆடம்ஸ் பிரபு (கி.பி. 1823), ஆம்ஹர்ஸ்ட் பிரபு (கி.பி.1823 - 28) ஆகியோர் கவர்னர் ஜெனரலாக பதவி வகித்தனர்.

## வில்லியம் பெண்டிங் பிரபு (1828 – 1835)



வில்லியம் பெண்டிங்

- கி.பி.1828-ல் வில்லியம் பெண்டிங் பிரபு பதவியேற்று பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்த
- சதி என்னும் பழக்கத்தை ராஜாராம் மோகன் ராய் உதவியுடன் 1829-ல் ஒழிக்கப்பட்டது.
- பெண் சிசுக்கொலையை (ராஜஸ்தான், கத்தியவார்) ஒழித்தார்.
- நரபலி ஒழிப்பு (ஒரிஸா மலைவாழ் மக்கள்) செய்தார்.
- **தக்கர்கள்** (சுருக்கு கயிற்றால் கொள்பவர்கள்) எனும் கொள்ளைக் கூட்டத்தினர் மத்திய இந்தியாவில் வாழ்ந்தனர். அவர்களை மேஜர் ஸ்லீமேன் (கி.பி.1829) தலைமையில் ஒழித்தார்.
- இதனால் ஸ்லீமனுக்கு தக்கி ஸ்லீமன் என்ற பெயர் வழங்கப்பட்டது.
- கி.பி. 1833ல் இரண்டாம் பட்டயச் சட்டம் இவர் காலத்தில் இயற்றப்பட்டது.
- கி.பி. 1833ல் சாசனச்சட்டம் இயற்றப்பட்டது.
- கி.பி. 1833ம் ஆண்டு மகல்வாரி முறையை அறிமுகம் செய்தார். மகல்வாரி முறை என்பது கிராமத் தலைவர்கள் மூலம் அரசுக்கு வரி செலுத்துதல் ஆகும்.
- கி.பி. 1834ம் ஆண்டு இவரது காலத்தில் தான் ஆக்ரா மாநிலம் உருவாக்கப்பட்டது.
- கி.பி. 1835ல் மார்ச் 17ம் நாள் ஆங்கிலம், இந்தியாவின் ஆட்சி மற்றும் அலுவலக மொழியாக்கப்பட்டது.
- அபினி வியாபாரத்தை முறைப்படுத்தி வருமானத்தை பெருக்கினார்.
- இந்தியர்களை உதவி மாஜிஸ்திரேட்டுகளாகவும், கீழ்நிலை நீதிபதிகளாகவும் நியமித்தார்.
- மேல் முறையீட்டு (மாநில அளவில்) நீதிமனறங்களை கலைத்து ஆட்சியர் / நீதிபதி பதவியை ஒன்றாக்கினார்.

## ஆக்லண்டு பிரபு (1836 – 1842)

- வில்லியம் பெண்டிங் பிரபுவிற்குப் பிறகு சார்லஸ் மெட்காஃப் கி.பி. 1835 முதல் கி.பி. 1836 வரை பதவி வகித்தார்.
- இவருக்குப் பிறகு கி.பி. 1836ல் ஆக்லண்டு பிரபு நியமிக்கப்பட்டார்.
- இவரது காலத்தில் தான் முதல் ஆப்கானியப் போர் நடைபெற்றது.




## எல்லன்பரோ பிரபு (1842 – 1844)

- கி.பி. 1843ல் எல்லன்பரோ சிந்து பகுதியை ஆங்கிலேயப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார்.
- அடிமை முறையை ஒழித்தார். லாட்டரி சீட்டு முறையை தடை செய்தார்.

## ஹார்டிஞ்ச் பிரபு (1844 – 1848)

- கி.பி. 1844ல் ஹார்டிஞ்ச் பிரபு பதவி வகித்த காலத்தில் முதல் சீக்கிய போர் நடைபெற்றது.
- ஒரிசாவில் கோண்ட் இன மக்களிடையே நிலவிய மனித உயிர்களைப் பலியிடும் நரபலி வழக்கத்தையும் ஹார்டிஞ்ச் பிரபு தடை செய்தார்.
- தாஜ்மஹாலை நல்ல நிலையில் பராமரிக்க ஏற்பாடுகள் செய்தார்.

## டல்ஹௌசி பிரபு (1848 – 56)



டல்ஹௌசி பிரபு

- டல்ஹௌசி பிரபு ஆங்கில ஆதிக்கத்தை விரிவு படுத்த மூன்று முக்கிய கொள்கைகளைக்
  1. வாரிசு இழப்புக் கொள்கை (அ) நாடு இழக்கும் கொள்கை
  2. போர்கள் மூலம் இணைத்தல்
  3. நல்லாட்சியற்ற பகுதிகளை இணைத்தல்

### 1. வாரிசு இழப்புக் கொள்கை

- டல்ஹௌசி பிரபு கொண்டுவந்த முக்கிய கொள்கை வாரிசு இழப்புக் கொள்கையாகும்
- இதன்படி வாரிசு இன்றி இறக்கும் அரசுகளின் மாநிலங்கள் ஆங்கில அரசுடன் இணைக்கப்பட்டது.
- வாரிசு இல்லாத அரசர்கள் தத்து எடுக்கும் குழந்தைகளை சட்டப்பூர்வ வாரிசாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று டல்ஹௌவுசி பிரபு அறிவித்தார்.
- சதாரா, ஜெய்ப்பூர், சாம்பல்பூர், உதய்பூர். ஜான்சி மற்றும் நாகபுரி போன்ற நகரங்கள் இக்கொள்கையின் மூலம் இணைக்கப்பட்டது

### 2. போர்கள் மூலம் இணைத்தல்

#### ஆங்கிலேய – சீக்கிய போர்கள் (1848–49)

- ஆங்கிலேயர்கள் மீது 1848-ல் சீக்கிய அமைப்பின் தலைவர் மூல்ராஜ் போர் தொடுத்தார். 1849-ல் பஞ்சாபை வென்று ஆங்கில அரசுடன் இணைத்தார்

#### இரண்டாம் பர்மியப் போர் (1858)


- முதல் பர்மியப் போருக்கு பின்னர் ஆங்கிலேயர் பர்மாவிற்கு சென்று வணிகம் செய்தனர். இதனை அவர்கள் விரும்பவில்லை. எனவே டல்கௌசி பர்மா மீது போரிட்டு 1852-ல் பெரும்பகுதியை ஆங்கிலேய அரசுடன் இணைத்தார்

### 3. நல்லாட்சியற்ற பகுதிகளை இணைத்தல்

- 1856-ம் ஆண்டு அயோத்தி நவாப் வாஷித் அலிஷா நல்லாட்சி செய்யவில்லை என்று கூறி அவரை பதவிவிலக வைத்து அயோத்தியை இணைத்துக் கொண்டார்

### நிர்வாகம்

- இவரது ஆட்சியின் போது சிம்லா கோடை கால தலை நகரமாகவும், கல்கத்தா குளிர்கால தலைநகராகவும் விளங்கியது





**இருப்புபாதை அறிமுகம்**

- இருப்புப்பாதை இந்தியாவில் இவரே அறிமுகம் செய்தார்
- 1853 மும்பை - தானே (முதல்)
- 1854 கொல்கத்தா - ராணிகஞ்ச் (2-ம்)
- 1856 சென்னை - இரக்கோணம் (3-ம்)
- இவரே **இருப்புப்பதை திட்டத்தின் தந்தை** எனப்படுகிறார்

**தபால் மற்றும் தந்தி**

- இந்தியாவில் தபால் துறையை இவரே அறிமுகப்படுத்தினார்
- அரையனா (3 பைசா) தபால் தலையை வெளியிட்டார்

**சமூகசீர்திருத்தம்**

- 1856 விதவை மறுமணச்சட்டம் இயற்றினார்

**பொதுப்பணித்துறை**

- கங்கை கால்வாய் திட்டம் இவரே செய்தார்
- பெஷாயர் - கல்கத்தா இரயில் பாதை அமைத்தார்
- சாலைகள், பாலங்கள், கால்வாய்கள் கட்டினார்

**கல்விச் சீர்திருத்தம்**

- 1854 சார்லஸ் வுட் கல்வி அறிக்கை வெளியிட்டார்
- சென்னை, மும்பை, கல்கத்தா பல்கலைக்கடிகங்களை அமைத்தார்

**இராணுவ சீர்திருத்தம்**

- கூர்க்கர்களை அதிகம் படையில் சேர்த்தார்
- இராணுவ தலைமையிடத்தை கல்கத்தாவிலிருந்து சிம்லாவிற்க மாற்றினார்
- பீரங்கி படையை கல்கத்தாவில் இருந்து மீரட்டிற்கு மாற்றினார்

**மதிப்பீடு**

- இந்திய கவர்னர் ஜெனரல்களில் மிகவும் இளமையானவர்
- **நவீன இந்தியாவை உருவாக்கியவர்** என போற்றப்படுகிறார்

# கி.பி. 1857 ம் ஆண்டுக்கு முன் ஆங்கிலேயர் ஆட்சி முறை

- **கி.பி. 1740 - 1765 - சம உரிமை கோரிய காலம்**
- **கி.பி. 1765 - 1813 - தலையிடாக் கொள்கைக் காலம்**
- **கி.பி. 1813 - 1857 - தலைமையேற்புக் காலம்**

**<u>சமஉரிமை கோரிய காலம் :-</u>**

- முகலாயர்களிடம் வணிகம் செய்ய உரிமை கோரி வந்த கிழக்கிந்தியக் கம்பெனி வியாபார நிறுவனம், பிரெஞ்சுக்காரர்கள் அரசாங்கத்தை நிறுவ வேண்டும் என்ற எண்ணத்தடன் செயல்பட்டதால் ஆங்கிலேயரும் நாடு பிடிக்கும் எண்ணம் கொண்டனர்.
- ஆங்கிலேயரின் முதல் வெற்றி ஆர்க்காட்டு நவாப்பைத் தோற்கடித்தது.
- அயர்கூட் தலைமையிலான வந்தவாசி வெற்றி.
- ராபர்ட் கிளைவை கல்கத்தாவுக்கு அனுப்பியது.
- பிளாசிப்போர் வெற்றி
- வங்காளம், பீகார், ஒரிஸா போன்ற மாகாணங்களையும் ஆங்கிலேயர் ஆதிகத்தின் கீழ்கொண்டு வந்தது.
- கி.பி. 1764 - பக்ஸார் போர்
- இந்திய சமஸ்தானங்களுக்கு இணையாக கிழக்கிந்தியக் கம்பெனியை உருவாக்கியது.

**<u>தலையிடாக் கொள்கை காலம்(1765 – 1813):-</u>**

- மராத்தியர்கள் மற்றும் மைசூர் போர்களின் வெற்றி, ஆங்கிலேயரின் அந்தஸ்த்தை உயர்த்தியது.
- வெல்லெஸ்லிபிரபு, கர்சன்பிரபுவின் கொள்கையால் ஆங்கிலேயரின் நிலப்பரப்பு விரிவடைந்தது.
- வெற்றியை நிலைநாட்டிக் கொள்வதற்கு ஆங்கிலேயர்கள் அண்டை நாடுகளுடன் நட்பு கொண்டிருந்தனர்.
- நடுநிலைக் கொள்கை மற்றும் தலையிடாக் கொள்கை பின்பற்றப்பட்டது.

**<u>தலைமையேற்புக் காலம் (1813 – 1857) :</u>**

- அதிகாரத்துவம் மேலோங்கி பிரிட்டிஷ் அரசு அதிகாரம் முதன்மையானதாகவும், இந்திய அரசாங்கம் இரண்டாவதாகவும் கொண்டு திட்டமிடப்பட்டன.
- பிரிட்டிஷ் அரசின் துணையாக பிற இந்திய சமஸ்தானங்கள் விளங்கின.
- இந்திய அரசர்கள் பிரிட்டிஷாரின் விருப்பப்படி நடந்து கொண்டனர். அதுவே நன்மை என்றும் கருதினர்.
- **பிரிட்டிஷ் பிரதிநிதிகள் இருந்த பகுதிகள் :**
    1. மைசூர்
    2. திருவிதாங்கூர்
    3. பரோடா
    4. ஹைதராபாத்
    5. கொச்சின்

**<u>பெண்டிங் பிரபு காலத்தைய இணைப்பு:-</u>**

- மைசூர் (1831) தவறான ஆட்சி என்று சொல்லி இணைக்கப்பட்டது.
- கொச்சார் (1832) தவறான நிர்வாகம்
- கூர்க் (1834) அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப இணைக்கப்பட்டது.
- ஜெயன்தியா (1835) 1835 - ல் கட்டாயமாக்கப்பட்டு இணைக்கப்பட்டது.

ஆகாஷ்
வ
ர
லா
று


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

ஆகாஷ்
வ
ர
லா
று

**டல்ஹௌசி கால இணைப்பு:**

- சதாரா (1848) - அப்பாசாகிப் மறைவு
- ஜெயித்பூர் (1850) - Bundul kand (அரசின் மரணத்தின் காரணமாக),
- சம்பல்பூர் (1850) (அரசின் மரணத்தின் காரணமாக)
- பகத் (1850) (அரசின் மரணத்தின் காரணமாக)
- சிங்போ (1850) (அரசின் மரணத்தின் காரணமாக)
- நாக்பூர் (1854) (அரசின் மரணத்தின் காரணமாக)
- பீரார் (1953) (அரசின் மரணத்தின் காரணமாக)
- ஜான்சி - (அரசின் மரணத்தின் காரணமாக)

**தக்கர்களை ஒடுக்குதல்:**

- தக்கர்கள் என்னும் வழிப்பறி கொள்ளையர்களை ஒடுக்கியது - **வில்லியம் பெண்டிங் பிரபு.**
- கி.பி. 1830 ஆம் ஆண்டு தக்கர்களுக்கு எதிரான நடவடிக்கையை **கர்னல் சீலிமேன்** என்பவர் தொடங்கினார்.
- ஐந்து ஆண்டுக் காலத்தில் கிட்டதட்ட 2000 பேர் பிடிபட்டனர். அவர்களில் பெரும் பாலானோர் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
- தக்கர்களை ஒடுக்கும் பணியினை திறமையுடன் செய்த காரணத்தால், சர் வில்லியம் **சீலிமேன் தக்கீ சிலிமேன்** என்ற அழைக்கப்பட்டார்.

**பெண் சிசுக்கொலை:**

- வங்காளத்தில் சவுகர் தீவில் நடைபெற்ற குழந்தை பலி சடங்கை ஒழிப்பதற்கு பெண்டிங் தீவிர நடவடிக்கையெடுத்தார். பெண் சிசுக்கொலையையும் தடை செய்தார் அதனை தண்டனைக்குரிய குற்றமாக அறிவித்தார்.

**ஆங்கிலக் கல்விமுறையை அறிமுகப்படுத்துதல்:**

- வில்லியம் பென்டிங்கின் ஆட்சியில் ஆங்கிலக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- கல்வி வளர்ச்சி குறித்த பரிந்துரைகள் செய்வதற்கு மெக்காலே பிரபு தலைமையில் அவர் குழுவை நியமித்தார்.
- கி.பி. 1835 ஆம் ஆண்டு அரசின் தீர்மானம் ஆங்கிலத்தை இலக்கிய மொழியாக அறிவித்தது.

**பஞ்சாப் இணைப்பு :**

- 1849 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது ஆங்கிலேய சீக்கியப்போரின் முடிவில் டல்ஹவுசி பஞ்சாபை இணைத்துக் கொண்டார்.
- வருவாய் மற்றும் நீதித்துறைகள் ஒன்றிணைக்கப்பட்டன. 1859 ல் சர்ஜான் லாரன்ஸ் பஞ்சாபின் துணை ஆளுநராகப் பதவியேற்றார்.

**ஆகாஷ் பொன்மொழி**

**சிந்திக்காமல் படிப்பது, ஜீரணிக்காமல் உண்பதைப் போன்றதாகும்.**

**– ஆகாஷ் IAS அகாடமி**

# 1857 ம் ஆண்டுக்கு முன் ஏற்பட்ட மக்கள் போராட்ட இயக்கங்கள்

## இந்து இஸ்லாமிய மத இயக்கங்கள்

### சன்யாசி போராட்டங்கள் (1770 - 1820) :

- வங்காளத்திலுள்ள ஹிந்து, நாகா மற்றும் கிரி சன்னியாசிகள் ஆயுதம் ஏந்தி ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடினார்கள்.
- கி.பி. 1770 - வந்த கடும் பஞ்சம் புரட்சி வாதிகளையும் பாதித்தது. கலகம் எங்கும் பரவியது.
- கி.பி. 1772 - ல் கேப்டன் தாமஸை புரட்சிவாதிகள் கொன்றனர்.
- ரங்கபுரத்திலிருந்து தாகா வரை இப்புரட்சி பரவியது. போக்ரா மற்றும் மைமன் சிங் மாவட்டத்திலும் இப்புரட்சி பரவியது.

### பகல் பந்திஸ்:- (1813 - 1833) :

- மைமன்சிங் மாவட்டத்திலுள்ள பகல் பந்திஸ் என்னும் இனத்தவர்களை ஜமீன்தார்கள் ஒடுக்கி வைத்தனர்.
- ஜமீன்தாரி முறையை எதிர்த்து இந்து. முஸ்லீம், காரோ மற்றும் ஹஜோங் இன மக்கள் புரட்சியை நடத்தினர்.
- அம்பாலா, பாட்னா, மால்டா மற்றும் ராஜ்மஹால் பகுதிகளிலும் புரட்சி பரவியது.
- ஆங்கிலேயர்களும், ஜமீன்தாரர்களும் இரும்புக்கரம் கொண்டு இப்புரட்சியை ஒடுக்கினார்.
- **முக்கிய தலைவர்கள்-** சையது அகமது, ராய்பெரய்லி, விலாயத் அலி, இனாயத் அலி, திட்டுமிர், பர்கத் ஹுசைன்

### பாராஸி இயக்கம் (1804 - 1857) :

- ஹாஜி ஷரியத் உல்லா - ஸ்ரீத்பூர் என்பர் இப்புரட்சிக்குத் தலைமை தாங்கினார்.
- இஸ்லாமிய மதத்திலுள்ள மூடநம்பிக்கைகளை தாக்கித் தனது கொள்கைகளை முன்னிறுத்தினார்.
- ஆங்கிலேயர்களின் ஆட்சியில் அரசு தர்-உல்-ஹர்ப் ஆக உள்ளது என்றார். (இருண்ட காலம்)
- இவர் மகன் தூதுமியான் (1819-1860)இவ்வியக்கத்தை மேலும் மெருகூட்டினார்.
- பல்வேறு ஆயுதப் போராட்டங்களை ஜமீன்தார்களுக்கு எதிராக நடத்தினார்.

ஆகாஷ்
வ
ர
லா
று

## அரசர்களால் நடைபெற்ற புரட்சி :

### திவான் வேலுத்தம்பி - (1808-09) திருவாங்கூர்) :

- திருவாங்கூரின் திவான் வேலுத்தம்பி ஆங்கிலேயரின் நிலவரி, துணைப் படைத்திட்டம், இரட்டை ஆட்சி முறை போன்றவற்றை எதிர்த்து போர்க்குரல் எழுப்பினார்.
- ஆங்கில அரசு அவர்மீது போர் தொடுத்தது, வீரமுடன் போரிட்டு திவான் வேலுத்தம்பி வீரமரணமடைந்தார்.

### தர்ராவ் பந்த் புரட்சி (1840 - 41) (சதாரா) :

- சதாராவின் ராஜா பிரதாப்சிங் அரசுரிமை பறிக்கப்பட்டபோது சதாராவில் பந்த் நடைபெற்றது.
- இப்புரட்சியின்போது தலைமை ஏற்றவர் தர்ராவ் என்பவர். புரட்சி ஆங்கிலேயப் படைகளால் ஒடுக்கப்பட்டது.

### கித்தூர் புரட்சி (1824 - 29) (கித்தூர்) :

- கர்நாடகத்திலுள்ள கித்தூர் மாகாணத்தில் அரச வாரிசைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் ஏற்பட்ட பொழுது,
- பாரம்பரிய முறைப்படி வாரிசைத் தேர்ந்தெடுக்க ஆங்கிலேயர் தடை விதித்தனர்.
- ராணி சென்னம்மா என்பவர் ராயப்பா என்பவரின் உதவியோடு ஆங்கிலேயரை எதிர்த்தார்.
- கித்தூரின் ஆட்சியர் புரட்சியாளர்களால் கொல்லப்பட்டார்.
- திப்பு என்வர் இவர்களின் தலைவர் என்று அடையாளம் காணப்பட்டார்.
- புரட்சியாளர்கள் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் வீட்டிலும் ஜமீன்தார்களின் வீட்டிலும் தாக்குதல் நடத்தி பலரைக் கொன்றனர்.
- திப்பு இறந்தபின் புரட்சியும் அடங்கியது. ராயப்பர், சென்னம்மா ஆகியோர் போரில் இறந்தனர்.

**குக்கா போராட்ட இயக்கம் (1860 - 1870) (பஞ்சாப்) :**

- பகத் ஜவஹர்மல் - என்பவரால் ஆன்மீக இயக்கமாக தோற்றுவிக்கப்பட்டு, பின்னர் அரசியல் இயக்கமாக கி.பி. 1840 ல் உருப்பெற்றது.
- சீக்கிய மதத்திலுள்ள மூடநம்பிக்கைகளை ஒழித்து சீர்திருத்தத்தை மேற்கொள்வது இதன் நோக்கமாகும்.
- சாதி ஒழிப்பு, கலப்புத் திருமணங்கள், பெண்கள் சுதந்திரம், கள்ளுண்ணாமை போன்ற பழக்க வழக்கங்கள் வலியுறுத்தப்பட்டது.
- கி.பி. 1870 ல் இவ்வியக்கம் ஒடுக்கப்பட்டது, தலைவர் ராம்சிங் நாடுகடத்தப்பட்டார்.



## இஸ்லாமிய போராட்ட இயக்கங்கள் :

**பக்கிர் புரட்சி (1776 - 77) (வங்காளம்) :**

- மஞ்சு ஷா என்பவர் பொதுமக்களிடமும், ஜமீன்தார்களிடமும் நிதி வசூலித்து, ஆங்கிலேயரின்
- தொழிற்சாலைகள் மீது தாக்குதல் நடத்தினார்.
- இத்தொழிற்சாலையிலுள்ள பொருட்கள் சேதப்படுத்தப்பட்டன. பின்னர் ஒடுக்கப்பட்டது.
- மஞ்சு ஷா, சிராக்கள் தலைவர்களாவர்.

**வஹாபி இயக்கம் :**

- சையது அஹமது (1786 - 1831) இவ்வியக்கத்தின் தலைவராவார்.
- 1822 ல் மதசீர்திருத்த இயக்கமாகத் தொடங்கப்பட்டது. பின்னர் அரசியல் இயக்கமாயிற்று
- முஸ்லீம்கள் ஆங்கிலேயரை எதிர்த்து போர்புரிய வேண்டும் என்று பரப்பினார்.
- இப்புரட்சி பல்வேறு இடங்களுக்குப் பரவியது.
- பெஷாவரில் வெற்றி பெற்றது.
- சையது அகமதுவின் இறப்புக்குப் பின் இயக்கம் ஒடுக்கப்பட்டது.

## பிற போராட்ட இயக்கங்கள்:

**விசாகப்பட்டினம் விடுதலைப் போர் (1827 - 30) :**

- ஆங்கிலேயரின் வரிவசூல், சொத்துக்களை முடக்குதல் போன்ற கொள்கைகளால் கோபமுற்ற
- விசாசகப்பட்டினம் ஜமீன்தார்கள் ஆங்கிலேயரை எதிர்த்தனர்.
- கி.பி. 1827ல் தொடங்கிய இந்த புரட்சி கி.பி. 1832 - ல் அடக்கப்பட்டது.

**கஞ்சாம் புரட்சி (1798 - 1835) :**

- கஞ்சாம் மாகாணத்தின் ஜமீன்தார் கைதுசெய்யப்பட்டதால் பெரும்புரட்சி ஏற்பட்டது.
- அங்கொன்றும் இங்கொன்றுமான சிறுபோர்கள் தொடர்ந்து நடந்தன.
- தனஞ்செயபாஞ்சா, இப்புரட்சியை எடுத்துள்ள தனகர்த்தாக்கள் ஆவர்.

**சூரத் சத்யாகிரகம் (1844) :**

- உப்பு வரியை நீக்கக் கோரி சூரத்தில் போராட்டம் வெடித்தது.
- அரசு வரியை விலக்கிக் கொண்டது.

**பாளையக்காரர்கள் புரட்சி (1846 - 47) :**

- கர்நூலின் பாளையக்காரர் நரசிம்மரெட்டி என்பவரின் சொத்துக்களை ஆங்கிலேயர்கள் அபகரித்தனர்.
- இதை எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் வெடித்தன.

**வாசீரா புரட்சி :**

- அதிக வரிவசூல் குறித்து வாசீராவுனுடைய தலைவர் ஆங்கிலேயருடன் போர் தொடுத்தார்.
- இந்தப் புரட்சி ஆங்கிலேயப் படைகளால் ஒடுக்கப்பட்டது.

**கட்ச் (Kutch) புரட்சி :**

- கட்ச்-னுடைய மாகாணத்தின் ஆட்சியாளர் ராவ் பர்மால் (Rao Bharmal) ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்து போராட்டம் நடத்தி வீர மரணம் அடைந்தார்.

**பன்டெல்லா (Budella) புரட்சி (மத்திய பிரதேசம்) :**

- பன்டெல்லா - வினுடைய நிலச் சுவாந்தர்கள் ஆங்கிலேயரின் அதிகப்படியான வரி வசூலிப்பதை எதிர்த்து போராட்டம் நடத்தினர். பல காவல் (போலீஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்னர். பல நகரங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இருப்பினும் ஆங்கிலேயர் படை கிளர்ச்சிகளை இரும்பு கரம் கொண்டு ஒடுக்கியது. பல கிளர்ச்சியாளர்கள் பொதுமக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டனர்.

**பைக் புரட்சி (1904 - 06) (ஒரிசா) :**

- பைக்-கள் ஒரிசாவிலுள்ள போர் வீரமரபை சார்ந்தவர்கள்.
- ஆங்கிலேயர்கள் இவர்கள் வரி செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர்.
- எனவே, இவர்கள் ஆங்கிலேரைஎதிர்த்து, போராட்டம் நடத்தினர்.
- ஜோகபந்து என்பவர். தலைமையில் இப்போராட்டக் குழு பூரிவரை ஆக்கிரமிப்பு செய்தது.
- பின்னர் அதிக அளவிலான ஆங்கிலேய இராணுவம் அனுப்பப்பட்டு இப்புரட்சி ஒடுக்கப்பட்டது.

ஆகாஷ்
வ
ர
லா
று

**சமத்வாடி (Samantwadi) புரட்சி (மஹாராட்டிரா) :**

- இப்புரட்சியாளர்கள் ஆங்கிலேயர் கோட்டையை இடித்து சிறிய அளவிலான வெற்றி பெற்றனர்.
- மராட்டிய அரசருடைய ஆதரவுடன் கோட்டைகளை பிடித்தல் முதல் வெற்றி ஆகும்.
- பின்னர் அதிக அளவிலான இராணுவப் படை ஆங்கிலேயரால் பம்பாய்-க்கு அனுப்பப்பட்டு புரட்சியாளர்களை ஒடுக்கினர்.

## ஆட்சியிலிருந்து நீக்கப்பட்ட அரசினுடைய முயற்சி:

**ராமோசி புரட்சி (1822,1925-26) (சதாரா) :**

- மராட்டிய இராணுவத்தில் பணிபுரிந்த ராமோசி இனத்தை சார்ந்தவர்கள் சித்தூர்சிங் என்பவர் தலைமையில் ஆங்கிலேயரின் அதிகப்படியான நிலவரி மற்றும் கடுங்கோல் ஆட்சியை எதிர்த்து போராடினார்கள்.
- வெல்லெஸ்லி-னுடைய துணைப்படை திட்டத்தின் மூலம் ஆங்கிலேய அரசு இப்பகுதியை முற்றிலும் கைப்பற்றியது.
- கி.பி. 1825 ல் உமாஜி என்ற தலைவரின் வழி காட்டுதலின்படி இரண்டாம் கட்டமாக புரட்சி தொடங்கியது.
- பூனாவில் நிலவிய கடும் பஞ்சம் மற்றும் போராட்டக் காரர்களுடைய ஒற்றுமையின்மை ஆகிய காரணங்களால் இப்புரட்சி தோல்வி அடைந்தது.

**காட்காரி (Gadkari) புரட்சி (1844) கோல்காபூர் (1844) :**

- மராட்டிய இராணுவத்தின் சேவர்களாக விளங்கிய இப்பிரிவு சார்ந்த மக்கள் ஆங்கிலேயரின் நிலவரி கொள்கையால் இடம் பெயர்ந்தது, வேலையை துறந்து, நாடோடிகளாக மாற்றப்பட்டனர். இவர்கள் ஒருங்கிணைந்து ஆங்கிலேயரை எதிர்த்தனர். பெரும் பொருட்சேதம், உயிர் சேதத்திற்கிடையில் ஆங்கிலேய அரசு வெற்றி பெற்றது.

**1857க்கு முன் நடந்த சிப்பாய் புரட்சி**

- 1806 வேலூர் சிப்பாய் புரட்சி
- 1824 பரக்பூர் சிப்பாய் புரட்சி
- 1825 அஸ்ஸாம் சிப்பாய் புரட்சி
- 1838 சோளாப்பூர் சிப்பாய் புரட்சி
- 1844 சிந்து சிப்பாய் புரட்சி
- 1850 பஞ்சாப் சிப்பாய் புரட்சி

- மேற்படி சிப்பாய் புரட்சிகள் அனைத்தும் சிறிய அளவில் நடைபெற்றது. இவைகள் ஒன்றுக்கொன்று ஒருங்கிணைக்கப்படாமல் தனித்தனியாக நடைபெற்றதால் ஆங்கிலேயரால் எளிதில் அடக்க முடிந்தது.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

# தென்னிந்திய புரட்சி (கி.பி. 1801)




- வீரபாண்டிய கட்டப்பொம்மன் **தூ**க்கில் இடப்பட்டதைத் தொடர்ந்து தென்னிந்திய புரட்சி வெடித்தது
- ஊமைத்துரைக்கு மருதுபாண்டியர் அடைக்கலம் கொடுத்தார்
- மருதுபாண்டியர் என்பவர் சிவகங்கையை ஆண்ட முத்துவடுக நாத தேவரிடம் பணியாற்றிய இராணுவ வீரர்
- ஆங்கியலேயருக்கு எதிராக ஒன்றாய் திரளும்படி ஒரு அறிக்கையை மருதுபாண்டியர் திருச்சி நவாப் கோட்டையிலும் **ஸ்ரீ**ரங்கம் கோவில் கதவிலும் ஒட்டினார்
- 1801 மே 29 ஆங்கிலேயருக்கும் மருதபாண்டியருக்கும் போர் **மூ**ண்டது
- புரட்சியாளர்கள் திண்டுக்கல், இராமநாதபுரம், மதுரை ஆகிய இடங்களில் தோற்கடிக்கப்பட்டனர்
- சிங்கப்புனா காட்டில் ஒழிந்த மருதுபாண்டியரை புதுக்கோட்டை மன்னன் கைது செய்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தான்



- 1801 அக்டோபர் 24 அன்று மருது பாண்டியரும், 1801 நவம்பர் 16 அன்று ஊமைத்துரையும் **தூ**க்கில் இடப்பட்டனர்
- இவ்வாறு தென்னிந்திய புரட்சி தோல்வி அடைந்தது
- மருது பாண்டியரை தோற்கடித்த ஆங்கில தளபதி - **அக்னிவ்**

# வேலூர் புரட்சி (1806)




- கி.பி. 1801-ம் ஆண்டு தென்னந்திய புரட்சியின் தாக்கமே வே**லூ**ர் புரட்சி
- வே**லூ**ர் புரட்சியின் போது சென்னை ஆளுநராக வில்லியம் பெண்டிங் பிரபும், தளபதியாக கிராடக்-ம் இருந்தனர்
- 1799 திப்பு சுல்தான் மரணத்திற்கு பின் அவர் மகன், மகள் வே**லூ**ர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.
- தளபதி கிராடக் அறிமுகப்படுத்திய சில விதிமுறைகள் புரட்சியைத் **தூ**ண்டியது
- நெற்றியில் சமயக்குறி, காதணி அணியக் கூடாது.
- இஸ்லாமியர் தாடி, மீசை வைக்கக் கூடாது.
- தளபதி அக்னிவ் அறிமுகம் செய்த புதிய தலைப்பாகை முறையே உடனடி காரணமாக அமைந்தது.
- கி.பி.1806 ஜீலை9 வே**லூ**ர் கோட்டையில் நடந்த திப்புவின் மகள் திருமணத்தில் சிப்பாய்கள் கலந்து கொண்டன
- திட்டமிட்டபடி 1806 ஜீலை 10 அன்று ஆங்கில தளபதிகளைத தாக்கி வே**லூ**ர் கோட்டையைக் கைப்பற்றி திப்புவின் மகளை அரசாக்கி கொடி ஏற்றினார்
- கோட்டைக்கு வெளியில் இருந்த தளபதி காட்ஸ் என்பவர் ஆற்காடு நவாப்பிற்கு தகவல் கொடுக்க, தளபதி கில்லஸ்டி தலைமையில் வே**லூ**ர் கோட்டை மீண்டும் கைப்பற்றப்பட்டது
- திப்புவின் உறவினர்கள் கொல்கத்தா சிறைக்கு மாற்றப்பட்டனர். புரட்சி தோல்வி அடைந்தாலும் இதுவே 1857 புரட்சிக்கு முன்னோடியாக கருதப்படுகிறது

தேடி வாருங்கள்! தேர்வாகிச் செல்லுங்கள்!!
தமிழகத்தின் தலைசிறந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம்
ஆகாஷ் IAS அகாடமி

# மாபெரும் புரட்சி கி.பி. 1857

- கி.பி. 1857 புரட்சி ஆங்கிலேயர்களால் **சிப்பாய்க் கலகம்** என அழைக்கப்பட்டது.
- இந்தியர்களால் **முதல் இந்திய சுதந்திரப் போர்** என அழைக்கப்பட்டது.



**காரணங்கள்**

- வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத் திட்டம்
- டல்ஹெளசி பிரபுவின் நாடு இழப்புக் கொள்கை
- கிறிஸ்தவ மதப்பரப்புக் குழுக்களின் மதமாற்றத் திட்டம்
- இந்திய சமய நடவடிக்கையில் ஆங்கிலேயர் தலையீடு
- கி.பி. 1856 - பொதுப்பணி படைச்சட்டம்
- சீக்கியர்களின் தாடி மீசையை மழிக்கச் செய்தல்
- இந்துக்கள் சமயக்குறிகள் நெற்றியில் இடுவதற்குத் தடை
- தோலினால் ஆன தலைப்பாகை அணிய வற்புறுத்தல்



**முதல் இந்திய சுதந்திரப் போர் (கி.பி. 1857)**

**உடனடிக்காரணம்**

- கி.பி. 1857-ல் ஆங்கில படையில் புதிதாக என்பீல்டு ரக துப்பாக்கி அறிமுகம் செய்யப்பட்டது.
- அதில் பயன்படுத்தும் தோட்டாக்களின் உறையை வாயால் கடித்து பின்பு துப்பாக்கியில் செருக வேண்டும்.
- தோட்டாக்களில் பன்றி மற்றும் பசுக்களின் கொழுப்பு தடவப்பட்டிருந்தது.
- இதனால் இந்துக்கள் மற்றும் இஸ்லாமிய படை வீரர்கள் துப்பாக்கி பயன்படுத்துவதை மறுத்தனர்.
- கி.பி. 1857 மார்ச் 29ல் கல்கத்தாவுக்கு அருகில் உள்ள பராக்பூர் என்னும் இடத்தில் வங்காளத்தின் 34-வது படைப்பிரிவைச் சேர்ந்த மங்கள் பாண்டே என்ற பிராமண படை வீரர் தோட்டாவை பயன்படுத்த மறுத்து தனது உயர் அதிகாரிகளை சுட்டுக் கொன்றார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டு **தூ**க்கிலிடப்பட்டார்.
- இதனைத் தொடர்ந்து கி.பி. 1857ம் ஆண்டு மே 10ல் மீரட்டில் புரட்சி (முதல் புரட்சி) வெடித்தது.
- மீரட் வீரர்கள் கலகம் செய்து டெல்லியை மே 12ல் வந்து அடைந்தனர்.
- அங்கு ஆங்கில அதிகாரிகளைக் கொன்று டெல்லியைக் கைப்பற்றி முகலாய மன்னர் 2-ம் பக**தூ**ர் ஷா வை மன்னராக அறிவித்தனர்.
- சர் ஜான் நிக்கல்சன் என்னும் ஆங்கில தளபதி பின் நாளில் டெல்லியைக் கைப்பற்றினார்.
- இரண்டாம் பக**தூ**ர்ஷா ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார்.
- கி.பி. 1862-ல் இரண்டாம் பக**தூ**ர்ஷாவின் மரணத்திற்கு பின்பு மாபெரும் முகலாய சாம்ராஜ்யம் முடிவுக்கு வந்தது .

**கான்பூர்**

- கான்பூர் படைக்கு இரண்டாம் பாஜிராவின் மகன் நானா காசிப் தலைமையேற்றார். அவருக்கு படைத்தளபதி தாந்தியா தோப் உதவினார்.
- கர்னல் ஹாவ்லாஜ் , கர்னல் நெயில் தலைமையில் கான்பூரை மீட்டனர்.
- நானாசாகிப் நேபாளம் தப்பிச் சென்று அங்கு மரணமடைந்தார்.

**லக்னோ**

- அயோத்தி நவாபின் மகள் ஹஷ்ரத் மஹால் பேகம் தலைமை தாங்கினார்.
- தனது மகன் பிர்ஜிஸ் காதரை மன்னராக அறிவித்தார்.
- புரட்சியாளர்கள் சர் ஹென்றி லாரன்ஸ் என்னும் தளபதியைக் கொன்றனர்.
- தளபதி ஆப்ராம் மற்றும் ஹாவ்லாஜ் மீண்டும் பிரேசில் லக்னோவை மீட்டனர்.

**மத்திய இந்தியா**

- மத்திய இந்திய படைக்கு ஜான்சிராணியும், தாந்தியா தோப்பும் தலைமை தாங்கினர்.
- சர் ஹக்ரோஸ் என்னும் தளபதி இவர்களை எதிர்த்து போரிட்டார்.
- லட்சுமிபாயும், தாந்தியா தோப்பும் தப்பிச் சென்று கல்பி எனும் இடத்தில் தஞ்சம் அடைந்தனர்.
- இருவரும் சேர்ந்து முற்றுகையிட்டு குவாலியரைக் கைப்பற்றினார்.
- பின்னர் நடந்த போரில் ஜான்சி வீரமரணம் அடைந்தார்.
- தப்பிச் சென்ற தாந்தியா தோப்பும் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

**விளைவுகள்**

- இதன் முடிவில் ஆங்கில கம்பெனி ஆட்சி முடிவுக்கு வந்தது.
- இஙகிலாந்து அரசியின் நேரடி கட்டப்பாட்டில் இந்தியா வந்தது.
- 1858-ல் நவம்பர் 1 அன்று விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை வெளியிடப்பட்டது.
- இதனை இந்தியாவின் முதல் வைசிராயான கானிங் பிரபு (இந்திய அரசப் பிரதிநிதி) வாசித்தார்.

**இதன் சிறப்பு அம்சங்கள்**

- நாடு இழக்கும் கொள்கை ரத்து.
- சமய குழு சுதந்திரம் அளிக்கப்பட்டது.
- கட்டுப்பாட்டு நிர்வாகக் குழு கலைப்பு.
- கவர்னல் ஜெனரல் பதவி நீக்கப்பட்டு வைசிராய் அல்லது இந்திய அரசப்பிரதநிதி என்று அழைக்கப்பட்டது.
- உயர்பதவியில் இந்தியர்கள் அமர்த்தப்பட்டனர்.
- இந்திய செயலாளர் பதவி அறிமுகம் செய்யப்பட்டது.
- சிப்பாய் கலகத்தில் கொலைக் குற்றம் புரிந்தவர்கள் தவிர அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.
- இவ்வறிக்கை அலகாபாத் நகரில் வாசிக்கப்பட்டது.

ஆகாஷ் IAS அகாடமி

Coaching For:

TNPSC, VAO, TRB, TET, BANK, SSC, POLICE, ARMY

தலைமை அலுவலகம்: ரயில்வே பீடர் ரோடு, நடுபல்க் சிக்னல் எதிரில், தென்காசி

கிளைகள்: விழுப்புரம், கடலூர்,திருவண்ணாமலை,கள்ளக்குறிச்சி,சேலம், சங்கரன்கோவில், தேனி, வடலூர், சிதம்பரம்,இராஜபாளையம்

போன்: 04633 - 226703, செல் : 99420 16300.

# வைசிராய்கள் (கி.பி. 1857 – 1947)

## கானிங் பிரபு(கி.பி. 1856 – 1862) :

- கி.பி. 1857ம் ஆண்டு சிப்பாய் கலகத்தின் போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர்.
- இங்கிலாந்து அரசி விக்டோரியா மகாராணியின் ஆணையின் படி இந்தியாவின் முதல் வைசிராயாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- கி.பி. 1856ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட விதவைகள் மறுமணச் சட்டம் கானிங் பிரபுவின் காலத்தில் தான் நடைமுறைபடுத்தப்பட்டது.
- கி.பி. 1857ல் கல்கத்தா, மும்பை மற்றும் சென்னைப் பல்கலை கழகங்களைத் தோற்றுவித்தவர்.
- கி.பி. 1858ல் தண்டனைச் சட்டமும், கி.பி. 1859ல் குற்றவியல் நடைமுறைச் சட்டமும் இயற்றப்பட்டது.
- சிப்பாய் கலகத்தில் ஈடுபட்ட இந்தியர்களுக்கு கானிங் பிரபு மன்னிப்பு அளித்ததால் **கருணைமிகு கானிங்** என்று அழைக்கப்பட்டார்.
- கி.பி. 1861ல் இவரது காலத்தில் இந்திய கவுன்சில் சட்டம் கொண்டு வரப்பட்டது.



**கானிங் பிரபு**

## முதலாம் எல்ஜின் பிரபு (கி.பி. 1862 – 1863) :

- இவர் பதவியேற்ற சிறிது காலத்திலேயே இறந்துவிட்டதால் பின்னர் சர் டென்னிசன் மற்றும் சர் நேப்பியர் ஆகிய இருவரும் கி.பி. 1864 வரை நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டனர்.
- கி.பி. 1862ம் ஆண்டு இவர் காலத்தில் மூன்று இடங்களில் உயர் நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. சென்னை உயர் நீதிமன்றம் | - | ஜூன் 26 |
| 2. கொல்கத்தா உயர் நீதிமன்றம் | - | ஜூலை 02 |
| 3. மும்பை உயர் நீதிமன்றம் | - | ஆகஸ்ட் 14 |

ஆகாஷ் வரலாறு

## லாரன்ஸ் பிரபு (கி.பி. 1864 – 1869) :

- பஞ்சாபில் கமிஷரனாக கி.பி. 1846 முதல் கி.பி. 1853 வரை பணியாற்றினார்.
- இவர் காலத்தில் கி.பி. 1866ல் ஒரிசாவிலும், கி.பி. 1868ல் பந்தல்கண்ட்டிலும் பஞ்சம் நிலவியது.
- இந்த பஞ்சத்தைப் போக்க பஞ்ச விசாரணைக் குழுவை நியமித்தார்.

## மேயோ பிரபு (கி.பி. 1869 – 1872) :

- கி.பி. 1872ல் வங்காளத்தில் மட்டும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தினார்.
- இந்தியாவை, லண்டனோடு இணைக்கும் மின்சாரத் தந்தி இணைப்பு ஏற்படுத்தப்பட்டது.
- இந்திய புள்ளி விவரத்துறையைத் தோற்றுவித்தவர்.
- மாநிலங்களில் ரயில்வேத் துறையைத் தோற்றுவித்தவர்.
- அஜ்மீரில் மேயோ என்ற கல்லூரியும், குஜராத் கத்தியவாரில் ராஜ்கோட் என்ற கல்லூரியும் நிறுவினார்.
- கி.பி. 1872ல் மேயோ பிரபு சிறைச்சாலைக் கண்காணிப்பிற்காக அந்தமான் தீவிற்கு சென்ற போது **ஷெர் அலி** என்ற ஆப்கானிய கைதியால் கொல்லப்பட்டார்.




**மேயோ பிரபு**

## நாத்புரூக் பிரபு (கி.பி. 1872 – 1876) :

- நாத்புரூக் காலத்தில் தான் இங்கிலாந்து இளவரசர் முதலாம் வேல்ஸ் (கி.பி. 1875) இந்தியாவிற்கு வந்தார்.
- இவர் காலத்தில் தான் வருமானவரி நீக்கம் செய்யப்பட்டது.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300


## லிட்டன் பிரபு (கி.பி. 1876 – 1880) :



லிட்டன் பிரபு

- லிட்டன் பிரபு இந்தியாவில் ஒரே மாதிரியான உப்பு வரியை விதித்தார்.
- கி.பி. 1877ல் டெல்லியில் ஒரு தர்பாரைக் கூட்டிய லிட்டன் பிரபு ஆங்கிலப் பேரரசியை இந்திய பேரரசி என்று அறிவத்தார்.
- கி.பி. 1878ல் வட்டார மொழிகளின் பத்திரிக்கைத் தடை சட்டத்ததைக் கொண்டு வந்தார்.
- இதன் மூலம் அமிர்தபஜார் என்ற பத்திரிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.
- இந்திய பல்கலைக்கழகச் சட்டத்தையும், இந்திய ஆயுதத்தடைச் சட்டத்தையும் கொண்டு வந்தார்.

## ரிப்பன் பிரபு (கி.பி. 1881 – 1884) :



ரிப்பன் பிரபு

- கி.பி. 1881ல் இந்தியா முழுவதுமான முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தினார்.
- இதற்காக இந்திய உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்தினார். எனவே இவர் இந்திய உள்ளட்சி அமைப்புகளின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
- கி.பி. 1881 ல் முதல் தொழிற்சாலை சட்டத்தைக் கொண்டு வந்தார்.
- கி.பி. 1882ல் லிட்டன் பிரபு கொண்டு வந்த பத்திரிக்கைத் தடை சட்டத்தை நீக்கினார்.
- இந்தியர்களின் முதல் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக மித்தரே என்பவரை ரிப்பன் பிரபு நியமித்தார்.
- கி.பி. 1882ல் ரிப்பன் பிரபு வில்லியம் ஹண்டர் என்பவர் தலைமையில் ஒரு கல்விக் குழுவை நியமித்தார்.
- கி.பி. 1883ல் ஓய்வு பெற்ற நீதிபதி ஹென்றி இல்பர்ட் என்பவரின் பெயரில் இல்பர்ட் மசோதா என்ற மசோதாவை இங்கிலாந்து பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.
- இல்பர்ட் மசோதா தோல்வியுற்றதால் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார்.

## டஃப்ரின் பிரபு (கி.பி. 1884 – 1888) :

- இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்க முக்கிய காரணமாக இருந்தவர்.
- கி.பி. 1885 ல் இவர் காலத்தில் தான் மூன்றாம் பர்மியப் போர் நடைபெற்றது.
- கி.பி. 1887ல் இங்கிலாந்து அரசி விக்டோரியா ராணி ஆட்சியின் பொன்விழா கொண்டாடப்பட்டது.

ஆகாஷ்
வ
ர
லா
று

## லான்ஸ்டௌன் பிரபு (கி.பி. 1888 – 1893) :

- கி.பி. 1891 ல் ஆட்சிப் பணியில் மூன்று நிலைகளை உருவாக்கினார்.
    1. பேரரசுப் பணி
    2. மாகாணப் பணி
    3. கீழ்நிலைப் பணி
- ஒப்புதல் வயதுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் 12 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்குத் திருமணம் செய்யக் கூடாது.
- கி.பி. 1893ல் மார்ட்டிமர் டூரண்ட் என்பவர் தலைமையில் இந்தியாவிற்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் எல்லைக் கோடு வரையப்பட்டது. இதுவே **டூரண்ட் எல்லைக்** கோடு எனப்பட்டது.

## இரண்டாம் எல்ஜின் பிரபு (கி.பி. 1894 – 1899) :

- நாணயச் செலவாணிக்குத் தீர்வு காண கி.பி. 1898ல் பௌலர் என்ற ஆய்வுக் குழுவை நியமித்தார்.
- இவரது காலத்தில் சென்னை, மும்பை, கொல்கத்தா ஆகிய இடங்களில் இருந்த ராணுவங்கள் ஒன்றிணைக்கப்பட்டு இந்தயா முழுவதற்கும் ஒரே ராணுவ அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
- இவரது காலத்தில் தான் மிகக் கொடிய நோயாகக் கருதப்பட்ட பிளேக் நோய் ஏற்பட்டு இந்தயாவில் சுமார் 20 லட்சம் இந்தியர்கள் உயிர் இழந்தனர்.

**கர்சன் பிரபு (கி.பி. 1899 – 1905) :**



கர்சன் பிரபு

- கி.பி. 1899ல் பதவியேற்ற கர்சன் பிரபு பல்வேறு சட்டங்கள் உருவாக்கப்பட்டன.
    1. பஞ்ச நிலமாற்றுதல் சட்டம் - கி.பி. 1900
    2. நிலவரித் தீர்மானம் - கி.பி. 1902
    3. கூட்டுறவு சங்கச் சட்டம் - கி.பி. 1904
    4. பழங்கால நினைவுப் பாதுகாப்புச் சட்டம் - கி.பி. 1904
    5. கைத்தொழில் மற்றும் வாணிப இலாகா - கி.பி. 1904
    6. இந்தியப் பல்கலைக் கழகச் சட்டம் - கி.பி. 1904
    7. ரயில்வே போர்டு (ரயில்வே வாரியம்) - கி.பி. 1905
- கி.பி. 1902ம் ஆண்டு சர் ஜான் மார்ஷல் என்பவரை தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் இயக்குநராக கர்சன் பிரபு நியமித்தார்.
- போலீஸ் நிர்வாக நிலையை சீர் செய்ய ஃபிரேசர் தலைமையில் ஆய்வுக் குழுவை நியமித்தார்.

ஆகாஷ்

வ
ர
லா
று

**இரண்டாம் மிண்டோ பிரபு (கி.பி. 1905 – 1910) :**

- இவரது ஆட்சி காலத்தில் தான் கி.பி. 1908ம் ஆண்டு பாலகங்காதர திலகர் கைது செய்யப்பட்டு பர்மாவில் உள்ள மாண்ட்லே சிறையில் 6 ஆண்டுகள் அடைக்கப்பட்டார்.
- கி.பி. 1909ம் ஆண்டு மிண்டோ - மார்லி சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- கி.பி. 1910ல் இந்திய பத்திரிக்கைச் சட்டம் இயற்றப்பட்டது.

**இரண்டாம் ஹார்டிஞ்ச் பிரபு (கி.பி. 1910 – 1916) :**

- கி.பி. 1911ம் ஆண்டு டெல்லி தர்பாரைக் கூட்டினார்.
- இவர் காலத்தில் தான் 5ம் ஜார்ஜ் வருகையின் நினைவாக மும்பையில் **இந்தியாவின் நுழைவாயில்** என்று அழைக்கப்படும் (Gateway of India) நுழைவாயில் கட்டப்பட்டது.
- கி.பி. 1905ல் பிரிக்கப்பட்ட வங்காளம் இந்தியர்களின் தீவிர போராட்டத்தினால் (1911ல்) ஒன்றிணைக்கப்பட்டது.
- கி.பி. 1916ல் இந்திய கைத்தொழில் ஆய்வுக்குழு ஒன்று சர் தாமஸ் ஹாந்து தலைமையில் நியமிக்கபட்டது.
- இவர் காலத்தில் தான் முதல் உலகப்போர் தொடங்கியது.
- கி.பி. 1915ல் இந்தியக் காப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

**செம்ஸ்போர்டு பிரபு (கி.பி. 1916 – 1921) :**

- இவர் காலத்தின் முக்கிய நிகழ்வு மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் ஆகும்.
- இவர் காலத்தில் தான் ஹோம்ரூல் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.
    பாலகங்காதர திலகர் - பூனா
    அன்னிபெசன்ட் - சென்னை

**ரீடிங் பிரபு (கி.பி. 1921 – 1926) :**

- மலபாரில் ஏற்பட்ட மாப்ளா கலகத்தை ஒடுக்குவதற்கு ரீடிங் பிரபு பெரும் முயற்சி எடுத்தார்.
- இங்கிலாந்து இளவரசர் வேல்ஸ் இந்தியாவிற்கு இவர் காலத்தில் வருகை புரிந்தார்.
- கி.பி. 1919ம் ஆண்டு இரட்டை ஆட்சி முறையை ஆய்வு செய்ய முடிமன் குழு நியமிக்கப்பட்டது.


**ஆகாஷ் பொன்மொழி**

**முயற்சி இல்லாமல் மகிழ்ச்சி இல்லை, முயன்ற மனிதன் தோற்றதில்லை.**

**– ஆகாஷ் IAS அகாடமி**


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

## இர்வின் பிரபு (கி.பி. 1926 – 1931) :



இர்வின் பிரபு


- சார்லஸ் உட் என்பவரின் மகனான இர்வின் பிரபு கி.பி. 1926ல் பதவி ஏற்றார்.
- கி.பி. 1927ல் சைமன் குழு இந்தியாவிற்கு வருகை புரிந்தது.
- கி.பி. 1930ம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கம் நடைபெற்ற போது ஆங்கில அரசின் தூதுவராக காந்தியடிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தி 2வது வட்ட மேசை மாநாடுகளில் கலந்து கொள்ள வைத்தார்.
- கி.பி. 1929ல் ஹரபிலாஸ் சார்தா சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி திருமண வயதாக ஆண்களுக்கு குறைந்த பட்சம் 18வயதும், பெண்களுக்கு 14வயதும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- இந்திய விவசாய நிலைகளை ஆராய்வதற்கு அமைத்த குழு - **ராயல் கமிஷன் (1926)**
- வில்சன் அணை மற்றும் லாய்டு அணை ஆகியவை பம்பாய் மாகாணத்தில் கட்டப்பட்ட
- கிறிஸ்டின் வைசிராய் என்ற சிறப்பு பெயரைப் பெற்றவர் இர்வின் பிரபு ஆவார்.

## வெலிங்டன் பிரபு (கி.பி. 1931 – 1936) :

ஆகாஷ் வ ர லா று

- **இவர் காலத்தில் இயற்றப்பட்டச் சட்டங்கள்:**
  1. சாதிவழி தனித்தொகுதி - கி.பி. 1932
  2. பூனா ஒப்பந்தம் - கி.பி. 1932
  3. வெள்ளை அறிக்கை - கி.பி. 1933
  4. இந்திய அரசுச் சட்டம் - கி.பி. 1935
- **கட்டப்பட்ட அணைகள் :**
  1. சுக்குர் அணை - கி.பி. 1932 (சிந்து நதி)
  2. மேட்டூர் அணை - கி.பி. 1934 (காவிரி நதி)
  3. பைகாரா நீர்மின் சக்தி திட்டம் - கி.பி. 1933

## லின்லித்கோ பிரபு (கி.பி. 1936 – 1944) :



லின்லித்கோ பிரபு

- இந்திய அரசுச் சட்டம் இவர் காலத்தில் தான் (கி.பி. 1937) நடைமுறைக்கு வந்தது.
- சிந்து தனி மாகாணமாகவும், கி.பி. 1936ம் ஆண்டு ஒரிசா தனி மாகாணமாகவும் மாறியது
- இரண்டாம் உலகப்போர் இவர் காலத்தில் தொடங்கியது. (கி.பி. 1939 - 1945)
- பாகிஸ்தான் தனி நாடு கோரிக்கை முதன் முதலாக முன் வைக்கப்பட்டது.

## வேவல் பிரபு (கி.பி. 1944 – 1947) :

- இந்தியாவில் படைத்தளபதியாக இருந்தவர் கி.பி. 1944ம் ஆண்டு வைசிராயாக நியமிக்க
- கி.பி. 1945ம் ஆண்டு சிம்லா மாநாட்டைக் கூட்டினார்.
- கி.பி. 1946ம் ஆண்டு அமைச்சரவை தூதுக் குழு இந்தியாவிற்கு வருகை புரிந்தது.
- கி.பி. 1946 செப்.2ம் நாள் ஜவஹர்லால் நேரு தலைமையிலான இடைக்கால அரசுப் பதவியேற்றது.

## மௌண்ட்பேட்டன் பிரபு (கி.பி. 1947 – 1948) :



மௌண்ட்பேட்டன் பிரபு

- கி.பி. 1947 பிப். 12 முதல் கி.பி. 1947 ஆக. 14 வரை மௌண்ட்பேட்டன் வைசிராயாக பதவி வகித்தார்.
- பின்னர் சுதந்திரத்திற்குப் பிறகு கி.பி. 1947 ஆக. 15 முதல் கி.பி. 1948 ஜூன் 21 வரை இந்தியாவின் டொமினியன் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்தார்.
- கி.பி. 1947 ஜூன் 3ம் நாள் இந்தியா - பாகிஸ்தான் என இரு நாடாகப் பிரிக்கும் மௌண்ட் பேட்டன் திட்டத்தை (ஜூன் 3ம் நாள் திட்டம்) வெளியிட்டார்.


# 19ம் நூற்றாண்டின் சீர்திருத்த இயக்கங்கள்

## பிரம்ம சமாஜம்


ராஜாராம் மோகன்ராய்

- கி.பி.1828ம் ஆண்டு ராஜாராம் மோகன்ராய் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.
- பொருள் - பரம்பொருளின் அமைப்பு. இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட முதல் சமுதாய பண்பாட்டு அமைப்பு
- கி.பி.1814 ல் கல்கத்தாவில் உருவாக்கிய ஆன்மீக சேவையே பிற்காலத்தில் பிரம்மசமாஜமாக மாறியது.
- உருவ வழிபாட்டை கண்டித்தது. உடன்கட்டை ஏறுதல், பலதார மணம், குழந்தை திருமணம், ஜாதிமுறை, தீண்டாமை, மது அருந்துதல் ஆகியவற்றை ஒழிக்க பாடுபட்டது.
- கலப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கல்வி, மேலைக் கல்வி, ஆங்கிலமொழிக் கல்வி ஆகியவற்றை பிரம்ம சமாஜம் ஆதிரித்தது.
- தேவந்திரநாத் தாகூர் பிரம்மோ பாசனா என்னும் வழிபாட்டு முறையை அறிமுகம் செய்
- கி.பி.1872ல் குழந்தை திருமணமும், பலதார மணமும் கேசவ சந்திரசென் என்பவரால் ஒழிக்கப்பட்டது.
- இராஜாராம்மோகன்ராய் இயற்றியநூல்கள் - இயேசுகிறிஸ்துவின் கட்டளைகள், அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும்வழி
- வங்காளத்தில் சம்பத் கௌமுடி மற்றும் பாரசீகத்தில் மிராட் உல் அக்பர் என்ற பத்திரிக்கைகளை நடத்தினார்.
- கி.பி.1829ல் சதி என்னும் உடன்கட்டையை ஒழிக்க வில்லியம் பெண்டிங் பிரபுவிற்கு உறுதுணையாக இருந்தார்.
- **சிறப்பு பெயர்கள் :**
  புதிய யுகத்தின் விடிவெள்ளி, நவீன இந்தியாவின் முன்னோடி, இந்திய தேசிய உணர்வின் தீர்க்கதரிசி.

## ஆரிய சமாஜம்


தயானந்த சரஸ்வதி

- கி.பி.1875ல் சுவாமி தயானந்த சரஸ்வதி என்பவரால் மும்பையில் தோற்றுவிக்கப்பட்டது.
- இவரின் இயற்பெயர் - மூல் சங்கர்.
- இவருடைய வேதங்கள் பற்றிய கருத்துக்களை சத்தியர்த்த பிரகாஷ் நூலின் மூலம் அறி
- உருவ வழிபாட்டை எதிர்த்தார். இந்தியா இந்தியர்க்கே என உரைத்தார்.
- ஆரம்பித்த இயக்கம் - சுத்தி இயக்கம்.
- இந்து சமயத்தின் மார்டின் லூதர் என அழைக்கப்பட்டார். மார்டின் லூதர் என்பவர் ஜெர்மனியைச் சேர்ந்த சிறந்த சமய சீர்திருத்தவாதி.
- தயானந்த் ஆங்கிலோ வேதிக் என்ற கல்வி நிறுவனங்களைத் தோற்றுவித்தார். (தற்போது D.A.V. School)
- சீடர்கள் - லாலா லஜபதி ராய், லாலா ஹன்ஸ்ராஜ், பண்டித குருதத்
- **வாசகங்கள்** : 1)"Go Back to Vedas" "வேதகாலத்திற்கு திரும்புங்கள் "
  2) வாய்மையே வெல்லும் பொய்மை அல்ல - "Satyameva Jeyate, Na Anritam"


## பிம்மஞான சபை


பிளவட்ஸ்கி

- கி.பி.1875ல் பிரம்மஞான சபை என்ற அமைப்பை பிளவாட்ஸ்கி என்ற பெண்மணியும், கர்னல் எச்.எஸ்.ஆல்காட் என்பவராலும் ஐக்கிய நாடுகளில் தோற்றுவிக்கப்பட்டது.
- இந்து சமயத்தில் உள்ள யோகாசன முறையை பற்றி இதில் கூறப்பட்டுள்ளது.
- கி.பி.1882ல் இதன் தலைமையகம் சென்னையில் அடையாறுக்கு மாற்றப்பட்டது.
- கி.பி.1893ல் அன்னிபெசன்ட் அம்மையார் இதன் தலைமை பொறுப்பேற்றார்.
- பர்தா முறை, குழந்தை திருமணம், அறியாமை ஆகியவற்றை ஒழிக்கப் பாடுபட்டார்.
- அன்னிபெசன்ட் அம்மையாரின் மத்திய இந்து கல்லூரி பின் பனாரஸ் பல்கலை கழகத்துடன் சேர்ந்தது.
- அன்னிபெசன்ட் அம்மையாரின் நியூ இந்தியா பத்திரிக்கை பிரம்மஞான சபையின் கொள்கைகைளைப் பரப்பியது

**இராமகிருஷ்ண இயக்கம்**

- கி.பி.1897 மே1 அன்று கல்கத்தாவிற்கு அருகில் பேலூரில் விவேகானந்தர் தோற்றுவித்தார்.
- ராமகிருஷ்ண பரமஹம்சர் கல்கத்தாவிற்கு அருகில் தட்சிணேஸ்வரத்திலிருந்த காளி கோயிலின் பூசாரி ஆவார்.
- மனிதருக்கு செய்யும் பணி கடவுளுக்கு செய்வதாகும் என்பது இவர் கொள்கை.
- ஏழைகளுக்கு பாடுபடுபவர்களை மகாத்மா என்றும், பிறரை துராத்மா என்றும் குறிப்பிட்டார்.
- இவரின் முக்கிய சீடர் - விவேகானந்தர். இயற்பெயர் - நரேந்திரநாத்.
- விவேகானந்தர் கி.பி.1893 செப்டம்பர் 11ல் அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் பங்கு பெற்று உரையாற்றினார்.
- இரண்டு மையங்கள் - பேலூர் (கல்கத்தா), மாயாவதி (அல்மேரா)



**இராமகிருஷ்ண பரமஹம்சர்**

**அலிகார் இயக்கம்**

- கி.பி.1863ல் கல்கத்தாவில் முகமதியர் இலக்கிய கழகம் நவாப் அப்துல் லத்தீப் என்பவர் தோற்றுவித்தார்.
- முஸ்லீம்களிடையே நவீன கல்வியையும், சமூக சீர்திருத்தங்களையும் பரப்பிய மிக முக்கியமான அலிகார் இயக்கத்தை சர் சையது அகமது கான் தோற்றுவித்தார்.
- கி.பி.1864ல் காசிப்பூரில் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். பின்னர் அறிவயல் கழகமாக மாறியது.
- கி.பி.1875ல் அலிகாரில் முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரியை நிறுவினார்.
- இந்த கல்லூரி நாளடைவில் முஸ்லீம் பல்கலைக் கழகமாக மாறியது.
- பலதார மணம், எளிய விவகாரத்து முறை, பர்தா அணிதல் போன்றவற்றைக் கண்டித்தார்.
- இவர் தாஹ்முல்-உத்-அக்லாக் (ஒழுக்கச் சீர்திருத்தம்) என்ற பத்திரிக்கையை நடத்தினார்.
- அலிகார் இன்ஸ்டியூட் கெசட் என்ற இருமொழி இதழையும் நடத்தியுள்ளார்.

**பிற முக்கிய சீர்திருத்த இயக்கங்கள்**

- வேத சமாஜம் - ஸ்ரீதரலு நாயுடு (1864)
- பிரார்த்தனா சமாஜம் - ஆத்மராம் பாண்டுரங் (1867)
- தேவ சமாஜம் - நாராயண் அக்னிஹோத்ரி (1887)
- சதாரன் பிரம்ம சமாஜம் - ஆனந்த் மோகன் போஸ்
- ராதாஸ்வாமி - சுவாமி மகராஜ் (துளசி ராம்) - 1861
- இந்திய ஊழியர் சங்கம் - கோபால கிருஷ்ண கோகலே (1915)
- சேவாசதன் - பெஹ்ரம்ஜி மலபாரி (1885)
- சாரதா சதன் - ரமாபாய்
- நாமதாரி இயக்கம் - பாலக் சிங்
- நிரங்காரி இயக்கம் - பாபா தயாள் தாஸ்
- தத்துவபோதினி சபை - தேவேந்திரநாத் தாகூர்
- குதாய் கித்மகார் - கான் அப்துல் கபார்கான்
- சோஷியல் சர்வீஸ் லீக் - நாராயாண் மல்ஹர் ஜோஷி
- விதவை மறுமண இயக்கம் - எம்.ஜி.ரானடே
- தர்ம பரிபாலன யோகம் - நாராயண குரு
- Madras Hindu Association - அன்னிசென்ட் அம்மையார்
- Bahishkrit Hitkarini - டாக்டர் அம்பேத்கார்
- South Indian Liberal Federation - டி.எம்.நாயர் மற்றும் தியாகராஜ செட்டியார்

**பின்னர் கி.பி. 1920ல் நீதிக்கட்சியாகவும், கி.பி. 1944 ல் திராவிடர் கழகமாகவும் பெயர் மாற்றமானது.**

# இந்திய தேசிய இயக்கம்




## தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்டவர்கள்

- இந்தியாவில் விடுதலை வேட்கையை விதைத்தவை **ஜே.எஸ்.மில், ஸ்பென்ஸர், எட்மண்ட் பர்க்** ஆகியோரின் மக்களாட்சிக் கருத்துக்கள்.
- சுதந்திர தாகம் **ஊட்ட சுரேந்திரநாத் பானர்ஜி** நடத்திய பத்திரிகை **பெங்காலி.**
- **தாதாபாய் நௌரோஜி** நடத்திய பத்திரிகையின் பெயர் **இந்தியாவின் குரல்**
- **லோகமான்ய திலகர்** நடத்திய பத்திரிகைகள் **மராத்தா, கேசரி.**
- கல்கத்தாவிலிருந்து வெளியான முதல் நாளிதழ்கள் **அமர்தபஜார் பத்திரிகா, ஸ்டேட்ஸ்மேன்.**
- சென்னையிலிருந்து வெளியான முதல் நாளிதழ்கள் **மெட்ராஸ் மெயில், இந்து.**
- இந்திய தேசியவாதிகளின் பைபிள் எனப்படுவது **பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் ஆனந்த மடம்.**
- இந்த நாவலில்தான் **வந்தே மாதரம்** என்ற பாடல் உள்ளது.
- ஆயிரம் உண்டிங்கு சாதி, எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி? என எழுதியவர் **சுப்பரமணிய பாதியார்.**
- கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்னும் வரி **நாமக்கல் கவிஞருடையது.**
- அவர் இந்தப் பாடலை எழுதியது **1930 உப்புச் சத்தியாகிரத்தில் வழி நடைப்பட்டாசு.**

## ஆரம்பக்கால அரசியல் கழகங்கள்:

| | |
|---|---|
| 1) பிரிட்டிஷ் இந்திய கழகம் | - 1851 வங்காளம் |
| 2) பம்பாய் கழகம் | - 1852 தாதாபாய் நவ்ரோஜி |
| 3) கிழக்கு இந்தியக் கழகம் | - 1856 லண்டன் |
| 4) சென்னை சுதேசி சங்கம் | - 1852 |
| 5) பூனா சர்வஜனத் சபை | - 1870 |
| 6) சென்னை மகாஜன சங்கம் | - 1884 |
| 7) இந்திய தேசியக் காங்கிரஸ் | - 1885 |

## இந்திய தேசியக் காங்கிரஸ் தோற்றம் (கி.பி. 1885) :


A.O.ஹியூம்

- பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவர் இந்திய தேசிய காங்கிரஸை தோற்றுவித்தார்.
- இவ்வியக்கத்தை தோற்றுவிக்க உறுதிணையாக இருந்தவர் - டஃப்ரின் பிரபு
- அதன் விளைவாக இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்டு அதன் முதல் கூட்டம் கி.பி. 1885 ல் பம்பாயில் நடைபெற்றது.
- அந்த கூட்டத்திற்கு டபிள்யூ.சி. பானர்ஜி தலைமை வகித்தார்.
- இந்தியா முழுவதிலும் இருந்து 72 பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர்.
- காங்கிரஸின் இரண்டாவது கூட்டம் கி.பி.1886 -ல் கல்கத்தாவிலும், மூன்றாவது கூட்டம் கி.பி. 1887 ல் சென்னையிலும் நடைபெற்றது.
- மிதவாதி தேசியம் கி.பி. 1885 - கி.பி 1905. இக்காலத்தில் காங்கிரஸ் பிரிட்டிஷாருக்கு விசுவாசமாகவே செயல்பட்டது.
- கி.பி. 1906 முதல் கி.பி. 1919 வரையிலான காலத்தில் சுதேசி இயக்கம் தீவிரவாத தேசியம், தன்னாட்சி இயக்கம் போன்றவை நடைபெற்றன.
- 1919 முதல் 1947 வரையிலான காலத்தை **காந்தி காலம்** எனப்படுகிறது.

**மிதவாத தேசிய இயக்கம் :**

- கி.பி. 1885 முதல் கி.பி. 1905 வரை காங்கிரஸ் தலைவர்கள் மிதவாதிகள். தங்களது கோரிக்கைகளை வென்றெடுக்க அமைதியான, முறைகளையே மதவாதிகள் பின்பற்றினர்.
- கி.பி. 1889ல் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆங்கில எம்.பி. **சார்லஸ் பிராட்லா.**



**தேசிய இயக்கத்தில் மிதவாதிகளின் முக்கிய தலைவர்கள் :**

- ஏ.ஓ.ஹியூம்
- டபிள்யூ.சி. பானர்ஜி.
- சுரேந்திரநாத் பானர்ஜி.
- தாதாபாய் நௌரோஜி.
- பெரோஸ் ஷா மேத்தா
- கோபால கிருஷ்ண கோகலே
- பண்டிட் மதன் மோகன்மாளவியா
- பக்ருதீன் தியாப்ஜி
- நீதிபதி ரானடே
- ஜி. சுப்பிரமணிய ஐய்யர்

- சுரேந்திரநாத் பானர்ஜி இந்தியாவின் பர்க் என்று அழைக்கப்பட்டார்.
- கி.பி. 1876 ல் அரசியல் சீர்திருத்தங்கள் கோரி போராடுவதற்காக இந்தியக் கழகம் ஒன்றை **இந்திய தேசியப் பேரவை** என்ற பெயரில் தோற்றுவித்தார்.
- பின்னர் 1886 ல் இந்திய தேசிய காங்கிரசுடன் இப்பேரவை இணைக்கப்பட்டது.
- ஜி. சுப்பிரமணிய அய்யர் சென்னை மகாஜன சபை மூலம் தேசியத்தை பரப்பினார்.
- **தி. இந்து, சுதேச மித்ரன்** போன்ற பத்திரிக்கைகளையும் அவர் நிறுவினார்.
- தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் முதுபெரும் மனிதர் என்று அழைக்கப்பட்டார்.
- பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் பொதுமக்கள் அவையில் உறுப்பினராக இருந்த முதல் இந்தியர் ஆவார்.
- கோபால கிருஷ்ண கோகலே காந்தியின் குருவாக கருதப்பட்டவர்.
- 1908 ல் அவர் **இந்தியப் பணியாளர் கழகத்தை** தோற்றுவித்தார்.



**தாதாபாய் நௌரோஜி**


**தீவிரவாத தேசிய இயக்கம் :**

- கி.பி. 1905ம் ஆண்டு வங்கப்பிரிவினையே தீவிரவாத இயக்கம் உருவாக முக்கிய காரணமாகும்.
- கி.பி. 1905 முதல் கி.பி. 1919 வரை இருந்த காங்கிரஸ் தலைவர்கள் தீவிரவாதத்தைப் பின்பற்றினர்.
- இந்தியர்களுக்குத் தேவையான அரசியல் உரிமையைப் போராடித்தான் பெற வேண்டும் என்றனர்.
- தீவிரவாதிகளின் முழக்கம் **கல்வி அளி, புரட்சி செய், ஒன்று திரட்டு.**

**தேசிய இயக்கத்தில் தீவிரவாதிகளின் முக்கிய தலைவர்கள் :**

- பாலகங்காதர திலகர்
- லாலா லஜபதிராய்
- பிபின் சந்திரபால்
- அரவிந்த கோஷ்

- பால கங்காதர திலகரை, லோகமானியத் திலகர் என்றும் அழைப்பர்.
- இவர் நடத்திய வார இதழ்கள் - மராட்டா மற்றும் கேசரி
- 1908 ல் ஆறாண்டுகாலம் சிறைவாசத்திற்காக மாண்ட்லே கொண்டு செல்லப்பட்டார்.
- 1916 ல் பூனாவில் தன்னாட்சிக் கழகத்தை அமைத்தார்.
- "சுயராஜ்யம் என்பது பிறப்புரிமை அதை நான் அடைந்தே தீருவேன்" என்று முழுங்கினார்
- **கோடி கைகளை உயர்த்தினால் தான் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும் - இதுவும்**




**திலகர்**

- லாலா லஜபதிராய் பஞ்சாபின் சிங்கம் என்று பலராலும் அறியப்பட்டார்.
- அமெரிக்காவில் 1916ல் தன்னாட்சிக் கழகத்தை லஜபதிராய் தோற்றுவித்தார்.
- சைமன் குழுவிற்கு எதிரான போலிஸ் தடியடியில் காயமடைந்து கி.பி. 1928 நவ. 17ல் லாகூரில் உயிர் நீத்தார்.
- பிபின் சந்திரபால் ஒரு மிதவாதியாக தனது வாழ்க்கையை தொடங்கி தீவிரவாதியாக மாறியவர்.
- அரவிந்த கோஷ் சுதேசி இயக்கத்தில் தீவிரமாக செயல்பட்டு சிறைபடுத்தப்பட்டார்.
- விடுதலையான பிறகு பிரெஞ்சுப் பகுதியான பாண்டிச்சேரியில் தங்கி ஆன்மீக நடவடிக்கையில் ஈடுபட்டார்.

**தீவிரவாதிகள் நடத்திய பத்திரிகைகள்:**

| | | |
|---|---|---|
| திலகர் | : | கேசரி |
| பிபின் சந்திரபால் | : | நியூ இந்தியா |
| அரவிந்த கோஷ் | : | வந்தேமாதரம் |
| அன்னிபெசன்ட் | : | நியூ இந்தியா |


**காந்தியின் வருகை:**




- தேசிய இயக்கத்தின் மூன்றாம் நிலை (1917 - 47) காந்தி காலம் எனப்படுகிறது.
- மகாத்மா காந்தி தேசிய இயக்கத்தின் தன்னிகரற்றத் தலைவராக விளங்கினார்.
- தேசிய இயக்கத்தை காந்தி மக்கள் இயக்கமாக மாற்றினார்.
- மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி கி.பி. 1869 அக்டோபர் 2 ஆம் நாள் குஜராத்தில் போர்பந்தர் என்ற ஊரில் பிறந்தார்.
- இங்கிலாந்து சென்று அவர் அங்கு நிலவிய இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான போராட்டத்தில் 20 ஆண்டுகள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.
- இறுதியாக 1915 ல் இந்தியா திரும்பிய பின்னர், இந்திய தேசிய இயக்கத்தை வழி நடத்திச் சென்றார்.
- கி.பி. 1917 ல் பீகாரில் சம்ப்ரான் என்ற இடத்தில் ஐரோப்பிய அவுரிச்செடி பண்ணையாளர்களுக்கெதிரான போராட்டத்தில் தனது முதல் சத்யா கிரகம் என்ற அறப்போர் முறையைத் தொடங்கினார்.
- கி.பி. 1918 ல் அகமதாபாத் ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஆதரித்து சாகும் வரை உண்ணா விரதத்தை காந்தி மேற்கொண்டார்.

**வங்கப்பிரிவினை (கி.பி. 1905)**


- கி.பி. 1905ல் கர்சன் பிரபு வங்காளத்தை நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்கப்படும் என அறிவித்தார்.
- ஆனால் ஆங்கிலேயர்களின் உண்மையான நோக்கம் வங்காளத்தில் இருந்த இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரித்து வைப்பது ஆகும்.
- கி.பி. 1905 அக்டோபர் 16 ம் நாள் வங்கப்பிரிவினை நடைமுறைக்கு வந்தது.
- அன்றே வங்காள மக்கள் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தி அன்றைய தினத்தை துக்க தினமாக அனுசரித்தனர்.
- பிரிவினை எதிர்ப்பு போராட்டம் சுதேசி இயக்கமாக வலுப்பெற்று இந்தியாவின் பிறப்பகுதிகளுக்கும் பரவியது.
- சுதேசி இயக்கத்தின் குறிக்கோள் இந்திய பொருட்களை மட்டும் பயன்படுத்துதல் என்பது ஆகும்.
- **சுதேசி இயக்கத்தின் விளைவாக அமைக்கப்பட்டவை :**
    1. பூனாவில் நெசவுக் கம்பெனி திலகர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
    2. வங்காளத்தில் அரவிந்தர் இந்துக் கல்லூரியை நிறுவினார்.
    3. வங்காளத்தில் பி.சி.ராய் அவர்களால் இரசாயன தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது.
    4. தமிழகத்தில் தூத்துகுடியில் வ.உ.சி யால் சுதேசி கப்பல் குழுமம் தொடங்கப்பட்டது.
- கி.பி. 1911ல் சுதேசி இயக்கத்தின் தீவிர போராட்டத்தின் வாயிலாக வங்காளம் ஒன்றிணைக்கப்பட்டது.




**திலகர்**



**அரவிந்தர்**



**பி.சி.ராய்**



**வ.உ.சி.**

**முஸ்லிம் லீக் கட்சி (கி.பி. 1906) :**

- **கி.பி.1906 டிச.30ல் முஸ்லீம் லீக் கட்சி, நவாப் சலிமுல்லா கான்** என்பவரால் தொடங்கப்பட்டது.
- இதன் தலைமையிடமாக லக்னோ செயல்பட்டது.
- இதன் முதல் மாநாடு கி.பி. 1907ம் ஆண்டு தற்போதைய பாகிஸ்தானில் கராச்சியில் கூடியது.
- இரண்டாவது மாநாடு கி.பி. 1908ம் ஆண்டு பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசில் கூடியது.
- இந்த மாநாட்டில் தான் முஸ்லீம்களுக்கு தனி இட ஒதுக்கீடு கேட்டுத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.
- இந்த தீர்மானத்தை நிறைவேற்ற கொண்டுவரப்பட்ட சட்டம் தான் மிண்டோ - மார்லி சீர்திருத்தச் சட்டம்.
- இச்சட்டம் கி.பி.1909ம் ஆண்டு இரண்டாம் மிண்டோ பிரபு காலத்தில் கொண்டு வரப்பட்டது.
- இச்சட்டத்தின்படி பேரரசு சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது.
- இச்சட்டத்தின்படி வைசிராய் குழுவில் இந்தியருக்கும் இடம் அளிக்கப்பட்டது.
- வைசிராய் குழுவில் இடம்பெற்ற முதல் இந்தியர் **சின்கா.**

**சூரத் பிளவு (கி.பி. 1907) :**

- கி.பி. 1906ம் ஆண்டு நடந்த காங்கிரஸ் மாநாட்டில் தாதாபாய் நௌரோஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- வங்கப்பிரிவனை பற்றி முடிந்த முடிவு என்று மார்லி பிரபு அறிவித்ததால் தீவிரவாதிகள் இத்தருணத்தில் திலகரே இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக வேண்டும் என்று விரும்பினர்.
- இச்சூழ்நிலையில் கி.பி. 1907ம் ஆண்டு நாக்பூரில் நடக்க இருந்த காங்கிரஸ் மாநாடு தாதாபாய் நௌரோஜியால் சூரத்துக்கு மாற்றியமைக்கப்பட்டது.
- சூரத்திற்கு சென்ற திலகர் ஆதரவாளர்களான தீவிரவாதிகள் அங்கே கூச்சலிட்டு கலகம் ஏற்படுத்தினர்.
- இதற்குப் பிறகு காங்கிரஸ் தலைமை இரண்டாகப் பிளவுற்று மிதவாதிகள் கோகலே தலைமையிலும், தீவிரவாதிகள் திலகர் தலைமையிலும் செயல்பட்டனர்.

**5ம் ஜார்ஜ் வருகை (கி.பி. 1911) :**

- கி.பி. 1911 ல் 5ம் ஜார்ஜ் மற்றும் அவரது மனைவி மேரி டெல்லிக்கு வருகை புரிந்தனர்.
- இவர்கள் வருகையின் நினைவாக மும்பையில் கட்டப்பட்டது **இந்தியாவின் நுழைவுவாயில்**(Gateway of India)
- அவர் வருகை புரிந்த காலத்தில் இந்திய வைசிராயாக இரண்டாம் ஹார்டிஞ்சு பிரபு பதவி வகித்தார்.
- இவர் வருகையின் போது டில்லி தர்பாரை கூட்டினர்.
- கி.பி. 1911 ல் இரண்டாம் ஹார்டிஞ்சு பிரபு வங்காளத்தை ஒன்றிணைத்தார்.
- கி.பி. 1911, டிசம்பர் 27ம் நாள் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் இந்தியாவின் தேசிய கீதமான ஜன கனமனகதி என்ற பாடல் முதன்முறையாக பாடப்பட்டது.

# முதல் உலகப்போர் (கி.பி.1914 – கி.பி. 1918)

- உலக வரலாற்றில் முதன்முறையாக உலகின் பெரும்பான்மை நாடுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ போரில் பங்கேற்றன. எனவே இப்போர் உலகப்போர் எனப்பட்டது.

## போருக்கான காரணங்கள் :

- **ஜெர்மனியின் பேராசை**
  கி.பி.1870ம் ஆண்டு ஜெர்மனி உலகஅரங்கில் தனது மதிப்பை உயர்த்துவதற்கும் தன் பாதுகாப்பிற்கும் 2ம் கெய்சர் வில்லியம் படை வலிமையை பெருக்கி வடகடலில் உள்ள **ஹெலிகோலாண்ட்** என்னும் இடத்தில் கப்பற்படையை நிறுத்தினார்.
- **இரகசிய உடன்படிக்கை**
  கி.பி.1882ல் இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரியா மூன்று நாடுகளும், கி.பி.1907ல் இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா மூன்று நாடுகளும் முக்கூட்டு உடன்படிக்கை செய்து கொண்டன.
- **மொராக்கோ பிரச்சனை**
  ஆப்பிரிக்க நாடான மொராக்கோவை பிரான்ஸ் கைப்பற்றியது. இதனால் ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் இடையே போர் மூண்டது.
- **பால்கன் பிரச்சனை**
  கி.பி.1912ம் ஆண்டு பால்கன் நாடுகள் துருக்கிக்கு எதிராக போரை அறிவித்தன. இது முதல் பால்கன் போர் எனப்பட்டது. இப்போரில் துருக்கித் தோற்கடிக்கப்பட்டு லண்டன் உடன்படிக்கையின்படி போர் முடிவுக்கு வந்தது.






### உடனடிக் காரணங்கள்

- கி.பி.1878ம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா பகுதிகளை ஆட்சி செய்யும் உரிமை ஆஸ்திரியா - ஹங்கேரிக்கு வழங்கப்பட்டது.
- போஸ்னியா தலைநகர் செராஜிவோ நகரில் செர்பிய தீவிரவாத இளைஞன் ஒருவனால் ஆஸ்திரிய நாட்டு இளவரசர் பிரான்ஸிஸ் பெர்டினான்டும், மனைவி இசெபெல்லாவும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- முதல் உலகப்போர் 1914ம் ஆண்டு ஜூலை 28ல் தொடங்கி 1918ம் ஆண்டு நவம்பர் 11ல் முடிவுற்றது.
- போரின்போது ஜெர்மனி தலைமையில் மையநாடுகளும், இங்கலாந்தின் தலைமையில் நேசநாடுகளும் போரில் பங்கு பெற்றன.
- 1919ம் ஆண்டு பாரீசில் நடைபெற்ற அமைதி மாநாட்டில் வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் மூலம் முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது.

ஆகாஷ் வரலாறு

**லக்னோ ஒப்பந்தம் (கி.பி. 1916) :**

- கி.பி. 1907 ல் சூரத் காங்கிரஸ் பிளவிற்குப் பிறகு மிதவாதிகளும், தீவிரவாதிகளும் கி.பி. 1919 ல் லக்னோவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஒன்றிணைந்தனர்.
- இம்மாநாட்டை தலைமைத் தாங்கி நடத்தியவர் அம்பிகா சரண், மஜும்தார்.
- இந்த மாநாட்டில் காங்கிரஸின் இரு பிரிவுகளும் மற்றும் முஸ்லீம்லீக் கட்சியும் ஒன்றிணைந்து திலகர் தலைமையில் ஒப்பந்தம் கையெழுத்தாகின. இதுவே **லக்னோ ஒப்பந்தம்** எனப்பட்டது.
- இதற்கு **காங்கிரஸ் லீக் திட்டம்** என்ற பெயரும் உண்டு.

**ஆகஸ்ட் அறிக்கை (கி.பி. 1917) :**

- முதல் உலகப்போரில் இந்தியர்களை ஈடுபடுத்துவதற்காக கி.பி. 1917, ஆகஸ்ட் 20ம் நாள் இந்திய விவகாரச் செயலாளராக இருந்த எட்வின் சாமுவேல் மாண்டேகு என்பவர் எதிர்கால இந்தியாவின் அரசியல் கொள்கைகளை பாராளுமன்றத்தில் அறிவித்தார். இதுவே **ஆகஸ்ட் அறிக்கை** எனப்பட்டது.
- இந்த அறிக்கையின்படி முதல் உலகப் போருக்குப் பின் இந்தியர்களுக்கு படிப்படியாக பொறுப்பாட்சி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

**ரௌலட் சட்டம் (கி.பி. 1919) :**

- இச்சட்டத்தின் படி இந்தியர்கள் அனைவரையும் விசாரணையின்றி கைது செய்யவோ, சிறையில் அடைக்கவோ அதிகாரிகளுக்கு உரிமை வழங்கப்பட்டது.
- இவ்வாறு விசாரணையின்றிச் சிறை என்றதால் **கறுப்புச் சட்டம்** எனப்பட்டது.
- இச்சட்டத்தினை இந்திய மக்கள் மிகக் கடுமையாக எதிர்த்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

**மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் (கி.பி. 1919) :**

- இச்சட்டத்தின்படி 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தியாவின் நிர்வாகத்தை விசாரிக்க ஆங்கிலேய குழு இந்தியாவிற்கு வருகை புரிந்து அதன் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.
- இந்தியாவுக்கான அரசு செயலர் மாண்டேகுவும், இந்திய அரசப்பிரதிநிதியான செம்ஸ்போர்டும் கி.பி. 1919ல் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இச்சட்டத்தை இயற்றினர்.
- கிறிஸ்துவர்கள், ஆங்கிலோ - இந்தியர்கள், சீக்கியர்கள் ஆகிய மூன்று இனமக்களுக்கு தனித்தொகுதிகள் வழங்கப்பட்டன.
- மேலும் இச்சட்டத்தின்படி மாகாணங்களில் **இரட்டை ஆட்சிமுறை** அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஆகாஷ் டிப்ஸ்**

**தேர்வின் பாட அட்டவணையை நன்கு அறிந்து அதனை பட்டியலிட்டு படித்தல் வேண்டும். முந்தைய வினாத்தாள்கள் பலவற்றை ஆராய்ந்து அதற்கேற்ப திட்டமிடுதல் நன்று.**

**ஜாலியன் வாலாபாக் படுகொலை (கி.பி. 1919) :**

- கி.பி. 1919, ஏப்ரல் 11ம் நாள் பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசில் ரௌலட் சட்டத்தை எதிர்த்து சைபுதின் கிச்சலு மற்றும் சத்தியபால் ஆகிய இருவரும் போராட்டத்தில் ஈடுபட்டதால், அரசாங்கம் இவர்களை கைது செய்தது.
- இதனை தொடர்ந்து ஏற்பட்ட போராட்டத்தை ஒடுக்க ராணுவத் தளபதி ஜெனரல் ஓ.டயர் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தார்.
- இதனை எதிர்க்கும் விதமாகவும், கைது செய்த இருவரையும் விடுவிக்கக் கோரியும் கி.பி. 1919, ஏப்ரல் 13ம் நாள் ஜாலியன் வாலாபாக் என்னும் பூங்காவில் பொதுமக்கள் திரண்டனர்.
- அவர்களை இராணுவத் தளபதி ஜெனரல் ஓ.டயர் கண்மூடித்தனமாக சுட்டதில் சுமார் 1500 இந்தியர்கள் கொல்லப்பட்டனர். இதுவே ஜாலியன் வாலாபாக் படுகொலை எனப்பட்டது.
- இந்தப் படுகொலையை எதிர்த்து இரவீந்திரநாத் தாகூர் ஆங்கிலேயர்கள் தனக்கு வழங்கிய **நைட் ஹுட் (Knight hood)** என்ற பட்டத்தை திருப்பி அளித்தார்.
- அதைப்போல மகாத்மா காந்தியடிகளும் **ஹெய்சர் - இ - ஹிந்த்** என்ற பட்டத்தை திருப்பி அளித்தார்.
- இந்தப் படுகொலையை விசாரிக்க ஹண்டர் விசாரணைக் குழு 1919 -லேயே அமைக்கப்பட்டது.





ஜாலியன் வாலாபாக் மைதானம்



ஜெனரல் டயர்


**கிலாபத் இயக்கம் (கி.பி. 1920) :**

- முதல் உலகப்போரின் போது துருக்கி சுல்தான், ஆங்கில அரசால் அவமதிக்கப்பட்டதை எதிர்த்து துருக்கியில் **கிலாபத் இயக்கம்** தோன்றியது.
- உலகளாவிய இந்த இயக்கத்தை இந்தியாவில் ஆரம்பித்தவர்கள் **முகமது அலி, சவுகத் அலி.**
- காங்கிரஸ் கட்சி கிலாபத் இயக்கத்தை ஆதரித்தது. இந்து - முஸ்லிம்களை இணைக்க முயன்றது.
- கிலாபத் இயக்க செயற்குழுவில் காந்தி மட்டும் இடம் பெற்றார்.

**ஒத்துழையாமை இயக்கம்(கி.பி. 1920) :**

- ஒத்துழையாமை இயக்கம் என்பது சட்டசபைகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள் ஆகியவற்றில் இந்தியர்கள் ஆங்கிலேயருடன் ஒத்துழைப்பதை நிறுத்துதல்.
- இந்த இயக்கத்தை காந்தியடிகள் 1920, ஆகஸ்ட் 1ம் நாள் தொடங்கினார்.
- முதல் உலகப் போரில் இங்கிலாந்துக்கு இந்தியா உதவியதற்கு நன்றி தெரிவிக்க கி.பி. 1921ல் இங்கிலாந்து இளவரசர் வேல்ஸ் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்.
- வேல்ஸ் வருகையை எதிர்த்து ஹர்த்தால் நடைபெற்றதால் காங்கிரஸ் கட்சியை தடை செய்ய உத்தரவிட்டார்.
- இதன் விளைவாக பல்வெறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. அதன் ஒருபகுதியாக உத்திரபிரதேசம் மாநிலத்தில் சௌரிசௌரா என்ற கிராமத்தில் போராட்டக்காரர்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டை எதிர்த்து காவல் நிலையத்திற்கு தீ வைக்கப்பட்டது. இதுவே **சௌரி சௌரா சம்பவம்** எனப்பட்டது.
- சௌரி சௌரா நிகழ்ச்சி நிகழ்ந்தது **1922, பிப்ரவரி 4.**
- இதில் 23 ஆங்கிலேய காவலர்கள் கொல்லப்பட்டனர். இதன் காரணமாக காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை கைவிட்டார். எனினும் கி.பி. 1922, மார்ச் 10ல் காந்தியடிகள் கைது செய்யப்பட்டார்.

**சுயராஜ்ய கட்சி (கி.பி. 1923):**



**சி.ஆர். தாஸ்     மோதிலால் நேரு**

- காந்தியடிகள் கைது செய்யப்பட்ட பிறகு சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு ஆகிய இருவரும் இணைந்து **காங்கிரஸ் கிலாபத் சுயராஜ்ய கட்சியை** கி.பி. 1923, ஜனவரி 1ம் நாள் ஆரம்பித்தனர்.
- சி.ஆர்.தாஸ் தலைவராகவும், மோதிலால் நேரு செயலாளராகவும் கட்சியில் பொறுப்பேற்றனர்.
- இந்த கட்சி 1923 ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 146 இடங்களில் போட்டியிட்டு 45 இடங்களில் வெற்றி பெற்றுபாராளுமன்றத்தில் தங்களுடைய ஒத்துழையாமை கொள்கையை கடைபிடித்தனர்.
- பின்னர் சி.ஆர்.தாஸ் மறைவிற்குப் பிறகு அக்கட்சி கலைக்கப்பட்டது.

**சைமன் குழு (கி.பி. 1927):**

- மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத்தின் படி கி.பி. 1929ல் வரவேண்டிய இந்தியாவிற்கான ஆங்கிலேயக் குழு இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே வருகை புரிந்தது.
- இக்குழு சர் ஜான் சைமன் தலைமையில் 7 உறுப்பினர்களோடு கி.பி. 1928, பிப்ரவரி 7ல் பம்பாய்க்கு வந்தது.
- இக்குழுவில் இந்தியர் எவரும் இடம்பெறாததால் காங்கிரஸ் அதனை எதிர்த்து சைமனே திரும்பிப்போ என்ற முழக்கத்தோடு பம்பாயில் தங்கள் போராட்டத்தை தொடங்கினர்.
- பின்னர் சைமன் குழு கி.பி. 1928, நவம்பர் மாதம் லாகூர் சென்றபோது பஞ்சாப் சிங்கம் **லாலா லஜபதிராய்** தலைமையில் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.
- அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தடியடியில் லாலா லஜபதிராய் கி.பி. 1928, நவம்பர் 17ல் கொல்லப்பட்டார்.
- பின் நாளில் தடியடி நடத்திய காவலரைச் பகத்சிங் சுட்டுக் கொன்றார்.
- பகத்சிங் தூக்கிலிடப்பட்டு வீரமரணம் அடைந்த நாள் 23-3-1931.
- **அப்போது அவரது முழக்கம்:** இன்குலாப் ஜிந்தாபாத்! என் இதயத்தில் தியாகம்; உடைகளில் காவி.

**பூரண சுயராஜ்யம் (கி.பி. 1929):**

★ இங்கிலாந்தில் கி.பி. 1929, மே மாதம் புதிய பிரதமராக தொழிற்கட்சியை சேர்ந்த ராம்சே மெக்டொனால்டு என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ இவர் இந்திய அரசாங்கத்திற்கு டோமினியன் அந்தஸ்து வழங்க முடிவு செய்தார்.

★ ஆனால் கி.பி. 1929, டிசம்பர் மாதம் லாகூருக்கு அருகில் ராவி நதிக்கரையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் பூரண சுயராஜ்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★ இத்தீர்மானத்தின் படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 26ம் நாள் சுதந்திர தினமாக இந்தியர்கள் கொண்டாட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்தது.

★ இதன்படி 1930 ஜனவரி 26ம் நாள் சுயராஜ்ய தினமாக நாடெங்கிலும் கோலகலமாகக் கொண்டாடப்பட்டது.

**சட்டமறுப்பு இயக்கம் (கி.பி. 1930):**

◘ கி.பி. 1930, பிப்ரவரி 14 ல் காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்தில் சட்டமறுப்பு இயக்கத்தை அறிவித்தார்.

◘ இதன் ஒரு அம்சமாக உப்புச் சட்டத்தை மீறி போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்து கி.பி. 1930, மார்ச் 12ம் நாள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து 78 சீடர்களோடு சுமார் 385 கி.மீ தொலைவில் உள்ள தண்டி என்னும் இடத்தை நடைபயணமாக சென்று உப்பு சத்தியாகிரகம் நடத்தினார்.

◘ தமிழ்நாட்டில் உப்புசத்தியாகிரகத்தை சி.இராஜகோபாலச்சாரியார் (இராஜாஜி) தலைமையேற்று 100 தொண்டர்களோடு திருச்சியிலிருந்து வேதாரண்யத்திற்கு யாத்திரையாக சென்று உப்புச் சட்டத்தை மீறினார்.

◘ **உப்புச் சத்தியாகிரகம் நடைபெற்ற பிற இடங்கள்:**

1. சென்னை - அடையாறு முதல் மெரீனா கடற்கரை வரை - டி.பிரகாசம், என்.நாகேஸ்வரராவ்
2. மலபார் - பையனூர் முதல் கோழிக்கோடு வரை - கே.கேலப்பன்

◘ கி.பி. 1930, மே 4ம் தேதி காந்தியடிகள் கைது செய்யப்பட்டு பூனாவில் உள்ள எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார்.

**வட்ட மேசை மாநாடுகள்**

★ முதல் வட்டமேசை மாநாடு நடைபெற்ற ஆண்டு 1930, நவம்பர் 12. நடைபெற்ற இடம் - லண்டன்.

★ இந்த மாநாட்டை இங்கிலாந்து பிரதமர் ராம்சே மெக்டொனால்டு தலைமையேற்று நடத்தினார்.

★ இந்த மாநாட்டில் காந்தியும், காங்கிரஸ் தலைவர்களும் கலந்து கொள்ளவில்லை.

★ இரண்டாவது வட்டமேசை மாநாடு நடைபெற்ற ஆண்டு 1931, செப்டம்பர். நடைபெற்ற இடம் - லண்டன்.

★ இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக காந்திக்கும், இர்வின் பிரபுவுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் காந்தி இர்வின் ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது. (கி.பி.1931, மார்ச்)

★ இந்த ஒப்பந்தத்தின் படி சட்டமறுப்பு இயக்கத்தை கைவிட காந்தி சம்மதித்தார். கைதானவர்களை விடுவிக்க அரசு சம்மதித்தது.

★ இதன்படி இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் மட்டும் காந்தியடிகள் கலந்துக் கொண்டார்.

★ இரண்டாவது மாநாட்டில் மாதர் பிரதிநிதியாக சரோஜினி நாயுடு கலந்து கொண்டார்.

★ மூன்றாவது வட்டமேசை மாநாடு நடைபெற்ற ஆண்டு 1932, ஆகஸ்ட் 17. நடைபெற்ற இடம் - லண்டன்.

★ மூன்றாவது வட்டமேசை மாநாட்டில் காந்தியடிகள் மற்றும் காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளவில்லை.

★ இந்த மூன்று மாநாடுகளிலும் டாக்டர் அம்பேத்கார் கலந்து கொண்டார்.

★ பூனா - ஒப்பந்தம் (1932, செப்டம்பர் 26) : காந்தி-அம்பேத்கார் உடன்பாடு, SC, ST தனித்தொகுதி வாபஸ்.

**இந்திய அரசுச் சட்டம் (கி.பி. 1935)**

சைமன் குழு அறிக்கை மற்றும் மூன்று வட்டமேஜை மாநாடுகளின் முடிவுகளைக் கொண்டு ராம்சே மெக்டொனால்டு கி.பி. 1935ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் என்ற பெயரில் ஒரு வெள்ளை அறிக்கையை சமர்பித்தார்.

**அம்சங்கள்:**

1) மாகாணங்களில் சுயாட்சி. (இரட்டையாட்சி நீங்கியது)

2) மத்தியில் கூட்டாட்சி (இரட்டையாட்சி)

இந்திய அரசுசட்டத்தின் படி கி.பி. 1937ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் 8 மாகாணங்களில் ஆட்சியமைத்தது.

## இரண்டாம் உலகப் போர் (கி.பி.1939 முதல் கி.பி.1945வரை)

**போருக்கான காரணங்கள்**

1. வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் குறைபாடுகள்
2. சர்வதேச சங்கத்தின் தோல்வி
3. ஜப்பானின் எழுச்சி
4. சர்வாதிகார எழுச்சி
5. சிறுபான்மையினரின் பிரச்சனைகள்
6. ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு கொள்கை

★ உடனடிக் காரணம் - கி.பி.1939ம் ஆண்டு ஹிட்லர் போலந்து நாட்டின் மீது மின்னல் வேகத் தாககுதல் (பிலிட்ஸ்கிரீக் - BLITZ KRIEG) நடத்தி போலந்தைக் கைப்பற்றினார்.

★ முசோலினி நேச நாடுகளுக்கு எதிராக போர் அறிவிப்பு செய்து பிரான்சினுடைய பகுதிகளைக் கைப்பற்றினார்.

★ ஹிட்லர் லூஃப்ட்வோஃப் (Luftwaffe) என்ற வான்வழி தாக்குதலும், U வடிவ நீர்மூழ்கி கப்பல் மூலமும் பிரிட்டன் மற்றும் இங்கிலாந்து மீது தாக்குதல் நடத்தினார்.

★ கி.பி.1941ம் ஆண்டு டிசம்பர் 7ம் தேதி முத்து துறைமுகத்தில் இருந்த அமெரிக்க கடற்படை தளத்தை ஜப்பான் தாக்கியது.

★ இதனால் கி.பி.1945ம் ஆண்டு ஆகஸ்டு 6 மற்றும் 9ம் தேதி ஜப்பானின் இருபெரும் நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி ஆகியவற்றை அணுகுண்டு வீசி அமெரிக்கா அழித்தது. இதனால் ஜப்பான் சரணடைந்தது.

இத்துடன் 2ம் உலகப்போர் முடிவுக்கு வந்தது.

**தனிநபர் சத்தியாகிரகம்(கி.பி. 1940) :**

- இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இந்தியர்களின் ஒத்துழைப்பை பெறும் பொருட்டு ஆகஸ்ட் 8ம் நாள் ஆகஸ்ட் நன்கொடையை அரசாங்கம் வெளியிட்டது.
- காந்தி இந்த நன்கொடையை எதிர்த்து உருவாக்கியது தான் தனிநபர் சத்தியாகிரகம்.
- தனிநபர் சத்தியாகிரகம் செய்தவர்கள் :

1. ஆச்சார்யா வினோபா பாவே - மூன்று மாதம் சிறை தண்டனை.
2. ஜவஹர்லால் நேரு - நான்கு மாதம் சிறை தண்டனை.
3. சர்தார் வல்லபாய் பட்டேல் - நவம்பர் 17ல் கைதானார்.
4. சுபாஷ் சந்திர போஸ் - தடுப்புக் காவல்

## கிரிப்ஸ் தூதுக்குழு (1942)

★ ஸ்டஃபோர்டு கிரிப்ஸ் தலைமையிலான குழு கி.பி. 1942, மார்ச் 23ல் இந்தியாவிற்கு வருகை புரிந்தது.
★ இந்தக்குழு இரண்டாம் உலகப்போரில் இந்தியர்கள் பங்குபெற வேண்டும் என்று வலியுறுத்தியது.
★ கிரிப்ஸ் திட்டத்தை எதிர்த்த காந்தியடிகள் மூழ்கிக் கொண்டிருக்கும் வங்கியின் மீது பின் தேதியிட்டு எழுதப்பட்ட காசோலையே கிரிப்ஸ் திட்டம் என விமர்சித்தார்.

## ஆகஸ்ட் புரட்சி (1942)

★ கி.பி. 1942 ஆகஸ்ட் 7 - 8 ல் பம்பாயில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது.
★ இதில் செய் அல்லது செத்து மடி, வெள்ளையனே வெளியேறு என்று காந்திஜி முழக்கம் செய்து ஆங்கிலேயர்களுக்கு எதிரான அறப்போரை அறிவித்தார்.
★ இதன் காரணமாக ஆகஸ்ட் 9ம் நாள் அதிகாலையில் ஆயிரக்கணக்கில் இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர். இதுவே **ஆகஸ்ட் புரட்சி** வெடிக்க காரணமாக அமைந்தது.

## வேவல் திட்டம் (1945)

- இந்திய வைசிராய் வேவல் பிரபு லண்டன் சென்று பிரிட்டிஷ் பிரதமருடனும், இந்திய விவகாரச் செயலருடனும் கலந்துரையாடி கி.பி. 1945 ஜூலை 14ம் நாள் ஆங்கில அரசின் சார்பில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.
- இந்த அறிவிப்பே வேவல் திட்டம் என்று அழைக்கப்படுகிறது.
- இந்த திட்டத்தின் படி வைசிராய் மற்றும் தலைமை தளபதி தவிர அனைத்து பிரதிநிதிகளும் இந்தியர்கள் ஆவர்.
- இந்தியர்கள் தங்களுக்கென ஒரு அரசியல் அமைப்பு சட்டமன்றத்தை உருவாக்கலாம்.
- வேவல் திட்டப்படி இந்திய அரசியல் தலைவர்கள் கொண்ட ஒரு மாநாட்டை வைசிராய் வேவல் பிரபு கி.பி. 1945 ஜூன் 25ம் நாள் சிம்லாவில் கூட்டினார். இது சிம்லா மாநாடு என்று அழைக்கப்படுகிறது.

### அமைச்சரவை தூதுக்குழு (கி.பி. 1946) :

- இரண்டாம் உலகப் போருக்குப் பின் இங்கிலாந்து பிரதமராக அட்லி பிரபு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- கி.பி. 1946 மார்ச் 15ம் நாள் அட்லி பிரபு இந்தியர்கள் சுயமாக அரசியலமைப்பை வடிவமைத்துக் கொள்ளலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.
- இதன்படி இந்தியாவிற்கு சர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ், ஏ.வி. அலெக்சாண்டர் மற்றும் பெத்திக் லாரன்ஸ் ஆகியோர் கொண்ட ஒரு குழுவை அட்லி பிரபு இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார்.
- அரசியலமைப்பை ஏற்படுத்தும் வரையில் இடைக்கால அரசு ஒன்றை ஏற்படுத்த வலியுறுத்தியது.
- இதனைத் தொடர்ந்து கி.பி. 1946 ஜூலை யில் நடந்த தேர்தலில் காங்கிரஸ் 214 இடங்களில் 205 லும், முஸ்லீம் லீக் கட்சி 78 இடங்களில் 73 லும் வெற்றி பெற்றது.
- எனவே கி.பி. 1946 செப்டம்பர் 2ம் நாள் நேரு தலைமையில் இடைக்கால அரசுப் பதவியேற்றது.

### இடைக்கால அரசு(கி.பி. 1946) :

- இடைக்கால அரசு அமைச்சரவையில் 14 உறுப்பினர்கள் இடம் பெற்றனர்.
- உறுப்பினர்கள் :
  1. ஜவர்ஹலால் நேரு (நிர்வாகக் கவுன்சிலின் துணைத் தலைவர்)
  2. சர்தார் வல்லபாய் பட்டேல் (உள்துறை, தகவல் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு துறை)
  3. பல்தேவ் சிங் (ராணுவம்)
  4. டாக்டர். ஜான் மத்தாய் (தொழில் துறை)
  5. சி.ராஜகோபாலச்சாரியார் (கல்வி)
  6. சி.எச்.பாபா (பணிகள், சுரங்கம் மற்றும் ஆற்றல்)
  7. இராஜேந்திர பிரசாத் (உணவு மற்றும் விவசாயம்)
  8. ஆஸப் அலி (ரயில்வே)
  9. ஜகஜீவன் ராம் (தொழிலாளர்)
  10. லியாகத் அலிகான் (நிதி)

11. டி.டி.சந்திரிகார் (வர்த்தகம்)
12. அப்துல் ராப் நிஸ்தார் (போக்குவரத்து)
13. ஹசான்பர் அலிகான் (சுகாதாரம்)
14. ஜோகேந்திரநாத் மண்டல் (சட்டம்)

## இந்திய சுதந்திரச் சட்டம் (1947 ஜுலை 18)

★ சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் **மௌண்ட்பேட்டன்.**
★ மௌண்ட் பேட்டனுக்குப் பின் இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்தவர் **இராசகோபாலாச்சாரியார்.**
★ கவர்னர் ஜெனரலாக இருந்த ஒரே **இந்தியர் ராஜாஜி.**
இந்தியா சுதந்திரம் அடைந்த போது இந்தியாவில் இருந்த சுதேச அரசுகளின் எண்ணிக்கை 565.
★ அவற்றில் 562 ஐ உடனடியாக (1947ல்) இந்தியாவுடன் இணைத்தவர் சர்தார் வல்லபாய் படேல்.
★ கடைசியாக இணைந்த மூன்று பகுதிகள் : காஷ்மீர், ஹைதராபாத், ஜுனகாத்.
★ 1949ல் மக்கள் பிரதிநிதிகள் வாக்கெடுப்பின்படி இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பிரெஞ்சுப் பகுதிகள் **பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனாம்.**
★ இந்தியப் படைகள் கோவாவைக் கைப்பற்றிய ஆண்டு **1961.**
★ (போர்ச்சுக்கீசிய வசமிருந்த பகுதிகள், **கோவா, டையூ, டாமன்**)

# விடுதலை வீரர்கள்

## தாதாபாய் நௌரோஜி :

◘ இந்தியாவின் தலைசிறந்த தேச பக்தர்களில் ஒருவராக விளங்கியவர் தாதாபாய் நௌரோஜிஆவார்.
◘ **தேச பக்தியின் சின்னம்** என்று பாராட்டப்பட்டவர் நௌரோஜி.
◘ தாதாபாய் நௌரோஜி பம்பாயில் 1825 செப்டம்பர் 4 -ம் தெதி ஓர் எளிய பார்சி புரோகிதர் குடும்பத்தில் பிறந்தார்.
◘ தனது நான்காம் வயதில் தந்தையை இழந்தார்.
◘ தனது பதினொராம் வயதில் குல்பாய் என்ற ஏழு வயதுப் பெண்ணை மணந்தார்.
◘ பம்பாய் மாநிலத்திலுள்ள எல்பின்ஸ்டன் நிறுவனத்தில் பயின்றார். கி.பி. 1840 -ல் கிளேர் உதவித்தொகை (Clare Scholarship)பெற்று பயின்றார்.
◘ பள்ளிப் படிப்பை முடித்தபின் கி.பி. 1851 -ல் எல்பின்ஸ்டன் கல்லூரியில் உதவித் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.
◘ கி.பி. 1853 -ல் அதே கல்லூரியில் கணித உதவிப் பேராசிரியர் ஆனார்.
◘ இந்தியாவிலேயே முதன் முதலாக பெண்களுக்கான பள்ளி ஒன்றை நிறுவினார். எனவே இவரை "பெண் கல்வியின் தந்தை" என்று மக்கள் பாராட்டினர்.
◘ "உண்மை விளம்பி"(Truth Teller)என்ற மாதமிருமுறை இதழைத்தொடங்கினார்.
◘ கி.பி. 1852 ஆக.26ல் "பம்பாய் சங்கம்"(BombayAssociation) என்ற அமைப்பை தொடங்கினார்.
◘ கி.பி. 1891 -ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
◘ பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் தாதாபாய் நொளரோஜி ஆவார்.
◘ தாதாபாய் நௌரோஜி 1886, 1893, 1906 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்
◘ கி.பி. 1906 -ல் காங்கிரஸ் தலைவராக பதவி ஏற்ற போது ஆற்றிய உரையில் "இந்தியர்கள் கேட்பது சலுகைகள் அல்ல தன்னாட்சியே" என்று கூறினார்.
◘ கி.பி. 1867 -ல் "Two Wants and Means of India" என்ற நூலையும், கி.பி. 1871 -ல் "On the Commerce of India" என்ற நூலையும் வெளியிட்டார்.

- "Poverty and UnBritish Rule in India" என்ற நூல் தொகுப்பை வெளியிட்டார்.
- 1917 -ல் பம்பாய் பல்கலைக்கழகம் தாதாபாய்க்கு "சட்டமேதை" (Doctor of Laws) பட்டம் கொடுத்துச் சிறப்பித்தது.
- 1917 -ல் ஜூன் 30 -ல் தாதாபாய் நௌரோஜி காலமானார்.

## <u>பாலகங்காதர திலகர் :</u>

- இந்திய தேசிய எழுச்சியின் தந்தை எனப் போற்றப்படுபவர் - லோகமான்ய பாலகங்காதர திலகர்.
- பாலகங்காதர திலகர் **மகாராஷ்டிரா மாநிலத்தில் ரத்னகிரி** மாவட்டத்தில் **கிசல்** என்ற கிராமத்தில் கி.பி.1856 ஜூலை 23ம் நாள் அந்தணக் குடும்பத்தில் பிறந்தார்.
- ★ 10வது வயதில் தன் தாயையும், 15வது வயதில் தன் தந்தையையும் இழந்தார்.
- ★ பூனாவில் பள்ளிப் படிப்பையும், கல்லூரி படிப்பையும் பயின்று பின்னர் வக்கீலாகப் பணியாற்றினார்.
- ★ தீவிரவாதிகளின் தலைவராகத் திகழ்ந்தவர் **திலகர்.**
- ★ கி.பி. 1870ம் ஆண்டு பூனலாவஜனக் சபா என்ற தொண்டு நிறுவனத்தைத் தொடங்கினார்.
- ★ கி.பி. 1880ம் ஆண்டு நியூ இங்கிலீஷ் ஸ்கூல் என்ற ஆங்கிலப் பள்ளியைப் பூனாவில் தொடங்கினார்.
- ★ பின்னர் இப்பள்ளி பர்குசன் கல்லூரி என்று கல்லூரியாக வளர்ச்சியடைந்தது.
- ★ கி.பி. 1885ம் ஆண்டு டெக்கான் எஜூகேஷன் சொசைட்டியை நிறுவினார்.
- ★ கேசரி என்ற பத்திரிக்கையை மராட்டிய மொழியிலும், மராட்டா என்று ஆங்கிலத்திலும் தொடங்கினார்.
- ★ லோகமான்யா திலகர் எழுதிய நூல் **கீதா ரகசியம்.** அவர் எழுதிய புத்தகம் **ஓரியன்** (ரிக் வேதம்).
- ★ மகாராஷ்டிராவில் விநாயகர் சதுர்த்தி விழாவைத் தொடங்கி வைத்தவர்.
- ★ கி.பி. 1905ம் ஆண்டு வங்கப் பிரிவினை எதிர்ப்பு இயக்கத்தை பம்பாயில் தொடங்கினார்.
- ★ கி.பி. 1916ல் தன்னாட்சி இயக்கத்தை பூனாவில் ஆரம்பித்தார்.
- ★ பாலகங்காதர திலகரின் முழக்கங்கள் :
  1. சுதந்திரம் நமது பிறப்புரிமை; அதை நாம் அடைந்தே தீருவோம்.
  2. விடுதலை தான் சொர்க்கம்; அடிமை வாழ்வு நஞ்சு.
  3. நாம் சுதந்திரம் அடைந்தே தீருவோம்.
- ★ கி.பி. 1920 செப்டம்பர் 30ம் நாள் பாலகங்காதர திலகர் மரணமடைந்தார்.

## <u>கோபால கிருஷ்ண கோகலே</u>

- 1865 -ல் மகாராஷ்டிர மாநிலத்தில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார்.
- கி.பி. 1884 -ல் தன்னுடைய பட்டப் படிப்பை முடித்த பிறகு தாய் நாட்டின் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.
- நீதிபதி ரானடேயை கோகலே தனது அரசியல் குருவாகக் கருதினார்.
- ரானடே உருவாக்கிய தக்காணக் கல்விச் சங்கத்தில் சேர்ந்தார்.
- பின்னர் பூனாவிலிருந்த பெர்குசன் கல்லூரியில் பொருளாதார, வரலாற்றுப் பேராசிரியராகச் சேர்ந்து கி.பி. 1902 வரை பணிபுரிந்தார்.
- கி.பி. 1905 -ம் ஆண்டு கோகலே காசியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தலைமை பொறுப்பேற்றார்.
- இவர்கள் கையாண்ட முறைகள் விண்ணப்பங்கள், வேண்டுகோள்கள் விடுப்பது போன்றவையே!.
- கி.பி. 1905 -ல் காசியில் நடைபெற்ற மாநாட்டில் வங்காளப் பிரிவினை எதிர்ப்பியக்கத்தை ஆதரித்ததுடன் "பேரரசுக்குட்பட்ட தன்னாட்சியே இந்தியத் தேசிய காங்கிரசின் குறிக்கோள்" என்று பேசினார்.
- 1905 -ல் "இந்திய ஊழியர் சங்கத்தைத்" (Servants of India Society) துவக்கினார்.
- இதில் ஸ்ரீனிவாச சாஸ்திரி, N.M.ஜோஷி, பண்டிட் இருதயநாத் குன்ஸ்ரு போன்றோர் உறுப்பினர்களாக இருந்தனர்.
- கி.பி. 1912 ல் தான் "இந்தியாவிற்கு வந்து இந்திய மக்களுக்கு சேவை புரியுமாறு" காந்தியிடம் கேட்டுக் கொண்டார்.
- கி.பி. 1915ம் ஆண்டு பிப்ரவரி 15ம் நாள் கோபால கிருஷ்ண கோகலே மரணமடைந்தார்.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

- **மரணத்தின் போது திலகர் கூறியது :-**
  "இது களி கொள்ளும் நேரமல்ல, கண்ணீர் சிந்த வேண்டிய நேரம், மராட்டியத்தின் மாமணி, இந்தியாவின் இணையற்ற வைரம், ஒப்பற்ற தொண்டர் இங்கே மீளாத் துயிலில் திளைத்துள்ளார்".
- **மரணத்தின் போது லாலஜபதிராய் கூறியது :-**
  "Gokale was one of the noblest and best workers and his patriotism of the highest and noblest type".

**சுரேந்திரநாத் பானர்ஜி**

- 1848 -ம் வருடம் ஒரு குளின் பிராமணக் குடும்பத்தில் (Kulin Brahmin) பிறந்த சுரேந்திரநாத் சிறந்த கல்வியாளராகத் திகழ்ந்தார்.
- ஐ.சி.எஸ்.(Indian Civil ServicesI.C.S.)தேர்வில் சுரேந்திரநாத்பானர்ஜி வெற்றி பெற்றார்
- கி.பி. 1876 ஜூலை 26 -ல் கல்கத்தாவில் "இந்திய சங்கம்" (Indian Association) ஒன்றை நிறுவினார்.
- இந்திய தேசிய காங்கிரசின் 1898, 1902 -ம் வருட கூட்டங்களில் சுரேந்திரநாத் பானர்ஜி தலைமை தாங்கினார்
- கி.பி. 1892 -ம் ஆண்டு இம்பீரியல் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்
- கி.பி. 1919 -ம் வருட மாண்டேகு செம்ஸ்போர்ட் சட்டத்தை ஏற்றுக் கொள்ளும் படியாக பிரச்சாரம் செய்தார்
- கி.பி. 1918 -ல் காங்கிரசை விட்டு விலகினார்."தேசிய லிபரல் கூட்டமைப்பு" (National Liberal Federation)
- ஒன்றை அமைத்தார். இரட்டை ஆட்சியின்படி வங்காளத்தில் மந்திரி பதவி ஏற்றார்.
- 1925 -ம் ஆண்டு சுரேந்திரநாத் பானர்ஜி மரணம் அடைந்தார்.

## சர்தார் வல்லபாய் படேல்:

- ★ பர்தோலியில் வரிகொடா இயக்கத் தலைமையேற்று நடத்தினார். எனவே **சர்தார்** என்று அழைக்கப்பட்டார்.
- ★ சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராக இருந்தவர்.
- ★ சுதேச அரசுகளைப் பேச்சு வார்த்தை மூலம் இந்தியாவுடன் இணைத்து, ஐக்கிய இந்தியாவை உருவாக்கியவர்.
- ★ எனவே, இந்தியாவின் பிஸ்மார்க் என அழைக்கப்படுகிறார்.
- ★ காஷ்மீர், ஹைதராபாத், ஜூனாகாத் ஆகிய சுதேச அரசுகளைப் பணிய வைத்து இணைத்தவர்;
- ★ எனவே இந்தியாவின் இரும்பு மனிதர் என அழைக்கப்படுகிறார்.
- ★ கஜினி முகமதுவால் அழிக்கப்பட்ட சோமநாதபுரம் கோயிலை புதுப்பித்தவர்.

## நேதாஜி சுபாஷ் போஸ்:

- ★ வங்க சிங்கம் என்று போற்றப்பட்டவர் **நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்**
- ★ அவர் பிறந்த ஊர் **ஒரிசா மாநிலத்தில் உள்ள கட்டக்.**
- ★ அண்ணலின் அறப்போர் முறையை எதிர்த்தார்;
- ★ பர்மா சென்று INA (இந்திய தேசிய ராணுவம்) அமைத்தார்.
- ★ அவரது வீர முழக்கங்கள் : **ஜெய்ஹிந்த், டில்லி சலோ.**

## அன்னிபெசன்ட்:

- ★ பிரம்மஞான சபையை (Theosophical Society) இந்தியாவில் வளர்த்தவர் **அன்னிபெசன்ட் அம்மையார்.** அவரது தாய்நாடு **அயர்லாந்து.**
- ★ பிரம்ம ஞான சபையை நிறுவியவர்கள் பிளாவாட்ஸ்கி அம்மையார் & ஆல்காட்.
- ★ முதலில் அமெரிக்காவில் நிறுவினர்;
- ★ பின் சென்னை அடையாறு தலைமையகம் ஆயிற்று
  மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே ஒற்றுமை ஏற்படுத்த அவர் ஆரம்பித்த இயக்கம் **சுயாட்சி இயக்கம்** (Home Rule Movement)
- ★ காங்கிரசில் முதல் பெண் தலைவர் இவரே!

## அரவிந்த கோஷ்

- ★ தீவிரவாதியாக இருந்து பின் மிதவாதியாக மாறியவர் **அரவிந்த கோஷ்.**
- ★ இவர் ஆசிரமம் அமைத்தது **பாண்டிச்சேரியில்.**
- ★ இவரது முக்கிய நூல் **தெய்வீக வாழ்க்கை** (Life Divine)

## பகத் சிங்

- புரட்சி மூலமே சுதந்திரம் பெற முடியும் என்ற புதிய இயக்கம் தொடங்கியவர் **பகத் சிங்.**
- சமதர்மக் குடியரசுப் படையை அமைத்தவர் **பகத் சிங்.**
- **இன்குலாப் ஜிந்தாபாத்** என்று இவர் தூக்கிலிடப்படும் போது (23-3-1931) முழங்கினார்.
- மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசியவர்கள் **பகத் சிங்கும் அவரது நண்பர் தத் என்பவரும்**
- இதன் தொடர்பாக தூக்கிலிடப்பட்டவர்கள் **பகத் சிங், ராஜகுரு, சுகதேவ்.**

## மகாத்மா காந்தி

- அண்ணல் காந்தி பிறந்த நாள் : 2-10-1869.
- அண்ணல் காந்தி பிறந்த இடம் : **போர்பந்தல் (குஜராத்)**
- அண்ணலின் தந்தை, தாய் : **கரம்சந்த் காந்தி, புத்லிபாய்.**
- அண்ணலின் துணைவி : **கஸ்தூரிபாய்.**
- அண்ணலின் முதல் போராட்டம் நடந்தது : **தென் ஆப்பிரிக்காவில்.**
- இந்தியாவில் அவரது முதல் போராட்டக்களம்: **சம்பரான் (1917)**
- அந்தப் போராட்டம் **இண்டிகோ (அவுரி) பயிரிட்ட தொழிலாளர்களின் உரிமைப் போராட்டம்.**
- **கி.பி. 1918** அகமதாபாத் ஜவுளி ஆலை; முதல் உண்ணாவிரதம். அண்ணல், காங்கிரஸ் தலைவரான
- கி.பி.1920ம் ஆண்டு நாட்டுப் பிரிவினையின் போது மத ஒற்றுமைக்காக யாத்திரை நடத்திய இடம் **நவகாளி.**
- நாதுராம் கோட்சேயால் சுட்டுக் கொல்லப்பட்ட நாள் **30-01-1948.** இடம் : **டில்லி பிர்லா மாளிகை மைதானம்.**
- அண்ணலின் சுயசரிதை My Experiments with Truth. அதன் தமிழாக்கப் பெயர் **சத்திய சோதனை.**
- தமிழாககம் செய்தவர் **கல்கி.** கல்கியின் இயற்பெயர் **ரா.கிருஷ்ணமூர்த்தி.**
- அண்ணல் நடத்திய ஏடுகள் **ஹரிஜன், நவ இந்தியா.** அண்ணல் எளிய உடைக்கு மாறியது **மதுரையில்.**
- கல்கி எழுதிய அண்ணல் வரலாறு **மாந்தருக்குள் ஒரு தெய்வம்.**
- அண்ணலுக்கு மகாத்மா என்ற பட்டம் வழங்கியவர் **கவிஞர் தாகூர்.**

## பண்டித நேரு

- சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் **ஜவஹர்லால் நேரு.** பிறந்த வருடம் **14-11-1889**
- நேருவின் தந்தை, தாய் **மோதிலால் நேரு, சொரூபராணி.**
- நேருவின் மனைவி **கமலா.** நேருவின் மகள் **இந்திரா.**
- பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்று லாகூர் காங்கிரசில் தீர்மானம் இயற்றிவயர் **நேரு.** ஆண்டு **1929**
- நவபாரதச் சிற்பி என்ற பட்டத்துக்குரியவர் **நேரு.**
- அவரது பொருளாதார சித்தாந்தம் **சோஷலிசம்.** பொருளாதாரத் திட்டம் வகுக்க அவர் பின்பற்றிய நாடு **ராஷ்யா.**
- டிஸ்கவரி ஆப் இந்தியா என்ற நூலாசிரியர் **நேரு.**
- உலக வரலாறு பற்றி அவர் எழுதிய நூல் Glimpses of World History
- அந்த நூலின் சிறப்பு **சிறையிலிருந்து தமது மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களே அந்த நூல்.**

# வரலாற்றுப்பெண்மணிகள்

## 1. கிட்டூர் சென்னம்மா :

- கிட்டூர் கர்நாடக மாநிலத்தில் பெங்களூர் - பூனா இடையே அமைந்திருந்த ஒரு சிற்றூர்.
- இப்பகுதியை ஆட்சி செய்தவர் மல்லசு ராஜா என்பவர். இவரது மனைவி சென்னம்மா. சென்னம்மா போர்க்கலைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்.
- அவரது கணவர் மல்லசு ராஜாவின் வீரமரணத்திற்கு பின் நாட்டை வழிநடத்தினார்.
- 1857 ல் பெரும்புரட்சிக்கு முன்பே நாட்டை காக்க போராடியவர்.
- ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராடி ஆங்கிலேயர்களை பின்வாங்கச் செய்தார்.
- இறுதி வரை ஆங்கிலேயருக்கு அடிபணியாமல் போராடியவர். 1824 டிச5 ல் ஆயுதபலத்தினால் கிட்டூரை ஆங்கிலேயர் தன் வசப்படுத்தினர்.
- 5 ஆண்டுகள் தனிமை சிறையில் தாய்நாட்டுக்கு நேர்ந்த தாழ்வை எண்ணி மனம் வெதும்பிய ராணி சென்னம்மா 1829 பிப் 2 ல் இறந்தார்.

## 2. ராணி லெட்சுமிபாய் :

- ஜான்சி என்னும் நகரம் உத்திர பிரதேச மாநிலத்தில் உள்ளது.
- ராணி லெட்சுமிபாயின் இயற்பெயர் மனுபாய்.
- 5 வயது சிறுமியாக இருந்த போதே போர்ப்பயிற்சியில் சிறந்து விளங்கியவர்.
- இவரது பெயர் மனுபாயிலிருந்து லெட்சுமிபாய் என மாற்றப்பட்டது.
- 16 வயதில் அவருக்குப்பிறந்த ஆண் குழந்தை 3 மாதத்தில் இறக்கவே, புத்திர சோகத்தில் மன்னர் காலமானார்.
- ஜான்சி நகரத்தை ஆள 5 வயது சிறுவர் ஆனந்த்ராவ் தத்தெடுத்துக் கொண்டார்.
- வாரிசு இழப்புக்கொள்கை படி பிரிட்டிஷார் ஜான்சியை கைப்பற்றினார்.
- பின்னர் ஜான்சியின் ராணியாக தாமே தலைமையேற்று பிரிட்டிஷாருக்கு எதிராக போராடினார். ஆனால் ஜான்சியை யஇழந்தார். கோட்டையை விட்டு தப்பிச் சென்றார்.
- நானாசாகிப்புடன் இணைந்து குவாலியரைக் கைப்பற்றினர். குவாலியர் மன்னராக நானாசாகிப் அறிவிக்கப்பட்டார்.
- இதனால் களியாட்டங்களில் மூழ்கிய நானாசாகிப் மற்றும் அவரது படைவீரர்கள் வீரத்தை இழந்தனர்.
- இத்தருணத்தில் ஆங்கிலேயர் தாக்குதல் நடத்தவே, ராணி லெட்சுமி பாய் ஆத்திரத்துடன் இரு கைகளிலும்
- வாளேந்தி போராடி உயிர் நீத்தார்.

## 3. அன்னிபெசன்ட் :

- அன்னிபெசன்ட் அம்மையார் தாய்லாந்து நாட்டைச் சார்ந்தவர்.
- அவர் தனது 19 வது வயதில் பிராங்க் பெசன்ட் என்பவரை மணந்து கொண்டார்.
- இரு குழந்தைகளுக்கு தாயான அன்னிபெசன்ட் பெண்களை அடிமையாக கருதும் தன் கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றார்.
- அக்காலத்தில் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கிய சார்லஸ் பிராட்லாவின் தூண்டுதலால் அன்னிபெசன்ட் மேடையேறிப் பேசினார்.
- பிளவாட்ஸ்கி அம்மையாரின் நூலால் ஈர்க்கப்பட்டு பிரம்ம ஞான சபையில் சேர்ந்தார்.
- அதன் கொள்கைகளை பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்.
- 1893 ல் உலக சமய மாநாட்டிலும் கலந்து கொண்டு பின் அதே ஆண்டில் இந்தியா வந்தார்.
- புனிதமான பாரதப்பண்பாட்டை பிரிட்டிஷ் எவ்வாறு சிதைத்து விட்டது என்பதை எடுத்துக் கூறினார்.
- பெண்கல்வி முக்கியத்துவத்தையும் தாய்மொழிக் கல்வி அவசியத்தையும் பிரச்சாரம் செய்தார்.
- இந்தியாவை ஆள இந்தியருக்கு முழு தகுதி உண்டு என்று கூறி ஹோம் ரூல் இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1917 ல் காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## 4. கவிக்குயில் சரோஜினி நாயுடு :

- 1879 ல் பிப்ரவரி 13 ம் நாள் ஹைதராபாத்தில் பிறந்தார்.
- தனது தந்தை அகோர்நாத்தைப் போல் இனிமையான கவிதை படைக்கும் திறமை பெற்றவர்.
- பிராமண வகுப்பைச் சார்ந்த சரோஜினி 1898 ல் கோவிந்தராஜலு நாயுடு என்னும் மருத்துவரை திருமணம் செய்து கொண்டார்.
- முதலில் ஆங்கிலத்தில் கவிதைகளை இயற்றிய இவர் பின்னர் இந்திய பாணியில் கவிதைகளை இயற்றினார்.
- பின்னாளில் காந்தியடிகளால் ஈர்க்கப்பட்டு தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார்.
- 1925 ல் கான்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை வகித்தார்.
- அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்குச் சென்று இந்தியாவுக்கு ஆதரவு திரட்டினார்.
- 1930 ல் உப்பு சத்தியாகிரகத்திலும், 1931 ல் இலண்டனில் நடைபெற்ற 2 வது வட்ட மேஜை மாநாட்டில் காந்தியடிகளுடன் இந்தியப் பெண்களின் பிரதிநிதியாகவும் கலந்து கொண்டார்.
- வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டதால் இவரும் சிறை வைக்கப்பட்டார்.
- 1947 ம் ஆண்டு மார்ச் மாதம் புதுடெல்லியில் நடைபெற்ற ஆசிய உறவு மாநாட்டில் ஆசியாவின் தலைவராகத் ே தர்ந்தெடுக்கப்பட்டார்.
- நாடு விடுதலை பெற்றதும், உத்திர பிரதேச ஆளுநராக நியமிக்கப்பட்டார். இந்தியாவின் முதல் பெண்ஆளுநர் என்பது குறிப்பிடத்தக்கது.
- 1949 ம் ஆண்டு மார்ச் மாதம் 2 ம் தேதி அவர் இயற்கை எய்தினார்.

## 5. இந்திரா காந்தி :

- ஜவஹர்லால் நேரு - கமலா தம்பதிக்கு மகளாக 1917 ம் ஆண்டு நவம்பர் 19 ம் நாள் பிறந்தார்.
- அக்காலத்தில் தீவிரமாக நடைபெற்ற சுதந்திரப்போராட்டத்தின் தாக்கத்தை நன்கு அறிந்திருந்தார்.
- 1942 ல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்ததால் இவர் சிறுவர்களை கொண்டு உருவாக்கிய வானர சேனை பரிமாற்றத்திற்கு நன்கு உதவியது.
- பார்சி மதத்தைச் சார்ந்த பெரோஸ் கார்க்கி என்பவரை மணந்து இராஜூவ் காந்தி, சஞ்சய் காந்தி என்ற இரண்டு மகன்களைப் பெற்றெடுத்தார்.
- நாடு விடுதலையடைந்ததும் தந்தையுடன் நிர்வாகத்தில் உதவி புரிந்தார்.
- 1964 ல் நேரு இறந்ததும் லால் பகதூர் சாஸ்திரி பிரதமரானார். அப்போது சாஸ்திரி அவர்கள் இந்திரா காந்தியை தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராக அமைச்சரைவையில் சேர்த்துக் கொண்டார்.
- சாஸ்திரி காலமான பிறகு 1966 ல் காமராஜர் இந்திராவை அடுத்த பிரதமராக தேர்ந்தெடுக்க உதவினார்.
- வங்கிகள் நாட்டுடைமையாக்கம், மன்னர்மானியம் ஒழிப்பு, கொத்தடிமைச்சட்டம் போன்றவற்றை இயற்றினார்.
- 1971 ல் நடைபெற்ற இந்தியா பாகிஸ்தான் போரில் வெற்றி பெற்று, கிழக்கு பாகிஸ்தான் பங்களாதேஷ் என தனிநாடாக மாறுவாற்கு உதவினார்.
- 1975 ல் இவர் கொண்டு வந்த அவசர நிலை பிரகடனம் மூலம் எதிர்கட்சி தலைவர்களை சிறையிலடைத்தார். மக்கள் உரிமைகள் புதிய சட்டங்கள் மூலம் பறிக்கப்பட்டன.
- கோபமற்ற மக்கள் 1977 ல் நடைபெற்ற தேர்தலில் இந்திராகாந்தியை தோற்கடித்தனர்.
- 1977 ல் ஜனதா கட்சி ஆட்சி அமைத்தது. 2 ஆண்டுகளில் இந்த ஆட்சி முடிவுக்கு வந்தது.
- 1980 ல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமரானார்.
- 1984 ல் அமிர்தசரஸ் பொற்கோயிலில் தீவிரவாதிகளுக்கு எதிராக (Operation Blue Star ) நடவடிக்கை எடுத்தார். இதனால் சீக்கிய மக்கள் கோபத்திற்கு ஆளாகி சீக்கிய பாதுகாவலர் ஒருவரால் 1984 ம் ஆண்டு அக்டோபர் 31 ல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

**எம்.எஸ்.சுப்புலட்சுமி :**

- இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா பெற்ற முதல் இசைக்கலைஞர் என்னும் பெருமைக்குரியவர் எம்.எஸ்.சுப்புலட்சுமி என அழைக்கப்படும் மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி.
- அப்போதைய சென்னை மாகாணத்தில் 16 செப்டம்பர் 1916 ஆம் ஆண்டு மதுரையில் பிறந்தார்.
- கர்நாடக சங்கீதத்தில் கொடிகட்டிப் பறந்த எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களின் பெற்றோர் வீணை இசைக் கலைஞரான சண்மகவடிவு அம்மாள் சுப்பிரமணிய ஐயர்.
- இளமையில் செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயரிடம் கர்நாடக சங்கீதம் பயின்றவர்.
- இந்துஸ்தானி சங்கீதத்தை பண்டிட் நாராயணராவ் வியாஸ் அவர்களிடமும் சமஸ்கிருதம், தெலுங்கு மொழிகளை டாக்டர் நெடுனூர் கிருஷ்ணமூர்த்தி அவர்களிடமும் கற்றார்.
- சுப்புலட்சுமியின் முதல் பொது மேடை நிகழ்ச்சி 1929ஆம் ஆண்டு சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்றது. அப்போது அவருக்கு வயது 13
- எம்.எஸ்.சுப்புலட்சுமி நடித்த முதல் திரைப்படம் சேவாசதனம். 1938 ஆம் ஆண்டு வெளியான சாவித்திரி திரைப்படத்தில் நாரதர் வேடமேற்று நடித்தார்.
- 1945 ஆம் ஆண்டு வெளியான மீரா திரைப்படத்தின் மூலமாகத் தேசிய அளவில் பிரபலமானார்.
- பத்ம பூஷண் (1954), சங்கீத நாடக அகாடமி விருது (1956), சங்கீத கலாநிதி (1968), ராமன் மகா சே சே விருது (1974), பத்மவிபூஷண் (1975), காளிதாஸ் சம்மான் (1988), இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாட்டு விருது (1990) , பாரத ரத்னா (1998) போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.
- சங்கீத கலாநிதி விருது பெற்ற முதல் பெண்மணி, ராமன் மகசேசே விருது பெற்ற முதல் இந்திய இசைக்கலைஞர் என்ற சிறப்புகளும் இவருக்கு உண்டு.
- திருப்பதி தேவஸ்தானத்தின் ஆஸ்தான பாடகியாகக் கௌரவிக்கப்பட்டார்.
- திருப்பதி நகரில் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் வெண்கலச் சிலை நிறுவப்பட்டுள்ளது.
- புகழ்பெற்ற காஞ்சிபுரம் சேலை எம்.எஸ்.நீலம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## 7. கேப்டன் லெட்சுமி :

- இந்திய விடுதலைக்காக நேதாஜி அமைத்த பெண்கள் படைக்கு தளபதியாக இருந்தவர் வீரப்பெண்மணி
- கேப்டன் லெட்சுமி. (தமிழ்நாடு)
- சென்னையில் மருத்துவப்படிப்பும், பின்னர் குழந்தை மகப்பேறு படிப்பும் ( D.G.O) படித்து பட்டம் பெற்றார்.
- மருத்துவம் செய்ய சிங்கப்பூர் சென்ற அவர் தமிழர்கள் அதிகம் வாழ்வதைப் பார்த்ததும் மகிழ்வுடன் அங்கேயே
- தங்கி சேவை செய்தார்.
- 1943 ல் நேதாஜி இந்திய ராணுவத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் சேர வேண்டும் என்று பெண்கள்
- படையை அமைத்தார்.
- லெட்சுமியை சந்தித்த நேதாஜி அவர்கள் துணிவையும் மன உறுதியையும் பார்த்து வியந்தார். பெண்கள் படைக் கு
- ஜான்சிராணி படை எனப் பெயர் சூட்டி அப்படைக்கு தளபதியாக டாக்டர் லெட்சுமியை நியமித்தார். இதனால்
- அவர் கேப்டன் லெட்சுமி எனப்பட்டார்.
- 1944 ல் ஆங்கிலேய அரசு இவரைக் கைது செய்தது. 1946 ல் விடுதலையானார்.
- 1947 ம் ஆண்டு இந்திய தேசிய ராணுவத்தில் தன்னுடன் பணியாற்றிய தளபதி சைகால் (உத்திர பிரதேசம்)
- என்பவரை மணந்து கொண்டார்
- லெட்சுமி தீவிர பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்.
- 2002ம் ஆண்டு குடியரசுத்தலைவர் தேர்தலில் அப்துல்கலாமை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார்

## 8. கிரண்பேடி :

- இந்தியாவின் முதல் பெண் ஐ.பி.எஸ். அதிகாரி.
- கி.பி. 1949 ம் ஆண்டு ஜூன் 9 ல் அமிர்தசரசில் (பஞ்சாப்) பிறந்தார்.
- கி.பி. 1972 ம் ஆண்டு ஜூலை 16 ல் இந்திய காவல் துறையின் முதல் பெண் அதிகாரியாக (IPS) பணியில் சேர்ந்தார்.
- காவல்துறையின் போலிஸ் சூப்பிரண்டு (SP), துணை I.G முதலான பதவிகளை வகித்தார்.
- சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், போதைமருந்து கடத்தலைத்தடுக்கவும், கள்ளக்கடத்தலைத் தடுக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.
- நேர்மை தவறாதவர், வீரம் மிக்கவர் என்று பெயர் பெற்றவர்.
- கி.பி. 1979 ல் காவல் துறையில் வீரப்பதக்கம் பெற்றார்.
- கி.பி. 1994 ல் ராமன் மகாசேசே விருது பெற்றார்.
- தற்போது பல்வேறு சமூக பணிகளை செய்து வருகிறார்.

## 9. அன்னை தெரசா :

- யூகோஸ்லோவியா நாட்டில் 1910 ம் ஆண்டு ஆகஸ்ட் 27 ம் நாள் அன்னை தெரசா பிறந்தார்.
- அவரது இயற்பெயர் ஆக்னஸ் கோஞ்சா பொயா ஜியூ. 1929 ம் ஆண்டு அவர் இந்தியாவுக்கு வந்தார்.
- கிறிஸ்துவ மிஷினர்கள் தொண்டாற்றுவதற்கு இந்தியா வந்த போது அவர்களுடன் இந்தியா வந்தார்.
- துவக்கத்தில் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிய இவர் பின்னர் முதலுதவி மருத்துவத்தில் பயிற்சி பெற்று சேரி மக்களுக்கும் சமூகத்தில் கைவிடப்பட்டவர்களுக்கும் தொழு நோயாளிகளுக்கும் தன்னலமற்ற தொண்டாற்றினார்.
- அவரது சேவையைக் கண்ட சகோதரிகள் ஒருவருடன் ஒருவராக பணியாற்ற இணைந்ததால் கருணை இல்லம் என்னும் சமூகத் தொண்டு அமைப்பை உருவாக்கினார்.
- 1962 ல் ராமன் மகாசேசே விருதும், 1979 ம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசும், 1980 ம் ஆண்டு பாரத ரத்னா விருதும், அமெரிக்காவின் மிக உயரிய விருதான விடுதலைக்கான அதிபர் பதக்கமும் இன்னும் பல விருதுகளும் அவர் தம் சேவைக்கு கிடைத்த பரிசு

## 10. தில்லையாடி வள்ளியம்மை :

- தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்த தில்லையாடி என்னும் கிராமத்திலிருந்து பண்ணைத் தொழிலுக்காக வெள்ளையர்களின் காலணி ஆதிக்க தென்னாப்பிரிக்க நாட்டிற்கு சென்ற இந்தியர்களுள் முனுசாமியும் அவரது மனைவியும் அடங்கும்.
- அத்தம்பதிகளுக்கு 1898 ம் ஆண்டு மகளாகப் பிறந்தவர் தான் வள்ளியம்மை.
- 1983 ல் காந்தியடிகள் தாதா அப்துல்லா கம்பெனியில் வழக்கறிஞராக ஓராண்டு தென்னாப்பிரிக்கா வந்திருந்தார்.
- தென்னாப்பிரிக்கா நாட்டில் இந்தியர்கள் மிக மோசமாக நடத்தப்பட்டதையும் அங்கே வாழ 3 பவுன் தலைவரியையும் கட்ட வேண்டும் என்பதையும் கண்டு காந்தியடிகள் மனம் பதறி அவர்களுக்காக போராடினார்.
- அச்சமயத்தில் தென்னாப்பிரிக்க கேப் உச்சநீதிமன்ற நீதிபதி அளித்த தீர்ப்பில் கிறிஸ்தவ மத சடங்குகளையும் திருமணப் பதிவாளர் சட்டப்படியும் நடக்கும் திருமணம் மட்டுமே செல்லும் மற்ற திருமணங்கள் செல்லாது என்பதே அந்த தீர்ப்பு.
- இதனால் இந்திய முறைப்படி நடந்த திருமணம் செல்லாது என்றும் அவர்கள் குழந்தைகளுக்கு சட்டப்படியான வாரிசுரிமை இல்லை
- இதனையடுத்து மக்கள் கிளர்ச்சியில் இறங்கவே, காந்தியடிகள் அவர்களை ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுபட்டார்.
- காந்தியடிகள் பொதுவாக பெண்களை போராட்டத்தில் ஈடுபடுத்துவதில்லை. ஆனால் இந்தியப் பெண்களின் ஒட்டுமொத்த வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதால் பெண்களையும் போராட்டத்தில் ஈடுபட அழைப்பு விடுத்தார்.
- காந்தியடிகளின் அறப் போரில் தன்னையும் இணைத்துக் கொண்டார் வள்ளியம்மை.
- 1913 ல் ஜோகன்ஸ்பர்க் நகரில் பெண்களின் சத்யாகிரகப் போர்ப்படை கூடியது. அந்த படை முன் வரிசையில் இருந்த தில்லையாடி வள்ளியம்மை சங்கநாத முழக்கத்துடன் நியூகாசில் நகருக்கு முன்னேறியது.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

- காந்தியடிகள் சுரங்கத் தொழிலாளர்கள் அனைவரையும் வேலைநிறுத்தம் செய்ய கூறினார். அனைவரும் வேலைநிறுத்தம் செய்தனர்.
- ஒரு வெள்ளையன் காந்தியைச் சுட முயன்ற போது வள்ளியம்மை காந்தியடிகள் முன் நின்று கொண்டு இப்போதுசுடு என்றார். அதனால் அந்த வெள்ளையன் காந்தியைச் சுடாது திரும்பிவிட்டான்.
- தடையை மீறிச் சென்ற ஊர்வலத்தில் அனைத்து போராட்டக்காரர்களும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.
- சிறை அதிகாரிகள் கடுமையாக வேலை வாங்கியதாலும், சுகாதார சீர்கேட்டாலும் உடல்நலம் பாதிக்கப்பட்டு வள்ளியம்மை 22 - 2 - 1914 ல் இறந்தார்.
- ஜோகன்ஸ்பர்க்கில் வள்ளியம்மை இறந்த இடத்தில் நினைவுச்சின்னம் எழுப்பியுள்ளார் காந்தி.
- அவரது போராட்டத்தினால் 3 பவுன் தலைவரியும் ரத்து செய்யப்பட்டது.
- ஆங்கிலேயருக்கு எதிராக போராடி உயிர்நீத்த 16 வயது தமிழ்ப்பெண் வள்ளியம்மை .

## 11. மேரி கியூரி :

- போலந்து நாட்டில் வார்சா நகரில் பிறந்தார். சிறுவயதிலேயே தமது பெற்றோரை இழந்தார்.
- அவரது தாயார் இவருக்கு 9 வயது இருக்கும் போது காசநோயால் இறக்கவே, மனித குலத்திற்கு நோய்களைத் தீர்க்க புதிய கண்டுபிடிப்புகளை செய்ய வேண்டும் என்ற விதை அவர் மனதில் விதைக்கப்பட்டது.
- அவர் 1891 ல் உயர் கல்வி கற்பதற்காக பிரான்ஸ் நாட்டில்உள்ள பாரிஸ் நகருக்குச் சென்றார்.
- அங்கு பியரி கியூரி என்பவரை விரும்பி மணந்தார்.
- இருவரும் இணைந்து 14 வருடங்களுக்கு மேலாக கதிரியக்கம் பற்றி ஆய்வு செய்தனர்.
- அவர்களது ஆராய்ச்சி முழுவதும் யுரேனியத்தை மையமாகக் கொண்டே இருந்தது.
- தோரியம் என்ற கதிரியக்கம் கொண்ட பொருளையும், ரேடியத்தையும் கண்டுபிடித்தார் மேரி.
- தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாத கட்டிகளை குணப்படுத்த ரேடியத்தை பயன்படுத்தலாம் என மேரி கண்டுபிடித்தார்.
- அணுவின் மர்மங்களை அறிய கணவன் மனைவி இருவரும் முயற்சி செய்ததன் மூலம் குவாண்டம் மெக்கானிக்ஸ் என்ற புதிய கோட்பாடு உருவானது.
- இந்த கண்டுபிடிப்பிற்காக கணவன் மனைவி இருவருக்கும் 1903 ல் இயற்பியலுக்கான நோபல் பரிசு கிடைத்தது.
- தொடர்ந்து ஆய்வில் ஈடுபட்டதால் இவரின் உடல்நிலையும் மோசமடைந்தது. மேரியின் கணவர் ஒரு விபத்தில் இறந்தார்.
- ரேடியம் மற்றும் பொலோனியம் கண்டுபிடிப்பிற்காக 1913 ல் வேதியியல் துறைக்காக மீண்டும் ஒரு நோபல் பரிசு பெற்றார்.
- மேரி கியூரி தன் உடலையே இந்த ஆராய்ச்சிக்காக இழந்து இறுதியில் புற்று நோய் மூலம் காலமானார்.
- இரண்டு முறை நோபல் பரிசு பெற்ற பெருமைக்குரிய பெண்மணி மேரிகியூரி அம்மையார்.

## 12. டாக்டர் . முத்து லெட்சுமி ரெட்டி :

- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி தமிழ்நாட்டிலுள்ள புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஜூலை 30, 1886 ல் பிறந்தார்.
- அவரது தந்தை நாராயண சாமி தாய் சந்திரம்மாள். நாராயணசாமி மகாராஜாவினுடைய கல்லூரியின் முதல்வராகவும் திகழ்ந்தார்.
- பெண்கல்விக்கு எதிர்ப்பு அதிகமாக இருந்த காலத்தில் பல்வேறு சோதனைகளுக்கிடையே பள்ளி கல்வியை கற்றார்.
- வீட்டிலிருந்த படியே உயர் கல்வியையும் தனி ஆசிரியர் மூலம் கற்றார்.
- 1907 ல் சென்னை ஆண்கள் மருத்துவக் கல்லூரியில் இணைந்து பல்வேறு இன்னல்களுக்கிடையே மருத்துவப் படிப்பை 1912 ல் வெற்றிகரமாக நிறைவு செய்தார். தமிழ்நாட்டின் முதல் பெண் மருத்துவரானார்.
- சென்னை அரசு மருத்துவமனையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சை நிபுணராக பணியில் சேர்ந்தார்.

- 1914 ல் டாக்டர் சதானந்த ரெட்டி என்பவரை திருமணம் செய்தார்.
- சரோஜினி நாயுடு, அன்னிபெசன்ட் அம்மையார், மகாத்மா காந்தி ஆகியோருடைய தாக்கத்தால் பல்வேறு சமுக நலப்பணிகளையும், பெண்கள் உரிமை காக்கவும் பாடுபட்டார்.
- 1929 ல் ஔவை இல்லம் என்னும் அமைப்பை சென்னையில் பெண்கள் வாழ்க்கைக்காகவும் குழந்தை நலனுக்காகவும் ஏற்படுத்தினார்.
- அவர் ஆண்களுக்கு திருமண வயது 21 ஆகவும் பெண்களுக்கு 16 ஆகவும் உயர்த்த வேண்டும் என்றும் அரசுக்கு கோரிக்கை விடுத்தார்.
- சென்னை அடையாறில் புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவமனை அமைக்க வழிகாட்டியவர். Adayar Cancer Institute 1954 ல் இருந்து செயல்படத் தொடங்கியது.
- 1927 ல் சென்னை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் 1930 ல் காந்தியடிகள் கைதானதை கண்டித்துப தவியை விட்டு விலகினார்.
- 1929 ல் சதி ஒழிப்புக்காகவும், பலதாரமண தடைச்சட்டத்தை கொண்டு வரவும், தேவதாசி முறையை ஒழிக்கவும், பெண்களுக்கான திருமண வயதை அதிகப்படுத்தவும் போராடி தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.
- 1956 ல் பத்ம பூஷன் விருது பெற்ற இவர் ஜுலை 22,  ல் மறைந்தார்.

## தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்

- பண்டைக் காலத் தமிழர்கள் உலகம் தழுவிய சமுதாய உணர்ச்சியையும், யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற கோட்பாட்டையும் பெற்று வாழ்ந்துள வந்தனர்.
- ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் இந்தியாவின் பிறபகுதிகளைப் போலவே தமிழ் நாட்டிலும் தேசிய உணர்வு தோன்றிவளர ஆரம்பித்தது.
- நாளடைவில் அது உத்வேகம் கொண்டு ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு விரட்டி சுதந்திரம் பெற உதவியது.

### தமிழ்நாட்டில் ஆரம்பகால ஆங்கில எதிர்ப்புகள்

#### அ) முத்துவடுகநாதர்

- பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ்நாட்டில் பலர் விடுதலை வேட்கை கொண்டு ஆங்கிலேயருக்கு எதிராக வீறுகொண்டு எழுந்த வரலாறு உண்டு.
- பாளையக்காரர்களில் சிலர் வெள்ளையர்களை எதிர்த்து வரி கொடுக்க மறுத்தனர்.
- அவர்களில் துணிச்சல் மிக்கவர் சிவகங்கை அரசர் முத்து வடுகநாதர் ஆவார்.
- இவர் பாரதக்கதை மூலம் மக்களுக்கு வீரம் புகட்டும் முயற்சியில் ஈடுபட்டார்.
- வரி கட்டும்படி கேட்டு வந்த அறிக்கையை நான்காகக் கிழித்து அனுப்பினார்.
- காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் வீர மரணம் அடைந்தார்.
- பின்னர் அவரது அரசியார் வேலு நாச்சியார் அவ்வாறு வந்த கடிதத்தை எட்டாகக் கிழித்து வெள்ளையாருக்கு அனுப்பி வீர காவியம் படைத்தார்.

#### ஆ) வீரபாண்டிய கட்டபொம்மன்

- அடுத்து நெல்கட்டான் செவல்கோட்டை அதிபதியான புலித்தேவன் ஆங்கிலேயருக்கெதிராக சில வெற்றிகளைப் பெற்று சிறிது காலத்திற்கு அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார்.
- பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட கட்டபொம்மனும் ஆங்கிலேயருக் கெதிராகப் போர்க்கொடி எழுப்பினார்.
- தானும் வரி செலுத்தாமல், பிறரையும் வரி கட்டக் கூடாது என்று கூறி ஒன்பது ஆண்டு காலம் போராடினார். இறுதியில் புதுக்கோட்டை மன்னர் பிடித்துக் கொடுத்துவிட்டார்.
- ஆங்கிலேயர்களால் தூக்குத் தண்டனை பெற்ற கட்டபொம்மன் தூக்குக் கயிற்றை தானே மாட்டிக் கொண்டு வீரமரணம் அடைந்த அவரது வாழ்க்கை விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு வீரகாவியமாகத் திகழ்கிறது

**இ) வேலூர் கலகம்**

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து முதன் முதலில் ராணுவப் புரட்சி செய்த பெருமை தமிழ்நாட்டு படை வீரர்களையே சாரும்.
- 1806, ஜூலை 10ம் தேதி வேலூர் கோட்டையில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் படை வீரர்கள் புரட்சி செய்து ஆங்கில அதிகாரிகளையும் வீரர்களையும் கொன்றனர்.
- ஆனால் இந்த ராணுவப் புரட்சி விரைவில் அடக்கப்பட்டு விட்டது.
- இந்தப் புரட்சி 1857 ல் நடந்த பெரும் சிப்பாய் கலகத்திற்கான ஒத்திகை என்று கூட கூறலாம்.
- 1857 ல் வட இந்தியாவில் சிப்பாய் கலகம் தோன்றிய போது அது தமிழ்நாட்டிலும் எதிரொலித்தது.
- அப்போது கம்பெனி ஆட்சிக் கெதிராக சென்னையில் சுவரொட்டிகள் காணப்பட்டன.
- இந்தியாவை விடுவிக்க ஒரே வழிதான் உள்ளது. அதுவே பயங்கர யுத்தம். அது சுதந்திர யுத்தம் என்று அதில் எழுதப்பட்டிருந்தது.
- ஆனால் தமிழ்நாடு அப்போது புரட்சியில் ஈடுபடாமல் பார்த்துக் கொண்டவர் ஹைதராபாத் நிஜாம் ஜாலர்ஜங் ஆவார்.
- இப்படி அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆங்கில எதிர்ப்புகளும், போராட்டங்களும் நடைபெற்ற போதிலும் முழுமையான தேசிய இயக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தான் தோன்றியது.

**தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாடு**

- தமிழ்நாட்டில் தேசிய உணர்வு வளர்ந்து பெருகுவதற்கு பல பெரியோர்கள் முன்னோடிகளாக விளங்கினர்.
- பல அமைப்புகளை ஏற்படுத்தி அதன்மூலம் ஆட்சியாளர்களிடம் பல உரிமைகளைக் கேட்டனர்.

**சென்னை சுதேசி சங்கம் (Madras Native Association)**

- இது 1852 பிப்ரவரி 26 ம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது.
- இது தென்னிந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட முக்கியமான அரசியல் சார்ந்த அமைப்பாகும்.
- இந்த சங்கம் தோன்றுவதில் லட்சுமண செட்டியும், சோமசுந்தரம் செட்டியும் முக்கியப் பங்கேற்றனர்.
- இதன் தலைவராக ஜி.லட்சுமணசெட்டி விளங்கினார். இந்தச் சங்கத்தினர் 1852 ல் இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கு மக்களின் குறைகளை விண்ணப்ப வடிவில் தொகுத்து அனுப்பினர்.
- அந்தக் குறைகளைக் களைய அரசு ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டினர்.
- 1855 ல் சென்னையில் கூடிய பொதுக் கூட்டத்தில், கம்பெனியின் கொடுங்கோன்மையையும், தகாத ஆட்சியையும் கண்டித்தனர்.
- பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சி ஏற்பட வேண்டும் என்றனர். தங்கள் நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் உரிய பங்கைப் பெற உரிமை உண்டு என்றனர்.
- 1858 ல் இந்தியாவில் கம்பெனி ஆட்சி ஒழிக்கப்பட்டு பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சி ஏற்பட்டதை வரவேற்றனர்.
- மேலும் சமயம் கிடைத்த போதெல்லாம் பொறுப்புள்ள அரசாங்கம் வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர்.
- 1859 ல் சென்னை மாநில ஆளுநர் டிராவலியன் பதவி விலகிச் சென்றபோது அவரிடம் பொறுப்பாட்சிக் கோரிக்கை விண்ணப்பத்தை முன் வைத்தனர்.
- 1860 ல் தஞ்சை மன்னரை மீண்டும் பதவியில் அமர்த்தும்படி ஆங்கில அரசுக்கு விண்ணப்பித்தனர் இந்தச் சங்கத்தினர்.
- ஆனால் அரசு உருப்படியாக எந்த சீர்திருத்தமும் செய்ய முன்வராததால் அரசியல் கிளர்ச்சிகள் ஆரம்பித்தன.

**சென்னை மகாஜன சபை: (Madras Mahajana Sabha)**

- இது 1884, மே 16ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. தமிழகத்தில் தோன்றியிருந்த வட்டாரக் கழகங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அரசியல் முன்னேற்றம் காண்பதே இச்சபையின் நோக்கமாகும்.
- தேசிய அடிப்படையிலான சமுதாய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, பொது அறிவுடன் கூடிய கல்வி வளர்ச்சியில் இச்சபை அதிக கவனம் செலுத்தியது. காங்கிரஸ் கூட்டத்திற்குத் தலைமை வகித்த அனந்தாச்சார்லு, சுதேசமித்ரன் ஸ்தாபகர் ஜி.சுப்பிரமணிய ஐயர், கஸ்தூரி ஐயங்கார் போன்றவர்கள் இச்சபை தோன்றுவதற்கு முக்கியக் காரணமானவர்கள்.

**இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றம்**

- 1885 ல் இந்திய தேசியக் காங்கிரஸ் உருவெடுத்தது. இது தோன்றுவதற்கு சென்னை மைலாப்பூரில் தான் வித்திடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.
- 1884 ல் திவான் பகதூர் ராகுநாதராவ் வீட்டில் நாட்டுப்பற்று கொண்ட பதினேழு நல்லறிஞர்கள் கூடி காங்கிரஸ் சபை கூடுவது குறித்து ஆலோசித்ததாகத் தெரிகிறது.
- இவர்களில் அனந்தாச்சார்லு ரங்கையா நாயுடு, ஜி.சுப்பிரமணிய ஐயர், ரகுநாதராவ் ஆகியோர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.
- இந்தக் கூட்டத்தினர் விடுத்த அறிக்கையின்படியே 1885, டிசம்பர் மாதம் பூனாவில் காங்கிரஸ் கூட்டம் கூடுவதாக முடிவு செய்யப்பட்டது.
- பம்பாயில் கூடிய முதல் காங்கிரஸ் மாநாட்டில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்த பெருமை சென்னை மகாஜனசபையின் செயலராக இருந்த ஜி.சுப்பிரமணிய ஐயரையேச் சாரும்.
- காங்கிரஸ் தோன்றியதிலிருந்து தமிழ்நாட்டில் கிளர்ச்சிகள் ஓரளவு வலுப்பெற்றன.
- இச்சமயத்தில் சென்னையிலும், பிற இடங்களிலும் தோன்றிய பல பத்திரிக்கைகள் தேசியவாதிகளின் முக்கிய கருவிகளாக விளங்கின.

**சென்னையில் காங்கிரசின் மூன்றாவது மாநாடு**

- 1887, டிசம்பர் மாதம் காங்கிரசின் மூன்றாவது மாநாடு சென்னையில் நடைபெற்றது.
- இதற்கு பத்ருதீன் தியாப்ஜி தலைமை தாங்கினார்.
- இதில் மாதவராவ், எஸ்.சுப்ரமணிய ஐயர், ஜி.சுப்ரமணிய ஐயர், ரங்கையா நாயுடு, சபாபதி முதலியார், பி.சோமசுந்தரம் செட்டி, சேலம் விஜயராகவாச்சாரியார் போன்றோர் கலந்து கொண்டனர்.
- இந்த மாநாட்டில் தான் தேசிய பிரச்சாரத்திற்கான அமைப்பு உருவாக்கப்பட்டது.
- மாநிலம்தோறும் நிலையான குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன.
- ஆண்டுதோறும் பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல் போன்றவற்றின் மூலமாக மக்களின் அரசியல் அறிவை வளர்த்தல் ஆகியவை இக்குழுக்களின் முக்கிய கடமையாகும்.
- இவ்வாறு தொடர்ந்து நடைபெற்ற பிரச்சாரத்தால் சென்னை மாநில மக்களிடம் தேசிய உணர்வு அதிகரித்தது

**மாவட்ட மாநாடுகள்**

- தமிழகத்தில் தோன்றிய இந்து, சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைகள் அரசியல் விழிப்புணர்வைத் தோற்றுவிப்பதில் முக்கிய பங்காற்றி வந்தன.
- காங்கிரசின் கருத்துக்களைப் பரப்ப ஆண்டுதோறும் மாவட்ட மாநாடுகள் நடைபெற்றன.
- அவற்றை சுப்பிரமணி ஐயர், மாதவராவ் போன்ற தலைவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைத்தனர்.
- அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்ட இந்த மாநாடுகளில் சுயராஜ்யம் பெறுதல், அந்நியப் பொருட்களைப் புறக்கணித்தல், சுதேச தொழிற்சாலைகளை நிறுவுதல், பஞ்சாயத்து அமைப்புகளை மீட்டல் போன்றவை பற்றி விவாதிக்கப்பட்டன.

- 1908 ல் தஞ்சாவூரில் நடந்த மாவட்ட மாநாட்டில் பேசிய சுப்ரமணிய ஐயர் ஆங்கிலேயரின் அடக்குமுறைச் சட்டங்களையும், சில இந்தியத் தலைவர்களை கண்மூடித்தனமாகத் தண்டித்ததையும் கடுமையாகத் தாக்கிப் பேசினார்.
- இந்திய தேசியக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்றார். இந்திய அரசியல் விடுதலைக்காக சுதேசி இயக்கம், தேசியக் கல்வி, தன்னாட்சி ஆகியவற்றை அடைய அயராது பாடுபட வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்.

**தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம்**

- 1905ல் வங்காளத்தில் எழுந்த சுதேசி இயக்கம் தமிழக மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
- வந்தே மாதரம் என்ற முழக்கம் தமிழகத்தில் ஒலிக்கத் துவங்கியது.
- இதுவரை கற்றறிந்தோரிடம் மட்டுமே இருந்து வந்த தேசிய உணர்வு பாமர மக்களிடமும் பரவத் தொடங்கியது.
- காங்கிரஸ் கட்சியில் 1907ல் ஏற்பட்ட பிளவு தமிழகத்திலும் எதிரொலித்தது. வ.உ.சி, பாரதியார், சுப்பிரமணிய சிவா போன்றவர்களின் தலைமையில் தீவரவாதிகள் திரண்டு நின்றனர்.
- ஜி.சுப்பிரமணிய ஐயர், கிருஷ்ணசாமி ஐயர் போன்றோர் மிதவாதிகளின் தலைவர்களாகத் திகழ்ந்தனர்.
- தமிழ்நாட்டில் சுதேசமித்திரன், பத்திரிகை தீவிரவாத கருத்துக்களுக்கு இடந்தராத காரணத்தால் அதன் துணை ஆசிரியராக இருந்த பாரதியார் அப்பதவியிலிருந்த விலகி, 1906ல் இந்தியா என்ற புதிய வாரப் பத்திரிக்கையைத் தொடங்கினார்.
- தமிழ்நாட்டைத் தட்டி எழுப்பிய பெருமை இப்பத்திரிக்கைக்கு உண்டு.
- தீவிரவாதிகளின் ஆதரவில் தேசிய இயக்கம் தமிழ்நாட்டில் வளர்ச்சியடைந்தது.

**சென்னையில் விபின் சந்திரபாலர்**

- தென்னாட்டுத் திலகர் என்று அழைக்கப்பட்ட வ.உ.சிதம்பரனார் தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் சுதேசிக் கருத்துக்களைப் பரப்பி வந்தார்.
- 1906ல் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியை நிறுவி ஆங்கிலேயர்களுக்குப் போட்டியாக வாணிபம் செய்ய முற்பட்டார்.
- இவரது செயல்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் தமிழர்களின் தேசிய உணர்வைத் தட்டி எழுப்புவதாகவும் அமைந்தது.
- வ.உ.சியும் அவரது நண்பர்களும் சேர்ந்து அப்போது தலைசிறந்த பேச்சாளராக விளங்கிய விபின் சந்திரபாலரை 1907ல் சென்னைக்கு அழைத்து சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தனர்.
- விபின் சந்திரபாலரின் அனல்கக்கும் பேச்சுக்கள் தமிழக மக்களை விழித்தெழச் செய்ததுடன் தமிழ்நாட்டில் புரட்சி மனப்பான்மையையும் புகுத்தின.
- அவரது சொற்பொழிவுகளைக் கேட்ட பலர் தீவிர தேச பக்தர்களாக மாறினர்.
- தமிழ்நாட்டில் அரசியல் கலவரங்கள் ஏற்பட்டதற்கு இவரது சொற்பொழிவே காரணம் என்று கருதியது அரசாங்கம் ஆகும்.

**தமிழ்நாட்டில் புரட்சி நடவடிக்கைகள்**

- விபின் சந்திரபாலர் கல்கத்தா திரும்பிய பிறகு தமிழகத்தில் புரட்சித்தீ விரைவில் பரவ ஆரம்பித்துவிட்டது.
- திருவல்லிக்கேணியில் அயல்நாட்டுத் துணிகள் தெருவில் போட்டுக் கொளுத்தப்பட்டன.
- சூரத் காங்கிரஸ் பிளவுக்குப் பிறகு தீவிரவாதிகளுக்கெதிராக அரசாங்கம் அடக்கு முறைகளை அவிழ்த்து விட்டது.
- இதனால் சுதேசி இயக்கம் ஓரளவு புரட்சி இயக்கமாக மாறியது. பாரதியார் தேசபக்திப் பாடல்களை எழுதினார்.
- இந்தியா பத்திரிக்கையில் புரட்சியாளரை ஆதரித்து தலையங்கங்கள் எழுதினார்.
- வ.உ.சியும், சிவாவும் பல இடங்களில் சுதேசிப் பொருட்களை விற்பனை செய்ததுடன் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.
- சிதம்பரனாரின் பேச்சுக்களால் பல ஊர்களில் புரட்சி ஏற்பட்டது.

- விபின் சந்திரபாலரின் விடுதலையை, தமிழகத்தில் தடையை மீறிக் கொண்டாடிய வ.உ.சியும், சிவாவும் கைது செய்யப்பட்டனர்.
- இதனால் மக்கள் கொதித்தெழுந்து வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
- திருநெல்வேலியில் காவல் நிலையம் தீக்கிரையானது.
- போலீசார் சுட்டதில் பலர் உயிரிழந்தனர். சிவாவும், வ.உ.சியும் சிறையில் சித்திரவதை செய்யப்பட்டனர்.
- எனவே தீவிரவாதிகள் பலர் தலைமறைவாகிவிட்டனர்.
- தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்துடன் பயங்கரவாதமும் ஓரளவு தலை தூக்கியது.
- திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ஆஷ் என்பவரை வாஞ்சி ஐயர் என்ற வாலிபர் மணியாட்சி ரயில் நிலையத்தில் சுட்டுக் கொன்றார்.
- பின்னர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு வீரமரணம் அடைந்தார்.
- இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகளில் ஒருவரான சங்கரன்நாயர் இந்தக் கொலை தேசிய விழிப்பின் எதிரொலி என்று குறிப்பிட்டார்.
- சுதேசி இயக்கத்தினால் தமிழ்நாட்டு தேசிய இயக்கத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டது.
- தேசிய இயக்கத்தின் தன்மையில் மாறுதல் தோன்றியது.
- அறையிலிருந்த அரசியல் அம்பலத்திற்கு வந்தது எனலாம். கற்றறிந்த மேட்டுக் குடியினரின் இயக்கமாக இருந்தது ஓரளவு மக்கள் இயக்கமாக மாறியது எனலாம்.
- சுதேசி இயக்கத் தலைவர்களான சிதம்பரனார், பாரதியார், சிவா போன்றவர்கள் மக்கள் தலைவர்களாக மாறினர்.
- இவர்களது பேச்சும், எழுத்துக்களும் மக்களை எழுச்சியுறச் செய்தன.

**<u>தமிழ்நாட்டில் தன்னாட்சி இயக்கம்</u>**

- சுதேசி இயக்கத்தினால் தமிழ்நாட்டு மக்களிடையே ஓரளவு விழிப்புணர்வு தோன்றியிருந்தது. அத்தகைய விழிப்புணர்ச்சியை மேலும் பரவச் செய்த பெருமை அன்னிபெசண்ட் அம்மையாரையும் அவரது தன்னாட்சி இயக்கத்தையுமே சாரும்.
- 1916 ல் அவர் சென்னையில் தன்னாட்சிக் கழகத்தை நிறுவினார்.
- சி.பி.ராமசாமி ஐயர், ஏ.ரங்கசாமி ஐயங்கார் போன்றோர் அக்கழகத்திற்கு ஆதரவாக நின்றனர்.
- அன்னிபெசன்ட்டின் பேச்சாற்றலாலும், எழுத்து வன்மையாலும் இந்த இயக்கம் தமிழகத்தில் விரைவில் பரவியது.
- சுதேசிப் பொருட்களுக்கு ஆதரவு, அந்நியப் பொருட்களின் விலக்கம், மது அருந்தாமை, தேசியக் கல்வி, தொழிலாளர் நலம் போன்றவை பற்றி தீவிரப் பிரச்சாரம் நடைபெற்றது.
- இதனால் கலக்கமடைந்த அரசு 1917ல் அன்னிபெசன்ட்டைக் கைது செய்து ஊட்டியில் சிறை வைத்தது.
- இதனால் தமிழ்நாட்டில் மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர்.
- தமிழகம் முழுவதும் அரசுக்கெதிரான கசப்புணர்ச்சி பரவியது.
- தன்னாட்சி இயக்கப் பிரச்சாரத்தில் தமிழ் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது.
- தன்னாட்சி இயக்கம் தமிழகத்தில் தேசிய இயக்கத்தின் முக்கிய கட்டமாக அமைந்தது.

**<u>தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம்</u>**

- 1919 ல் ஒத்துழையாமை இயக்கத்தை காந்தி துவக்கினார்.
- தமிழகத்தில் இந்த இயக்கம் வேகமாகப் பரவியது.
- 1920, ஆகஸ்ட் மாதம் காந்தி தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்தார்.
- சென்னையிலும், பல மாவட்டங்களிலும் பல பொதுக் கூட்டங்களில் பேசினார்.
- இந்த இயக்கத்திற்கு ஆதரவு தேடும் வகையில் அவர் 1921 ல் இருமுறைகள் மீண்டும் தமிழகத்திற்கு வந்தார்.
- கஸ்தூரி ஐயங்கார், சீனிவாச ஐயங்கார், சத்தியமூர்த்தி, வ.உ.சி, ராஜாஜி, சிங்காரவேலு செட்டியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு போன்ற தலைவர்களின் முயற்சியால் ஒத்துழையாமை இயக்கம் பெரும் பயன் அளித்தது.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

- மேலும் இந்து, சுதேசமித்திரன், தேசபக்தன், முகமதன் போன்ற பத்திரிக்கைகளும் இந்த இயக்கம் வளர உதவியது.
- தமிழகத்தில் ஊர்வலங்களம், பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.
- பல்லாயிரக்கணக்கான பேர் சிறை சென்றனர். அரசாங்கத்திற்கு எதிர்ப்பு அதிகரித்தது.

**தமிழ்நாட்டில் சட்ட மறுப்பு இயக்கம்**

- இந்திய தேசிய இயக்கத்தில் அடுத்த கட்டமாக 1929 ல் சட்ட மறுப்பு இயக்கம் காந்தியடிகளால் ஆரம்பிக்கப்பட்டது.
- வன்முறை இல்லாமல் வரிகொடாமை உள்ளிட்ட சாத்வீக சட்டமறுப்பு மூலமாக சுதந்திரத்தை அடைவதே இந்த இயக்கததின் நோக்கமாகும்.
- இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டவுடன் நாட்டில் இதுவரை காணாத அளவுக்கு தேசிய உணர்வு அலைகள் பொங்கி எழுந்தன.
- தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம் இராஜாஜி தலைமையில் நடைபெற்றது.
- ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், மறியல்கள் நடைபெற்றன.
- இதன் உச்ச கட்டமாக உப்பு சத்தியாகிரகம் நடைபெற்றது.
- ராஜாஜி தலைமையில் வேதாரண்யத்தில் உப்புக் காய்ச்சுவதற்காக 1930, ஏப்ரல் 12ம் தேதி நூறு தொண்டர்கள் திருச்சியிலிருந்து புறப்பட்டனர்.
- தஞ்சை மாவட்ட அதிகாரியான கார்ன் என்பவர் இந்தப் போராட்டத்தை நசுக்க பல வழிகளில் முயன்றார்.
- ஆனாலும் போராட்ட வீரர்களுக்கு திருவையாறு, தஞ்சாவூர், கும்பகோணம் போன்ற நகரங்களில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.
- தடையை மீறிய ராஜாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- அவரைத் தொடர்ந்து வேதரத்தினம் பிள்ளை, டாக்டர் ராஜன், திருமதி லட்சுமிபதி போன்ற தலைவர்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்தினர்.
- போராட்டத் தொண்டர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.
- இதற்கிடையில் காந்தி இர்வின் ஒப்பந்தம் தோல்வியடைந்ததால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கிளர்ச்சிகள் மீண்டும் தொடர்ந்தன.
- 1932, ஜனவரி 26ம் தேதி சென்னையில் தடையை மீறி சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.
- ஊர்வலத்தைக் கலைக்க போலீசார் தடியடி நடத்தினர். முத்துரங்க முதலியார், பக்தவத்சலம், ஆதிகேசலு நாயுடு ஆகியோருக்கு பலத்த அடி விழுந்தது.
- முத்துரங்க முதலியார் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்.
- 1934 ல் காந்தியடிகள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்தபோது திரளான மக்கள் அவரை வரவேற்றனர். சென்ற இடமெல்லாம் சிறப்பு செய்து அவரது அரிசன நல நிதிக்கு பெரும் பொருள் வழங்கினர்.
- மக்களிடையே அரசாங்கத்திற்கெதிராக ஒருவித சகப்புணர்வு நிலவியது.
- சட்ட மறுப்பு இயக்கம் இறுதியாக விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்த இயக்கம் தமிழகத்தில் படித்தவர்களிடமும் பாமர மக்களிடமும் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி தேசிய இயக்கம் வளர்ச்சியடைய உதவியது.

**தமிழ்நாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கம்**

- 1942 ல் பம்பாயில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- இதைத் தொடர்ந்து காந்தி உட்பட முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.
- அரசாங்கத்தை முடக்க அகிம்சைப் போருடன் வன்முறைச் சம்பவங்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றன.
- 1942ம் வருடப் புரட்சியை தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து ஊர் ஊராகப் பரப்பியவர். நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் கொண்ட காமராசர் ஆவார்.
- இவர் தாம் கைது செய்யப்படும் முன்பு பல இடங்களுக்குச் சென்று புரட்சிக்கான ஆயத்தங்களைச் செய்துவிட்டு பின்னர் போலீசில் சரணடைந்தார். இதனால் தமிழ்நாட்டிலும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

- தமிழக மக்கள் தலைவர் இல்லாமல் தவிக்கும் நிலை ஏற்பட்டது
- மனக் கசப்பும் ஆத்திரமும் கொண்ட நிலையில் பலர் செய்வதறியாது தடுமாறினர்.
- ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும், மறியலும் தடை செய்யப்பட்டதால் பொறுமையிழந்த மக்கள் நாச வேலைகளில் ஈடுபட்டனர்.
- தீயிடல், தந்திக் கம்பங்களை அறுத்தல், பாலங்களைப் பெயர்த்தல் போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர்.
- பணப்பாடு, வேலூர் போன்ற இடங்களில் நாச வேலைகள் மலிந்தன.
- செங்கற்பட்டு ஜில்லா போர்டும், தாமல் பஞ்சாயத்து போர்டும் கலைக்கப்பட்டன.
- கோவை மாவட்டத்தில் பல துணி ஆலைகள் மூடப்பட்டன.
- போதனூர்க்கருகில் ரயில் கவிழ்க்கப்பட்டது. குமாரசாமி ராஜாவைத் தந்த இராஜபாளையம் இந்த இயக்கத்தில் முன்னிலையில் நின்றது.
- காரைக்குடி, தேவகோட்டை ஆகிய இடங்களில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றன.
- பூலாங்குறிச்சி, திருவாடானை முதலிய இடங்களில் வன்முறை வரம்புமீறி நடைபெற்றது.
- மன்னார்குடி, திருவையாறு, கும்பகோணம், திருநெல்வேலி போன்ற இடங்களில் சதி வேலைகள் நடைபெற்றன.
- அரசாங்க அலுவல்கள் பாதிக்கப்பட்டன. தபால் தந்தி போக்குவரத்து ஸ்தம்பித்துப் போய்விட்டது.
- வன்முறை அதிகமாகக் காணப்பட்ட இந்த ஆகஸ்ட் போராட்டம், அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளால் மூன்று மாதமே நீடித்தது.
- இந்த இயக்கத்தை ஆட்சியாளர்கள் அடக்கி விட்டனர் என்றாலும் அது எழுப்பிவிட்ட ஆவேசத்தீயை அவர்களால் அசைக்க முடியவில்லை.
- அழிவு வேலைகள் பல நடந்த போதிலும் இது மக்களின் சுதந்திர தாகத்தை வெளிப்படுத்தியது.

**இந்தியா சுதந்திரம் அடைதல்**

- இரண்டாவது உலகப் போரின் போதும், அதை அடுத்த சில ஆண்டுகளில் காங்கிரஸ் விடுதலைக்காகப் போராடி வந்த காலத்தில் தமிழகத்தில் மற்ற கட்சிகள் தங்கள் வலிமையை பெருக்கிக் கொள்ள முனைந்தன.
- அரசாங்கத்தின் போர் முயற்சிகளுக்கு ஆதரவளித்தன.
- தேசிய உணர்வுக்கும், நாட்டு விடுதலைக்கும போராடிய காங்கிரசுக்கு எதிராகச் செயல்பட்டன.
- 1946ல் பொதுத் தேர்தல்கள் நடத்த அறிவிப்பு செய்யப்பட்ட போது, தமிழகத்தில் காமராசர் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்கினார்.
- காங்கிரசின் நிரமாணத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்தார்.
- இதனால் மக்களிடம் பெரும் வெற்றி கிடைத்தது. ஆந்திர கேசரி T. பிரகாசம் தலைமையில் மந்திரி சபை அமைக்கப்பட்டது.
- 1947, ஆகஸ்ட் 15ம் தேதி இந்தியா விடுதலை அடைந்தது. தமிழ்நாட்டு மக்களிடையே மகிழ்ச்சி பொங்கியது. விடுதலை நாளை விழாவாகக் கொண்டாடினர்.
- மகாத்மா காந்தியும், பாரதியும் கண்ட கனவு நனவாகியது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டுத் தலைவர்களும், மக்களும் செய்த தியாகங்கள் வீண் போகவில்லை.
- சுதந்திரம் பெற்று முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்தனர் தமிழக மக்கள்.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

# காங்கிரஸ் மாநாடுகளும், தலைவர்களும்.

| வ.எண் | வருடம் | மாநாட்டின் தலைவர் | மாநாடு நடைபெற்ற இடம் |
|---|---|---|---|
| 1 | 1885 | உமேஷ் சந்திர பானர்ஜி | பம்பாய் |
| 2 | 1886 | தாதாபாய் நௌரோஜி | கல்கத்தா |
| 3 | 1887 | பதாருதீன் தயாப்ஜி | மெட்ராஸ் |
| 4 | 1888 | ஜார்ஜ் யூலே | அலகாபாத் |
| 5 | 1889 | சர் வில்லியம் வெடர்பம் | பம்பாய் |
| 6 | 1890 | ஃபெரோஸா மேத்தா | கல்கத்தா |
| 7 | 1891 | ஆனந்த் சார்லு | நாக்பூர் |
| 8 | 1892 | உமேஷ் சந்திர பானர்ஜி | அலகாபாத் |
| 9 | 1893 | தாதாபாய் நௌரோஜி | லாகூர் |
| 10 | 1894 | ஆல்பிரட் வெப் | மெட்ராஸ் |
| 11 | 1895 | சுரேந்தரநாத் பானர்ஜி | பூனா |
| 12 | 1896 | முகமது ரஹ்மத்துல்லா சயானி | கல்கத்தா |
| 13 | 1897 | சி.சங்கரன் நாயர் | அமராவதி |
| 14 | 1898 | ஆனந்த மோகன் பாசு | மெட்ராஸ் |
| 15 | 1899 | ரமேஷ் சந்திர துட்டா | லக்னோ |
| 16 | 1900 | நாராயண் கணேஷ் சந்திரவர்க்கார் | லாகூர் |
| 17 | 1901 | தினேஷா ஜடால்ஜி வத்சா | கல்கத்தா |
| 18 | 1902 | சுரேந்திரநாத் பானர்ஜி | அகமதாபாத் |
| 19 | 1903 | லால் மோகன் கோஷ் | மெட்ராஸ் |
| 20 | 1904 | சர் ஹென்றி காட்டன் | பம்பாய் |
| 21 | 1905 | கோபால கிருஷ்ண கோகலே | வாரனாசி |
| 22 | 1906 | தாதாபாய் நௌரோஜி | கல்கத்தா |
| 23 | 1907 | ராஷ்பிகாரி கோஷ் | சூரத் |
| 24 | 1908 | ராஷ்பிகாரி கோஷ் | மெட்ராஸ் |
| 25 | 1909 | மதன் மோகன் மாளவியா | லாகூர் |
| 26 | 1910 | சர் வில்லியம் வெடர்பம் | அலகாபாத் |
| 27 | 1911 | பி.என்.தார் | கல்கத்தா |
| 28 | 1912 | ஆர்.என்.மதல்கார் | பாட்னா |
| 29 | 1913 | நவாப் செய்யது முகமது பகதூர் | கராச்சி |
| 30 | 1914 | புபேந்திரநாத் பாசு | மெட்ராஸ் |

# காங்கிரஸ் மாநாடுகளும், தலைவர்களும்.

| வ.எண் | வருடம் | மாநாட்டின் தலைவர் | மாநாடு நடைபெற்ற இடம் |
|---|---|---|---|
| 31 | 1915 | எஸ்.பி.சின்கா | பம்பாய் |
| 32 | 1916 | அம்பிகா சரண் மஜூம்தார் | லக்னோ |
| 33 | 1917 | அன்னிபெசன்ட் அம்மையார் | கல்கத்தா |
| 34 | 1918 | செய்யது ஹசன் இமாம்<br>மதன் மோகன் மாளவியா (முடிவு) | பம்பாய்<br>டெல்லி |
| 35 | 1919 | மோதிலால் நேரு | அமிர்தசரஸ் |
| 36 | 1920 | லாலா லஜபதிராய்<br>சி.விஜயராகவாச்சாரியார் (முடிவு) | கல்கத்தா<br>நாக்பூர் |
| 37 | 1921 | சி.ஆர்.தாஸ் (சிறையில்)<br>ஹக்கின் அஜ்மல் கான் (பொறுப்பாளர்) | அகமதாபாத் |
| 38 | 1922 | சி.ஆர்.தாஸ் | கயா |
| 39 | 1923 | மௌலான அபுல்கலாம் ஆசாத்<br>முகம்மத அலி (முடிவு) | டெல்லி<br>காக்கிநாடா |
| 40 | 1924 | மகாத்மா காந்தி | பெல்காம் |
| 41 | 1925 | சரோஜினி நாயுடு | கான்பூர் |
| 42 | 1926 | எஸ்.ஶ்ரீனிவாச ஐயங்கார் | கவுகாத்தி |
| 43 | 1927 | எம்.ஏ.அன்சாரி | மெட்ராஸ் |
| 44 | 1928 | மோதிலால் நேரு | கல்கத்தா |
| 45 | 1929 | ஜவஹர்லால் நேரு | லாகூர் |
| 46 | 1930 | காங்கிரஸ் மாநாடு நடக்கவில்லை | – |
| 47 | 1931 | சர்தார் வல்லபாய் பட்டேல் | கராச்சி |
| 48 | 1932 | அமிர்த் ரஞ்சோதாஸ் | டெல்லி |
| 49 | 1933 | நெல்லி சென் குப்தா | கல்கத்தா |
| 50 | 1934 | டாக்டர் ராஜேந்திர பிரசாத் | பம்பாய் |
| 51 | 1935 | டாக்டர் ராஜேந்திர பிரசாத் | லக்னோ |
| 52 | 1936 | ஜவஹர்லால் நேரு | லக்னோ |
| 53 | 1937 | ஜவஹர்லால் நேரு | ஃபாஸிபூர் |
| 54 | 1938 | சுபாஷ் சந்திர போஸ் | ஹரிபுரா |
| 55 | 1939 | சுபாஷ் சந்திர போஸ்<br>டாக்டர் ராஜேந்திர பிரசாத் (முடிவு) | திரிபுரா |
| 56 | 1940 | மௌலானா அபுல் கலாம் ஆசாத் | ராம்கார் |
| 57 | 1946 | ஆச்சார்யா ஜெ.பி.கிருபாலினி | மீரட் |
| 58 | 1948 | பட்டாபி சித்தாரமையா | ஜெய்ப்பூர் |
| **அதிகபட்சமாக ஏழு முறை தலைவர் ஜவஹர்லால் நேரு.<br>தொடர்ந்து அதிகபட்சம் ஆறு ஆண்டு: மௌலானா அபுல் கலாம் ஆசாத்.** | | | |

# இந்தியாவின் முக்கிய கவர்னர் ஜெனரல் மற்றும் வைசிராய்கள்

| வைசிராய் | காலம் | நடந்த நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| **கவர்னர் ஜெனரல்கள்**<br>வாரன் ஹேஸ்டிங்ஸ் | 1772 – 85 | 1) ஒழுங்கு முறைச் சட்டம் 1773<br>2) கிளைவ் ஏற்படுத்திய இரட்டை ஆட்சி முறை ரத்து. |
| காரன் வாலிஸ் பிரபு | 1786 – 93 | நிரந்தர நிலவரிச் சட்டம் (வரி வசூலிக்கும் உரிமை ஜமீன்தார்களுக்குத் தரப்பட்டது) |
| வெல்லெஸ்லி பிரபு | 1798 – 1805 | 1) துணைப்படைத் திட்டம், 2) 4–வது மைசூர்ப் போர் |
| ஹேஸ்டிங்ஸ் பிரபு | 1813 – 23 | பிண்டாரி ஒழிப்பு |
| பெண்டிங் பிரபு | 1828 – 35 | 1) சதி (உடன்கட்டை ஏறல்) ஒழிப்பு<br>2) பெண் சிசுக்கொலை தடை<br>3) ஆங்கிலக் கல்வி முறை புகுத்தப்படுதல்<br>4) தக்கர் (Thugs) எனும் கொள்ளையர் ஒழிப்பு |
| டல்ஹௌசி | 1848 – 56 | 1) அவகாசியிலிக் கொள்கை (வாரிசு இழப்பு கொள்கை)<br>2) ரயில்வே, தபால், தந்தி துவக்கம்.<br>3) பொதுப் பணித்துறை (PWD) தொடக்கம் |
| கானிங்<br>(கருணைமிக்க கானிங்) | 1856 – 62 | 1) முதல் இந்திய சுதந்திரப் போர்; கம்பெனி ஆட்சி முடிவு<br>2) பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சி<br>3) சென்னை, பம்பாய், கல்கத்தா பல்கலைக் கழகங்கள்.<br>4) சென்னை, பம்பாய் கல்கத்தா உயர்நீதிமன்றங்கள்;<br>5) இந்தியன் சிவில் வழக்கு முறை (Code)<br>6) இந்தியன் கிரிமினல் வழக்கு முறை<br>7) காகித நாணயம் வெளியீடு |
| ரிப்பன்<br>(மிகச் சிறந்த வர்னர் ஜெனரல்) | 1880 – 84 | 1) தல சுய ஆட்சி<br>2) தொழிலாளர் நலம் காக்க 1881ல் தொழிற்சாலைச் சட்டம்<br>3) முதன் முதலில் மக்கள் தொகைக் கணக்கீடு<br>4) இல்பர்ட் மசோதா. |
| **வைசிராய்கள்** (அரசப்பிரதிநிதிகள்)<br>கர்சன் பிரபு | 1899 – 1905 | 1) தொல்பொருள் பாதுகாப்புச் சட்டம்<br>2) வங்கப் பிரிவனை (1905) |
| ஹார்டிஞ்ச் பிரபு | 1910 – 16 | 1) வங்கப் பிரிவினை நீக்கம் (1911)<br>2) தலைநகரம் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றம்(1911) |
| செம்ஸ்போர்ட் பிரபு | 1916 – 21 | 1) ரௌலட் சட்டம்<br>2) ஜாலியன் வாலா பாக் படுகொலை. |
| இர்வின் பிரபு | 1926 – 31 | 1) சைமன் குழு வருகை<br>2) முதல் வட்ட மேஜை மாநாடு<br>3) நேரு தலைமையில் லாகூர் காங்கிரஸ் **பூரண சுதந்திரம்**<br>4) சட்ட மறுப்பு, உப்பு சத்தியாகிரகம், தண்டி யாத்திரை<br>5) சிறுமியர் திருமணத்தைத் தடுக்க சாரதா சட்டம் |
| வெல்லிங்டன் பிரபு | 1931 – 36 | 2& 3 வது வட்ட மேஜை மாநாடுகள் |
| லின்லித்கோ பிரபு | 1936 – 43 | 1) வெள்ளையனே வெளியேறு 1942 ஆகஸ்ட் புரட்சி<br>2) கிரிப்ஸ் தூதுக்குழு |
| வேவல் பிரபு | 1943 – 47 | 1) காபினெட் தூதுக்குழு வருகை<br>2) இந்திய தேசிய ராணுவ (INA) வீரர்கள் மீது விசாரணை. |
| மவுண்ட்பேட்டன் | 1947 | இந்திய சுதந்திரம் & பிரிவினை |

## பத்திரிக்கைகளும், ஆசிரியர்களும்.

| பத்திரிக்கை | ஆசிரியர்கள் |
|---|---|
| யங் இந்தியா | காந்திஜி |
| நியூ இந்தியா | அன்னிபெசன்ட் |
| இந்தியா, விஜயா | பாரதியார் |
| கேசரி, மராட்டா | பாலகங்காதர திலகர் |
| நேஷனல் ஹெரால்டு | ஜவர்ஹலால் நேரு |
| இன்டிபென்டன்ட் | மோதிலால் நேரு |
| பெங்காலி | சுரேந்திரநாத் பானர்ஜி |
| தி ஹிண்டு | S.சுப்ரமணிய ஐயர் |
| அல்ஹிலால் | அபுல்கலாம் ஆசாத் |
| நவசக்தி, தேசபக்தன் | திரு.வி.க |
| தென்றல், முல்லை | கண்ணதாசன் |
| குயில் | பாரதிதாசன் |
| பாலபாரதி | வ.வே.சு.ஐயர் |
| சுதேசமித்ரன் | G.சுப்ரமணிய ஐயர் |

## ஆங்கிலேயர் ஆட்சியில் முக்கிய சட்டங்கள்

- 1802 – நிலையான நிலவரித் திட்டம்
- 1813 – பட்டயச் சட்டம்
- 1823 – பொதுக்கல்வி இயக்குநரகம்
- 1829 – சதி ஒழிப்புச்சட்டம்
- 1833 – மகல்வாரி திட்டம்
- 1834 – அமெரிக்க யாழ்ப்பாண சமய பரப்புக் குழு
- 1852 – சென்னையில் பொதுப்பணத்துறை
- 1854 – சார்லஸ் உட் அறிக்கை
- 1856 – பொது இராணுவ பணியாளர் சட்டம்
- 1877 – டெல்லி தர்பார்
- 1878 – வட்டார மொழிகள் பத்திரிக்கைச் சட்டம்
- 1878 – இந்திய ஆயுத சட்டம்
- 1881 – தொழிற்சாலை சட்டம்
- 1881 – வட்டார மொழிகள் பத்திரிக்கைச் சட்டம் நீக்கம்
- 1882 – ஹண்டர் குழு
- 1883 – இல்பர்ட் மசோதா
- 1883 – ஏரி புதுப்பிக்கும் சட்டம்
- 1904 – பழுங்கால நினைவு சின்னங்கள் பாதுகாக்கும் சட்டம்
- 1904 – இந்திய பல்கலைகழக சட்டம்
- 1919 – ரௌலட் சட்டம்
- 1921 – இந்து அறநிலையச்சட்டம்
- 1923 – தொழிலாளர் நஷ்ட ஈடு சட்டம்
- 1926 – இந்திய தொழிற்சங்க சட்டம்
- 1927 – சைமன் குழு
- 1930 – தேவதாசி ஒழிப்பு சட்டம்
- 1935 – இந்திய அரசு சட்டம்
- 1935 – சுரங்க சட்டம்
- 1940 – ஆகஸ்டு நன்கொடை
- 1940 – ஜின்னாவின் இரு நாடுகள் கொள்கை
- 1942 – கிரிப்ஸ் தூதுக்குழு
- 1942 – வெள்ளையனே வெளியேறு இயக்கம்
- 1946 – அமைச்சரவை தூதுக்குழு (காபினெட்)
- 1947 – மவுண்ட் பேட்டன் திட்டம்


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

# தமிழக வரலாறு

## சங்க காலம்

- கி.மு.500 முதல் கி.பி.1300 வரையிலான தமிழ் நாட்டின் அரசியல் வரலாற்றை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.
- அவை 1) சங்க காலம்
  2) களப்பிரர்கள் காலம்
  3) தமிழ் பேரரசுகளின் காலம்
- சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலம் சங்ககாலம் எனப்படும்.
- சங்கம் என்ற சொல்லை பயன்படுத்தியவர் - சீத்தலை சாத்தனார்.
- திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை - கால்டுவெல்
- 3 சங்கங்கள் பற்றி விரிவாக சொன்னவர் - நக்கீரர். நூல் - இறையனார் களவியல் - இறையனார் அகப்பொருள்

ஆகாஷ்
வ
ர
லா
று

**சங்ககால சான்றுகள் :**

- அசோகரின் பாறைக் கல்வெட்டுகள்
- காரவேலரின் ஹதிகும்பா கல்வெட்டுகள்
- கழுகுமலைக் கல்வெட்டு - பிரம்மி எழுத்து
- திருக்கோவிலூர் கல்வெட்டு (குறுநில மன்னன், கபிலர் துயர முடிவு)
- ஆர்நாட்டார் மலைக் கல்வெட்டுகள்.(சேர மன்னர்களைப் பற்றிய குறிப்புகள்)

| சங்கம் | இடம் | ஆறு | அரசர்கள் | இருந்த புலவர்கள் | பாடிய புலவர்கள் | ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| முதல் சங்கம் | தென் மதுரை | பஃறுளி ஆறு | காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை – 89 பேர் | 549 பேர் | 4449 பேர் | கி.மு. 4440 |
| இடைச் சங்கம் | கபாடபுரம் | குமரி ஆறு | வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை – 57 பேர் | 59 பேர் | 3700 பேர் | கி.மு. 3700 |
| கடைச் சங்கம் | வட மதுரை | வைகை ஆறு | முடத்திருமாறன் முதல் உக்கிரபெருவழுதி வரை – 49 பேர் | 49 பேர் | 3449 பேர் | கி.மு. 1850 |


கிளைகள்:தென்காசி,சங்கரன்கோவில்,இராஜபாளையம்,விழுப்புரம்,கடலூர்,சிதம்பரம்,தேனி,வடலூர்,சேலம்,திருவண்ணாமலை

**லெமூரியாக் கண்டம் :**

- முற்காலத்தில் தற்போதைய குமரி முனைக்கு தெற்கே ஒரு நிலபரப்பு இருந்ததாகவும் அந்த நிலபரப்பில் பாண்டிய மன்னர்களின் ஆட்சி மிகச் சிறப்பாக நடைபெற்றதாகவும் அறியப்படுகிறது.
- அந்த நிலபரப்பிற்கு குமரிக் கண்டம் என்று பெயர்.
- குமரிக் கண்டத்தில் பஃறுளி ஆறு மற்றும் குமரி ஆறு என இரண்டு ஆறுகள் ஓடின.
- ''பன்மலையடுக்கத்து குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள''என்ற சிலப்பதிகார வரிகளின் மூலம் குமரிக்கண்டம் இருந்ததற்கான சான்றை நாம் காணலாம்.
- குமரிக்கண்டத்தில் ஏழு உட்பிரிவுகளைக் கொண்ட ஏழு நாடுகள் இருந்ததாக சிலப்பதிகார உரையாசரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார்.

- குமரிக்கண்ட நாடுகளில் ஒன்றான ஏழ் தொங்க நாடு என்பது தற்போதைய இலங்கை ஆகும்.
- குமரிக்கண்டத்தில் லெமூர் வகை குரங்குகள் அதிகமாக வாழ்ந்ததாக கூறுபவர் - கில்பர்ட் ஸ்லேட்டர்.
- எனவே குமரிக்கண்டம், லெமூரியாக் கண்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

## மூவேந்தர்கள்

**சேரர்கள் :**

- சேர வரலாற்றை அறிய உதவும் நூல் பதிற்றுப்பத்து.
- சேர அரசர்களில் சிறந்த மன்னன் - சேரன் செங்குட்டுவன்.
- சேர அரசர்கள் கேரள புத்திரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.
- முதல் மன்னன் - பெருஞ்சோற்று உதியலாதன்.
- இவன் மகாபாரதப் போரில் கௌரவர் மற்றும் பாண்டவர் படைகளுக்கு உணவு அளித்தவன்.
- சேரர்கள் - வானவர், வில்லவர், மலையர் எனக் குறிப்பிடப்படுகிறார்கள்.
- சேர மரபு இரண்டு வகையாக உள்ளன.
- அவை 1) உதியன் சேரலாதன் மரபு
  2) இரும்பொறை மரபு
- இமயமலை வரை சென்று வெற்றி கொண்டு அங்கிருந்து கற்களை எடுத்து வந்து வஞ்சியில் கொடும்பாளூரில் கண்ணகிக்கு கோயில் எழுப்பினார்.
- கோயில் குடமுழுக்கு விழாவில் இலங்கை மன்னன் 2ம் கயவாகு கலந்து கொண்டான்.

**சோழர்கள் :**

- காவிரி நாடு, காவிரி சூழ் நாடு, நீர் நாடு, புனல் நாடு போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- சோழர்கள் - கிள்ளி, வளவன், சென்னி, செம்பியன் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.
- தலைநகரம் - உறையூர், காவிரி பூம்பட்டினம். துறைமுகம் - காவிரி பூம்பட்டினம் (அ) பூகார்
- சிறந்த மன்னன் - கரிகால் சோழன்.
- வெண்ணிறப் போரில் 11 மன்னர்களையும், வாகை புறந்தலைப் போரில் 9 மன்னர்களையும் வென்றார்.
- கரிகால் சோழனைப் பற்றி பட்டினப்பாலை மற்றும் பொருநராற்றுப்படை ஆகியவைக் கூறுகின்றன.
- சங்ககால சோழர்களின் ஆட்சி கோச்செங்காணன் காலத்தோடு முடிவடைந்தது.

**பாண்டியர்கள் :**

- மாறன், வழுதி, செழியன், தென்னவன், கூடற்கோன் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.
- தலைநகரம் - மதுரை. துறைமுகம் - கொற்கை. பூ -வேப்பம் பூ
- சிறந்த மன்னன் - தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்.
- இவர் தலையாலங்கானம் என்ற இடத்தில் சேர, சோழ, குறுநிலமன்னர்களின் கூட்டுப்படையை வென்றார்.
- இவர் மதுரைக் காஞ்சி இயற்றிய புலவர் மாங்குடி மருதனாரை ஆதரித்தவர்.
- கோவலனுக்கு தண்டனை வழங்கிய நெடுஞ்செழியன் - ஆரியப் படை வென்ற நெடுஞ்செழியன்.
- களப்பிரர்களால் பாண்டியர்களின் ஆட்சி முடிவடைந்தது.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

## குறுநில மன்னர்கள் :

மூவேந்தர்களைத் தவிர தமிழகத்தில் இருந்த குறுநில மன்னர்கள் வேளிர்கள் என அழைக்கப்பட்டனர்.

**வேளிர்களில் சிறந்தவர்கள் கடையெழு வள்ளல்கள்.**



1) பாரி - பரம்பு மலை (முல்லைக்கு தேர் தந்தவர்)
2) காரி - மலையான் மற்றும் முள்ளூர்
3) ஓரி - கொல்லி மலை
4) நள்ளி - கண்டீர மலை
5) பேகன் - பழனி மலை (மயிலுக்கு போர்வை தந்தவர்)
6) ஆய் - பொதிகை மலை
7) அதியமான் - தகடூர் (ஔவைக்கு நெல்லி தந்தவர்)

## சங்ககால மன்னர்களின் ஆட்சி முறை :

- நாட்டை மண்டலம், நாடு, வளநாடு கூற்றம் எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.
- கிராமங்களில் இருக்கும் அவைகளுக்கு மன்றம், பொதியில், அம்பலம் எனப் பல பெயர்கள் உண்டு.
- ஆட்சிப் பணியில் இரண்டு குழுக்கள் இருந்தன. 1) ஐம்பெரும் குழு 2) எண்பேராயம்.

| எண்பேராயம் | ஐம்பெரும் குழு |
|---|---|
| கரணத்தியலவர் – கணக்கர் | அமைச்சர் |
| கரும விதிகள் – ஆணை ஏற்போர் | அந்தனர் |
| கடை காப்பாளர் – நாடு காவலர் | சேனைத்தலைவர் |
| கனக சுற்றம் – காசாளர் | தூதர் |
| நகர மாந்தர் – நகர மக்கள் | ஒற்றர் |
| படைத்தலைவர் – நிலப்படை | |
| யானை வீரர் – யானைப்படை | |
| இவுளி மறவர் – குதிரைப்படை | |

## சங்க கால சமூகம் :

| வ.எண். | நிலம் | சார்ந்த பகுதி | முதன்மை தெய்வம் | தொழில் |
|---|---|---|---|---|
| 1. | குறிஞ்சி | மலை | முருகன் | வேட்டை, தேன் எடுத்தல் |
| 2. | முல்லை | காடு | மாயோன் (விஷ்ணு) | ஆடு, மாடு வளர்ப்பு |
| 3. | மருதம் | வயல் | இந்திரன் | வேளாண்மை |
| 4. | நெய்தல் | கடல் | வருணன் | மீன் பிடித்தல் |
| 5. | பாலை | வறண்ட பகுதி | கொற்றவை (காளி) | கொள்ளையடித்தல் |

# களப்பிரர் காலம்

**(சங்கம் மருவிய காலம்)**

- கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் சங்க காலம் முடிவுக்கு வந்தது. சங்க காலத்தின் இறுதிப் பகுதியை சங்கம் மருவிய காலம் என்று கூறுகிறோம்.
- பதினெண் கீழ் கணக்கு நூல்கள் மற்றும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களாகும்.
- கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.பி.ஆறாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி வரை களப்பிரர்கள் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்தினர்.
- களப்பிரர்களைப் பற்றி அறிய சான்றுகள் இல்லாததால், அவர்களது காலம் இருண்ட காலம் என்று அழைக்கப்படுகிறது.
- தமிழ் நாவலர் சரிதை, யாப்பெருங்காலம், பெரியபுராணம் ஆகிய நூல்கள் களப்பிரர்களைப் பற்றி குறிப்பிடுகின்றன.
- வேள்விக்குடி மற்றும தளவாய்புரம் செப்பேடுகளும், திருப்புகலூர் கல்வெட்டு மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள வைகுந்த பெருமாள் கோயில் கல்வெட்டு போன்றவை களப்பிரர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாகும்.

- அச்சுத களப்பாளன் என்ற களப்பிர மன்னன் உறையூரை தலைநகராகக் கொண்டு தமிழகத்தை ஆண்டான் என்று யாப்பெருங்காலம் குறிப்பிடுகிறது.
- களப்பிரர் காலத்தில், தமிழகத்தில் வடமொழியும் பிராகிருதமும் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் வட்டெழுத்து என்ற புதிய வரிவடிவம் வளர்ச்சி பெற்றது.
- களப்பிரர் காலத்தில் நிகண்டுகள் இயற்றப்பட்டன. மேலும் சீவக சிந்தாமணி, குண்டலகேசி போன்ற காப்பியங்களு ம்களப்பிரர் காலத்தில் தோன்றின.
- களப்பிரர் காலத்தில் புத்த, சமண சமயங்கள் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன.
- புத்த சமய கல்விக் கூடங்கள் கடிகை என்று அழைக்கப்பட்டது. புத்த தத்தர், புத்த கோஷர், போதி தர்மர் போன்ற புத்த சமய அறிஞர்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர்.
- திருப்பாதிரிப்புலியூரில் சமணப் பள்ளி ஒன்று செயல்பட்டது. சர்வநந்தி, வஜ்ரநந்தி ஆகியோர் களப்பிரர் காலத்தில் வாழ்ந்த சமண சமய அறிஞர்களாவர்.
- மூர்த்தி, கூற்றுவன் முதலிய களப்பிர மன்னர்கள் சிவ பக்தர்களாக திகழ்ந்தனர்.
- மதுரையில் வச்சிரநந்தி என்ற சமண முனிவர் தமிழ்ச்சங்கம் ஒன்றைத் தோற்றுவித்து அதன்மூலம் சமண சமய இலக்கியங்களைத் தமிழில் பெருக்கி அதற்கு வளமூட்டினார்.
- கி.பி.ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிய மன்னன் கடுங்கோன் தென் தமிழ்நாட்டை களப்பிரர்களிடமிருந்து மீட்டான்.
- அதே சமயத்தில் களப்பிரர்களிடமிருந்து தொண்டை மண்டலத்தையும், சோழ மண்டலத்தையும் பல்லவ அரசன் சிம்ம விஷ்ணு கைப்பற்றினான். இவ்வாறாக தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி முடிவுக்கு வந்தது.

## பல்லவர்கள்

- பல்லவர்களின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இவர்கள் பாரசீகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், சாதவாகனர்களின் கீழ் ஆட்சி அலுவலர்களாக இருந்தவர்கள் என்றும், தொண்டை மண்டலத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்றும் கூறுவர்.
- கி.பி.ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு வரை பல்லவர்கள் தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி செய்தனர்.
- பல்லவ மரபை, முற்காலப் பல்லவர், இடைக்கால பல்லவர் மற்றும் பிற்காலப் பல்லவர் என பிரித்து வழங்குவர்.
- முற்காலப் பல்லவர்கள் கி.பி.250 முதல் கி.பி.350 வரை ஆட்சி செய்தனர். சிவஸ்கந்தவர்மன், விஜயஸ்கந்தவர்மன் ஆகியோர் இம்மரபில் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்கள் பிராகிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்டனர்.
- பிற்காலப் பல்லவர்கள் கி.பி.575 முதல் ஒன்பதாம் நூற்றாண்டில் அவர்கள் வீழ்ச்சியடையும் வரை ஆட்சி புரிந்தனர்.
- இவர்கள் வடமொழி, தமிழ்மொழி ஆகிய இரண்டு மொழிகளிலும் பட்டயங்களை வெளியிட்டனர்.
- சிம்ம விஷ்ணுவின் தலைமையில் பல்லவர்கள், களப்பிரர்களை தோற்கடித்து வடதமிழ்நாடாகிய தொண்டை மண்டலத்தில் தமது ஆட்சியை நிறுவினர். பல்லவர்களின் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும்.
- சிம்ம விஷ்ணு காலம் முதல் பிற்காலப் பல்லவர்களின் வரலாறு துவங்குகிறது.
- சிம்ம விஷ்ணு களப்பிரர்களை வென்று தொண்டை மண்டலத்தில் பல்லவர் ஆட்சியை நிறுவினார்.
- பின்னர் சோழப்பகுதிகள் சிலவற்றையும் கைப்பற்றினார். மேலும் வடக்கில் ஆந்திரப் பகுதியான விஷ்ணுகுண்டு முதல், தெற்கில் காவிரி ஆறு வரையில் விரிந்ததொரு பேரரசை நிறுவினார். அதனால் இவர் அவனிசிம்மன் அதாவது உலகின் சிங்கம் எனப் புகழப்பட்டார்.
- பல்லவ அரசை ஒரு பேரரசாக மாற்றிய பெருமை சிம்ம விஷ்ணுவையேச் சாரும்.
- சிம்ம விஷ்ணுவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்களில் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.


Coaching for: UPSC, TNPSC, VAO, TRB, TET, BANK, POLICE, SSC, RAILWAY... CELL: 99420 16300

## முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி.600 - 630)

- இவர் சிம்மவிஷ்ணுவின் மகன் ஆவார். இவரது காலத்தில் சாளுக்கியர்களோடு பகைமை ஏற்பட்டது.
- சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி, பல்லவ நாட்டின் மீது போர் தொடுத்தார். மகேந்திரவர்மனைத் தோற்கடித்து பல்லவ நாட்டின் வடபகுதிகளை கைப்பற்றினார்.
- இவர் **மத்தவிலாச பிரகாசனம்** என்ற நகைச்சுவை நாடக நூலை வடமொழியில் இயற்றினார்.
- தொடக்கத்தில் சமணராக இருந்த இவர் **திருநாவுக்கரசரால்** சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டார்.
- இரவது காலத்தைச் சேர்ந்த சமண சமய ஓவியங்கள் சித்தன்ன வாசலில் காணப்படுகிறது.
- மகேந்திரவர்மனின் இசை ஆர்வத்தை **குடுமியான்மலை இசைக் கல்வெட்டு** மூலம் அறியலாம்.
- **பரிவாதினி** என்ற பெயர் கொண்ட வீணை வாசிப்பில் இவர் வல்லவராக விளங்கினார். மாமண்டூர் குகைக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்ட **தட்ஷிண சித்திர** என்னும் ஓவிய நூலைப் படைத்துள்ளான்.
- இவரே குடவரைக் கோயில்களை அறிமுகப்படுத்தியவர் ஆவார்.
- மண்டகப்பட்டு, மாமண்டூர், மகேந்திரவாடி, வல்லம், பல்லாவரம், தளவானூர், திருச்சி, திருக்கழுகுன்றம் ஆகிய இடங்களில் இவரது குடைவரைக் கோயில்களைக் காணலாம்.
- இவர் மகேந்திரமங்கலம், மகேந்திரவாடி என்ற இரண்டு நகரங்களை நிறுவினார்.
- **பட்டப்பெயர்கள்:**
  சித்திரகாரப் புலி (ஓவியர்க்கு புலி), விசித்திரசித்தன், மத்தவிலாசன் (இன்பம் விரும்புபவன்), சத்ருமல்லன், கலகப்பிரியன், சங்கீரண ஜதி, குணபரன், சத்யசந்தன், சேத்தகாரி (கோயில்களை கட்டுபவன்), போத்தரையன்.

## முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி.630 - 668)

- இவர் முதலாம் மகேந்திரவர்மனின் மகன் ஆவார்.
- இவரது காலத்தில் சீனப்பயணி யுவான் சுவாங் (கி.பி.640) காஞ்சிபுரத்திற்கு வருகை தந்தார்.
- மாமல்லபுரம் என்ற புதிய நகரை உருவாக்கி அங்கு ஒன்றைக்கல் ரதங்கள் மற்றும் குடைவரைக் கோயில் மண்டபங்களை அமைத்தார்.
- இரண்டாம் புலிகேசியை கொன்று வாதாபியை வென்றதால் வாதாபி கொண்டான் என புகழப்பட்டார்.
- பரமேஸ்வரவர்மன் 670 - 690 ஆண்டுகளில் ஆட்சிப் புரிந்தார். அத்யந்த காமன், ஸ்ரீநிதி, ஸ்ரீபுரா, ரணஜெய ஆகியவை இவரது பட்டப்பெயர்கள். இவரது காலத்தில் கட்டப்பட்ட கூரம் சிவன்கோயில் முதல் கற்கோயில் ஆகும்.
- 63 நாயன்மார்களில் அய்யடிகள் காடவர்கோன் என்ற நாயன்மாராக இம்மன்னன் கருதப்படுகிறான்.
- **பட்டப்பெயர்கள்:**
  மாமல்லன், வாதாபி கொண்டான், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீநிதி, வாத்யவித்யாதரன்.

## இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி.691 - 728)

- இரண்டாம் நரசிம்மவர்மன் இராஜசிம்மன் என்று அழைக்கப்பட்டார்.
- இவர் மாமல்லபுரத்தில் **கடற்கரைக் கோயில்** மற்றும் **காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோயில்** ஆகியவற்றைக் கட்டினார். இவை இரண்டும் மணற்பாறைக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டதாகும்.
- புகழ்மிக்க வடமொழி அறிஞர் தண்டி இவரது அவையில் இருந்தார். அவர் தண்டியலங்காரம் என்ற சமஸ்கிருத இலக்கண நூலை இயற்றினார்.
- இவரது ஆட்சியில் கடல் வாணிபம் செழிந்திருந்தது.
- **பட்டப்பெயர்கள்:**
  ஆகமப்பிரியன், சங்கரபக்தன், இராஜசிம்மன்.

**இரண்டாம் பரமேஸ்வரவர்மன் (கி.பி.728 - 731)**

- இரண்டாம் நரசிம்மவர்மனின் மகனான இரண்டாம் பரமேஸ்வரவர்மன் கி.பி.728 ல் ஆட்சியில் அமர்ந்தார்.
- சாளுக்கிய மன்னர் இரண்டாம் விக்கிரமாதித்தனால் போரில் தோற்கடிக்கப்பட்டார்.
- கங்கர்களோடு நடைபெற்ற போரில் பரமேஸ்வரவர்மன் கொல்லப்பட்டார்.
- இவரது மரணத்திற்கு பிறகு இவரின் மகன்கள் ஆட்சிக்கு வராத காரணத்தினால், சிம்மவிஷ்ணுவால் தொடங்கப்பட்ட பிற்கால பல்லவ மரபு முடிவடைந்தது.

**இரண்டாம் நந்திவர்மன் (கி.பி.731 - 796)**

- இரண்டாம் பரமேஸ்வரனின் இறப்பிற்குப் பிறகு சிம்மவிஷ்ணுவின் தம்பியும் இரண்யவர்மனின் மகனுமான இரண்டாம் நந்திவர்மன் பல்லவ அரசராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இரண்டாம் நந்திவர்மன் விஷ்ணுபக்தர் ஆவார்.
- இவர் **காஞ்சியில் வைகுந்த பெருமாள் கோயிலை** கட்டினார். திருமங்கை ஆழ்வார் இவரின் சம காலத்தவராவார்

**மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.847 - 870)**

- பல்லவ மன்னர்களில் குறிப்பிடத்தக்க மற்றொரு மன்னர் மூன்றாம் நந்திவர்மன் ஆவார்.
- இவர் தெள்ளாறு என்னுமிடத்தில் நடைபெற்ற பெரும் போரில் பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபனை வென்றார். எனவே இவரை **தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்** என நந்திக் கலம்பகம் புகழ்கிறது.
- **பட்டப்பெயர்கள்:**
  காவிரிநாடன், கழல் நந்தி, சுழற்சிங்கன், தெள்ளாறு எறிந்த நந்திவர்மன், கடற்படை அவனி நாரணன்.

**பல்லவ அரசின் முடிவு**

- இராஜசிம்மனுக்கு பிறகு பீமவர்மனின் வழித்தோன்றல்களான நந்திவர்மன், நிருபதுங்கன், அபராஜிதன் போன்ற பல்லவ மன்னர்கள் தொண்டை மண்டலத்தை ஆண்டனர்.
- சோழர்களின் எழுச்சியினால் பல்லவ அரசு தனது செல்வாக்கை இழந்தது.
- கி.பி.895ல் திருப்புறம்பியம் போரில் பல்லவர்கள் வெற்றி பெற்றனர். பின்னர் விஜயாலய சோழனின் மகனான ஆதித்த சோழன் கடைசி பல்லவ மன்னன் அபராஜிதனை
  வென்று காஞ்சிப் பகுதியைக் கைப்பற்றினான். அத்துடன் பல்லவப் பேரரசு முடிவுக்கு வந்தது.

## பல்லவ ஆட்சி முறை

**சமூக நிலை**

- பல்லவர் காலத்தில் தான் பக்தி இயக்கம் தோன்றி வளர்ந்தது.
- பல்லவர் கால சமுதாயம் பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தன.
- பிராமணர்கள் அக்ரஹாரம் எனப்பட்ட தனிப்பகுதிகளில் வாழ்ந்தனர். பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடைகள் பிரம்மதேயங்கள் எனப்பட்டன.
- கோயில்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்களுக்கு தேவதானம் என்று பெயர்.
- சூத்திரர்களை பல்லவர் கால இலக்கியங்கள் புலையர் என்றும், சண்டாளர் என்றும் குறிப்பிடுகின்றனர்.
- பல்லவர் கால சமுதாயத்தில் ஆடல் மகளிர் தனிப் பிரிவாகக் காணப்பட்டனர்.
- தேவரடியார்களை இக்காலத்தில் கூத்திகள், அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர், உருத்திர கணிகையர் என்றும் அழைத்தனர்.

**பல்லவ அரசியல்:**

- பல்லவப் பேரரசானது மண்டலம், கோட்டம், நாடு, ஊர் என பல ஆட்சிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- பல்லவப் பேரரசின் மிகப்பெரிய ஆட்சிப்பிரிவு **மண்டலம்** அல்லது **ராஷ்டிரம்** எனப்படும். இது இளவரசரின் கட்டுப்பாட்டில் தன்னாட்சி பெற்று விளங்கியது.
- மண்டலங்கள் பல விஷயங்களாகவும் (கோட்டங்களாகவும்), விஷயங்கள் பல நாடுகளாகவும், நாடுகள் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டன.
- பல்லவ ஆட்சி முறையின் மிகச்சிறிய ஆட்சிப்பிரிவு **ஊர்** அல்லது **கிராமம்** என்பதாகும்.
- நிர்வாகத்தின் அடிப்படை அலகு கிராமம் ஆகும். கிராமத்தை நிர்வகிக்க **ஊர் அவை** இருந்தது.
- மைய அரசின் தலைவராக மன்னர் விளங்கினார். மன்னருக்கு உதவியாக அமைச்சர்களும், செயலர்களும் இருந்தனர்.
- பல்லவ அரசின் அமைச்சர்கள் **அமாத்தியர்கள்** எனப்பட்டனர். அவர்களுக்கு உத்தமசீலன், பிரம்மராஜன், பேரரையன் போன்ற விருதுகளும் கொடுக்கப்பட்டன.
- பல்லவ அரசில் மூன்று வகையான நீதிமன்றங்கள் இருந்தன. உச்ச நீதிமன்றம் தர்மசேனா எனப்பட்டது. இதற்கு அரசனே தலைமை வகித்தார்.
- நகரத்திலிருந்த நீதிமன்றங்கள் **அதிகரணங்கள்** என்றும், கிராம நீதிமன்றங்கள் **கரணங்கள்** என்றும் அழைக்கப்பட்டன. மன்னவரின் ஆணைக்கு திருமுகம், கோணோலை என்று பெயர். வியவன் என்பது அரசாங்க அதிகாரியை குறிக்கும்.
- நிலவரியே அரசின் முக்கிய வருவாயாக இருந்தது. இது தவிர வேறு பல வரிகளும் வசூலிக்கப்பட்டன. இவை **காணம், இறை, பாட்டம், பூச்சி** என்று அழைக்கப்பட்டன.
- அரசாங்க கருவூலத்தை **குமரன் பண்டாரம்** என்ற அதிகாரி நிர்வகித்து வந்தார்.
- பல்லவர்கள் ஆட்சி காலத்தில் உள்ளாட்சி அமைப்புகள் சிறந்து விளங்கின. சோழர்களின் கிராம ஆட்சிமுறைக்கு பல்லவர்கள் வழிகாட்டியாக விளங்கினர்.

**கலை மற்றும் கட்டடக் கலை**

- பல்லவர்களே பாறைக் கட்டடக்கலையை தமிழகத்தில் அறிமுகம் செய்தவராவர்.
- பல்லவர்களின் கட்டடக்கலை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தொடங்கியது. குடைவரைக் கோயில்களை மகேந்திரவர்மன் பாணிக் கோயில்கள் என்று கூறுவர்.
- ஒற்றைக்கல் ரதங்களும், மண்டபங்களும் மாமல்லன் பாணிக்கோயில்கள் எனப்படுகின்றன. மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் ரதங்கள் தற்காலத்தில் பஞ்ச பாண்டவ ரதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- மாமல்லன் பாணி சிற்பங்களில் மிகவும் சிறப்பானது திறந்தவெளிக் கலைக்கூடம் என்ற அழைக்கப்படும் பாறைச் சிற்பமாகும்.
- இராஜசிம்மன் காலத்தில் கட்டுமானக் கோயில்கள் அமைக்கும் வழக்கம் தொடங்கியது.
- காஞ்சி கைலாசநாதர் கோயில் மற்றும் மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் ஆகிய இரண்டும் கட்டுமானக் கோயில்களின் தொடக்க நிலையாகும்.
- காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்த பெருமாள் கோயில் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் கட்டப்பட்டது. இது நந்திவர்மன் பாணி என்று அழைக்கப்படுகிறது.
- மாமண்டூர் மற்றும் குடுமியான்மலை இசைக் கல்வெட்டுகள் பல்லவர்கள் இசைக்கு அளித்த சிறப்பிடத்தை உணர்த்துகின்றன.
- முதலாம் மகேந்திரவர்மன் மற்றும் முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோர் இசையில் வல்லவர்களாக இருந்தனர்.
- சித்திரகாரப்புலி என்று போற்றப்பட்ட முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தட்சிண சித்திரம் என்ற ஓவியக்கலை விளக்கநூல் தொகுக்கப்பட்டது.

**பொருளாதார நிலை**

- தலைநகரமான காஞ்சிபுரம் முக்கிய வணிக நகரமாகவும் திகழ்ந்தது. வணிகர்கள் சங்கம் மணிகிராமம் என்று அழைக்கப்பட்டது. அயல்நாட்டு வணிகர்கள் நானாதேசிகள் என்று அழைக்கப்பட்டனர்.
- நிலங்கள் உழவு, நிவர்த்தனம் அல்லது பட்டிகா, ஹாலா என்னும் அளவுகளால் அளக்கப்பட்டன. கலப்பை என்பதும் ஓர் அளவு கோலாகும்.
- பல்லவர் காலத்திலும் அரிசியே முக்கிய உணவாகும்.
- தங்கத்தின் எடையை **கழஞ்சு, மஞ்சாடி** என்று குறிப்பிட்டனர்.
- முதலாம் மகேந்திரவர்மன் மாமண்டூரில் அமைத்த ஏரியின் பெயர் சித்ர மேக தடாகம் என்பதாகும்.

**கல்வி மற்றும் இலக்கிய நிலை**

- பல்லவர் காலத்தில் வடமொழிக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டாலும் தமிழ்மொழியையும் போற்றி வளர்த்தனர்.
- காஞ்சிபுரத்திலிருந்த புத்த கடிகை ஒரு சிறந்த கல்வி மையமாகும். மேலும் இக்கல்விமையம் வடமொழிக் கல்விக்கும் பெயர்பெற்று விளங்கியது. யுவான் சுவாங், தர்மபாலர் போன்ற அறிஞர்கள் இங்கு கல்வி பயின்றனர்.
- 1ம் மகேந்திரவர்மன் மத்தவிலாச பிரகசனம் மற்றும் பாகவதவியூகம் ஆகிய வடமொழி நூல்களை இயற்றினார்.
- தண்டி என்பவர் காவிய தரிசனம் மற்றும அவந்தி சுந்தரி கதாசாரம் ஆகிய நூல்களை இயற்றினார்.
- பல்லவர் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்திப்பாடல்களை தமிழிலேயே இயற்றினர்.
- நாயன்மார்களின் பாடல் தொகுப்பு திருமுறை என்றும் ஆழ்வார்களின் பாடல் தொகுப்பு திவ்ய பிரபந்தம் என்றும் அழைக்கப்படுகிறது.
- பாரவி என்பவர் கீர்தார்சுனியம் என்ற நூலை எழுதினார்.
- பல்லவர் காலத்தில் வாழ்ந்த கல்லாடனார் கல்லாடம் என்ற இலக்கண நூலையும், பெருந்தேவனார் பாரதவெண்பா என்ற நூலையும் இயற்றினார்.
- நந்திக்கலம்பகம் என்ற நூலும் பல்லவர் காலத்தில் எழுதப்பட்டதாகும்.
- பல்லவர் காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி நெறியைப் பரப்பினார்கள்.
- நாயன்மார்கள் அறுபத்து மூவர் ஆவர். அவர்களில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
- காரைக்கால் அம்மையார் 63 நாயன்மார்களில் ஒருவர் ஆவார்.
- ஆழ்வார்கள் மொத்தம் பன்னிருவர் அவர்களில் பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசை ஆழ்வார் ஆகிய நால்வரும் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர்கள்.
- பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

## பாண்டியப் பேரரசு

- அன்றைய கால கட்டத்தில் பரந்திருந்த பாண்டியப் பேரரசானது இன்றைய மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களும், திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதி மற்றும் திருவாங்கூரின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்தது.
- மெகஸ்தனிஸ், பிளினி போன்ற கிரேக்க எழுத்தாளர்கள் நூல்களிலும், சமஸ்கிருத இலக்கண அறிஞர் கத்யாயணர் குறிப்புகளிலும், பழந்தமிழ் இலக்கியங்களிலும் மற்றும் யுவான் - சுவாங், மார்கோபோலோ, இஸ்லாமிய வரலாற்றாள ர்வாசஃப் ஆகிய வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளிலும் பாண்டியரின் வரலாற்றுச் செய்திகளைக் காணலாம்.
- பாண்டியர்களின் வரலாற்று காலம் மூன்று காலக்கட்டங்களாக வகைப்படுத்தப்படுகிறது. அவை,
    1. முற்காலப் பாண்டியர்கள்
    2. முதலாம் பாண்டியப் பேரரசு
    3. இரண்டாம் பாண்டியப் பேரரச

<u>முற்காலப் பாண்டியர்கள்</u>

- முற்காலப் பாண்டியர்கள் தமிழை வளர்க்க தமிழ்ச்சங்கங்கள் அமைத்து பெருமை பெற்றவர்களாவர்.
- பாண்டியர்களின் தலைநகரம் மதுரை ஆகும். அவர்களது இலச்சினை மீன் உருவமாகும்.
- தமிழகத்தை களப்பிரர்கள் கைப்பற்றியபோது முற்காலப் பாண்டியர் ஆட்சியானது முடிவுக்கு வந்தது.

<u>முதலாம் பாண்டியப் பேரரசு</u>

- கி.பி.ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிய மன்னன் கடுங்கோன் களப்பிரர்களை வென்று பாண்டியர் ஆட்சியை மீண்டும் நிறுவினார். இவர் ஏற்படுத்திய பேரரசு முதலாம் பாண்டியப் பேரரசு என்று அழைக்கப்பட்டது.
- கடுங்கோனுக்குப் பிறகு அவரது மகன் மாறவர்மன் அவனி சூளாமணி பட்டத்திற்கு வந்தார். இவருக்கு சடையவர்மன் என்ற பட்டப் பெயரும் உண்டு. இவரை உண்மையின் தோழன் என்று செப்பேடுகள் கூறுகின்றன.
- அடுத்து ஆட்சிக்கு வந்த செழியன்சேந்தன் வானவன் என்று அழைக்கப்பட்டார். இவருக்கு செங்கோற்சேந்தன், வேந்தர் வேந்தன் என்ற பட்டப் பெயர்களும் உண்டு.
- முதலாம் பாண்டியப் பேரரசின் தலைசிறந்த அரசனாகக் கருதப்படுபவர் மாறவர்மன் அரிசேகரி. பராங்குசன், நெய்வேலி வென்ற நெடுமாறன் ஆகியன இவரது பட்டப் பெயர்களாகும்.
- மாறவர்மன் அரிகேசரி சைவ சமய வரலாற்றில் கூன்பாண்டியன் என்றும், சுந்தர பாண்டியன் என்றும், திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் வைணவ சமய வரலாற்றில் நின்றசீர் நெடுமாறன் என்று பெரிய புராணத்தில் அழைக்கப்பட்டார்.
- இம்மன்னனது மனைவி மங்கையர்கரசியார், அமைச்சர் குலச்சிறையார் ஆகியோரின் முயற்சியால் திருஞானசம்பந்தர் இம்மன்னனை சைவத்துக்கு மீட்டார்.
- முதலாம் பாண்டியப் பேரரசின் கடைசி அரசனான வீரபாண்டியன் (கி.பி.946 - 966) ஆதித்த சோழனால் தோற்கடிக்கப்பட்டான். அத்துடன் முதலாம் பாண்டியப் பேரரசு முடிவுக்கு வந்தது.

<u>இரண்டாம் பாண்டியப் பேரரசு</u>

- பல்லவர்கள் மற்றும் சோழர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி.1190 முதல் 1310 வரை தமிழகத்தை ஆண்ட பாண்டியர்கள் இரண்டாம் பாண்டியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.
- இரண்டாம் பாண்டியர்களின் நிர்வாகத்தைக் குறித்தும், குலசேகரப் பாண்டியனைப் பற்றியும், வரி வசூல் முறை மற்றும் நில அளவை முறை பற்றியும் புதுக்கோட்டையிலுள்ள மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுகள் கூறுகின்றன.
- திருவந்திபுரம் கல்வெட்டுகள் பாண்டியர்களின் போர் முறைகள் பற்றியும், ஸ்ரீரங்கம் கல்வெட்டுகள் பாண்டிய மன்னர்களின் போர் வெற்றிகளைப் பற்றியும் கூறுகின்றன.
- திருநெல்வேலி கல்வெட்டுகளில் பாண்டிய மன்னர்களின் பெயர்களும், அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டப்பெயர்களும் காணப்படுகின்றன.
- பாண்டிய மன்னர்களின் நிர்வாகம் மற்றும் போர் வெற்றிகள் குறித்து வேள்விக்குடி செப்பேடுகள், சீவரமங்கலம் செப்பேடுகள், தளவாய்புரம் செப்பேடுகள் மற்றும் சின்னமனூர் செப்பேடுகள் கூறுகின்றன.
- கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் மெல்ல, சோழரின் தலைமையிலிருந்து விடுபட்டு தங்களது தனியரசை நிறுவினர். இந்நிலையில் விக்கிரம பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் இடையில் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. சோழ வேந்தன் மூன்றாம் குலோத்துங்கனின் ஆதரவோடு விக்கிரம பாண்டியன் ஆட்சியைப் பிடித்தார்.

<u>முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் (கி.பி.1190 - 1216)</u>

- முதலாம் ஜடாவர்ம குலசேகர பாண்டியன் தமது தந்தை விக்கிரம பாண்டியனை அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- இவரின் **மெய்க்கீர்த்தி** ஒரு சிறந்த வரலாற்றுச் சான்றாகும்.
- இவர் 1030 பிரம்மதேயங்கள் அடங்கிய **ராஜகம்பீர சதுர்வேதி மங்கலத்தை** உருவாக்கியதால் **ராஜகம்பீரர்** எனும் பெயர் பெற்றார்.

**முதலாம் மாறவர்மன் சுந்தரப் பாண்டியன் (கி.பி.1216 - 1238)**

- இவர் ஜடாவர்மன் குலசேகர பாண்டியனின் சகோதரர் ஆவார். இவர் **கலியுக ராமன், அதிசயப் பண்டிய தேவர்** போன்ற பல பட்டப் பெயர்களைப் பெற்றிருந்தார்.
- இவர் கி.பி.1219 ல் மூன்றாம் குலோத்துங்க சோழனை போரிட்டு வென்றார். எனினும் ஹொய்சாளர்கள் சோழர்களுக்கு ஆதரவாக செயல்பட்டதால் தான் வென்ற சோழ நாட்டை குலோத்துங்கனிடமே கொடுத்தார். இதனால் **சோனாடு கொண்டருளிய சுந்தரப் பாண்டியன்** என்று புகழப்பட்டார்.
- இவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் **சோனாடு கொண்டான்** என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவருக்குப் பிறகு இரண்டாம் ஜடாவர்மன் குலசேகரன் சில காலம் ஆட்சி புரிந்தார்.

**இரண்டாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் (கி.பி. 1238 - 1253)**

- இவர் சோழ மன்னன் மூன்றாம் இராஜேந்திரனைத் தோற்கடித்தார்.

**முதலாம் ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியன் (கி.பி.1253 - 1268)**

- இவர் ஈழம், கொங்கு நாடு, வல்லம் மற்றும் சோழ அரசுகளை வெற்றிக் கொண்டதால் திரிபுவன சக்கரவர்த்தி மற்றும் மும்மண்டலமும் கொண்டருளிய பாண்டியன் ஆகிய பட்டப்பெயர்களைப் பெற்றார்.
- இவர் காலத்தில் பாண்டிய அரசு பாண்டியப் பேரரசாக மாறியது.
- இவர் சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கும், ஸ்ரீரங்கத்தில் உள்ள ரங்கநாதர் கோயிலுக்கும் பொன் தகட்டால் கூரை வேய்ந்தார். இதனால் பொன்வேய்ந்த பெருமாள் எனும் பட்டம் பெற்றார்.
- இவர் மகாராஜாதிராஜா, ஸ்ரீபரமேஸ்வரன் என்றெல்லாம் சிறப்பிக்கப்பட்டார்.

**முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268 - 1308)**

- இவர் முதலாம் ஜடாவர்மன் சுந்தரப்பாண்டியனின் மகனாவார்.
- இவரது ஆட்சியின் போது தான் வெனிஸ் நாட்டுப் பயணி மார்க்கோபோலோ தமிழகம் வந்தார்.
- இவர் சேர நாட்டிலுள்ள கொல்லம் என்ற பகுதியை வென்றதால் கொல்லம் கொண்ட பாண்டியன் என்று பெயர் பெற்றார்.
- இவர் இலங்கையின் மீது படையெடுத்து சுபகிரி கோட்டையில் இருந்த பெருஞ்செல்வத்தையும், நினைவுச் சின்னமாக புத்தரின் பற்களையும் மதுரைக்கு கொண்டு வந்தார்.
- இவர் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலின் சுற்றுச்சுவரைக் கட்டினார். இவருக்குப்பின் பட்டத்து இளவரசர்களுக்கிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போர் பாண்டிய அரசு மீது முஸ்லீம் அரசர்கள் படையெடுப்பதற்கு வழிவகுத்தது.

**பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி**

- முதலாம் மாறவர்மன் குலசேகரனின் மகன்களான சுந்தர பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் இடையில் ஏற்பட்ட அரசுரிமைப் போரில் பாண்டியநாடு பிளவுபட்டது.
- சுந்தரபாண்டியன், டெல்லியை ஆண்ட அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார். சுந்தர பாண்டியனின் கோரிக்கையை ஏற்று கி.பி.1311 ல் அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதி மாலிக்காபூர் தமிழகத்தின் மீது படையெடுத்து சுந்தர பாண்டியனுக்கு ஆட்சியை மீட்டுத் தந்தார்.
- கில்ஜி மரபினருக்குப்பின் வந்த துக்ளக் மரபினர் தங்களின் ஆதிக்கத்தை தென்னிந்தியாவிலும் விரிவுபடுத்தினார்கள். பாண்டிய பேரரசை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்கள்.
- பின்னர் துக்ளக் மரபினர் வீழ்ச்சியடைந்த காரணத்தினால் மதுரை சுல்தான்கள் தனியே மதுரையை ஆளத் தொடங்கினார்கள்.
- மதுரை சுல்தான்களின் எழுச்சியினால் முழுமையாக பாண்டிய பேரரசு வீழ்ச்சியடைந்தது.

**பாண்டியர் கால ஆட்சிமுறை**

- பாண்டிய நாடு முழுவதும் பாண்டிய மண்டலம் எனப்பட்டது. மண்டலமானது பல வளநாடுகளாகவும், வளநாடு பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டது.
- மன்னர் தமக்கு உதவியாக, அரையர்கள் எனப்பட்ட அமைச்சர்களையும், படைத்தளபதியையும் நியமித்துக்
- கொண்டார்.
- வரியைப் பெறுவதற்கும் கணக்குகளை சரிபார்க்கவும் சிறப்பு அதிகாரிகளை பணியமர்த்தினார்.
- அறநிலை, நீர்நிலை, நாணயம், வரித்தண்டல் மற்றும் நீதிவாரியங்கள் என்ற ஐந்து வாரியங்கள், ஒவ்வொரு கிராமத்தையும் நிர்வகித்தனர்.
- வேளாண்மை மற்றும் வாணிபம் மக்களின் முக்கிய தொழில்களாக இருந்தன. வேளாண்தொழில் செய்வோர் பூமி புத்திரர்கள் எனப்பட்டனர்.
- அடிமைகள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.
- பாண்டிய நாடு முத்துக்குளிக்கும் தொழிலில் சிறந்து விளங்கியது. பாண்டிய நாட்டு முத்துக்கள் வெளிநாட்டு சந்தைகளில் விரும்பி வாங்கப்பட்டன.
- கொற்கை, தொண்டி ஆகியன சிறந்த துறைமுகங்களாக விளங்கின.
- திருவாசகம் மாணிக்க வாசகரால் எழுதப்பட்டது. (மாணிக்கவாசகர் இரண்டாம் வரகுண பாண்டியன் அமைச்சராக
- திகழ்ந்தார்.) ஆண்டாள் திருப்பாவையும், நம்மாழ்வார் திருப்பல்லாண்டையும், வில்லிபுத்தூரார் மகாபாரதத்தையும், அதிவீரராம பாண்டியன் நைடதம் என்னும் நூலையும் எழுதினர். சேயூர் முருகன் உலா மற்றும் இரத்தினகிரி உலா ஆகிய நூல்களை ஸ்ரீகவிராயர் எழுதினார்.
- கோயில் கட்டிடக் கலையில் கருவறை, விமானம், பிரகாரம், கோபுரம் ஆகிய கட்டுமானப் பணிகளில் பாண்டியர்களின் கலைப்பாங்கு தனித்துவம் பெற்றது.
- பாண்டியர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடைவரைக் கோயில்களை உருவாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக திருப்பரங்குன்றம், ஆனைமலை, கழுகுமலை, திருச்சிராப்பள்ளி, குன்றக்குடி, சித்தன்னவாசல் ஆகியவற்றைக் கூறலாம்.
- கோயில்பட்டி, திருப்பத்தூர், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கட்டுமானக் கோயில்கள் பாண்டியர் காலத்தவையாகும்.
- குலசேகர பாண்டியன் என்ற மன்னன் தனது ஆட்சிக்குட்பட்ட இடங்களில் உள்ள எல்லா கோயில்களிலும், அர்த்த மண்டபம், மணி மண்டபம், சன்னதிகள் ஆகியவற்றை கட்டித்தந்துள்ளார்.
- கற்களால் அமைக்கப்பட்ட கோயில்கள் கற்றளிகள் எனப்பட்டன. இவை கருவறை, அர்த்த மண்டபம் மகா மண்டபம் என்ற மூன்று முக்கியப் பிரிவுகளாகக் கட்டப்பட்டிருந்தன.
- கோபுரங்கள், பிரகாரங்கள், விமானங்கள், கற்ப கிரகங்கள் போன்றவை பாண்டியர் கால கோயில் மற்றும் கட்டடக்கலையின் தனிச்சிறப்புகளாகும்.
- மதுரை மீனாட்சி கோயிலும், ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயிலும் பாண்டியர் கால கட்டடக்கலையின் மிக உன்னத நிலையினை எடுத்துக்காட்டுகின்றன.
- ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்து சுவரோவியத்தை, சித்தன்னவாசல் கடைவரையில் காணலாம். அதில் வரையப்பட்டுள்ள தாமரைப் பூக்கள், துள்ளும் மீன்கள், நீராடும் யானைகள் போன்ற ஓவியங்கள் அழகு வாய்ந்தவை
- பாண்டியரது சிற்பங்களை கழுகுமலை, திருப்பரங்குன்றம், திருமலைபுரம், நார்த்தாமலை, குன்றக்குடி ஆகிய இடங்களில் காணலாம்.
- பாண்டிய அரண்மனையில் நக்கீரர் முதன்மை தமிழ்ப்புலவராக விளங்கினார். மதுரை மாநகரம் தமிழ்க்கூடல் என்று போற்றப்பட்டது.
- பாண்டியர்கள் வடமொழி, தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் போற்றி வளர்த்தனர்.
- உயர்கல்வி நிறுவனங்கள் சாலைகள் என்று அழைக்கப்பட்டன.
- திருஞானசம்பந்தர் பாண்டிய மன்னன் மாறவர்மன் அரிகேசரியின் சமகாலத்தவர் ஆவார்.
- தென்காசியை ஆண்டுவந்த பாண்டிய மன்னன் அதிவீரராம பாண்டியன் நைடதம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

# சோழப் பேரரசு

- மகாபாரதம், அசோகரின் கல்வெட்டுகள், மெகஸ்தனிஸ் மற்றும் தலாமி ஆகியோரது குறிப்புகள் போன்றவற்றில் சோழர்களைப் பற்றிய செய்திகளைக் காண முடிகிறது.
- சங்க காலத்தில் சோழர்கள் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளை ஆட்சி செய்துள்ளார். அவர்களது அன்றைய தலைநகரமாக உறையூர் விளங்கியது. சோழர்களது இலச்சினையாக புலி உருவம் இடம்பெற்றது.
- முற்காலச் சோழர்களில் கரிகாலச் சோழன் புகழ்பெற்றவர் ஆவார். இவர் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார்.
- முற்காலச் சோழர்கள் தமது இறுதிக்காலத்தில் உறையூரை மட்டுமே ஆட்சி செய்யுமளவில் சிற்றரசர்களாயினர்.
- பல்லவர்கள் ஆட்சி வீழ்ச்சியுற்ற போது சோழ அரசு மறுபடியும் வளர்ச்சியடை ஆரம்பித்தது.

**<u>பிற்காலச் சோழர்கள்</u>**

- பிற்கால சோழ அரசை உருவாக்கியவர் விஜயாலயச் சோழன் ஆவார். இவர் முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி, கி.பி.850 ல் அதை சோழநாட்டின் தலைநகராக்கினார். இதுவே பிற்காலச் சோழர்கள் ஆட்சியமைக்க அடித்தளமாக அமைந்தது.
- பிற்கால சோழ மன்னர்கள் கி.பி.850 முதல் கி.பி.1279 வரை சுமார் 430 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.
- பிற்காலத்தில் இச்சோழ மரபினர் தென்னிந்தியாவின் பெரும் பகுதியையும், இலங்கை, கடாரம் (சுமத்ரா, மலேசிய பகுதிகள்) ஆகியப் பகுதிகளையும் வென்றதால், இவர்கள் பேரரசு சோழர்கள் எனப்பட்டனர்.
- விஜயாலய சோழனின் மகன் முதலாம் ஆதித்த சோழன் (கி.பி.871 - 907) கடைசி பல்லவ மன்னன் அபராஜிதனை தோற்கடித்து தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினார். மேலும் கொங்கு நாட்டையும் தனது இராஜ்ஜியத்துடன் இணைத்துக் கொண்டார்.

**<u>முதலாம் பராந்தகன் (கி.பி. 907 - கி.பி.955)</u>**

- உத்திரமேரூர் கல்வெட்டுகள் இவரைப் பற்றிய நிறைய தகவல்களைத் தருகின்றன.
- ஆதித்த சோழனின் மகன் முதலாம் பராந்தகன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, அதன் தலைநகரான மதுரையை வென்றதால் மதுரை கொண்டான் என்று புகழப்பட்டார்.
- இலங்கை மற்றும் பாண்டிய அரசர்களின் கூட்டுப்படையை வென்றதால் மதுரையும் ஈழமும் கொண்டான் என்ற பட்டம் பெற்றார். இவன்ஈழ மன்னன் ஐந்தாம் காசியப்பனை வெள்ளூர் என்னும் இடத்தில் தோற்கடித்தான்.
- இவர் சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலுக்கு பொன்னால் கூறை வேய்ந்தார். இதனால் பொன் வேய்ந்த சோழன் என்று அழைக்கப்பட்டார். இம்மன்னன் வீரநாராயண ஏரி (வீராணம் ஏரி), சோழ சிங்கபுரத்து ஏரி, சதுர்வேதி மங்கல ஏரி ஆகிய ஏரிகளை வெட்டினான்.
- கி.பி.949 ஆம் ஆண்டு புகழ்பெற்ற தக்கோலம் போரில் இராட்டிரகூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணனிடம் தோற்றதோடு மட்டுமல்லாமல் பட்டத்து இளவரசன் இராஜாதித்தனும் கொல்லப்பட்டான்.
- இம்மன்னன் கி.பி.955 ல் மரணமடைந்தார்.
- முதலாம் பராந்தகனுக்கு பிறகு கண்டராதித்தியன் (கி.பி.949 - 957), அரிஞ்சயன் (கி.பி.956 - 966) மற்றும் உத்தமசோழன் (கி.பி.965 - 985) ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.
- இரண்டாம் பராந்தகன் காஞ்சியில் உயிர் நீத்தான். அவன் மனைவி வானவன் மாதேவி உடன்கட்டை ஏறினாள்.

**<u>முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி.985 - 1014)</u>**

- திருவாலங்காடு செப்பேடுகள் இவரைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. இவர் சோழர் குலத்தின் வலிமை மிக்க மன்னராவார்.
- இவர் இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தாவை வென்று அனுராதபுரத்தையும் இலங்கையின் வடபகுதியையும் கைப்பற்றினார்.
- புலனருவா நகரைப் புதிய தலைநகராக்கினார். அங்கு ஒரு சிவன் கோயிலையும் கட்டினார்.
- முந்நீர் பழந்தீவுகள் எனப்பட்ட மாலத்தீவுகளையும் வென்றார். இவர் காலத்தில் சோழப் பேரரசின் பரப்பு தென்னிந்தியாவையும் கடந்து பரந்து விரிந்திருந்தது.

- இவர் சேரமன்னன் பாஸ்கரவர்மனை காந்தளூர் சாலை (திருவனந்தபுரம்) என்னுமிடத்தில் வென்றார்.
- இவர் கல்யாணியை ஆண்ட சத்யசரயாவிடமிருந்து வேங்கியைக் கைப்பற்றி சக்திவர்மனுக்கு அளித்தார்.
- **கைப்பற்றிய பகுதிகள்:**

1. கங்கவாடி, 2. தடிகைப்பாடி, 3. நொளம்பாடி, 4. மைசூர் பகுதிகள், 5. ரெய்ச்சூர் பகுதிகள்

- நில அளவை முறையில் அறிமுகம் செய்தார்.
- இவர் காலத்தில் தான் தேவாரம் தொகுக்கப்பட்டது.
- கி.பி. 1010 ல் தஞ்சாவூரில் புகழ்பெற்ற பிரகதீஸ்வரர் ஆலயம் கட்டப்பட்டது.
- கி.பி. 1014 ல் முதலாம் இராஜராஜ சோழன் மரணமடைந்தார்.

**பட்டப்பெயர்கள்:**

- மும்முடிச் சோழன், அருண்மொழி, இராஜகேசரி, ஜெயங்கொண்டான், சிவபாதசேகரன், காந்தளூர் சாலை கலமருந்தருளியவன்,

**முதலாம் இராஜேந்திரன் (கி.பி.1012 - 1044)**

- இவரது இயற்பெயர் மதுராந்தகன், இராஜராஜசோழனின் மகனான இராஜேந்திர சோழனைப் பற்றி திருவாலங்காடு சேப்பேடுகள் மற்றும் கரந்தை செப்பேடுகள் பல தகவல்களைத் தருகின்றன.
- இவர் இடைதுறைநாடு (ரெய்ச்சூர் தோஆப்), வனவாசி (கடம்பர் தலைநகர்), கொள்ளிப்பாக்கை (ஹைதராபாத் பகுதி), மண்ணைக்கடக்கம் (மால்கெட்) ஆகிய இடங்களை வென்றார்.
- ஈழமண்டலம் எனப்பட்ட இலங்கை முழுவதையும் கைப்பற்றினார்.
- பாண்டியர், சேரர், மேலைச்சாளுக்கியர் ஆகியோரையும் தோற்கடித்தார். 1021 ல் கல்யாண சாளுக்கிய மன்னன் 2ம் ஜெயசிம்மனை மஸ்கியில் வென்றான்.
- ஸ்ரீவிஜயம், கடாரம், மலேயா தீபகற்பம் மற்றும் நிக்கோபார் தீவுகளைச் சார்ந்த பகுதிகள் ஆகிய இடங்களை, கடல் கடந்து போரிட்டு வென்றது இவரது மிகச்சிறந்த செயலாகும்.
- இராஜேந்திரன் காலத்தில்சோழப் பேரரசானது புகழின் உச்சநிலையை எய்தியது.
- இவர் வங்காள அரசன் முதலாம் மகிபாலனைத் தோற்கடித்து, கங்கையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, கங்கை கொண்ட சோழபுரத்திற்க அருகிலுள்ள சோழகங்கம் என்ற ஏரியில் கலந்தார்.
- முதலாம் இராஜேந்திரன் தமது வடஇந்திய படையெடுப்பின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் கங்கைகொண்ட சோழபுரம் என்ற நகரை நிர்மாணித்தார். அங்கு ராஜேஸ்வர ஆலயத்தையும் எழுப்பினார்.
- இவர் தலைநகரை தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினார்.
- இவர் தமது மகள் அம்மங்கா தேவியை வெங்கியைச் சேர்ந்த சாளுக்கிய இளவரசன் இராஜராஜனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.
- **பட்டப்பெயர்கள்:**
  கங்கை கொண்டான், கடாரம் கொண்டான், முடிகொண்டான், பண்டித சோழன், உத்தம சோழன், பரகேசரி.

**முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1120 - 1170)**

- குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ், விக்கிரம சோழன் உலா ஆகிய நூல்கள் குலோத்துங்கனின் நிர்வாகம், இராணுவ வெற்றிகள் பற்றி விளக்குகின்றன.
- முதலாம் குலோத்துங்க சோழன் அம்மங்கா தேவியின் மகனாவார்.
- இவர் வெங்கியை ஆண்ட சாளுக்கிய மரபைச் சேர்ந்தவர். பின்னர் சோழநாட்டுக்கு மன்னரானார்.
- இவர் சோழநாட்டுடன் வெங்கியை இணைத்து, சாளுக்கிய - சோழ மரபைத் தோற்றுவித்தார். இவனது தலைநகரமும் கங்கை கொண்ட சோழபுரம் ஆகும்.
- மேலைச் சாளுக்கிய மன்னர் விக்கிரமாதித்தனை தோற்கடித்து கலிங்கத்தைக் கைப்பற்றினார். கி.பி.1110 ல் கருணாகரத் தொண்டைமான் தலைமையில் அனுப்பப்பட்ட சோழர் படை அனந்தவர்மனை எளிதில் வென்றது. இப்போர் செய்திகளை ஜெயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியாக பாடியுள்ளார்.
- இவர் காலத்தில் இலங்கை சோழப் பேரரசிலிருந்து விடுதலை பெற்றது.

- ஸ்ரீவிஜயம் என்ற நாட்டுடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்ததால் கி.பி.1077 ல் அங்கு வணிகக் குழுவினரையும் அனுப்பி வைத்தார்.
- இவர் சீன அரசவைக்கு தூதுவரை அனுப்பினார்.
- இவர் மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சுங்கவரி உட்பட பலவிதமான வரிகளை நீக்கியதால், சுங்கம் தவிர்த்த சோழன் என்ற பட்டப் பெயரைப் பெற்றார்.
- சோழப் பேரரசு இவர் காலத்தில் புத்துயிர் பெற்றது. இவர் ஒட்டக்கூத்தர், ஜெயங்கொண்டார், சேக்கிழார், கம்பர், புகழேந்தி ஆகிய புலவர்களை ஆதரித்தார்.
- **பட்டப்பெயர்கள்:**
  சுங்கம் தவிர்த்த சோழன், நிலமளந்த பெருமாள், திருநீற்றுச் சோழன், அபயன், செயதரன், விருதுராச பயங்கரன், கரிகால இராஜ நாராயணன், உலகய்ய வந்தான், மனுகுலதீபன், உபயகுலோத்துங்கன்.
- முதலாம் குலோத்துங்கனுக்குப் பிறகு விக்ரம் சோழன் அரியணை ஏறினான். அவனுக்குப் பின்பு இரண்டாம் குலோத்துங்கன் அரியணை ஏறினான். அவன் கிருமிகந்த சோழன் என்று அழைக்கப்பட்டான்.
- இவரனுக்குப் பின்பு இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜனும் ஆட்சியை ஆண்டனர். பின்பு மூன்றாம் குலேத்துங்கன் அரியணை ஏறினான்.
- இவன் சோழநாட்டை ஆண்ட கடைசி சிறந்த அரசன் ஆவான். இவர் கி.பி.1205 ல் மதுரையைக் கைப்பற்றி சோழபாண்டியன் என்று பட்டம் சூட்டிக் கொண்டார்.
- இவருக்குப் பின்பு மூன்றாம் இராஜராஜன் அரியணை ஏறினான். சோழ மன்னன் மூன்றாம் இராஜேந்திரன் (கி.பி.1246 - 1279) காலத்தில் சோழப் பேரரசு சிதைவுறத் தொடங்கியது.
- காடவராயன் போன்ற குறுநில மன்னர்கள் எபச்சி, பாண்டிய நாட்டு எழுச்சி ஆகியவை சோழ அரசை நிலைகுலைய ச்செய்தது.
- பாண்டிய மன்னன் இரண்டாம் ஜடாவர்ம சுந்தரப்பாண்டியன், சோழநாட்டின் கடைசி அரசனான மூன்றாம் இராஜேந்திரனை வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினார். அத்துடன் சோழப் பேரரச முடிவுக்கு வந்தது.
- **பட்டப்பெயர்கள்:**
  யானை மேல் துஞ்சிய சோழன் - இராஜாதித்தியன் சுந்தரச் சோழன் - இரண்டாம் பராந்தகன்

<u>சோழ ஆட்சி முறை</u>

- சோழர்களின் நிர்வாகம் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு கூறுகிறது.
- சோழப்பேரரசு 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாகாணங்கள் மண்டலங்கள் என்றும் அதன் தலைவர்கள் ஆளுநர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
- சோழநாட்டின் நிர்வாக அடிப்படை அலகு ஊர் என்பதாகும். பல ஊர்கள் சேர்ந்தவை வளநாடு என்றும், பல வளநாடுகள் சேர்ந்தது மண்டலம் என்றும், மண்டலங்கள் அனைத்தும் ஒருங்கே சேர்ந்ததாக சோழநாடு விளங்கியது.
- கிராமங்கள் சோழர் நிர்வாகத்தின் கடைசி அங்கமாக விளங்கின.
- கிராம சுயாட்சி என்பது சோழர் நிர்வாகத்தின் ஒரு சிறப்பு அம்சமாகும்.
- பெருந்தனம், சிறுதனம் என்று அழைக்கப்பட்ட அதிகார வர்க்கம் ஆட்சிக்கு பொறுப்பு வகித்தன.
- சோழ அரசின் முக்கிய வருவாய் நிலவரியாகும். இது விளைச்சலில் ஆறில் ஒரு பங்காக (1/6) இருந்தது.
- நில வருவாய்த்துறை புறவு வரித்திணைக்களம் என்று அழைக்கப்பட்டது.
- சோழர்களின் கப்பற்படை தென்னிந்தியாவிலேயே வலிமை மிக்கதாக இருந்தது. இதனால் வங்காளவிரிகுடா சோழர்களின் ஏரிபோல விளங்கியது.
- நாடு என்பது சோழர்களின் நிர்வாகத்தில் ஒரு முக்கியப்பிரிவு ஆகும். இதன் தலைவர்கள் நாட்டார்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- முதலாம் பராந்தக சோழன் காலத்தைச் சேர்ந்த உத்திரமேரூர் கல்வெட்டு, கிராம நிர்வாகத்தைப் பற்றியும் குடவேலை முறையைப் பற்றியும் விரிவாக விளக்குகிறது.
- கிராம நிர்வாகத்தை கிராம சபை என்ற நிர்வாகக் குழு கவனித்து வந்தது. கிராம சபை உறுப்பினர்கள், குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- கிராம குடியிருப்பு பகுதிகள் **ஊர் நத்தம்** என்றும், பிராமணர்கள் குடியிருந்த பகுதி **சதுர்வேதி மங்கலம்** என்றும் அழைக்கப்பட்டன.
- கிராம நிர்வாகத்தினை வாரியங்களின் துணையுடன் கிராம நிர்வாகக் குழுக்கள் சிறப்பாக செய்தன. இவ்வாரியத்தின் உறுப்பினர்கள் வாரியப் பெருமக்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- சமவத்சர வாரியம், ஏரிவாரியம், தோட்ட வாரியம், பஞ்ச வாரியம், பொன் வாரியம், புறவு வரி வாரியம் ஆகியவை குறிப்பிடத் தகுந்தன ஆகும்.
- வாரிய எண்ணிக்கையும், உறுப்பினர் எண்ணிக்கையும் கிராமங்களுக்கேற்ப மாறுபட்டது.
- சோழர்களின் கிராம நிர்வாகத்தில் மிகவும் சிறந்த அம்சமாகக் குடவோலை முறை கருதப்படுகிறது.
- நிர்வாக வசதிக்காக ஒவ்வொரு கிராமமும் 30 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பிரதிநிதி குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

<u>சமுதாய நிலை</u>

- சமுதாயம் வர்ணாசிரமக் கொள்கையின் அடிப்படையில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- கரிகாலன் காலத்தில் வலங்கை, இடங்கை ஆகிய சமுதாயப் பிரிவுகள் இருந்தன. வலங்கை பிரிவில் 98 சாதிகளும் ,இடங்கை பிரிவில் 98 சாதிகளும் இருந்தன.
- அடிமை முறை மற்றும் அடிமை வியாபாரம் பற்றி கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, கப்பற்படை ஆகிய பிரிவுகளைக் கொண்ட நிலையான படையை பெற்றிருந்தனர்.
- அரசரின் தனிப்படை கைக்கோளப் பெரும்படை எனப்பட்டது. அரசரைப் பாதுகாக்கும் சிறப்புக் காவல் வீரர்கள் வேளைக்காரர் எனப்பட்டனர்.
- இராணுவ முகாம்கள் கடகங்கள் என்று அழைக்கப்பட்டன.
- அரிசி செம்பியன் மகாதேவியும், குந்தவை அரசியும் கோயில்களின் காப்பாளராக விளங்கினர்.
- பெண்கள் சிறுபாடு என்னும் சிறுசேமிப்பு பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.
- மகாபலிபுரம், காவிரி பூம்பட்டினம், சேலையூர், கொற்கை ஆகிய சோழத் துறைமுகங்கள் மூலம் அயல்நாட்டு வாணிபம் நடைபெற்றது.
- யானைகள், ஏலக்காய், பருத்தி மற்றும் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அரேபிய குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன.
- சோழ அரசர்கள் பொன், வெள்ளி, செம்பு நாணயங்களை வெளியிட்டனர்.
- தேவதாசி முறை சோழர் காலத்தில் தான் தோன்றி வளர்ந்தது.
- திராவிடப்பாணி கட்டடக்கலை சோழர் காலத்தில் ஏற்றம் பெற்றது.
- ஆரம்ப காலத்தில் சோழர்கள் செங்கற்கோயில்களையும் பிற்காலத்தில் கற்கோயில்களையும் கட்டினர்.
- சோழர்காலக் கோயில்களின் தனிச்சிறப்பு அதன் விமானமாகும்.
- இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோயில், தமிழகத்திலேயே மிக அகலமான மற்றும் உயரமான விமானம் கொண்ட கோயிலாகும்.
- முதலாம் குலோத்துங்கன், கும்பகோணத்தில் சூரியக் கடவுளுக்காக ஒரு கோயிலைக் கட்டினார். தென்னிந்திய வரலாற்றில் சூரியனுக்காக கட்டப்பட்ட முதல் கோயில் இதுவாகும்.
- இரண்டாம் இராஜராஜன் தராசுரத்தில் ஐராவதீஸ்வரர் கோயிலைக் கட்டினார்.
- விஜயாலயன், நார்த்தாமலையில் (புதுக்கோட்டை மாவட்டம்) சோழீஸ்வரம் என்ற கோயிலைக் கட்டினார். இக்கோயில் முதற்கால சோழர்களின் கட்டடக் கலைக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.
- சோழர்கால ஓவியக் கலை வளர்ச்சிக்கு முதலாம் இராஜராஜனும் ராஜேந்திரனும் அதிக பங்காற்றினர்.
- சோழர்களது சுவரோவியங்களை தஞ்சாவூர், திருமயம், காஞ்சி கைலாசநாதர் கோயில், நார்தாமலை ஆகிய இடங்களில் காணலாம்.
- சோழர் காலத்தில் இசைக்கலை நன்கு வளர்ச்சியுற்றது. இசையில் 23 பண்கள் உபயோகிக்கப்பட்டன.

- இன்றைய கர்நாடக இசைக்கு சோழர் காலத்தில் தான் அடித்தளமிடப்பட்டது. இதே நாட்களில் தான் பரதநாட்டியம் என்னும் ஆடற்கலையும் தோன்றியது.
- சோழர் காலத்தில் கதகளி, பரதநாட்டியம் ஆகிய இருவகை நடனங்கள்போற்றி மதிக்கப்பட்டன.
- சிவ பெருமானே கரனவகை நடனத்திற்கு உதாரண நாயகராகக் கருதப்பட்டார்.
- நடராஜபெருமானின் நாட்டியக் கோல சிலைகள் சிதம்பரம் நடராஜர் கோயிலிலும், கும்பகோணம் சாரங்கபாணி கோயிலிலும் காணப்படுகின்றன.
- தஞ்சையிலுள்ள **பிரகதீஸ்வரர் கோயிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள கோயிலும்** சோழர்கால கலாச்சார நினைவுச் சின்னங்களாக யுனெஸ்கோ நிறுவனத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன.

## மதுரை சுல்தானியம்

- மதுரை சுல்தானியம் அல்லது மாபார் சுல்தானியம், பதினான்காம் நூற்றாண்டில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்ட ஒரு சிற்றரசாகும்.
- பாண்டியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பின் நடைபெற்ற இஸ்லாமிய படையெடுப்புகளால் தோன்றிய இந்த சுல்தானியம், பின்னர் விஜயநகரப் பேரரசின் படையெடுப்புகளால் அழிக்கப்பட்டது.
- இதுவே தமிழகத்தில் தொடர்ச்சியாக ஆட்சிபுரிந்த ஒரே இஸ்லாமிய அரசு ஆகும்.
- மாலிக்கபூர் தென்னிந்தியாவின் மீது படையெடுத்து, இராமேஸ்வரம் வரை வந்து வெற்றி கண்டார். இதற்கு பின்பு குஸ்ருகான் கி.பி.1318 இல் பாண்டியர் அரசின் மீது படையெடுத்தான்.
- பின்னர் கியாசுதீன் துக்ளக்கின் மகன் உலூக்கான் என்பவன் கி.பி.1323 ல் பராக்கிராம பாண்டியனைத் தோற்கடித்து, மதுரையை டெல்லி சுல்தானியத்தின் பகுதியாக அறிவித்தான்.
- பாண்டியநாடு, மாபார் என்ற பெயருடன் டெல்லி சுல்தானியத்தின் ஐந்த தென்னிந்திய பிரதேசங்களுள் (மாபார், தேவகிரி, டிலிங்க், கம்பிலி, துவாரசமுத்திரம்) ஒன்றாகியது. இதுவே மதுரை சுல்தானியம் என அழைக்கப்பட்டது.
- 1325 ஆம் ஆண்டு உலூக் கான் முகமது பின் துக்ளக் என்ற பெயருடன் டெல்லி சுல்தானாக முடி சூடினார்.
- டெல்லி சுல்தான் முகமது பின் துக்ளக் கி.பி.1327 ல்மதுரையின் ஆளுநராக சையது ஜலாலுதின் அஷன் ஷா என்பவரை நியமித்தார்.
- 1335 -ல் முகமது பின் துக்ளக்கிற்கு எதிராக ஏற்பட்ட கலகத்தில், அஷன்ஷா தன்னை சுதந்திர மன்னராக அறிவித்துக் கொண்டார்.
- இவ்வாறாக 1335 -ல் மதுரையின் முதல் சுல்தான் என்ற பெருமையுடன் ஜலாலுதீன் அஷன் ஷா ஆட்சி செய்ய ஆரம்பித்தார்.
- ஜலாலுதீனின் மகளை மொரோக்கோ நாட்டின் வரலாற்றாளர் இபுன் பதூதா மணந்திருந்தார்.
- 1340 ஆம் ஆண்டு ஜலாலுதீன் அவருடைய பிரவு (சிற்றரசர்) ஒருவரால் கொலை செய்யப்பட்டார்.
- அஷன் ஷாவை தொடர்ந்து அலாவுத்தீன் உதாஜி, சுல்தான் குத்புதீன், கியாசுதீன் தமகன் ஷா என பல சுல்தான்கள் ஆட்சி செய்தனர்.
- கி.பி.1317 ல் விஜய நகரப் பேரரசின் தளபதி குமாரகம்பணன், மதுரை சுல்தான் பக்ருதீன் முபாராக் ஷாவைத் தோற்கடித்து மதுரை சுல்தானியத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தான்.
- குமார கம்பணரின் மனைவி கங்காதேவி எழுதிய மதுராவிஜயம் என்ற நூலில் இப்படையெடுப்பு விவரிக்கப்பட்டுள்ளது.
- பின்பு திறமையற்ற ஆட்சியாளர்களின் ஆட்சியால் மதுரை சுல்தானியம் வீழ்ச்சி அடைந்தது.
- மதுரையின் கடைசி சுல்தானாக சிக்கந்தர் ஷாவை கி.பி.1378 ல் இரண்டாம் புக்கர் என்ற விஜய நகர மன்னர் வென்றார்.
- இதன்மூலம் மதுரை சுல்தானியத்தின் ஆட்சி முடிவுற்றது. விஜயநகரப் பேரரசின் கீழ் வந்தது.

## விஜயநகரப் பேரரசு

- கி.பி.1336 ல் ஹரிஹரர், புக்கர் என்ற இரு சகோதரர்கள் துங்கபத்திரை ஆற்றங்கரையில் விஜயநகரப் பேரரசை நிறுவினர். விஜயநகரம் இப்பேரரசின் தலைநகராக விளங்கியது.
- சங்கமா, சாளுவா, துளுவா, அறைவீடு ஆகிய நான்கு வம்ச மன்னர்ககளால் விஜயநகரப் பேரரசு ஆளப்பட்டது.
- தமிழ்நாட்டின் மீது படையெடுத்த முதல் விஜயநகர மன்னர் முதலாம் புக்கர் ஆவார்.
- பின்னர் குமாரகம்பணர் தொண்டைமண்டலம், திருச்சி, மதுரை, கொங்குதேசம், ராமேஸ்வரம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி தமிழ்நாட்டில் விஜயநகர அரசை ஏற்படுத்தினார்.
- குமார கம்பணாவிற்குப் பிறகு விருப்பணா, இரண்டாம் ஹரிஹரா, தேவராய சாளுவ நரசிம்மன் போன்ற விஜயநகர மன்னர்களால் தமிழ்நாடு ஆளப்பட்டது.
- விஜயநகர மன்னர்களில் கிருஷ்ணதேவராயர் தலைசிறந்த நிர்வாகி ஆவார்.
- விஜயநகர ஆட்சியின் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் நாயக்கர் முறையை மதுரை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் கிருஷ்ணதேவராயர் ஏற்படுத்தினார்.
- தமிழ்நாட்டில் உள்ளாட்சி நிர்வாக முறையை மாற்றியமைக்கும் பொருட்டு **பிரபுத்துவ நயன்கார நிர்வாக முறை** அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதன் அடிப்படையில் விஜயநகர மன்னர்கள், தமிழ்நாட்டிலுள்ள முக்கிய பகுதிகளுக்கு நாயக்கர்களை தலைவர்களாக நியமித்தார்கள்.
- கி.பி.1565 ல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில் விஜயநகரப் பேரரசு சுல்தானிடம் வீழ்ச்சியடைந்தது.
- விஜயநகர அரசர்களின் முக்கிய சமயம் இந்து சமயமாகும். ஆரம்பகால விஜயநகர மன்னர்கள் சைவர்களாகவும், பிற்கால விஜயநகர மன்னர்கள் வைணவர்களாகவும் விளங்கினர்.
- வைணவ சமயத்தில் வடகலை, தென்கலை என்ற இரு பிரிவுகள் இருந்தன.
- வேதங்களைப் பின்பற்றிய வடகலைப் பிரிவிற்கு வேதாந்த தேசிகர் தலைவராக விளங்கினார்.
- பிரபந்தங்களைப் பின்பற்றிய தென்கலைப் பிரிவிற்கு மணவாள மஹாமுனி தலைவராக விளங்கினார்.
- விஜயநகர மன்னர்கள் தமிழ், தெலுங்கு மற்றும் சமஸ்கிருத அறிஞர்களையும், புலவர்களையும் ஆதரித்துப் போற்றினர்.
- கிருஷ்ண தேவராயர் எழுதிய ஆமுக்தமால்யதா தெலுங்கு மொழியில் உள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- கிருஷ்ணதேவராயர் அவையில் அஷ்டதிக்கஜங்கள் என்று அழைக்கப்பட்ட எட்டு அறிஞர்கள் இருந்தனர்.
- கங்கா தேவி எழுதிய மதுரை விஜயம் என்ற நூல், அவரது கணவர் குமார கம்பணாவின் தமிழ்நாட்டு வெற்றியைக் குறிப்பிடுகிறது.
- நல்லூர் வீரகவிராயரின் அரிச்சந்திரப் புராணம், பவனந்தி முனிவரின் நன்னூல் போன்றவை விஜயநகர காலத்தில் எழுதப்பட்ட முக்கிய தமிழ் இலக்கியங்களாகும்.
- திராவிடக் கட்டடக் கலையும், இந்தோ - சரசானிக் கட்டடக் கலையும் விஜயநகர மன்னர்கள் காலத்தில் சிறப்புற்று விளங்கின.
- விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட மதுரை அரண்மனை இந்தோ - சரசானிக் கட்டடக்கலைக்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.
- வேலூர் கோட்டையிலுள்ள கோயில் இவர்களது திராவிடக் கட்டடக்கலைக்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது.
- விஜயநகர மன்னர்கள் பின்பற்றிய கடைசி கட்டடக்கலை முறை மதுரைக் கட்டடக்கலை முறையாகும்.
- விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழகத்தில் நாயக்கர்கள் சுதந்திர ஆட்சியாளர்களாக உருவெடுத்தனர்.

- விஜயநகர அரசின் கடைசி அரசர் மூன்றாம் ஸ்ரீரங்கர்.
- கி.பி.1614 ல் விஜயநகரம் முழுமையாக வீழ்ச்சியடைந்தது.

## நாயக்கர் ஆட்சியின் கீழ் தமிழ்நாடு

### நயன்கார முறை

- தமிழகத்தில் நயன்காரமுறையை அறிமுகப்படுத்தியவர் கிருஷ்ணதேவராயர் ஆவார். இம்முறையின்படி நாட்டின் அனைத்து நிலங்களும் அரசருக்கே சொந்தமாகும்.
- அரசரிடமிருந்த நிலங்களைப் பெற்றவர்கள் நாயக்கர்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- நாயக் என்ற வார்த்தைக்கு தலைவர் அல்லது தளபதி என்று பொருள்.
- நாயக்கர்கள் விஜயநகர அரசர்களின் முகவர்களாக, தங்களுக்கு அளிக்கப்பட்ட நிலப்பகுதிகளை ஆட்சிப் புரிந்தனர்
- அச்சுதராயரின் ஆட்சியில், 200 நாயக்கர்கள் ஆவரது கட்டுப்பாட்டில் இருந்தனர். அவர்களில் மதுரை, செஞ்சி, தஞ்சை மற்றும் வேலூர் நாயக்கர்கள் முக்கியமானவர்கள் ஆவர்.
- கி.பி.1565 ல் நடைபெற்ற தலைக்கோட்டை போரில் விஜயநகரப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. இதனால் அதன் கீழ் இருந்த செஞ்சி, தஞ்சாவூர் மற்றும் மதுரை நாயக்கர்கள் தங்களை சுதந்திர அரசர்களாக அறிவித்துக் கொண்டனர்.

## மதுரை நாயக்கர்கள்

### விஸ்வநாத நாயக்கர் (கி.பி.1529 - 1564)

- விஜயநகரப் பேரரசின் தெற்கு மண்டலமாக மதுரை விளங்கியது.
- கிருஷ்ண தேவராயர் கி.பி.1529 ல் மதுரை நாயக்கர் அல்லது ஆளுநர் என்னும் நிலையில் விஸ்வநாத நாயக்கரை நியமித்தார். இவர்தான் மதுரையின் முதல் நாயக்கர் ஆவார்.
- இவர் பாளையக்காரர் முறையை தனது நிர்வாகப் பகுதிகளில் அறிமுகப்படுத்தினார்.
- இவர் தமது ஆட்சிப்பகுதியினை 72 பாளையங்களாகப் பிரித்தார்.
- அரசரிடமிருந்து நிலங்களைப் பெற்ற காரணத்தால், நாயக்கர்கள் ஆண்டுதோறும் அரசுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையையும், அவ்வப்போது படைப்பிரிவையும் அளித்தனர்.
- அரசர் பெயரிலேயே நாயக்கர்கள் நிர்வாகத்தை நடத்தினர்.
- மேலும் அரசரின் பிறந்த நாள் விழாவின்போது நாயக்கர்கள் அரசருக்கு பரிசுப் பொருட்களும் பணமும் வழங்கினர். இம்முறையே நயன்கார முறை எனப்பட்டது.
- இவர் மதுரை நாயக்கர் ஆட்சியின் உண்மையான நிறுவனராகக் கருதப்படுகிறார்.
- இவரது ஆட்சியில் தளவாய் அரியநாதர் அமைச்சராகவும், படைத்தலைவராகவும் விளங்கினார்.
- இவருக்குப்பின் இவரது மகன் கிருஷ்ணப்ப நாயக்கர் மற்றும் பேரன் வீரப்ப நாயக்கர் ஆகியோர் ஆண்டனர்.

### திருமலை நாயக்கர் (கி.பி.1623 - கி.பி.1659)

- மதுரை நாயக்கர் வரலாற்றில் திருமலை நாயக்கரின் ஆட்சிகாலம் ஒரு புது சகாப்தமாக கருதப்படுகிறது.
- அவருக்கு முன்பு ஆறு அரசர்களும், அவருக்குப் பிறகு ஆறு அரசர்களும் மதுரையை ஆட்சி புரிந்தனர்.
- மதுரை நாயகர்களிலேயே தலைசிறந்த மன்னராக திருமலை நாயக்கர் கருதப்படுகிறார்.
- இவர் தனது தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றினார்.
- இவர் விஜயநகர அரசர்களின் கட்டுப்பாட்டிலிருந்து தன்னை முழுவதுமாக விடுவித்துக் கொண்டு சுதந்திரமாகச் செயல்பட ஆரம்பித்தார்.
- பாளையச்காரர் முறை என்பது படைப்பிரிவுடன் கூடிய நிலமானிய முறையாகும்.
- இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் இராணுவம், காவல் மற்றும் வருவாய் நிர்வாகத்தை மேற்கொண்டனர்
- காவல் பணி முக்கியமானதாக கருதப்பட்டது. மக்கள் காவல் பிச்சை என்ற வரியினை பாளையக்காரர்களுக்கு செலுத்தினர்.
- தெப்பக்குளம், திருமலை நாயக்கர் மஹால், மதுரை கோவிலிலுள்ள ராஜகோபுரம், மதுரை புது மண்டபம் ஆகியவை இவரது சிறந்த படைப்புகளாகும்.

- இவர் மைசூர் அரசர் கந்திரவநாத நாயக்கரை திண்டுக்கல்லில் தோற்கடித்தார். போர்க் களத்தில் பல வீரர்களுக்கு மூக்குகளும் உதடுகளும் அறுக்கப்பட்டன. அதனால் இப்போர் மூக்கறுப்பு போர் எனப்பட்டது.
- புகழ்பெற்ற சமஸ்கிருத மேதை நீலகண்ட தீக்ஷிதரை இவர் போற்றி ஆதரித்தார்.
- இவர் காலத்தில் மதுரைக்கு வந்த இத்தாலிய கத்தோலிக்க பாதிரியார் ராபர்ட் - டி - நொபிலி, தமிழகத்தில் கிறித்துவ மதத்தைப் பரப்பினார்.

**இராணி மங்கம்மாள்**

- திருமலை நாயக்கருக்கு பிறகு ஆட்சி செய்த சிறந்த அரசி இராணிமங்கம்மாள் ஆவார்.
- இவர் சொக்கநாத நாயக்கரின் மனைவியாவார். இவர் தமது மூன்று வயது பேரனான விஜயரங்க சொக்கநாதரின் பாதுகாவலராக ஆட்சி பொறுப்பேற்றார்.
- இவர் மதுரை நாயக்க வம்சத்தின் முதல் பெண் அரசி ஆவார். இவர் சிறந்த நிர்வாகியும் வீரமிக்க தளபதியும் ஆவார்
- மதுரையிலுள்ள மங்கம்மாள் சத்திரம், இராணி மங்கம்மாளின் புகழுக்கும், கட்டடக்கலை சிறப்பிற்கும் ஒரு சிறந்த உதாரணமாகும்.
- இவர் நீர்ப்பாசன திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். உய்யக்கொண்டான் - கால்வாய் இன்றும் இவரது பெருமைகளை எடுத்து உரைக்கிறது.

**மீனாட்சி (கி.பி.1732 - 1739)**

- விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ஆண் வாரிசு இன்றி இறக்கவே, அவரது மனைவி மீனாட்சி மதுரையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.
- மீனாட்சியே மதுரை நாயக்கர்களில் கடைசி ஆட்சியாளர் ஆவர்.
- இவர் விஜயக்குமார் நாயக்கர் என்பவரை தத்து எடுத்து அவருடைய பாதுகாவலராக தனது ஆட்சியை தொடங்கினார்.
- தனது வளர்ப்பு மகனின் தந்தை பங்காரு இவருக்கு எதிராக சதி திட்டத்தில் ஈடுபட்டு அரசாட்சியை கைப்பற்ற முனைந்தார்.
- இதனையறிந்த மீனாட்சி, ஆற்காட்டில் இருந்த சந்தாசாகிப்பின் உதவியை நாடினார். இதற்காக ஒருகோடி ரூபாயை தருவதாக ஒப்புக் கொண்டார்.
- சந்தாசாகிப் மீனாட்சிக்கு எதிரான சதி திட்டத்தை முறியடித்தார். ஆனால் தனது உறுதி மொழியை மீறி,மதுரையை கைப்பற்றும் நோக்கில் மீனாட்சியை கைது செய்து அவரது சொந்த அரண்மனையிலேயே சிறைப்படுத்தினார்.
- இதனால் மனமுடைந்த மீனாட்சி சிறையில் விஷம் அருந்தி உயிர் துறந்தார்.
- இவரது காலத்தில் நாயக்கர்களுக்கு சொந்தமான தஞ்சை, திண்டுக்கல், திருச்சி மற்றும் மதுரை ஆகிய பகுதிகளை ஆற்காடு நவாப்பு சந்தா சாகிப் கைப்பற்றினார். இவ்வாறாக நவாப்புகளால் மதுரை நாயக்கர் ஆட்சி முடிவுக்கு வந்தது.

## தஞ்சை நாயக்கர்கள்

**செவப்ப நாயக்கர் (கி.பி.1532 - 1560)**

- தஞ்சாவூர் விஜயநகரப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கியது. திம்மப்ப நாயக்கர் தஞ்சாவூரின் பொறுப்பாளராக செயல்பட்டார்.
- இவருக்குப் பின் இவரது மகன் செவப்ப நாயக்கரை தஞ்சாவூர் நாயக்கராக விஜயகர அரசர் அச்சுதராயர் நியமித்தார்.
- செவப்ப நாயக்கர் தஞ்சாவூரின் முதல் நாயக்கர் ஆவார். இவரே தஞ்சாவூரில் நாயக்கர் ஆட்சியை தோற்றுவித்தவராவார்.
- இவர் போர்த்துகீசியர்கள் நாகப்பட்டினத்தில் குடியேற அனுமதி வழங்கினார்.
- இவர் சிவகங்கா ஏரியைப் புதுப்பித்தார். அது செவப்பனேரி என பிறகு அழைக்கப்பட்டது.

**அச்சுதப்ப நாயக்கர் (கி.பி. 1560 - 1600)**

- செவப்ப நாயக்கருக்குப்பின் அவரது மகன் அச்சுதப்ப நாயக்கர் தஞ்சையில் ஆட்சி செய்தார்.
- இவர் தலைக்கோட்டை போரில் விஜயநகர பேரரசுக்கு பெரும் உதவி புரிந்தார்.
- இவர் திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் கோயிலை கட்டி முடித்தார். மேலும் கும்பகோணத்தில் உள்ள மகாமகக் கோயிலை தூர்வாரிச் செப்பனிட்டார்.

**இரகுநாத நாயக்கர் (கி.பி. 1600 - 1634)**

- அச்சுதப்ப நாயக்கரையடுத்த அவரது மகன் இரகுநாத நாயக்கர் ஆட்சிக்கு வந்தார். இரகுநாத நாயக்கரே தஞ்சை நாயக்க அரசர்களில் சிறந்தவர் ஆவார்.
- செஞ்சி, மதுரை நாயக்கர்கள், யாழ்ப்பாணர் மற்றும் போர்ச்சுகீசியர்களை வென்று, அவர்களை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.
- இவர் கலைகளைப் போற்றினார். அறிஞர்களை ஆதரித்தார். தானே ஒரு சிறந்த கவிஞராக விளங்கினார். இவர் **ருக்மணி பரிநயம்,பாரி ஜாதம்,புஷ்பகர்ணம்,இராமாயணம்** போன்ற நூல்களை தெலுங்கு மொழியில் எழுதியுள்ளார்.

**விஜயராகவ நாயக்கர் (கி.பி.1634 - 1673)**

- இரகுநாதரையடுத்து அவரது மகன் விஜயராகவ நாயக்கர் ஆட்சிக்கு வந்தார்.
- விஜயராகவ நாயக்கர் தெலுங்கு மொழி அறிஞராவார். இவர் இரகுநாத பயுதம் என்ற நூலை எழுதினார்.
- கி.பி.1673 ல் மதுரை நாயக்கர் சொக்கநாதர் தஞ்சை மீது படையெடுத்து விஜயராகவ நாயக்கரை கொன்று, தமது உறவினர் அழகிரியை தஞ்சையின் ஆளுநராக நியமித்தார். இத்துடன் தஞ்சை நாயக்கர் ஆட்சி முடிவுக்கு வந்தது.
- விஜயராகவ நாயக்கர் கொல்லப்பட்டதால் அவரது குடும்பம் தற்கொலை செய்துக் கொண்டது. அவரின் உயிர் பிழைத்த ஒரே வாரிசு நாயக்கராக வேண்டும் என நினைத்து பீஜப்பூர் சுல்தான், மராட்டிய தளபதி வெங்காஜியை அனுப்பி வைத்தார்.
- ஆனால் வெங்காஜியோ கி.பி.1676 இல் தஞ்சை மன்னராக பொறுப்பேற்று மராட்டியர் ஆட்சியை ஏற்படுத்தினார்.

## செஞ்சி நாயக்கர்கள்

- பாலாற்றிற்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பகுதியான செஞ்சி நாயக்கர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.
- செஞ்சி நாயக்கர்கள், விஜய நகர அரச குடும்பத்தின் உறவினர்கள் ஆவர்.
- இவர்களின் பூர்வீகம் வட இந்தியாவில் உள்ள மணிநாகபுரமாகும். இவர்கள் தென் இந்தியாவிற்கு குடிபெயர்ந்து இப்பகுதியில் குடியேறினர்.
- கிருஷ்ணதேவராயர் காலத்தில் செஞ்சி தலைநகராக இருந்தது.
- கிருஷ்ணதேவராயர் வையப்பர் என்பவரை செஞ்சியின் முதல் நாயக்கராக நியமித்தார். இவர் கி.பி.1526 முதல் கி.பி.1541 வரை ஆட்சி புரிந்தார்.
- வையப்ப நாயக்கருக்கு பிறகு அவரது மகன் துப்பாக்கி (நாயக்கர்) கிருஷ்ணப்பர் கி.பி.1541 முதல் கி.பி.1554 வரை ஆட்சிப் புரிந்தார்.
- இவர் வெல்லாற்றின் கரையில் கிருஷ்ணப்பட்டினம் என்ற நகரை நிறுவினார். மதசகிப்புத் தன்மை கொண்டவராக விளங்கிய இவர் கிறித்துவர்கள் திருச்சபைகளைக் கட்டிக் கொள்ள அனுமதித்தார்.
- சித்தாமூரில் சமணர்களும், திண்டிவனத்தில் சைவ மதத்தினரும் கோயில்களை கட்டிக்கொள்ள அனுமதித்தார்.
- இவருடைய தளபதி வேங்கடா, சென்னை சாகரம் என்ற ஏரியை வெட்டுவித்து விவசாயத்தை வளரச் செய்தார்.
- சூரப்ப நாயக்கர் (1554 - 67) ஆட்சிக்காலத்தில் நடைப்பெற்ற தலைக்கோட்டை போரில் விஜயநகர அரசர்களுக்கு உதவினார்.

**இரண்டாம் கிருஷ்ணப்பர் (கி.பி.1567 - 75)**

- இவ்வம்சத்தின் கடைசியாக வரதப்பன் மற்றும் அப்பநாயக்கர் 1670 - 71 களில் ஆட்சிப் புரிந்தனர்.
- பீஜப்பூர் சுல்தான் கி.பி.1648 ஆம் ஆண்டு செஞ்சியை கைப்பற்ற தனது படைத் தளபதி மீர்சும்லா என்பவரை அனுப்பினார். இவர் செஞ்சியை கைப்பற்றி நாசிர்கான் என்பவரை பொறுப்பாளராக நியமனம் செய்தார்.
- மராட்டிய மன்னன் சிவாஜி கி.பி.1678 ல் செஞ்சியைக் கைப்பற்றினார். அது முதல் கி.பி.1678 ல் செஞ்சியைக் கைப்பற்றினார். அது முதல் கி.பி.1698 வரை செஞ்சி மாராட்டியர் ஆட்சியின் கீழ் இருந்தது.
- சிவாஜிகச்குப் பிறகு இராஜபுத்திர படை தளபதியான சொரூப்சிங் கட்டுப்பாட்டில் செஞ்சி இருந்தது. இவருக்குப் பிறகு இவரது மகன் இராஜா தேசிங்கு செஞ்சியின் ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- ஆற்காட்டு நவாப் சாதக்துல்லாக்கான் செஞ்சி மீது படையெடுத்து ராஜாதேசிங்கை தோற்கடித்து கொன்றார். செஞ்சி ஆற்காட்டுடன் இணைக்கப்பட்டது.
- இராஜா தேசிங்கின் மனைவி சதி மேற்கொண்டு உயிர் துறந்தார். அவரது நினைவாக இராணிப்பேட்டை நகரம் உருவாக்கப்பட்டது.
- இவ்வாறு செஞ்சியில் நாயக்கர் ஆட்சி முடிவுக்கு வந்தது.
- கி.பி.1698 ல் மொகலாயர்களுக்காக செஞ்சியைக் கைப்பற்றிய, மொகலாயத் தளபதி சுல்ஃபிகர்கான் செஞ்சியின் ஆட்சியாளரானார்.

## வேலூர் நாயக்கர்கள்

- வேலூர் நாயக்கர் ஆட்சியானது சின்ன நாயக்கபொம்மர் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. இவர்தான் முதல் வேலூர் நாயக்கராவார்.
- இவருக்குப் பிறகு லிங்கம்ம நாயக்கர் ஆட்சிக்கு வந்தார். வேலூர் நாயக்கர்கள் சில காலமே ஆட்சி செய்தனர்.

**நாயக்கர்களின் ஆட்சிமுறை**

- நாயக்கர்கள் சிறந்த நிர்வாக முறையை ஏற்படுத்தினர்.
- பேரரசு பல மாநிலங்களாகவும், மண்டலங்களாகவும், சீமைகளாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன.
- பாளையப்பட்டு முறை நடைமுறையில் இருந்தது. அரசின் முக்கிய வருவாய் நிலவரி ஆகும்.

**சமூக பொருளாதார நிலை**

- நாயக்கர்கள் காலத்தில் சாதிமுறை கடுமையானதாக இருந்தது. வலங்கை, இடங்கை பிரிவுகள் இருந்தன.
- சமூகத்தில் கொத்தடிமை முறை இருந்தது. டச்சு நாட்டு வணிகர்கள் அடிமைச் சந்தைகளை ஆரம்பித்து மக்களை அதிகளவில் அடிமைப்படுத்தினர்.
- தெலுங்கு பேசும் மக்கள் தமிழ்நாட்டுக்குள் குடிபெயர்ந்து புதிய நில உரிமையார்களாக உருவெடுத்தனர்.
- இராணி மங்கம்மாள் போன்ற சில நாயக்கர்கள் நீர்ப்பாசன முறையை அதிகரித்தனர்.
- நாயக்கர்கள் இந்து சமயத்தைப் போற்றினர். இவர்கள் சைவ சமயத்தை ஆதரித்ததுடன், லிங்க வழிபாட்டு முறையையும் பின்பற்றினார்கள்.
- திருமலை நாயக்கர் காலத்தில் தெப்பத் திருவிழா, தேர்த்திருவிழா, சித்திரைத்திருவிழா போன்ற விழாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**கலை, கட்டடக்கலை**

- ரகுநாத நாயக்கர் சங்கீத சுதா, பரதசுதா ஆகிய இரு இசை நூல்களை இயற்றியுள்ளார். இந்நூல்கள் இவரால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ராகங்களையும் தாளங்களையும் பற்றி விளக்குகின்றன.
- ஸ்ரீவில்லபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோயில், கிருஷ்ணாபுரத்திலுள்ள திருவேங்கடநாதர் கோயில், ஸ்ரீரங்கம் கோயில் மற்றும் நெல்லையப்பர் கோயில் போன்றவை நாயக்கர் கால கலை, கட்டடக்கலை வளர்ச்சிக்கு சிறந்த உதாரணங்களாகும்.

- திருமலை நாயக்கர் மதுரையில் புது மண்டபம், மாரியம்மன் தெப்பக்குளம், நாயக்கர் மஹால் ஆகியவற்றை கட்டினார்.
- தஞ்சாவூரில் உள்ள சிவகங்கை கோட்டை செவ்வப்ப நாயக்கரால் கட்டப்பட்டது.
- செஞ்சியை ஆட்சி புரிந்த அச்சுத இராமபத்ர நாயக்கர் திருவண்ணாமலை கோவிலுக்கு சுற்றுசுவர்களையும், மாபெரும் கோபுரத்தையும் கட்டி முடித்தார்.
- திருமலை நாயக்கர் மஹால் இத்தாலிய சிற்பியின் மேற்பார்வையில் கட்டப்பட்டது. இது திராவிட, இஸ்லாமிய மற்றும் ஐரோப்பிய கலை அம்சங்களை கொண்டுள்ளது.
- நாயக்கர் கால ஓவியங்களுள் மதுரை மினாட்சியம்மன் கோயிலில் வரையப்பட்டுள்ள ஓவியம் மிகவும் சிறப்பானதாகும்.
- திருமலை நாயக்கரின் சிதம்பர புராணம், பரஞ்ஜோதியாரின் சிதம்பர பட்டியல், ஹரிதாசரின் இருசமய விளக்கம், உமறுப்புலவரின் சீறாப்புராணம், குமரகுருபரின் கந்தர் கலிவெண்பா, திருவேங்கடம் எழுதிய மெய்ஞான விளக்கம் ஆகியவை இவர்களின் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட சிறந்த நூல்கள் ஆகும்.

## பக்கிம் சந்திரர்

- பெங்காளி மொழிக்கு புதுமலர்ச்சி ஊட்டிய பக்கிம் சந்திரர் 27.06.1838 ல் பிறந்தவர்.
- கல்கத்தா பல்கலைக்கழகத்தில் முதல் முதலில் பட்டம் பெற்ற இருவருள் பங்கிம் சந்திரரும் ஒருவர்.
- சட்டம் படித்து உதவி கலெக்டர் பதவி வகித்தவர். ஓய்வு பெற்ற பிறகு இலக்கியப் பணியில் ஈடுபட்டார்.
- வங்காளி மொழியில் முதன்முதலில் நாவல் எழுதியவர் பக்கிம் சந்திரர்.
- கபாலகுண்டலா, துர்க்கேசநந்தினி ஆகிய இரு நாவல்களும் இவரை நாடறியச் செய்தன. ஆனந்த மடம், விஷ விருட்சம் ஆகிய நாவல்கள் புகழ் பெற்றவை. மேலும் பல நாவல்களை இவர் எழுதியிருக்கிறார்.
- கி.பி.1882ல் வங்கமொழியில் வெளிவந்த ஆனந்த் மத் எனும் நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பான ஆனந்த் மடம் எனும் நாவலின் கடவுள் வாழ்த்துப் பாடல் தான் வந்தே மாதரம்.
- சுதந்திரப் போராட்ட காலத்தில் மக்களுக்கு பெரும் உத்வேகம் ஊட்டிய பாடல் இது.
- பக்கிம் சந்திரர் 08.04.1894ல் மறைந்தார்.

## சுவாமி விவேகானந்தர்

- சுவாமி விவேகானந்தர் 1863 ஆம் ஆண்டு ஜனவரி 12ம் நாள் பிறந்தார். இவர் இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா.
- இவரின் தந்தையார் விஸ்வநாத் தத்தா, கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் அட்டார்னியாக இருந்தார்.
- இளமையிலேயே வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணங்களில் மிகுந்த நாட்டம் கொண்டவராக விளங்கினார்.
- 1884 ஆம் ஆண்டு B.A. பட்டம் பெற்றார். ஆங்கில எழுத்தாளர்களின் புத்தகங்களைத் தொடர்ந்து வாசித்தார்.
- ஹெர்பட் ஸ்பென்சர் எழுதிய **கல்வியியல்** என்னும் புத்தகத்தை வங்காள மொழியில் மொழிபெயர்த்தார். கேசவ சந்திர சென் அவர்களின் தலைமையில் பிரிந்து செயல்பட்ட பிரம்ம சமாஜத்தில் இணைந்தார்.
- விவேகானந்தர் தன் குருவான இராமகிருஷ்ணரை 1881 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சந்தித்தார்.
- இவர் மேற்கு வங்காளத்திலுள்ள ஹூக்ளி ஆற்றங்கரையில் நிறுவிய மடம் **பேலூர் மடம்** எனப்படும்.
- இராமகிருஷ்ணா மடம், இராமகிருஷ்ணா இயக்கத்தின் தலைமை இடமாக விளங்கியது.
- 1887ம் ஆண்டு ஜனவரி மாதம் இராமகிருஷ்ணரின் எட்டு சீடர்களுடன் விவேகானந்தர் துறவிக்கான உறுதி பூண்டார்
- இராமகிருஷ்ண மடத்திற்கான புதிய இல்லம் பாரா நகர் பகுதியில் அமைந்தது. இதுவே இராமகிருஷ்ணா மடத்தின் தொடக்கமாக கருதப்படுகிறது.
- சுவாமி விவேகானந்தர் பிபிடிஷானந்தா என்னும் பெயர் பூண்டார்.
- கேத்ரி மகாராஜா அஜித்சிங் பகதூர் விவேகானந்தர் எனப் பெயரிட்டு அழைத்தார். விவேகானந்தருக்குச் சீடராகவும், நண்பராகவும் விளங்கினார்.
- விவேகானந்தர் அமெரிக்காவில் சிகாகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் பங்கேற்பதற்கு கேத்ரி மகாராஜா நிதியுதவி வழங்கினார். இந்தியா முழுவதும் விவேகானந்தர் பயணம் மேற்கொண்டார்.

- 1892 ஆம் ஆண்டு கன்னியாகுமரியிலுள்ள **இந்தியப் பாறையின் கடைசி துண்டு** என்னும் பாறையில் அமர்ந்து தியானம் செய்தார். தற்போது இது **விவேகானந்தர் பாறை** என அழைக்கப்படுகிறது.
- அதில் விவேகானந்தர் நினைவு மண்டபம் உள்ளது.
- கன்னியாகுமரியில், விவேகானந்தர் முன்வைத்த ஒன்றுபட்ட இந்தியா என்னும் முழக்கம் கன்னியாகுமரி தீர்மானம் 1892 என அழைக்கப்படுகின்றது.
- செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி 1893 ஆம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் அமெரிக்காவின் சகோதரிகளே! சகோதரர்களே! எனத் தான் பேச்சைத் தொடங்கினார். இந்தப் பேச்சு சிகாகோ சொற்பொழிவு என இன்றளவும் பாராட்டப்படுகின்றது.
- இவர் வேதாந்த தத்துவத்தை மக்களிடம் பரப்பினார்.
- ராஜயோகம், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.
- இவரின் புகழ்பெற்ற சீடர்களில் ஒருவரான அலசிங்க பெருமாள் விவேகானந்தரின் அமெரிக்கப் பயணத்துக்கும் உதவியவர்.
- இன்னொரு சீடரான சுவாமி அபயானந்தா இவரின் இயற்பெயர் மேரி லுயிஸா விவேகானந்தரின் இயக்கத்தில் சேர்ந்த முதல் பெண், முதல் அமெரிக்கப் பெண், முதல் மேற்கத்திய பெண் என்னும் சிறப்புக்குரியவர். (வெளிநாட்டைச் சேர்ந்த லீயான் லாண்டஸ் பெர்க் சுவாமி விவேகானந்தா என்றும், டாக்டர் ஸ்ட்ரீட், சுவாமி யோகனந்தா என்றும் விவேகானந்தரால் 1895 ஆம் ஆண்டு சன்னியாசி பட்டம் பெற்றனர்.).
- சகோதரி நிவேதிதாடு இவரின் இயற்பெயர் மார்க்கரட் எலிசபெத் நோபல். இவர் 1895 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரை லண்டனில் சந்தித்தார். 1899 ஆம் ஆண்டு சீடரானார். நிவேதிதா என்பதற்கு இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டவர் என்பது பொருளாகும்.
- சுவாமி சதானந்தாவும், சுவாமி விவேகானந்தரின் முக்கிய சீடர்களுள் ஒருவர். (முக்கியமான சீடரகள் அலசிங்க பெருமாள், சுவாமி அபயனாந்தா, சகோதரி நிவேதிதா, சுவாமி சதானந்தா.).
- எழுமின்! விழிமின்! அயராது உழைமின்! இலக்கை அடையும் வரை என்னும் கதா உபநிடத வாசகத்தை விவேகானந்தர் பெரிதும பிரபலப்படுத்தினார்.
- இவரின் பிறந்த நாளான ஜனவரி 12, தேசிய இளைஞர் தினம் எனக் கொண்டாடப்படுகின்றது.

## அன்னை தெரசா

- அன்னை தெரசா சமூக சேவை மூலமாக உலகப் புகழ் பெற்றவர்.
- எளிமையின் இருப்பிடமாக விளங்கிய அன்னை தெரசா அவர்களின் இயற்பெயர் ANJEZE GONXHE BOJAZHIU.
- இவர் பெயரில் உள்ள GONXHE என்ற சொல்லுக்கு அல்பேனிய மொழியில் ரோஜா மொட்டு அல்லது சிறுமலர் எனப் பொருள் கொள்ளலாம்.
- இவர் 26 ஆகஸ்ட் 1910 ஆம் ஆண்டு ஸ்கோப்ஜி நகரில் பிறந்தார். தற்போது அந்த நகர் மாசிடோனியா குடியரசின் தலைநகராக உள்ளது.
- இளம் வயதில் ஆக்னஸ் என அழைக்கப்பட்ட இவர் சமய மற்றும் சமூகத் தொண்டாற்றும் மிஷினரிகளின் கதைகளை ஆர்வமாகக் கேட்டார். அதிலும் குறிப்பாக இந்தியாவில், வங்காளத்தில் பணியாற்றுகின்ற மிஷினரிகளின் வாழ்க்கை இவரைப் பெரிதும் ஈர்த்தது.
- கன்னியாஸ்திரியாக வேண்டும் என 15 ஆகஸ்ட் 1928 ஆம் ஆண்டு முடிவு செய்தார். தன்னுடைய 18 ஆம் வயதில் லொரெட்டொ அருட்கன்னியர் சபையில் சேர்ந்தார். அதற்குப் பின்னர் அவர் தன்னுடைய தாய் மற்றும் சகோதரியைப் பார்க்கவே இல்லை.
- அன்னை தெரசா 1929 ஆம் ஆண்டு இந்தியா வந்தார். டார்ஜிலிங்கில் தன்னுடைய துறவு வாழ்க்கையைத் தொடர்ந்தார்.
- கன்னியாஸ்திரியா முதல் வார்த்தைப்பாட்டை 24 மே 1931 ஆம் ஆண்டு எடுத்துக் கொண்டார். அப்பொழுது தான் ஆக்னஸ் என்ற பெயரை விடுத்து தெரசா என்ற பெயரைத் தேர்வு செய்தார்.
- கிழக்குக் கல்கத்தாவில் அமைந்திருந்த லொரெட்டோ கான்வண்ட் பள்ளியில் 20 ஆண்டுகள் பணியாற்றினார்.
- 1944 ஆம் ஆண்டு தலைமையாசிரியையாக நியமிக்கப்பட்டார்.

- ஆசிரியைப் பணியை முழு ஈடுபாட்டுடன் செய்தாலும் கல்கத்தா நகரிலுள்ள வறியோரின் நிலை, இவர் மனத்தை மேலும் வாட்டியது.
- 1946 ஆம் ஆண்டு கல்கத்தா நகரில் இரயில் பயணம் மேற்கொண்ட போது நான் கான்வெண்டை விட்டு வெளியேறி ஏழை மக்களுக்கு உதவ வேண்டும என்ற அழைப்பு கிடைத்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
- 1948 ஆம் ஆண்டு தன்னுடைய மிஷினரி பணியைத் தொடங்கினார். வழக்கமான லொரெட்டோ சீருடையை விட்டுவிட்ட எளிமையான நீலக் கரை போட்ட பருத்திச் சேலையை உடுத்தினார்.
- தொடக்கத்தில் கல்கத்தாவிலுள்ள பகுதியில் பள்ளியைத் தொடங்கினார். பின்னர் 1949 ஆம் ஆண்டு ஏழைகளிலும் ஏழைகளுக்கு உதவ வேண்டும என்ற எண்ணம் கொண்டு, இளம் பெண்களை ஒருங்கிணைத்தார்.
- 1950 ஆம் ஆண்டு தனியாகச் சபை தொடங்கவதற்கான ஒப்புதலை வாட்டிகனிடமிருந்து பெற்றார்.
- முதலில் 13 உறுப்பினர்களைக் கொண்டு துவங்கப்பட்ட சபை தற்போது 4000 க்கும் மேற்பட்ட அருட் கன்னியர்களைக் கொண்டுள்ளது.
- 1952 ஆம் ஆண்டு உயிர் பிரியும் நிலையில் உள்ளோருக்காக இல்லம் ஒன்றைத் தொடங்கினார். இந்த இல்லம் Kalighat Home for the Dying என அழைக்கப்பட்டது.
- அதன்பின்னர் தொழுநோயாளிகளுக்கான இல்லத்தை தொடங்கினார். கல்கத்தா மாநகரம் முழுவதும் தொழு நோயாளிகளுக்கான மருத்துவ நிலையங்களைத் தொடங்கினார்.
- 1955 ஆம் ஆண்டு நிர்மலா சிசி பவன் தூய இருதய குழந்தை இல்லம் தொடங்கினார்.
- 1960 ஆம் ஆண்டுகளில் இந்தியா முழுவதும் தன்னுடைய பணிகளை விரிவுபடுத்தினார்.
- பின்னர் 1965 ஆம் ஆண்டு வெனிசூலா நாட்டில் 5 அருட்சகோதரிகளைக் கொண்டு இல்லத்தைத் தொடங்கினார்.
- 1963 ஆம் ஆண்டு ஆண்கள் பங்கேற்கும் வகையில் அமைப்பு தொடங்கப்பட்டது.
- 1981 ஆம் ஆண்டு Corpus Christi Movement for Priests ஆக தொடங்கினார்.
- 1984 ஆம் ஆண்டு அருட்தந்தை ஜோசப் லாங்கபோர்டு அவர்களுடன் இணைந்து The Missionaries of Charity Fathers ஐ தொடங்கினார்.
- 2007 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 450 சகோதரர்கள், 5000 அருட்கன்னியர்கள் உலகம் முழுவதும் 120 நாடுகளில் உள்ள 600 மிஷன்கள், பள்ளிகள், உறைவிடங்களை நடத்தி வருகின்றனர்.
- அன்னை தெரசா அவர்கள் 5 செப்டம்பர் 1997 ஆம் ஆண்டு 87 ஆம் வயதில் மறைந்தார். இவரைத் தொடர்ந்து அருட் சகோதரி நிர்மலா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## பண்டிட் ரவிசங்கர்

- இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா பெற்ற சிதார் கலைஞர் பண்டிட் ரவி சங்கர் இவர் 1920 ஆம் ஆண்டு
- ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி வாரனாசியில் பிறந்தார்.
- இவரின் இயற்பெயர் ரபீந்திர சங்கர் சௌத்ரி. இவரின் பெற்றோர் ஷியாம் சங்கர், ஹேமாங்கினி இளமையில் தன் சகோதரர் நடனக் கலைஞர் உதய் சங்கர் நடனக் குழுவில் இடம் பெற்றார்.
- பிரான்ஸின் தலைநகர் பாரீஸ் சென்று அங்கு நடன நிகழ்ச்சிகள் நடத்தியபோது நடனம், இசைக் கருவிகள் இசைப்பது எனப் பல நுண்கலைகளை ரவிசங்கர் கற்றுக் கொண்டார்.
- உதய்சங்கர் நடன குழுவுடன் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா போன்றவற்றிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இந்தியா திரும்பிய ரவி சங்கர் 1938 ஆம் ஆண்டு தன்னுடையை நடன முயற்சிகளை விட்டுவிட்டார்.
- 1934 ஆம் ஆண்டு ரவி சங்கர் மேவார் அரண்மனையின் இசைக்கலைஞர் அலாவுதீன் கான் பற்றித் தெரிந்து கொண்டார். 1938 ஆம் ஆண்டு Maihar சென்று அலாவுதீன் கான் மாணவர்களில் ஒருவராகக் குருகுல முறைப்படி இந்திய பாரம்பரிய இசையைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினார்.
- ரவி சங்கர் சிதார், கர்பாஹர் போன்ற இசைக் கருவிகளை மீட்டக் கற்றுக் கொண்டார். மேலும் , கான் அவர்கள் ருத்ர வீணை, ருபாப், கர்சிங்கர் போன்ற இசைக் கருவிகளின் நுணுக்கங்களையும் பயிற்று வித்தார்.
- கான் அவர்களின் குழந்தைகளான அலி அக்பர் கான், அன்னபூர்ணா தேவி ஆகியோருடன் இணைந்து படித்தார்.
- டிசம்பர் மாதம் 1939 ஆம் ஆண்டு, சிதார், கருவியைப் பொது நிகழ்ச்சியில் வாசித்தார். அந்த நிகழ்ச்சியில் ஜுகல் பந்தி அலி அக்பர் கானுடன் இணைந்து வாசித்தார்.

- 1944 ஆம் ஆண்டு ரவி சங்கர், தன்னுடைய பயிற்சியை முடித்துக் கொண்டார்.
- பின்னர், மும்பை சென்று இந்திய மக்கள் நாடகக் கழகத்தில் சேர்ந்தார். தன்னுடைய 25 ஆம் வயதில் “Sare Jahan se Acha” பாடலுக்கு மாற்றிசை வழங்கினார்.
- அகில இந்திய வானொலி நிலையம்,புது தில்லியில் இயக்குநர்,இசைத்துறை பொறுப்பில் 1949-1956 வரை இருந்தார்
- 1950 ஆம் ஆண்டு சத்யஜித் ரே அவர்கள் இயக்கிய அபு டிரையாலஜி படத்திற்கு இசையமைத்தார். இந்த படம் சர்வதேச அளவில் புகழ் பெற்றது. பல இந்தித் திரைப்படங்களும் இசையமைத்துள்ளார்.
- இந்தியாவில் எடுக்கப்படாத படத்திற்கு இசையமைத்த முதல் இந்தியர்.
- சின்னரா இசைப்பள்ளி 1962 மும்பையில் தோற்றுவித்தார்.
- ரவிசங்கர் தன் மகள் அனுஷ்காவுடன் வழங்கிய கடைசி இசை நிகழ்ச்சி 4 நவம்பர் 2012, Terrace Theatre, கலிபோர்னியா.

**ருக்மணிதேவி அருண்டேல் :**

- கி.பி. 1904ம் ஆண்டு பிப்ரவரி 29ம் நாள் மதுரையில் பிறந்த சிறந்த பரத நடனக்கலைஞர் ஆவார்.
- பெற்றோர் : நீலகண்ட சாஸ்திரி, சேஷம்மாள்.
- இவரது தந்தையார் அன்னிபெசன்ட் அம்மையாரின் தீவிர தொண்டராக இருந்தவர்.
- ருக்மணியும் பிரம்மஞான சபையின் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கினார்.
- கி.பி. 1920ம் ஆண்டு ஜார்ஜ் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.
- மாண்டசோரி கல்வி முறையை வழங்கிய மரியா மாண்டசோரி மற்றும் கவிஞர் ஜேம்ஸ் கசின் நட்பு கிடைத்தது.
- கி.பி. 1923ம் ஆண்டு அனைத்திந்திய பிரம்ம ஞான சபை இளைஞர் குழுவின் தலைவரானார்.
- கி.பி. 1925ம் ஆண்டு பிரம்ம ஞான சபை இளைஞர் குழுவின் தலைவரானார்.
- கி.பி. 1928ம் அண்டு ரஷ்ய நடனக் கலைஞர் அன்னா பாவ்லோவா நடன நிகழ்ச்சியைக் கண்டார்.
- கி.பி. 1933ம் ஆண்டு சென்னை மியூசிக் அகாடமியின் நிகழ்ச்சியில் சதிர் நடனத்தைப் பார்த்தார்.
- சென்னை மைலாப்பூரில் உள்ள கௌளி அம்மாளிடம் நடனம் கற்றார்.
- E. கிருஷ்ண ஐயர், பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோரும் நடனம் கற்க உதவினர்.
- கி.பி. 1935ம் ஆண்டு பிரம்ம ஞான சபையின் வைர விழாவில் தன்னுடைய முதல் நடனத்தை அரங்கேற்றினார்.
- கி.பி. 1936ம் ஆண்டு தன் கணவருடன் இணைந்து கலாக்ஷேத்ரா என்ற அமைப்பை நிறுவினார்.
- கி.பி. 1952 மற்றும் கி.பி. 1956ல் ராஜ்ய சபா உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.
- கி.பி. 1960ம் ஆண்டு விலங்குகள் வதைத்தடுப்பு சட்டம் வருவதற்கு காரணமாக இருந்தவர்.
- கி.பி. 1962ம் ஆண்டு இந்திய வனவிலங்குகள் நலவாரியம் இவர் தலைமையில் தொடங்கப்பட்டது.
- கி.பி. 1955 முதல் கி.பி. 1986 வரை சர்வதேச சைவ கூட்டமைப்பின் துணைத் தலைவராக இருந்தார்.
- கி.பி. 1994ம் ஆண்டு இந்திய பாராளுமன்றம் கலாக்ஷேத்ரா பவுண்டேஷன் என்ற நிறுவனம் ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என அறிவித்தது.
- பெற்ற விருதுகள் :
  பத்மபூஷண் - 1956
  சங்கீத நாடக அகாடமி - 1957
  தேசிகோதமா விருது- 1972
  பிராணி மித்ரா - 1968
  காளிதாஸ் சம்மான் - 1984
  சங்கீத நாடக அகாடமி பெலோஷிப் - 1967

**<u>ஜே.கிருஷ்ண மூர்த்தி</u>**

- ஜே.கே. என்று அன்போடு அழைக்கப்படும் ஜிட்டு. கிருஷ்ணமூர்த்தி கி.பி. 1895ம் ஆண்டு மே 12ம் நாள் சென்னைமா காணத்திற்குட்டப்பட்ட மதனப்பள்ளியில் பிறந்தார்.
- பெற்றோர் : ஜிட்டு நாராயணா மற்றும் சஞ்சீவம்மா.
- இவரது தந்தை கி.பி. 1882ம் ஆண்டு முதல் பிரம்ம ஞான சபையோடு தொடர்பு கொண்டவர்.
- இவர் உலக ஆசிரியர் என்று அன்னிசென்ட் அம்மையார் உட்பட அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.
- நட்சத்திர வரிசை என்ற அமைப்பைத் தொடங்கிய அவர் கி.பி. 1929ம் ஆண்டு அதனைக் கலைத்து விட்டார்.
- கி.பி. 1944ம் ஆண்டு கிருஷ்ணமூர்த்தியின் பேச்சுகளை கிருஷ்ணமூர்த்தி எழுத்து நிறுவனம் (Krishnamurthi Writings Inc) பதிப்பித்தது.
- Star Publishing Trust என்ற அமைப்பை தேசிகாச்சாரியா ராஜகோபால் என்பவரோடு இணைந்து தொடங்கினார்.
- கி.பி. 1986 பிப்ரவரி 17ம் நாள் ஜே.கே. அவர்கள் மரணம் அடைந்தார்.
- ஜே.கே. எழுதிய புத்தகங்கள் :
  1. கற்றலின் தொடக்கம் (Beginnings of Learning)
  2. வாழ்தல் பற்றிய வர்ணனை
  3. முதல் தொகுதி
  4. முடிவின் நேரம் (Ending of Time)
  5. முதல் மற்றும் கடைசி சுதந்திரம் (First and Last Freedom)
  6. நெருப்பு போல கவனித்தல் (Flame of Attention)
  7. மனித சமூகத்தின் எதிர்காலம் (Feature of Humanity)
  8. கேட்க முடியாத கேள்வி (Impossible Question)
  9. கிருஷ்ணமூர்த்தியின் கையேடு (Krishnamurthi’s Notebook)
  10. வாழ்கை முன்னே (Life Ahead)
  11. சிந்தனைகளின் இணையம் (Network of Thoughts)
  12. புரட்சி மட்டும் (Only Revolution)
  13. கழுகின் பயணம் (The Flight of Eagle)
  14. கலாச்சாரம் சார்ந்த விஷயம் (This Matter of Culture)
  15. புத்திசாலித்தனம் (Way of Intelligence)
  16. உண்மை மற்றும் நிதர்சனம் (Truth and Actuality)
  17. வாழ்கையின் முழுமை (wholeness of Life)
  18. நீயே உலகம். (You are the World)

## இந்தியப் போர்களங்கள்

| போர் | ஆண்டு | போரிட்டவர்கள் | வெற்றி | விளைவு |
|---|---|---|---|---|
| ஹைடாஸ்பஸ் (ஜூலம் நதிக்கரை) | கி.மு.326 | அலெக்ஸாண்டர் - போரஸ் | மாசிடோனியா (கிரோக்க மன்னர் அலெக்ஸாண்டர்) | இந்தியாவில் முதல் முறையாக அன்னியர் ஆதிக்கம் |
| செல்யூகஸ் நிகேடாருக்கு எதிராக போர் | கி.மு.305 | செல்யூகஸ் நிகேடார் - சந்திரகுப்த மௌரியர் | சந்திரகுப்த மௌரியர் | கிரேக்கர் தந்த வெற்றிக் காணிக்கை: மெகஸ்தனிஸ் |
| கலிங்கப் போர் | கி.மு.261 | அசோகர் - கலிங்க மன்னன் | அசோகர் | உலக வரலாற்றில் ஒளி விளக்கானார் |
| தானேஸ்வர் போர் | கி.பி.1018 | கஜினி முகம்மது - ராஜ்யபாலர் | கஜினி முகம்மது | - |
| முதலாம் தரேயின் போர் | கி.பி.1191 | கோரிமுகம்மது - பிரிதிவிராஜ் சௌஹான் | பிரிதிவிராஜ் சௌஹான் | - |
| இரண்டாம் தரேயின் போர் | கி.பி.1192 | கோரிமுகம்மது - பிரிதிவிராஜ் சௌஹான் | கோரிமுகம்மது | இந்தியாவில் மஸ்லீம் ஆட்சி நிறுவப்படல் |
| கன்னோசி | கி.பி.1194 | கோரி - ஜெயச்சந்திரன் | கோரி | மஸ்லீம் ஆட்சி நிலைப்பெறல் |
| தேவகிரி | கி.பி.1294 | தவகிரி யாதவ மன்னர் - அலாவுதீன் கில்ஜி | கில்ஜி | தக்காணத்தின் மீது துருக்கியர் வெற்றி |
| முதலாம் பானிப்பட்டு போர் | கி.பி.1526 | பாபர் - இப்ராஹீம் லோடி | பாபர் | இந்தியாவில் முகலாயர் ஆட்சி |
| கான்வா போர் | கி.பி.1527 | பாபர் - ராணா சங்கா | பாபர் | இந்தக்களின் எதிர்ப்பு |
| சௌஸா போர் | கி.பி.11539 | ஹுமாயூன் - ஷெர்ஷா | ஷெர்ஷா | ஹுமாயூன் ஆட்சி நலிவுறுதல் |
| கன்னோசி | கி.பி.1540 | ஹுமாயூன் - ஷெர்ஷா | ஷெர்ஷா | ஹுமாயூன் ஆட்சி நலிவுறுதல் |
| இரண்டாம் பானிப்பட்டு போர் | கி.பி.1556 | அக்பர் - ஹெமு | அக்பர் | முகலாயர்களின் ஆட்சி நிலைநிறுத்தப்படுதல் |
| தலைக்கோட்டைப் போர் | கி.பி.1565 | சதாசிவராயரின் தளபதி ராமராயர் (விஜயநகர கடைசி மன்னர்) - பாமினி சுல்தான்கள் | பாமினி சுல்தான்கள் கூட்டணி(பீஜப்பூர், கோல்கொண்டா, அஹமது நகர், பீடார்) | விஜயநகரம் சிதைவு |
| ஹல்திகாட் | கி.பி.1576 | அக்பர் - மேவார் மன்னர் ராணா பிரதாப் | அக்பர் | - |
| புரந்தர் | கி.பி.1665 | சிவாஜி - ராஜா ஜெய்சிங் (ஔரங்கசீப்பின் தளபதி) | ஜெய்சிங் | புரந்தர் உடன்பாடு; சிவாஜியின் 23 கோட்டைகள் முகலாயருக்கு |
| முதலாம் கர்நாடகப் போர் | கி.பி.1744 -1748 | பிரெஞ்சு - ஆங்கிலேயர் | பிரெஞ்சு தளபதி டியூப்ளே | |

| போர் | ஆண்டு | போரிட்டவர்கள் | வெற்றி | விளைவு |
|---|---|---|---|---|
| இரண்டாம் கர்நாடகப் போர் | கி.பி.1748 -1754 | பிரெஞ்சு - ஆங்கிலேயர் | ஆங்கிலேய தளபதி ராபர்ட் கிளைவ் | பாண்டிச்சேரி உடன்படிக்கை; ஆற்காடு மீட்பு;(கிளைவ் **ஆற்காடு வீரர்** ஆனார்) |
| மூன்றாம் கர்நாடகப் போர் | கி.பி.1757 -1763 | ஆங்கிலேயர் - பிரெஞ்சு (தளபதிகள் லாலி, புஸ்ஸி) | ஆங்கிலேயர் | பிரெஞ்சு பாரிஸ் உடன்பாடு; ஆதிக்கம் முறியடிப்பு |
| பிளாசிப் போர் | கி.பி.1757 | இராபர்ட் கிளைவ் - வங்காள நவாப்) சிராஜ் உத்தெளலா | இராபர்ட் கிளைவ் | இந்தியாவில் ஆங்கில ஆதிக்க அடிக்கல் |
| வந்தவாசிப் போர் | கி.பி.1760 | ஆங்கிலேயர் - பிரெஞ்சு | ஆங்கிலேயர் | பிரெஞ்சு ஆட்சி முடிவு |
| மூன்றாம் பானிப்பட்டு போர் | கி.பி.1761 | மராட்டியர்கள் - அகமது-ஷா-அப்தாலி | அகமது-ஷா-அப்தாலி | மராட்டியர் ஆட்சி அழிக்கப்பட்டது; அப்தாலிக்கு உதவியதன் மூலம் ஆங்கில ஆட்சி. |
| பக்சார் போர் | கி.பி.1764 | ஆங்கிலேயர் - மீர்காசிம் | ஆங்கிலேயர் | வங்கத்தில் கம்பெனி ஆட்சி |
| முதல் ஆங்கிலேய மைசூர் போர் | கி.பி.1767 -1769 | ஆங்கிலேயர் - ஹைதர் அலி | ஹைதர் அலி | சென்னை உடன்படிக்கை |
| இரண்டாவது மைசூர் போர் | கி.பி.1780 -1784 | வாரன்ஹேஸ்டிங்ஸ் - ஹைதர் அலி திப்புசுல்தான் | ஹைதர் அலி | மங்களூர் உடன்படிக்கை |
| மூன்றாவது மைசூர் போர் | கி.பி.1790 -1792 | காரன்வாலிஸ் - திப்புசுல்தான் | ஹைதர் அலி | ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை |
| நான்காவது மைசூர் போர் | 1799 | வெல்லெஸ்லி - திப்புசுல்தான் | ஆங்கிலேயர் ஆங்கிலேயர் வசம்! | திப்புசுல்தான் வீர மரணம்; மைசூர் |
| முதலாவது மராட்டியப் போர் (ரோஹில்கண்ட்) | கி.பி.1775 -1785 | மராட்டியர்கள் - வாரன்ஹேஸ்டிங்ஸ் | ஆங்கிலேயர் | சால்பாய் உடன்படிக்கை |
| இரண்டாவது மராட்டியப் போர் | கி.பி.1802 -1804 | மராட்டியர்கள் - (போன்ஸ்லே, சிந்தியா, போன்ஸ்லே) வெல்லெஸ்லி | ஆங்கிலேயர் | பேசின் உடன்படிக்கை; துணைப் படைத் திட்டம் ஏற்பு |
| மூன்றாவது மராட்டியப் போர் | கி.பி.1817 -1818 | மராட்டியர்கள் - (போன்ஸ்லே, சிந்தியா, ஹோல்கர்) வாரன்ஹேஸ்டிங்ஸ் | ஆங்கிலேயர் | டியோகம் உடன்படிக்கை பேஷ்வா பதவி ஒழிப்பு |
| முதலாவது சீக்கியப் போர் (அய்வால்) | கி.பி.1845 1846 | சிக்கியர்கள் - ஹார்டிஞ்சு பிரபு | | லாகூர் உடன்படிக்கை |
| இரண்டாவது சீக்கியப் போர் | கி.பி.1848 -1849 | சீக்கியர்கள் - டல்ஹௌசி | ஆங்கிலேயர் | பஞ்சாப் ஆங்கிலேயர் வசம்! |

## வரலாற்றுப் புகழ் பெற்றோர்

**அம்பேத்கார்** - இந்திய அரசியல் சட்டத்தின் தலைமைச் சிற்பி; தாழ்த்தப்பட்டோர் குல விளக்கு.

**அரவிந்தர்** - தேச பக்தியும் தெய்வ பக்தியும் இணைந்தவர்; பாண்டிச்சேரியில் ஆசிரமம் நிறுவியவர்.

**பேடன்பவல்** - சாரணர் சங்கம் நிறுவியவர்.

**ஹோமிபாபா** - அணுசக்திக் கமிஷன் தலைவராய் இருந்தவர்.
இந்திய அணுத்துறை வளர்ச்சியின் சிற்பி.
1966ல் ஒரு விமான விபத்தில் மரணமடைந்தார்.

**பிஸ்மார்க்** - துண்டுபட்டுக் கிடந்த ஜெர்மனியை ஒன்றாக்கியவர்.

**பிரெஷ்னேவ்** - ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசியாக இருந்தவர்.

**நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்** - **ஜெய்ஹிந்த், டெல்லி சலோ** என முழங்கிய வங்கச் சிங்கம்.
இந்திய விடுதலைக்காக வெளிநாடு சென்று படை நிறுவியவர்.
(Indian National Army: INA)

**சர்ச்சில்** - இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இங்கிலாந்து பிரதமர்;
சிறந்த பேச்சாளர்; நூலாசிரியர்.

**கோலம்பஸ்** - அமெரிக்காவைக் கண்டுபிடித்த இத்தாலிய மாலுமி.

**டி கால்** - பிரெஞ்சு ஜனாதிபதியாகப் புகழ் பெற்றவர்.

**கரிபால்டி** - இத்தாலியப் புரட்சி வீரர்

**குருநானக்** - சீக்கிய பதத்தை நிறுவியவர்.

**ஹிட்லர்** - போர் வெறிகொண்ட ஜெர்மானிய (Nazi) தலைவர்.
இவர் கொள்கை நாஸிஸம் எனப்படும்.

**ஜோன் ஆப் ஆர்க்** - கொடி காத்த பிரெஞ்சு வீராங்கனை.

**ஜூலியஸ் சீஸர்** - புகழ் பெற்ற ரோம் மன்னன், சதிகார நண்பன். புரூட்டஸால் கொல்லப்பட்டான்.

**கபீர்** - இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக பக்தி மார்க்கம் நிறுவினார்.

**கமால் பாஷா** - நவீன துருக்கியின் தந்தை.

**குருஷ்சேவ்** - காலஞ்சென்ற ரஷ்யப் பிரதமர்.

**மார்ட்டின் லூதர்** - அமெரிக்க நீக்ரோ விடுதலைத் தலைவர். காந்தி, லிங்கன் போல இருவரும்
சுட்டுக் கொல்லப்பட்டார்.

**லியோனார்டா டாவின்ஸி** - இத்தாலியின் பல துறைக் கவிஞர். இவரது புகழ் பெற்ற ஓவியங்கள் மோனாலிஸா,
கடைசி இராச்சாப்பாடு.

**ஆப்ரஹாம் லிங்கன்** - நீக்ரோ அடிமை முறையை ஒழித்த அமெரிக்க ஜனாதிபதி. இவரது **கெட்டிஸ்பர்க் சொற்பொழிவு** உலகப் புகழ்பெற்றது. இதில்தான் இவர் **மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காக மக்களைக் கொண்டே நடக்கும் ஆட்சி** என்று வர்ணித்தார்.

**மெகல்லன்** - உலகைச் சுற்றி வந்த முதல் மாலுமி.

**மஹாவீரர்** - ஜைன மதத்தை நிறுவியவர்.

**மனு** - மனுநீதி கண்ட மாமன்னன்.

**மார்க்கோபோலோ** - கீழ் நாடுகளுக்கு வந்த முதலாவது மேல்நாட்டு (வெனிஸ்) யாத்ரீகர்.

**மார்ட்டின் லூதர்** - கிறிஸ்தவ மத சீர்திருத்தவாதி (ஜெர்மனி நாட்டவர்)

**காரல் மார்க்ஸ்:** (ஜெர்மானியர்) உலக கம்யூனிசத் தந்தை - மூலதனம் எனும் நூலின் ஆசிரியர்.

**கிஸிங்கர்** - முன்னாள் அமெரிக்க வெளியுறவு மந்திரி; சீனா, ரஷ்யா முதலிய நாடுகளுடன் அமெரிக்காவுக்கு நட்புப்பாலம் அமைத்தவர், வியட்நாமில் சமாதானத்தை ஏற்படுத்தியதற்காக நோபல் பரிசு பெற்றவர்.

**மாஜினி** - இத்தாலிய விடுதலை வீரர்; புரட்சி எழுத்தாளர்.

**யஹூதி மெனுஹின்** - அமெரிக்க வயலின் மேதை. நம் இசையை அங்கே பரப்புகிறவர். Nehru Award for International Understanding பெற்றவர்

**முசோலினி** - இத்தாலியின் சர்வாதிகாரியாக இருந்தவர். பாசிஸ் Fazi அடக்குமுறைத் தலைவர்.

**நாஸர்** - முன்னாள் எகிப்திய ஜனாதிபதி. நேருவுடன் இணைந்து பஞ்சசீலக் கொள்கைகளை வடிவமைத்தவர்.

**நெல்சன்** - இங்கிலாந்தின் கடற்படைத் தளபதியாகப் புகழ் பெற்ற வீரன்.

**நோபல்** - வெடிமருந்து கண்டுபிடித்து கோடீஸ்வரரான ஸ்வீடன் நாட்டவர். இலக்கியம், மருத்துவம், பௌதிகம், ரசாயனம், பொருளியல், சமாதானம் ஆகியவற்றில் சிறந்த சேவைக்கு இவர் ஏற்படுத்தியதே நோபல் பரிசு. (நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள்: 1. கீதாஞ்சலிக்காக தாகூர், 2. இராமன் விளைவுக்காக சர். சி.வி. ராமன், 3. (பாரதத்தில் பிறந்து அமெரிக்கா சென்று பிறப்பணுக்கள் Genes பற்றிய ஆராய்ச்சிக்காக) கொரானா, 4. அமைதிப் பணிக்காக அன்னை தெரசா, 5. டாக்டர். எஸ். சந்திரசேகர்.

**நைட்டிங்கேல்** - போர்க்களத்து மருத்துவமனையில் பணி செய்ய நர்ஸ் சங்கம் அமைத்தார். இரவில் கை விளக்கோடு மருத்துவமனை சுற்றிய Lady with the Lamp.

**உமர்கய்யாம்** - புகழ்மிகு பாரசீகக் கவி.

**பிகாசோ** - நவீன ஓவியத்தின் தந்தை (ஸ்பெயின்)

**ரிப்பன்** - உள்ளாட்சி முறை அமைத்த கவர்னர் ஜெனரல். இவர் காலத்தில்தான் **சென்ஸஸ்** ஆரம்பம்.

**ரூஸோ** - 1789-ல் பிரெஞ்சுப் புரட்சியைத் தூண்டியவர்.

**ராக்பெல்லர்** - அமெரிக்க ஆயில் மன்னன். பெருவள்ளல்.

**ராஜாராம் மோகன்ராய்** - உடன்கட்டை ஏறல், பால்ய மணம் போன்ற கொடுமை ஒழிக்கப் பாடுபட்ட சீர்திருத்தவாதி.

**சாலமன்** - மதி நுட்பம் செறித்த இஸ்ரேலிய மன்னன்.

**சாக்ரடிஸ்** - கிரேக்க சிந்தனையாளர், தத்துவ ஞானி, நச்சுக் கருத்துக்களைப் பரப்புவதாகக் குற்றம் சாட்டப்பட்டு நச்சுக் கோப்பையால் இறந்தவர்.

**ஸ்டாலின்** - 30 ஆண்டுகள் ரஷ்யாவின் ஜனாதிபதி; சாவுக்குப் பின் கொடுங்கோலன் என்று தூற்றப்படுகிறான்.

**தான்சேன்** - அக்பர் அவைக்களத்தின் இசைமேதை.

**டாடா** - இந்திய எஃகுத் தொழிலின் தந்தை.

**வினோபா பாவே** - காந்தியின் சீடர்; பூதானத் தந்தை!

**விஸ்வேஸ்வரய்யா** - பல மின்சக்தித் திட்டங்களுக்கு அடிகோலிய இஞ்ஜினியர்; சிறந்த அரசியல்வாதி.

## வம்சம் தோற்றுவித்தவர்

| வம்சம் | தோற்றுவித்தவர் |
|---|---|
| சிசுநாக வமசம் | பிம்பிசாரர் |
| நந்த வம்சம் | மகாபத்ம நந்தர் |
| மௌரிய வம்சம் | சந்திரகுப்த மெரியர் |
| கான்வா வம்சம் | வாசுதேவ கான்வா |
| சாதவாகன வம்சம் | ீமுகா |
| கு‘ான வம்சம் | முதலாம் காட்பிஸஸ் |
| குப்த வம்சம் | ஸ்ரீகுப்தர் |
| வர்த்தனார் வம்சம் | பிரபாகரவர்த்தனார் |
| சாளுக்கிய வம்சம் | முதலாம் புலிகேசி |
| ரா‘டிரகூட வம்சம் | தண்டி துர்கா |
| சுங்க வம்சம் | பு‘யமித்ர சுங்கர் |
| கடம்ப வம்சம் | மயூராசர்மன் |
| ஹொய்சால வம்சம் | சத்ரிய என்ற சாலா |
| அடிமை வம்சம் | குத்புதீன் ஐபெக் |
| கில்ஜி வம்சம் | ஜலாசுதீன் கில்ஜி |
| துக்ளக் வம்சம் | கியாசுதீன் துக்ளக் |
| சையது வம்சம் | கிசிர்கான் |
| லோடு வம்சம் | பகலால் லோடி |
| சங்கம வம்சம் (விஜயநகரபேரரசு) | ஹரிஹரர், புக்கர் |
| சுளுவ வம்சம் (விஜயநகரபேரரசு) | நரசிம்ம சுளுவா |
| துளுவ வம்சம் (விஜயநகரபேரரசு) | வீர நரசிம்மர் |
| அரவீடு வம்சம் (விஜயநகரபேரரசு) | திருமலை |
| முகலாய வம்சம் | பாபர் |

## வரலாற்று நூல்கள்

| நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| மெகஸ்தனிஸ் | இண்டிகா |
| அசுவகோஷர் | புத்தசரிதம், சூத்திரலங்காரம் |
| சாணக்கியர் | அர்த்த சாஸ்திரம் |
| தண்டி புலவர் | காவ்யதரிசனம் |
| பாபர் | பாபர் நாமா |
| கல்ஹணர் | ராஜதரங்கனி |
| துளசி தாசர் | ராமசரித மானஸ் |
| ஹேமச்சந்திரர் | குஜராத்தின் வரலாறு |
| பிர்தௌசி | ஷா நாமா |
| சந்த் பரிதை | பிருத்விராஜ் ரசோ |
| ஜெயதேவர் | கீதா கோவிந்தம் |
| கிருஷ்ண தேவராயர் | அமுக்த மால்யா |
| பில்கணர் | விக்ரமாங்க சரிதம் |
| கங்கா தேவி | மதுரா விஜயம் |
| பிரம்ம குப்தர் | பிரம்ம சித்தாந்தம் |
| விசாகதத்தர் | முக்தா ராட்சசம் |
| விஷ்ணுசர்மா | பஞ்ச தந்திரக் கதைகள் |
| ஆரியபட்டர் | ஆரியப்பட்டியம் |
| ஹர்ஷர் | நாளானந்தா, ரத்னாவளி, பிரியதர் சிகா |
| வசுமித்திரர் | மகாவிபாஷம் |
| நாகர்ஜுனர் | பிரம்ம சூத்திரம், மத்தியமிக சூத்ரம் |
| சரகர் | சரகசம்ஹிதா |
| சுஷ்ருதர் | சுஷ்ருதசம்ஹிதா |
| பாணபட்டர் | காதாம்பரி, சாந்தி சகிதம், ஹர்ஷசரிதம் |
| மகேந்திரவர்மன் | மத்தவிலாச பிரகடனம் |
| அபுல் பாசல் | அக்பர் நாமா, அயினி அக்பரி |
| காளிதாசர் | குமாரசம்பவம், ரகுவம்சம், சாகுந்தலம், மேகதூதம், ருது சம்ஹாரம், விக்கிரம ஊர்வசியம், மாளவிகாக்னிமித்திரம் |

## முக்கிய இயக்கங்கள்

- பிரம்ம சமாஜசம் - இராஜாராம் மோகன்ராய் (1825)
- ஆரிய சமாஜம் - தயானந்த சரஸ்வதி (1875)
- சுத்தி இயக்கம் - தயானந்த சரஸ்வதி
- ராமகிரு'ண இயக்கம் - சுவாமி விவேகானந்தர் (1897)
- பிரார்த்தனை சமாஜம் - ஆத்மராம் பாண்டுரங் (1875)
- பிரம்ம ஞான சபை - கர்னல் ஆல்காட், பிளவாட்ஸ்கி அம்மையார்
- சுயராஜ்ய கட்சி - சி.ஆர்.தாஸ், மோதிலால் நேரு
- இந்திய ஊழியர் சங்கம் - கோபால கிரு'ண கோகலே
- இந்திய தேசிய படை - நேதாஜி (1943)
- பார்வர்டு பிளாக் - நேதாஜி (1939)
- முஸ்லீம் லீக் - நவாப் சலிமுல்லா கான் (1906)
- கிலாபத் இயக்கம் - முகமது அலி, சௌகத் அலி
- அலிகார் இயக்கம் - சர் சையது அகமது கான்
- பூமிதான இயக்கம் - வினோபாவே
- சர்வோதய இயக்கம் - வினோபாவே
- வீஸ்டாத்வைதம் - ராமானுஜர்
- அத்வைதம் - சங்கரர்
- த்வைதம் - மத்வாச்சாரியார்
- தீன் இலாஹி - அக்பர் ஏற்படுத்திய புதிய மதம்
- வரிகொடா இயக்கம் - வல்லபாய் படேல்
- பர்தோலி சத்யாகிரகம் - வல்லபாய் படேல்
- நர்மதோ பச்சோ அந்தோலன் - மேதா பட்கர்
- சிப்கோ இயக்கம் - பேடன் பௌவல்
- செஞ்சிலுவை சங்கம் - ஹென்றிடுனான்ட்
- கூட்டுறவு சங்கம் - ராக்டேல் முன்னோடிகள்
- நுகர்வோர் இயக்கம் - ரால்ப்நேடார்
- சமதர்ம பொருளாதாரம் - காரல் மார்க்ஸ்
- நாசிச கட்சி - ஹிட்லர்
- பாசில கட்சி - முசோலினி
- சீக்கிய மதம் - குருநானக்
- கிறிஸ்தவம் - இயேசுநாதர்
- தப்லிக் இயக்கம் - மௌலான முகமது இலியாஸ்
- இஸ்லாம் - முகமது நபி
- கால்சா படை - குருகோவிந்த் சிங்
- சிவப்பு சட்டை இயக்கம் - கான் அப்துல் காபர் கான்
- கதர் கட்சி - லாலா ஹர்தயாள்
- சுதேசி கப்பல் கழகம் - வ.உ.சி.
- சுயமரியாதை இயக்கம் - பெரியார்
- பகுத்தறிவு இயக்கம் - பெரியார்
- புத்த சமயம் - கௌதமபுத்தர்
- சுமண சமயம் - மகாவீரர்
- கான்பூசியஸம் - கான்பூசியஸ்
- ஔவை இல்லம் - டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி
- சாரதா சதன் - பண்டித ராமாபாய்